







அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
## 2019 - 2020

**மானியக் கோரிக்கை எண். 42**

**திரு. எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2019

# பொருளடக்கம்


| வ.எண் | | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1. | | முன்னுரை | 1 |
| 2. | | ஊராட்சி நிர்வாகம் | 13 |
| 3. | | மாநில அரசுத் திட்டங்கள் | |
| | 3.1 | முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் | 74 |
| | 3.2 | பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகள் பழுது நீக்கம் செய்தல் | 80 |
| | 3.3 | ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள் | 83 |
| | 3.4 | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 91 |
| | 3.5 | நபார்டு சாலைகள் | 92 |
| | 3.6 | சிறிய இணைப்புச் சாலைகள் | 94 |
| | 3.7 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 107 |
| | 3.8 | தன்னிறைவுத் திட்டம் | 118 |
| | 3.9 | சுகாதாரம் – முழு சுகாதார தமிழகம் | 121 |
| | 3.10 | ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் | 130 |

| வ.எண் | | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 3.11 | பள்ளிக் கழிப்பறைகள் பராமரித்தல், வகுப்பறை மற்றும் பள்ளி வளாகம் தூய்மை படுத்துதல் மற்றும் பள்ளி வளாகம் தூய்மை படுத்துதல் | 133 |
| | 3.12 | சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் | 135 |
| 4 | | மத்திய அரசுத் திட்டங்கள் | |
| | 4.1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 138 |
| | 4.2 | பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) | 161 |
| | 4.3 | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 164 |
| | 4.4 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 165 |
| | 4.5 | தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்) | 170 |
| | 4.6 | தேசிய ரூர்பன் இயக்கம் | 173 |
| | 4.7 | தேசிய கிராம சுயராஜ்ய திட்டம் (RGSA) | 177 |
| | 4.8 | நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY) | 179 |
| | 4.9 | தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம் | 181 |

| வ.எண் | | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 5 | | பணியமைப்பு | |
| | 5.1 | அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு | 186 |
| | 5.2 | பொறியியல் பணியமைப்பு | 187 |
| | 5.3 | முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல் | 189 |
| | 5.4 | அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு | 190 |
| 6 | | **திறன் மேம்பாடு** | 195 |
| 7 | | **தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்** | |
| | 7.1 | மகளிர் திட்டம் | 220 |
| | 7.2 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | 222 |
| | 7.3 | திட்ட செயல□பாடுகள் | 227 |
| | 7.4 | திறன் மேம்பாடு | 241 |
| | 7.5 | தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி | 250 |
| | 7.6 | நிதி உள்ளாக்கம் மற்றும் நுண்கடன் | 265 |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 7.7 | வாழ்வாதார மேம்பாடு | 285 |
| 7.8 | ஒருங்கிணைப்பு (CONVERGENCE) | 309 |
| 7.9 | மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) | 314 |
| 7.10 | தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் | 315 |
| 7.11 | தீன் தயாள் அந்தியோதய யோஜனா– தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY – NULM) | 317 |
| 7.12 | விருதுகள் | 338 |
| 7.13 | தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதாரமையம் (டி.என்.வி.ஆர்.சி.) | 340 |
| 7.14 | தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் | 345 |
| 7.15 | உழைக்கும் மகளிருக்கான அம்மா இருசக்கர வாகனத் திட்டம் | 347 |
| 7.16 | மக்கள் கற்றல் மையம் (மகமை) | 349 |
| 7.17 | சமுதாய வளப் பயிற்றுநர்களைத் தரம் உயர்த்தும் திட்டம் | 353 |
| 7.18 | இணைய வழிக் கற்றல் மற்றும் சமுதாய வானொலி | 356 |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 7.19 | ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு ஒருமுறை சிறப்பு நிதி உதவி வழங்குதல் | 358 |
| 7.20 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் 35 ஆம் ஆண்டு கொண்டாட்டங்கள் | 358 |
| **8** | **தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (புதுவாழ்வு திட்டம் – II)** | **361** |
| **9** | **பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்** | **371** |
| **10** | **வரவு செலவுத் திட்டம் 2019–20** | **401** |
| **11** | **முடிவுரை** | **403** |

# 1. முன்னுரை

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2019-20

## முன்னுரை

**“அடித்தளத்திலிருந்து கட்டமைப்பதே மிகச் சிறந்த விரைவான மற்றும் செயல்திறன் மிக்க வளர்ச்சியை அளிக்கும். ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்ற குடியரசாக மாற வேண்டும். அதற்கு துணிவு மிக்க தீர்மானங்கள் அவசியமில்லை. மாறாக, மனத்துணிவும், கூட்டாண்மை சார்ந்த அறிவுப் பூர்வமான பணியே தேவையாகும்.”**

**– மகாத்மா காந்தியடிகள்**

மக்கள் நலத்தைப் பேணுகின்ற மாநிலமான தமிழகத்தில், ஊரக வளர்ச்சி என்பது அடிப்படை வசதிகளையும், தரமான சேவைகளையும் சிறந்த முறையில் கிராமப்புற மக்களுக்கு அளிப்பதன் மூலம் அவர்களின் பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி மற்றும் வாழ்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

ஊரகப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்குவது, சமுதாயத்திற்கு தேவையான சேவைகளை அளிப்பது, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் தனிநபர் குடும்பங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவது போன்றவையே அரசின் அடிப்படை நோக்கமாகும். கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களின் நலன் மற்றும் வளர்ச்சிக்கு ஏதுவாக சமூகப் பொருளாதார

கொள்கைகளை உருவாக்கி, அக்கொள்கைகளை நிறைவேற்ற பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை வடிவமைக்க, இந்த அரசு உந்து சக்தியாக திகழ்கிறது. நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை ஊரகப் பகுதிகளில் வழங்குவதன் மூலம் வறுமையை ஒழிப்பது, பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களின் முதன்மை நோக்கங்களாகும்.

மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்கு, தற்போதைய நிலையில் கிராம ஊராட்சிகளே, ஊரக வளர்ச்சித் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துவதற்கான அடிப்படை அலகாக உள்ளன. ஆனால், ஊரகப்பகுதி மக்கள் இந்த திட்டங்கள் குக்கிராமங்கள் அளவில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டால்தான் அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைக்கும் என்று கருதுகின்றனர். எனவே, மக்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க, இந்த அரசானது, ஊரகப் பகுதிகளுக்கான திட்டமிடுதல் மற்றும் செயலாக்கத்தினை கீழ் நிலை அலகான குக்கிராம அளவில் வடிவமைக்கிறது.

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் இந்த அரசின் சிறப்புமிக்க முயற்சிகளில் ஒன்றாகும். இத்திட்டம், கிராமப்புறங்களில் ஏழை எளிய மக்களுக்கு வீட்டு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. தூய்மையான ஆற்றலுடன் அதிக அளவில் பரப்பளவு கொண்ட வீடுகளை வழங்கும் இத்திட்டம் இந்தியாவிலேயே இந்த வகையில் செயல்படுத்தப்படும் முதல் திட்டமாகும். **2011–12** ஆம் ஆண்டு முதல் **2018–19** ஆம் ஆண்டு வரை, மொத்தம்

3.60 இலட்சம் பசுமை வீடுகள் ரூ.7,200 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் 2018–19 ஆம் ஆண்டில் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு, பழுதடைந்த நிலையில் உள்ள 45,594 வீடுகளை ரூ.227.97 கோடி மதிப்பீட்டில் மாநில அரசு நிதி மூலம் பழுதுநீக்கம் செய்ய "பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகள் பழுதுநீக்குதல்'', என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் ஊரகப் பகுதிகளில் ஏழைமக்கள் தங்கள் வீடுகளை அரசு உதவியுடன் புதுப்பித்திட வழிவகை செய்கிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மட்டுமே உரிமைகளை உள்ளடக்கிய வலுவான சட்ட வடிவமைப்பின் மூலம் ஊரக திறன்சாரா தொழிலாளர்களுக்கு சட்ட பூர்வ உரிமைகள் வழங்கி அவர்களின் வறுமையை ஒழிக்கும் ஒரே சமுக பாதுகாப்புத் திட்டமாகும். இத்திட்டம் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்தோர் உள்ள அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் அதிகபட்சமாக ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை வாய்ப்பு அளிக்கிறது. மகளிர் மூலம் மனித சக்தி நாட்களை உருவாக்குவதில் தேசிய சராசரியான 54.55 சதவிகிதத்தை ஒப்பிடுகையில் 85.4 சதவிகிதத்தை எய்தியதன் மூலம் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், தடுப்பணைகள் கட்டுதல், உறிஞ்சுக்குழி அமைத்தல், பாரம்பரிய நீராதாரங்களை புனரமைத்தல் மற்றும் பெருமளவு மரம் வளர்ப்பு திட்டத்தின் கீழ் மரங்கள் நடுதல் போன்ற

இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கு மாநிலத்தின் மொத்த செலவினத்தில் 82.47 சதவிகிதம் செலவிடப்பட்டுள்ளது. ஊரக இணைப்பு சாலைகள், சிமெண்ட் காங்கிரீட் சாலைகள், பேவர் பிளாக் சாலைகள், ஊராட்சி அலுவலகக் கட்டிடம் கட்டுதல், உணவு தானிய சேமிப்பு கிடங்கு கட்டுதல் மற்றும் பால் சேகரிப்பு கூடங்கள் கட்டுதல் போன்ற இதர உட்கட்டமைப்பு பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறப்பாக செயற்படுத்தியன் மூலம், ஐக்கிய நாடுகளின் நீடித்த நிலைத்த வளர்ச்சியின் உன்னதமான வழிமுறைகள் மற்றும் நோக்கங்கள் திறம்பட அடையப்பெறுகின்றன. ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வருடத்திற்கு அதிகபட்சமாக 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதன் மூலம் ‘பசியின்மை’ மற்றும் ‘வறுமையின்மை’, போன்ற நோக்கங்கள் எய்தப்படுவதுடன், ஊரக ஏழை மக்களின் வாழ்வாதாரம் அளிப்பதில் முக்கிய பங்கினை வகிக்கிறது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சம ஊதியம் வழங்குவது மற்றும் ஊதியம் வழங்குவதில் எந்த வித பாகுபாடும் இல்லாதது ‘ஆண், பெண் சமத்துவத்தினை உறுதி செய்கிறது. மண் மற்றும் ஈரப்பதத்தினை பாதுகாக்கும் பணிகளான, மண்வரப்பு கட்டுதல், தடுப்பணைகள் கட்டுதல், பாரம்பரிய நீராதார அமைப்புகளை புனரமைத்தல் மற்றும் புத்துயிர் அளித்தல், பொது மற்றும் தனியார் நிலங்களில் வறட்சி காப்பு பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற மழைநீர் சேகரிப்பு பணிகளின் மூலம் பருவநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகள் கட்டுப்படுத்தப்படுகிறது.

ஊரக பகுதிகளின் வளர்ச்சியில், ஊரகச் சாலைகளின் தொடர் மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நீண்ட காலமாக இந்த அரசு உணர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஊரகச் சாலை தொகுப்பானது வேகமாக அதிகரித்து, 1.49 இலட்சம் கி.மீ. நீளத்தை அடைந்துள்ளது. இந்த அரசு, தேவை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் ஊரகச் சாலைகளின் மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கீடு செய்யும் நோக்கத்தில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தினை 2015–ம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இது முழுமையடையும் வகையிலும் மற்றும் ஆண்டு முழுவதும் ஊரகச் சாலைகள் நல்ல நிலையிலும் பயன்படுத்தும் வகையிலும் இருப்பதை உறுதி செய்ய, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்பு கொள்கையினை அரசு உருவாக்கியுள்ளது.

சுகாதாரத்தோடு தொடர்புடைய பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தொடர் முயற்சிகள் மேற்கொண்டதன் மூலம் சுகாதாரத்தில் விரைவான முன்னேற்றத்தை அடைய முடிந்தது. சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஈடுபடுத்தப்பட்டதன் மூலம், மக்களின் மனமாற்றத்தை ஏற்படுத்தும் சவாலான செயலை திறம்பட கையாள முடிந்தது. சமூக அணுகுமுறையில் பயிற்சி பெற்ற ஊக்குநர்கள் மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகள், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை அடைவதற்கும், தொடர்ந்து அந்நிலையை தக்க வைப்பதற்கும் நேரடி தகவல் தொடர்பு வாயிலாக முக்கிய பங்காற்றுகின்றன. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஈடுபடுத்தப்படும் தூய்மை காவலர்கள் மூலம் சுற்றுபுறச் சூழல் தூய்மையாக பராமரிக்கப்படுவது உறுதிசெய்யப்படுகிறது. மக்கும்

குப்பைகளை, உரமாக்குதல் மற்றும் மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் மறு சுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை விற்பதன் மூலம் கிராம ஊராட்சிகளுக்கு வருவாய் கிடைக்கின்றது. சுகாதார பணியாளர்களை ஈடுபடுத்தி பள்ளி கழிப்பறைகள் மற்றும் வளாகங்களை தூய்மை செய்யப்படுவதன் மூலம், ஊரக பள்ளி மாணவர்களுக்கு கல்வி கற்கும் உகந்த சூழல் ஏற்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிரின் சமூக, பொருளாதார, ஆற்றல் மேம்பாட்டிற்காக 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ம் நாள் நிறுவப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிர் நல மேம்பாட்டிற்காக மட்டுமே துவங்கப்பட்ட இந்நிறுவனம் 35 ஆண்டுகளைக் கடந்து பல மாநில, மத்திய மற்றும் வெளியிலிருந்து உதவி பெறப்பட்ட திட்டங்களை சமுதாயம் சார்ந்த முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருமித்த நோக்குடன் செயல்படுத்தி வருகிறது.

வறுமை என்பது பல பரிமாணங்களைக் கொண்ட பிரச்சனை ஆகும். எனவே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு உத்திகளின் மூலம் ஊரக மற்றும் நகர்ப்புற குடும்பங்களின் வறுமையினை நீக்கிடும் வகையில் செயல்பட்டு வருகிறது. இன்று, இந்நிறுவனம் அரசின் இரண்டு முதன்மையான வறுமை ஒழிப்புத் திட்டங்களான தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தினை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் அதன் துணைத் திட்டங்களான தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டம், கிராமிய தொழில் முனைவோர் திட்டம், பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் போன்றவற்றின் மூலம் சமுதாயம் சார்ந்த பல்வேறு முன்னேற்ற அணுகுமுறையைக் கொண்டு ஊரகப் பகுதிகளில் மகளிரை ஆற்றல் படுத்தி வறுமையை குறைக்கும் இலக்கினைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. உலக வங்கியின் நிதி உதவி பெற்று, முன்னர் நடைமுறையில் இருந்த புதுவாழ்வுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏழை மக்களைக் கண்டறியும் மக்கள் நிலை ஆய்வே சமுதாய சார்ந்த முன்னேற்ற அணுகுமுறைக்கு அடித்தளமாக இருந்தது. இதன் மூலம் ஏழை, மிகவும் ஏழை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என இலக்கு மக்கள் கண்டறியப்பட்டு பயன்பெற்று வருகின்றனர். சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், ஒத்த தொழில் குழுக்கள், ஒத்த தொழில் கூட்டமைப்புகள் மற்றும் மகமை (மக்கள் கற்றல் மையங்கள்) போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, பாதுகாத்து, வளர்த்து அவைகளை நீடித்த நிலையான தன்மை உடையதாக மேம்படுத்துவதே முக்கிய யுக்தியாகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 2014–15 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசினால் துவங்கப்பட்டு மத்திய, மாநில அரசுகள் மூலம் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டம் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அடித்தட்டு அளவில் வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கி அதன் மூலம் இலாபம் தரக்கூடிய சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன்

வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தர வழிவகை செய்து, அதன் பயனாக தொடர் வாழ்வாதார மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உறுதி செய்து அவர்களின் ஏழ்மை மற்றும் நலிவுற்ற தன்மையினைக் குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் முடிவுற்றதைத் தொடர்ந்து தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் என்ற புதிய திட்டம் நடப்பு நிதி ஆண்டில் **(2019–20)** அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ.**40.60** கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. ஊரக ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் உயர்நிலை செயல்பாடுகளை இலக்காகக் கொண்ட இத்திட்டமானது கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் தலா **4** ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், வேலைக்கு செல்லும் மகளிர் தாங்கள் பணியாற்றும் நிறுவனங்கள், பணியிடங்கள் மற்றும் வங்கிகள் போன்றவற்றிற்கு எளிதில் செல்வதற்காக பெண்களுக்கு வசதியான மொபட் / ஸ்கூட்டர் போன்ற இரு சக்கர வாகனங்கள் வாங்குவதற்கு உதவும் வண்ணம் மாநில அரசு மானியத்துடன் கூடிய அம்மா இரு சக்கர வாகனத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் மூலம் ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களைச் சார்ந்த ஒரு இலட்சம் உழைக்கும் மகளிர் பயன்பெறுவர். தொலை தூரங்களில் மற்றும் மலைப்பகுதிகளில் வசிக்கும் மகளிர், மகளிரை குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள், கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற விதவைகள்,

மாற்றுத் திறனாளி பெண்கள், 35 வயதிற்கு மேற்பட்ட மணமாகாத பெண்கள், ஆதி திராவிடர் / பழங்குடியினப் பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இரு சக்கர வாகனத்தின் மதிப்பில் அதிகபட்சம் 50% தொகை அல்லது 25 ஆயிரம் ரூபாய் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இதுவரையில், 1,03,614 பணிக்கு செல்லும் பெண்கள் ரூ.229.98 கோடி மானிய தொகையினை வாகனங்கள் வாங்குவதற்கு பயன்படுத்தி ஆற்றல் மேம்பாட்டை நோக்கி முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் கீழ், ஊரக ஏழைக் குடும்பங்களிலுள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்தி, அவர்களுக்கு பல்வேறு நிறுவனங்களின் மூலம் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் மற்றும் கிராமிய தொழில் முனைவோர் திட்டங்களின் மூலம் விவசாயம் மற்றும் விவசாயம் சாரா பிரிவுகளில் தனிநபர் மற்றும் கூட்டுத் தொழில்களின் வாயிலாக பெண்களுக்கு உதவும் பொருளாதார நடவடிக்கைகள் வளர்ச்சி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. வறுமையை ஒழிக்கும் தமிழ்நாடு அரசின் முயற்சியில் இத் திட்டங்கள் ஒன்றிணைந்தும் அரசின் பிறதிட்டங்களுடன் இணைந்தும் தலையாய பணியாற்றி வருகின்றன.

புதுவாழ்வு திட்டத்தின் தொடர்ச்சியாக உலக வங்கியின் உதவியுடன் தொடங்கப்பட்ட மற்றுமொரு திட்டம் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP). இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் தமிழ்நாட்டின் 120 வட்டாரங்களில் உள்ள ஊரகப் பகுதிகளில் தொழில் நிறுவனங்களை உருவாக்குதல், நிதி சேவைகள்

அளித்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகும். இத்திட்டத்திற்கான பங்கீட்டுத் தொகை உலக வங்கிக்கும் தமிழக அரசிற்கும் இடையே 70:30 என்ற விகிதாச்சார அடிப்படையில் ரூ. 918.20 கோடி மதிப்பீட்டில் அமையும்.

மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணியவாறு, அமைதி, வளம் மற்றும் வளர்ச்சிக்கான காலகட்டத்திற்கு தமிழகத்தை அழைத்துச் செல்ல, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அயராத அர்ப்பணிப்புடனும், உறுதியுடனும் தனது கடமையினை தொடர்ந்து ஆற்றி வருகிறது.

# 2. ஊராட்சி நிர்வாகம்

## 2. ஊராட்சி நிர்வாகம்

உள்ளாட்சி அமைப்புகளின் பரிணாம வளர்ச்சியில் தமிழகம் வேரூன்றித் தழைத்து விளங்குகிறது. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகள் சோழர் ஆட்சிக் காலத்திலிருந்தே கிராமக் குழுக்களாக செயல்பட்டதற்கான உறுதியான வரலாற்றுச் சான்றுகளாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூரிலுள்ள ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் கோவில் கல்வெட்டுகள் விளங்குகின்றன. இத்தகைய கிராமக் குழுக்களுக்கான தேர்தலில் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகள் சிறந்த முறையில் வகுக்கப்பட்டு இரகசிய வாக்கெடுப்பிற்காக குடவோலை முறை பின்பற்றப்பட்டது.

கிராமக் குழுக்களின் உறுப்பினர்கள் மன்னராட்சியில் காணப்பட்ட இம்மக்களாட்சி முறையில் இரகசியக் “குடவோலை” முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்குழுக்கள் பொருளாதார மற்றும் நிர்வாக அமைப்புகளாக முழுமையான சுதந்திரத்துடன் செயல்பட்டன. ஆனால், ஆங்கிலேய காலனி ஆட்சிக்கு உகந்த வகையில், ஒரு மாறுபட்ட உள்ளாட்சி தத்துவத்தினை ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்தினர்.

நாடு விடுதலை அடைந்த பின்னர், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பாகம்–IV, பிரிவு 40ன்படி, கிராம ஊராட்சிகளை அமைத்து அவற்றுக்கு அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு.பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையிலான குழு, 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சமர்ப்பித்த அறிக்கையில் மக்களாட்சி பரவலாக்கம் என்ற

தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளை ஏற்படுத்திட பரிந்துரைத்தது.

உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்தும் வகையில் 73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, இது 1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வந்தது. ஊராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளிப்பதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 243–G வழி வகை செய்கிறது. இதனடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 11–வது அட்டவணையில் 29 இனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. 74–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 'மாவட்ட திட்டக் குழு' அமைக்க வகை செய்கிறது. 73–வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்திற்கு ஏற்ப மாநில அரசுகள் தங்கள் ஊராட்சி சட்டங்களில் தேவையான திருத்தங்கள் செய்து புதிய சட்டத்தை இயற்ற வேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994) தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டு 22.4.1994 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், பல்வேறு முக்கிய மாற்றங்களை கொண்டு வந்தது.

அவையாவன ;

- தமிழ்நாட்டில் மூன்றடுக்கு ஊராட்சி முறை நடைமுறைக்கு வந்தது.
- 'ஊராட்சி' என்பது மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களைக் குறிக்கும் பொதுச்சொல்லாகும்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சியின் தலைவர் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். ஊராட்சி

ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் மறைமுகத் தேர்தல்களின் மூலம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்கக் கூடியவை. கிராம ஊராட்சியின் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்கள் அல்ல.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப, பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. தற்போது, அரசாணை எண். 60, ஊரக வளர்ச்சி துறை மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை நாள்: 23.05.2016ன் மூலம் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பதவியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்படும்.
- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
- மாநில அரசிடமிருந்து நிதியினை ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கும் விகிதத்தை பரிந்துரை செய்வதற்காக மாநில நிதி ஆணையம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டு வருகிறது.
- ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டத்தினை உருவாக்கும் வகையில் மாவட்ட திட்டக் குழு அமைக்கப்பட்டது.

## ஊரக உள்ளாட்சி அமைப்புகள்

### 2.1. கிராம ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் உள்ள **31** ஊரக மாவட்டங்களில் **79,394** குக்கிராமங்களை உள்ளடக்கிய **12,524** கிராம ஊராட்சிகள் உள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாத வரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் **5** ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, **31** மாவட்டங்களில் உள்ள **12,524** கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விபரம் ஆகஸ்ட் **2014**ல் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் www.tnrd.gov.in என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.**
**2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகள் விவரம்**

| வ. எண். | மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 500 மற்றும் அதற்குக் கீழ் | 46 |
| 2 | 501–1000 | 833 |
| 3 | 1001–3000 | 6,821 |
| 4 | 3001–5000 | 2,781 |
| 5 | 5001–10000 | 1,753 |
| 6 | 10,000க்கு மேல் | 290 |
| மொத்தம் | | 12,524 |

மாவட்ட வாரியாக ஊரக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 2.2.
## மாவட்ட வாரியான ஊரக மக்கள் தொகை விவரம்

| வ. எண். | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | பெண்கள் | பழங் குடியினர் | பழங் குடியினர் விழுக்காடு | ஆதி திராவிடர் | ஆதி திராவிடர் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 18,61,789 | 9,24,124 | 29,706 | 1.60 | 6,24,458 | 33.54 |
| 2 | திருவள்ளூர் | 15,85,280 | 7,90,170 | 37,708 | 2.38 | 5,04,115 | 31.80 |
| 3 | கடலூார் | 18,00,133 | 8,91,507 | 10,082 | 0.56 | 6,25,788 | 34.76 |
| 4 | விழுப்புரம் | 29,12,960 | 14,45,062 | 71,289 | 2.45 | 9,19,308 | 31.56 |
| 5 | வேலூார் | 24,82,556 | 12,41,612 | 65,230 | 2.63 | 6,05,248 | 24.38 |
| 6 | திருவண்ணாமலை | 20,39,049 | 10,14,486 | 87,096 | 4.27 | 5,02,044 | 24.62 |
| 7 | சேலம் | 19,57,105 | 9,45,014 | 1,12,334 | 5.74 | 3,54,545 | 18.12 |
| 8 | நாமக்கல் | 10,87,895 | 5,37,918 | 55,417 | 5.09 | 2,48,100 | 22.81 |
| 9 | தர்மபுரி | 12,90,530 | 6,24,646 | 60,609 | 4.70 | 2,13,538 | 16.55 |
| 10 | கிருஷ்ணகிரி | 14,65,743 | 7,17,175 | 20,980 | 1.43 | 2,20,945 | 15.07 |
| 11 | ஈரோடு | 11,30,722 | 5,59,797 | 19,084 | 1.69 | 2,16,689 | 19.16 |
| 12 | திருப்பூர் | 11,39,466 | 5,68,772 | 1,947 | 0.17 | 2,63,539 | 23.13 |
| 13 | கோயம்புத்துார் | 10,21,359 | 5,10,409 | 19,565 | 1.92 | 2,13,492 | 20.90 |
| 14 | நீலகிரி | 3,10,591 | 1,59,447 | 22,767 | 7.33 | 91,446 | 29.44 |
| 15 | தஞ்சாவூர் | 16,67,809 | 8,46,926 | 1,465 | 0.09 | 3,84,291 | 23.04 |
| 16 | நாகப்பட்டினம் | 12,61,288 | 6,37,194 | 2,214 | 0.18 | 4,60,876 | 36.54 |
| 17 | திருவாரூர் | 10,06,482 | 5,06,528 | 939 | 0.09 | 3,88,740 | 38.62 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14,71,945 | 7,39,563 | 14,519 | 0.99 | 3,05,109 | 20.73 |
| 19 | கரூர் | 6,68,360 | 3,36,684 | 201 | 0.03 | 1,59,718 | 23.90 |
| 20 | பெரம்பலூார் | 4,68,017 | 2,34,113 | 2,136 | 0.46 | 1,50,504 | 32.16 |
| 21 | அரியலூார் | 6,71,100 | 3,37,847 | 9,946 | 1.48 | 1,63,770 | 24.40 |
| 22 | புதுக்கோட்டை | 13,41,111 | 6,75,896 | 845 | 0.06 | 2,51,552 | 18.76 |
| 23 | மதுரை | 13,00,481 | 6,44,431 | 4,896 | 0.38 | 2,72,494 | 20.95 |
| 24 | தேனி | 5,75,394 | 2,84,527 | 1,377 | 0.24 | 1,43,589 | 24.95 |
| 25 | திண்டுக்கல் | 14,57,412 | 7,25,917 | 4,580 | 0.31 | 3,34,064 | 22.92 |
| 26 | இராமநாதபுரம் | 10,09,270 | 5,01,016 | 526 | 0.05 | 2,13,583 | 21.16 |
| 27 | விருதுநகர் | 12,86,543 | 6,44,603 | 1,197 | 0.09 | 3,15,796 | 24.55 |
| 28 | சிவகங்கை | 9,52,610 | 4,77,215 | 518 | 0.05 | 1,88,454 | 19.78 |
| 29 | திருநெல்வேலி | 16,45,509 | 8,32,916 | 4,099 | 0.25 | 3,58,487 | 21.79 |
| 30 | துாத்துக்குடி | 9,71,273 | 4,92,268 | 1,921 | 0.20 | 2,48,752 | 25.61 |
| 31 | கன்னியாகுமரி | 6,46,441 | 3,25,257 | 3,893 | 0.60 | 26,546 | 4.11 |
| | **மொத்தம்** | **404,86,223** | **201,73,040** | **6,69,086** | 1.65 | **99,69,580** | **24.62** |

### 2.1.1. மாவட்ட வாரியான பரப்பளவு விவரம்

மாநிலத்தில் ஊரகப் பகுதிகளின் மொத்தப் பரப்பளவு **1,04,149.61** சதுர கி.மீ. ஆகும். மாவட்ட வாரியான ஊரக பரப்பளவு விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.3.**
**மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் சராசரி பரப்பளவு விவரம்**

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மீ) | ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 633 | 3,512 | 6 | 3,851.45 | 6.08 |
| 2 | திருவள்ளூர் | 526 | 3,862 | 7 | 2,859.84 | 5.44 |
| 3 | கடலூார் | 683 | 2,403 | 4 | 2,942.24 | 4.31 |
| 4 | விழுப்புரம் | 1,099 | 3,487 | 3 | 6,509.43 | 5.92 |
| 5 | வேலூார் | 743 | 6,109 | 8 | 4,022.30 | 5.41 |
| 6 | திருவண்ணாமலை | 860 | 4,267 | 5 | 4,826.27 | 5.61 |
| 7 | சேலம் | 385 | 5,109 | 13 | 4,561.41 | 11.85 |
| 8 | நாமக்கல் | 322 | 2,520 | 8 | 3,119.43 | 9.69 |
| 9 | தர்மபுரி | 251 | 2,835 | 11 | 4,407.43 | 17.56 |
| 10 | கிருஷ்ணகிரி | 333 | 3,983 | 12 | 4,965.73 | 14.91 |
| 11 | ஈரோடு | 225 | 3,199 | 14 | 2,626.99 | 11.68 |
| 12 | திருப்பூர் | 265 | 2,455 | 9 | 4,545.50 | 17.15 |
| 13 | கோயம்புத்துார் | 228 | 1,200 | 5 | 2,534.24 | 11.12 |
| 14 | நீலகிரி | 35 | 1,282 | 37 | 1,170.39 | 33.44 |
| 15 | தஞ்சாவூர் | 589 | 2,260 | 4 | 3,657.67 | 6.21 |
| 16 | நாகப்பட்டினம் | 434 | 2,054 | 5 | 2,400.31 | 5.53 |
| 17 | திருவாரூர் | 430 | 1,704 | 4 | 2,322.69 | 5.40 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 404 | 2,210 | 5 | 4,028.00 | 9.97 |
| 19 | கரூர் | 157 | 2,179 | 14 | 2,656.25 | 16.92 |
| 20 | பெரம்பலூார் | 121 | 314 | 3 | 1,609.54 | 13.30 |
| 21 | அரியலூார் | 201 | 710 | 4 | 1,710.17 | 8.51 |
| 22 | புதுக்கோட்டை | 497 | 4,062 | 8 | 4,433.78 | 8.92 |
| 23 | மதுரை | 420 | 1,946 | 5 | 3,183.18 | 7.58 |

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மீ) | ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| 24 | தேனி | 130 | 607 | 5 | 1,159.89 | 8.92 |
| 25 | திண்டுக்கல் | 306 | 3,083 | 10 | 4,401.34 | 14.38 |
| 26 | இராமநாதபுரம் | 429 | 2,306 | 5 | 4,116.19 | 9.59 |
| 27 | விருதுநகர் | 450 | 1,760 | 4 | 3,282.08 | 7.29 |
| 28 | சிவகங்கை | 445 | 2,723 | 6 | 3,075.90 | 6.91 |
| 29 | திருநெல்வேலி | 425 | 2,337 | 5 | 4,283.06 | 10.08 |
| 30 | தூத்துக்குடி | 403 | 1,761 | 4 | 4,260.78 | 10.57 |
| 31 | கன்னியாகுமரி | 95 | 1,155 | 12 | 626.14 | 6.59 |
| **மொத்தம்** | | **12,524** | **79,394** | **6** | **1,04,149.61** | **8.32** |

## 2.1.2. கிராம ஊராட்சிகளின் வருமான வரம்பு

மாநிலத்தில் மொத்தம் **12,524** கிராம ஊராட்சிகள் உள்ளன. **2018–19** ஆம் ஆண்டின் ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள் பின்வருமாறு**:**

### அட்டவணை 2.4

### கிராம ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள்

| வருமான வரம்பு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ரூ.10–20 இலட்சம் | 6439 |
| ரூ. 20– 50 இலட்சம் | 5371 |
| ரூ. 50 இலட்சம் – 1 கோடி | 605 |
| ரூ. 1 கோடிக்கும் மேல் | 109 |
| **மொத்தம்** | **12524** |

## 2.1.3. கிராம சபை

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பு கிராம சபை

ஆகும். குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் கிராம சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டு கிராம சபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் சட்ட ரீதியாக கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 3–ன் கீழ்,

அ) கிராம சபையானது,

(i) கிராம திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்

(ii) கிராம ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்

(ii-a) கிராம ஊராட்சியின் முந்தைய ஆண்டுக்கான தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் அளித்தல்

(iii) கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்தல்.

(ஆ) அரசானது அறிவிக்கையின் மூலம் குறிப்பிட்ட சில பணிகளை கிராம சபைக்கு வழங்கலாம்.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இது தவிர, தேவையின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம சபைக் கூட்டம் நடத்தலாம். கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் கிராம சபைக்கான குறைவெண் வரம்பினை அரசு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்துள்ளது.

**அட்டவணை 2.5**

**கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு**

| வ. எண். | கிராம ஊராட்சியின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000க்கு மேல் | 300 |

கிராம சபை கூட்ட நடவடிக்கைகளை முறையாக பதிவேடுகளில் பதிவு செய்வது மற்றும் புகைப்பட ஆவணங்களை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## 2.1.4. கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110ன்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் கட்டாய கடமைகளாகும்.

i) அனைத்து கிராமச் சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், தடுப்புச் சுவர்கள் மற்றும் தரைப் பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர).

ii) குடியிருப்பு பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளின் மூலமாக சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக் கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்.

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) சமுதாய சொத்துக்களை பராமரித்தல்.

ix) கிணறுகள் தோண்டுதல் மற்றும் பராமரித்தல், குளம் தோண்டுதல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.

x) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

### 2.1.5. விருப்புரிமைப் பணிகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், **1994** பிரிவு **111–**ன்படி ஊராட்சியின் தேவைக்கேற்பவும், நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் பின்வரும் கடமைகளை கிராம ஊராட்சிகள் நிறைவேற்றிட வேண்டும்.

i) மரங்களை நட்டு பாதுகாத்தல்.

ii) குடியிருப்பு இல்லாத பொது இடங்கள் மற்றும் சாலைகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) சந்தைகளை ஏற்படுத்தி பராமரித்தல்.

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை கட்டுப்படுத்துதல்.

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக் கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள் மற்றும் உடற் பயிற்சி கூடங்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.

### 2.1.6. குடிநீர் வழங்கல்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணி, கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். கிராம

ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் ஆதாரங்கள் குறித்த விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.6.**
**பயன்பாட்டில் உள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் ஆதாரங்கள் குறித்த மாவட்ட வாரியான விவரம்**

| வ.எண் | மாவட்டம் | கைப்பம்புகளின் எண்ணிக்கை | மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | சிறு மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 6367 | 5009 | 5772 | 20 | 69 |
| 2 | திருவள்ளூர் | 4299 | 3717 | 2427 | 9 | 36 |
| 3 | கடலூர் | 9641 | 4275 | 3850 | 12 | 60 |
| 4 | விழுப்புரம் | 15741 | 5833 | 10248 | 11 | 78 |
| 5 | வேலூர் | 7289 | 7227 | 13518 | 20 | 46 |
| 6 | திருவண்ணாமலை | 9928 | 5115 | 8396 | 25 | 240 |
| 7 | சேலம் | 6606 | 5786 | 5140 | 9 | 262 |
| 8 | நாமக்கல் | 2443 | 4738 | 2342 | 12 | 298 |
| 9 | தர்மபுரி | 10216 | 4324 | 6125 | 8 | 66 |
| 10 | கிருஷ்ணகிரி | 3590 | 3067 | 2633 | 18 | 93 |
| 11 | ஈரோடு | 3813 | 4465 | 1956 | 40 | 192 |
| 12 | திருப்பூர் | 2308 | 4663 | 1088 | 17 | 265 |
| 13 | கோயம்புத்தூர் | 1314 | 3055 | 631 | 9 | 228 |
| 14 | நீலகிரி | 17 | 1382 | 118 | 1 | 4 |
| 15 | தஞ்சாவூர் | 6389 | 5368 | 3194 | 6 | 90 |
| 16 | நாகப்பட்டினம் | 28339 | 2914 | 2071 | 12 | 291 |
| 17 | திருவாரூர் | 9892 | 2752 | 1413 | 4 | 96 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 9238 | 4381 | 5851 | 25 | 327 |

| வ.எண் | மாவட்டம் | கைப்பம்புகளின் எண்ணிக்கை | மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | சிறு மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 19 | கரூர் | 2815 | 3148 | 3270 | 12 | 92 |
| 20 | பெரம்பலூர் | 3249 | 792 | 1160 | 4 | 65 |
| 21 | அரியலூர் | 1167 | 1585 | 1462 | 7 | 168 |
| 22 | புதுக்கோட்டை | 6081 | 4272 | 5657 | 46 | 208 |
| 23 | மதுரை | 3309 | 3922 | 4464 | 7 | 182 |
| 24 | தேனி | 899 | 1088 | 1330 | 24 | 106 |
| 25 | திண்டுக்கல் | 2080 | 4913 | 4694 | 32 | 116 |
| 26 | இராமநாதபுரம் | 1438 | 966 | 1339 | 52 | 429 |
| 27 | விருதுநகர் | 10839 | 4936 | 6046 | 12 | 153 |
| 28 | சிவகங்கை | 4507 | 3333 | 6000 | 33 | 129 |
| 29 | திருநெல்வேலி | 3787 | 3611 | 4510 | 26 | 388 |
| 30 | தூத்துக்குடி | 7858 | 2209 | 2237 | 22 | 354 |
| 31 | கன்னியாகுமரி | 264 | 1422 | 1783 | 13 | 44 |
| | **மொத்தம்** | **185723** | **114268** | **120725** | **548** | **5175** |

### 2.1.7. வறட்சி காலத்தில் குடிநீர் விநியோகம்

**2018** ஆம் ஆண்டு பருவமழை பெய்யாததால் மாநிலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. தமிழ்நாட்டில் **24** மாவட்டங்கள் மற்றும் **7** மாவட்டங்களிலுள்ள **38** வட்டாரங்கள் நீரியல் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என அரசு அறிவித்துள்ளது. பருவமழை பொய்த்ததன் காரணமாக ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதில் பெரும் சவால்கள் ஏற்பட்டன. இருப்பினும் இப்பிரச்சினைகளை சமாளிக்க அனைத்து நிதி ஆதாரங்களையும் ஒருங்கிணைத்து தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு, முறையாக குடிநீர் விநியோகம் செய்து வருகிறது.

### 2.1.8. நிலைமையை கையாள பின்பற்றிய வழிமுறைகள்

குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கீழ்க்காணும் நடவடிக்கைகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மேற்கொண்டு வருகின்றது.

- குடிநீர் பணிகளை விரைந்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களால் 2019–ம் ஆண்டிற்கு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- குடிநீர் பற்றாக்குறை நிலவும் ஊரகப் பகுதிகளில் மத்திய மற்றும் மாநில நிதிக் குழு மானியம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பொது நிதி ஆகியவற்றை குடிநீர் விநியோக பணிகளுக்கு முன்னுரிமை அளித்து ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பயன்படுத்தி வருகின்றன.
- குடிநீர் தட்டுப்பாடு தொடர்பான புகார்களை பதிவு செய்ய மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் குறைதீர் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறைதீர் மையங்கள் மூலம் புகார்கள் பெறப்பட்டு மாவட்ட ஆட்சியர்கள் மூலம் தீர்க்கப்பட்டு வருகிறன.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் வரையறுக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்படாத கூறுகளும் குடிநீர் விநியோக பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டன.

### 2.1.10. ஊரகப் பகுதிகளில் தெரு விளக்குகளை எல்.இ.டி. விக்குகளாக மாற்றியமைத்தல்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110–ன்படி ஊரகப் பகுதிகளில் தெருவிளக்குகள் அமைத்தல்

மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சிகளின் அடிப்படை கடமைகளில் ஒன்றாகும்.

கிராம ஊராட்சியின் வருவாயில் தோராயமாக 35 விழுக்காடு மின் உபயோகத்திற்காக செலவிடப்படுகிறது. மின்திறன் மேம்பாடு, நீடித்த தன்மை, மற்றும் திறம்பட்ட மேலாண்மை ஆகியவற்றை உறுதி செய்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **3.9.2015** மற்றும் **29.8.2016** ஆகிய தேதிகளில் விதி **110**–ன்படி தெரு குழல் விளக்குகள் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றம் செய்வதற்கான அறிவிப்பினை செய்துள்ளார்.

குழல் விளக்குகளுக்கு மாற்றாக நிறுவப்படும் எல்.இ.டி. விளக்குகள் 5 ஆண்டு கால உத்திரவாதத்துடன் கூடியதாகும். ஊரக தெரு விளக்குகளின் செயல்பாட்டினை கண்காணித்திட, ஊராட்சியில் உள்ள அனைத்து கம்பங்களுக்கும் எண் இடப்பட்டுள்ளன. மாவட்ட குறியீடு, வட்டார குறியீடு, ஊராட்சி குறியீடு மற்றும் குக்கிராம குறியீடு ஆகியவை கம்பத்தில் இடப்பட்டுள்ளது. மாற்றம் செய்யப்பட்டுள்ள எல்.இ.டி. விளக்குகளின் பயன்பாட்டு நிலையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**2.1.11. சுகாதாரம் – கிராம ஊராட்சிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தினை பேணிக் காத்தல்.**

ஊரகப் பகுதிகளை சுத்தமான நிலையிலும் தூய்மையாகவும் வைத்திருப்பது கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். இது தொடர்பாக கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

i) தெருக்கள் மற்றும் ஊராட்சி சாலைகளை சுத்தம் செய்தல்.

ii) கழிவு நீர்க் கால்வாய் கட்டுதல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு நீரை முறையாக வெளியேற்றுதல்.

iii) குப்பை குவியல்கள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல்.

iv) பொதுக் கழிப்பிடங்களை பராமரித்தல்.

v) சுடுகாடு/இடுகாடு ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

vi) பயன்பாட்டில் இல்லாத கிணறுகள், சுகாதாரமற்ற குட்டைகள், குளங்கள், சாக்கடைகள், குழிகள் அல்லது பள்ளங்கள் ஆகியவற்றை மூடுதல்.

ஊரகப் பகுதிகளில் தூய்மையைப் பேணவும் சுகாதாரத்தைப் பராமரிக்கவும் மொத்தம் **26,622** துப்புரவு பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது, திடக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக ஈடுபடுத்தப்பட்டுள்ள **66,025** தூய்மைக் காவலர்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. இந்த தூய்மை காவலர்களுக்கான மதிப்பூதியமானது மாநில அரசு நிதியிலிருந்து கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

### 2.1.12. ஊரகப் பகுதிகளில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள்

ஊரகப் பகுதிகளை சுத்தமாக பராமரித்து, தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் வகையில் ஊராட்சி அமைப்புகள் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையுடன் இணைந்து செயல்படுகின்றன. ஊரகப் பகுதிகளில் தொற்று நோய்களைத் தடுக்கும் பொருட்டு கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

i) அனைத்து வகையான தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மூலம் தகவல் கல்வி தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு பொது மக்களிடையே தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ii) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கைப்பம்புகளை ஒட்டியுள்ள பகுதிகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சுத்தம் செய்து குளோரின் முறையாக கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

iii) அரசு மற்றும் தனியார் மருந்துவமனைகளில் காய்ச்சலுக்காக சிகிச்சை பெறும் நோயாளிகளின் பட்டியலை தினந்தோறும் சுகாதாரத் துறையிடமிருந்து பெற்று, கள அளவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iv) தீவிர கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தேவையின் அடிப்படையில் மஸ்தூர்கள் ஈடுபடுத்தப்பட்டு வட்டார மருத்துவ அலுவலர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரிய உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

## 2.2. நிதி ஆதாரங்கள்

மாநிலத்தில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும்.

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வருவாய் பெறுகின்றன

அ) வரி வருவாய்,

ஆ) வரியில்லா வருவாய்

இ) மானியம்.

### 2.2.1.. வரி வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வரி வருவாய் பெற உரிமை பெற்றுள்ளன.

i) வீட்டு வரி / சொத்து வரி

ii) தொழில் வரி

iii) விளம்பர வரி

**i) வீடு / சொத்து வரி**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**, பிரிவு **172** மற்றும் அரசாணை எண். **255**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்:**13.12.1999**–ன்படி ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டு வரி / சொத்து வரி, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியால் விதிக்கப்படுகிறது. **2008–09** ஆம் ஆண்டு முதல், அரசு உதவி பெறாத சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் கட்டடங்களுக்கு சொத்து வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. மாவட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட வீட்டு வரி / சொத்து வரி விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.7.**
**2018–19 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட வீட்டு வரி / சொத்து வரி விவரம்**

| வ.எண். | மாவட்டம் | வீட்டுவரி | சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்துவரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ரூபாய் கோடியில் | | |
| 1 | காஞ்சிபுரம் | 33.54 | 3.23 | 36.77 |
| 2 | திருவள்ளூர் | 18.00 | 2.38 | 20.38 |
| 3 | கடலூர் | 8.23 | 0.56 | 8.79 |
| 4 | விழுப்புரம் | 6.62 | 0.46 | 7.08 |
| 5 | வேலூர் | 5.82 | 1.47 | 7.29 |
| 6 | திருவண்ணாமலை | 6.09 | 0.76 | 6.85 |
| 7 | சேலம் | 7.61 | 2.23 | 9.84 |

| வ.எண். | மாவட்டம் | வீட்டுவரி | சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்துவரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 8 | நாமக்கல் | 3.30 | 2.13 | 5.43 |
| 9 | தர்மபுரி | 2.23 | 0.40 | 2.63 |
| 10 | கிருஷ்ணகிரி | 7.39 | 0.45 | 7.84 |
| 11 | ஈரோடு | 7.01 | 1.48 | 8.49 |
| 12 | திருப்பூர் | 8.50 | 0.50 | 9.00 |
| 13 | கோயம்புத்துார் | 15.84 | 1.83 | 17.67 |
| 14 | நீலகிரி | 2.75 | 0.11 | 2.86 |
| 15 | தஞ்சாவூர் | 11.42 | 0.79 | 12.21 |
| 16 | நாகப்பட்டினம் | 3.29 | 0.38 | 3.67 |
| 17 | திருவாரூர் | 2.79 | 0.16 | 2.95 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 7.44 | 1.18 | 8.62 |
| 19 | கரூர் | 4.81 | 0.57 | 5.38 |
| 20 | பெரம்பலுார் | 2.69 | 0.66 | 3.35 |
| 21 | அரியலுார் | 4.45 | 0.25 | 4.70 |
| 22 | புதுக்கோட்டை | 5.69 | 0.82 | 6.51 |
| 23 | மதுரை | 8.71 | 0.66 | 9.37 |
| 24 | தேனி | 2.75 | 0.26 | 3.01 |
| 25 | திண்டுக்கல் | 8.75 | 0.62 | 9.37 |
| 26 | இராமநாதபுரம் | 5.57 | 0.31 | 5.88 |
| 27 | விருதுநகர் | 9.86 | 0.81 | 10.67 |
| 28 | சிவகங்கை | 5.12 | 0.29 | 5.41 |
| 29 | திருநெல்வேலி | 6.64 | 0.37 | 7.01 |
| 30 | துாத்துக்குடி | 5.22 | 0.28 | 5.50 |
| 31 | கன்னியாகுமரி | 4.05 | 0.61 | 4.66 |
| | மொத்தம் | **232.18** | **27.01** | **259.19** |

## ii) தொழில் வரி

கிராம ஊராட்சிகள், தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் பெற்றவை. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**, பிரிவு **198 B**–ல் தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித் தொகையிலிருந்து தொழில் வரி விதிக்கவும், வசூலிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து தொழில் வரிக்காக பிடித்தம் செய்த தொகையினை தொடர்புடைய கிராம

ஊராட்சிக்கு செலுத்திட வேண்டும். அதன்படி, **2018–19** ஆம் ஆண்டில் தொழில் வரியாக ரூ. **114.67** கோடி வசூலிக்கப்பட்டது.

## அட்டவணை 2.8
## மாவட்ட வாரியான தொழில்வரி விவரம் – 2018–19

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழில்வரி (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 12.54 |
| 2 | திருவள்ளூர் | 7.24 |
| 3 | கடலூார் | 2.89 |
| 4 | விழுப்புரம் | 5.97 |
| 5 | வேலூார் | 6.15 |
| 6 | திருவண்ணாமலை | 4.66 |
| 7 | சேலம் | 3.72 |
| 8 | நாமக்கல் | 3.19 |
| 9 | தர்மபுரி | 2.35 |
| 10 | கிருஷ்ணகிரி | 3.51 |
| 11 | ஈரோடு | 2.3 |
| 12 | திருப்பூர் | 1.81 |
| 13 | கோயம்புத்துார் | 6.18 |
| 14 | நீலகிரி | 0.61 |
| 15 | தஞ்சாவூர் | 3.45 |
| 16 | நாகப்பட்டினம் | 2.24 |
| 17 | திருவாரூர் | 3.28 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 4.55 |
| 19 | கரூர் | 2.41 |
| 20 | பெரம்பலூார் | 0.9 |
| 21 | அரியலூார் | 2.47 |
| 22 | புதுக்கோட்டை | 2.68 |
| 23 | மதுரை | 3.21 |
| 24 | தேனி | 1.78 |
| 25 | திண்டுக்கல் | 3.8 |
| 26 | இராமநாதபுரம் | 3.81 |
| 27 | விருதுநகர் | 5.39 |
| 28 | சிவகங்கை | 2.58 |
| 29 | திருநெல்வேலி | 3.43 |
| 30 | துாத்துக்குடி | 3.64 |
| 31 | கன்னியாகுமரி | 1.93 |
| **மொத்தம்** | | **114.67** |

### iii) விளம்பர வரி

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**, பிரிவு **172**, **220** மற்றும் **242**ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் விளம்பர வரி விதிக்கும் உரிமை பெற்றுள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் (உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பரங்களுக்கு வரி விதித்து வசூலித்தல்) விதிகள் **1999**–ல் ஊரகப் பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவ அனுமதி பெற்றவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய ஓர் ஆண்டிற்கான குறைந்தபட்ச மற்றும் அதிக பட்ச தொகையினை அரசு நிர்ணயிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் நிர்வாக அலுவலர் ஆண்டு கட்டணத்தை வசூல் செய்து தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் பொது நிதிக் கணக்கில் செலுத்த வேண்டும்.

### 2.2.2.. வரியல்லாத வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் உரிமை பெற்றுள்ளன.

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான கட்டணங்கள்

iii) சந்தைக் கட்டணம்

iv) குடிநீர் கட்டணம்

v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) 2சி பட்டா கட்டணம்

ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்

x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்

xi) அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை

xii) கனிமம் மற்றும் சுரங்க ஏலம் மற்றும் உரிமத் தொகை

i) **மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் **2019** ஆனது, தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண்:**43,** நாள்.**04.02.2019–**ன் மூலம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இவ்விதிகளின்படி உள்ளாட்சி அமைப்பின் செயல் தலைவர் அல்லது செயல்படுத்தும் அமைப்பின் மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள முகமை/நபர் கட்டிட அனுமதி வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நபர் ஆவார்.

**ii) அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் மற்றும் மனைகள் ஒழுங்குபடுத்துதல் விதிகள், 2017**

நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் உருவாகி உள்ளன. இம்மனைப் பிரிவுகளில் அடிப்படை வசதிகள் மற்றும் போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலையில் பெரும்பாலான மனைகளை ஏழைகள் மற்றும் விவரம் அறியாத மக்கள் வாங்கியுள்ளனர். இந்த மனைப் பிரிவுகளை மீளவும்

முந்தைய பயன்பாட்டு நிலைக்கு மாற்றிட இயலாத நிலை இருந்தது.

ஏழைகள் மற்றும் விவரம் அறியாதோர் வாங்கியுள்ள அங்கீகரிக்கப்படாத மனைகளை, உரிய வகையில் ஒழுங்குமுறைப்படுத்தி உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தர அரசு முடிவு செய்து, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் உள்ள சாலைகளை அகலப்படுத்துதல், பொது உபயோகத்திற்கான இடங்களை பயன்படுத்துதல் ஆகிய நிபந்தனைகளுடன் அங்கீகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், **1971** (தமிழ்நாடு சட்டம் **35, 1972**) பிரிவு **113**ன்படி **20.10.2016**க்கு முன்னர் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் விற்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட வீட்டு மனைகளை தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், **1971**க்கு விலக்களித்து மேற்படி, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் வீட்டு மனைகளை வரைமுறை செய்வதற்கு, மேற்கண்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு **122**ன் கீழ் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு அல்லது உட்பிரிவிலுள்ள தனி வீட்டு மனைகளை வரன்முறை செய்தல்.
2. அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை வரன்முறை செய்தல்.

இவ்வாறு, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு அல்லது உட்பிரிவில் உள்ள தனி மனைகளை நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் பெற்று வரன்முறை செய்வதற்கு வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### iii) குடிநீர் கட்டணங்கள்

ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பிற்கு கிராம ஊராட்சி குடிநீர் கட்டணம் விதிக்கின்றது. தனி நபர் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு வைப்புத் தொகை ரூ.1,000 வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டு குடிநீர் இணைப்பிற்கும் மாதக்கட்டணம் ரூ.50 செலுத்த வேண்டும். அதன்படி 2018–19 ஆம் ஆண்டில் குடிநீர் கட்டணமாக ரூ. 87.19 கோடி வசூலிக்கப்பட்டது. மாவட்ட வாரியான குடிநீர் கட்டண விபரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.9**

**2017–18 ல் மாவட்ட வாரியாக குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்ட விபரம்**

**(ரூபாய் கோடியில்)**

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | வசூல் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 3.12 |
| 2 | திருவள்ளூர் | 2.65 |
| 3 | கடலூார் | 1.52 |
| 4 | விழுப்புரம் | 0.35 |
| 5 | வேலூார் | 6.42 |
| 6 | திருவண்ணாமலை | 2.95 |
| 7 | சேலம் | 2.05 |
| 8 | நாமக்கல் | 2.18 |
| 9 | தர்மபுரி | 0.27 |
| 10 | கிருஷ்ணகிரி | 0.28 |
| 11 | ஈரோடு | 2.43 |
| 12 | திருப்பூர் | 3.83 |
| 13 | கோயம்புத்தூார் | 8.8 |
| 14 | நீலகிரி | 0.14 |
| 15 | தஞ்சாவூர் | 7.23 |
| 16 | நாகப்பட்டினம் | 1.11 |
| 17 | திருவாரூர் | 2.42 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 6.31 |
| 19 | கரூர் | 2.86 |
| 20 | பெரம்பலூார் | 0.92 |
| 21 | அரியலூார் | 1.75 |

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | வசூல் |
|---|---|---|
| 22 | புதுக்கோட்டை | 1.27 |
| 23 | மதுரை | 2.3 |
| 24 | தேனி | 3.5 |
| 25 | திண்டுக்கல் | 3.51 |
| 26 | இராமநாதபுரம் | 2.07 |
| 27 | விருதுநகர் | 3.2 |
| 28 | சிவகங்கை | 3.08 |
| 29 | திருநெல்வேலி | 2.36 |
| 30 | தூத்துக்குடி | 1.7 |
| 31 | கன்னியாகுமரி | 4.61 |
| **மொத்தம்** | | **87.19** |

### 2.2.3. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரியிலிருந்து பெறப்படும் வருவாய் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. அதன்படி, 2018–19 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ.407.71 கோடியினை பின்வருமாறு அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

i) மூன்றில் ஒரு பங்கு தொகையான ரூ.135.90 கோடி நிதி கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 67:33 என்ற விகிதத்தில் 2011 மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளிக்கப்பட்டது. அவ்வாறு, ரூ.91.06 கோடி கிராம ஊராட்சிகளுக்கும், ரூ.44.84 கோடி ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வரையறுக்கப்படாத நிதியாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ii) மீதமுள்ள மூன்றில் இரு பங்கு தொகையான ரூ.271.81 கோடி ஊரகப் பகுதிகளில் குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை

மேற்கொள்ளும் வகையில் முன்னுரிமைத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.4. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலரை தலைவராகக் கொண்ட குழுவிற்கு ‘ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்ட கூறு நிதியிலிருந்து மேற்கொள்ளும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், பெரிய பாலங்கள், தரைப் பாலங்கள், இணைப்புச் சாலைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் போன்ற பெரிய அளவிலான பணிகள் இத்திட்டத்தின் கீழ் ரூ.271.81 கோடி மதிப்பீட்டில் 2018–19 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.2.5. மானியம்

**1. மாநில நிதிக் குழு மானியம்.**

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதிக்கப்படும் மொத்தப் பகிர்வு மானியத்திலிருந்து 56% ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்படுகிறது. கிராம ஊராட்சியை பொறுத்தவரை தெரு விளக்குகளுக்கான மின்கட்டணம் மற்றும் குடிநீர் வழங்குவதற்குண்டான மின்கட்டணம் ஆகியவற்றை செலுத்த குறைந்தபட்ச மானியமாக ரூ.7 இலட்சம் தனி கணக்கில் விடுவிக்கப்பட்டு செலவழிக்கப்படுகிறது. எஞ்சிய தொகை மாநில நிதிக்குழு பரிந்துரைத்துள்ள விகிதாச்சாரப்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது.

## 2. மத்திய நிதிக் குழு மானியம்.

மத்திய நிதிக் குழு மானியம் முழுவதும் கிராம ஊராட்சிகளுக்கு தெரு விளக்கு, குடிதண்ணீர், சுகாதார பராமரிப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படுகிறது.

## 3. மத்திய மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களின் வளர்ச்சி நிதி.

### i) மாநில நிதிக் குழு மானியம்

73–வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 198–ன்படி, தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு:–

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், ஊராட்சிகளுக்கும் பிரித்து வழங்கும் முறையினை உருவாக்குதல்.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி நிலையினைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

**73–வது** அரசியலமைப்பு சட்டத்திருத்தத்திற்குட்பட்டு தமிழ்நாடு அரசு ஆணை எண். **350,** நிதித்துறை நாள்: **23.04.1994–**ன் மூலம் தமிழகத்தில் “முதல் மாநில நிதி ஆணையம்” ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் மாநில நிதி ஆணையம் அமைத்த முதன்மை மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்திட இதுவரை ஐந்து மாநில நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை 2.10

### மாநில நிதிக்குழு ஆணையங்கள்

| வ. எண். | விவரங்கள் | முதலாவது மாநில நிதி ஆணையம் | இரண்டாவது மாநில நிதி ஆணையம் | மூன்றாவது மாநில நிதி ஆணையம் | நான்காவது மாநில நிதி ஆணையம் |
|---|---|---|---|---|---|
| 1. | அமைக்கப்பட்ட நாள் | 23.04.1994 | 01.12.1999 | 01.12.2004 | 01.12.2009 |
| 2. | எந்த அரசாணையின் கீழ் அமைக்கப்பட்டது | அரசாணை (நிலை) எண்.350, நிதி (Res) துறை, நாள் 23.04.1994 (ம) அரசாணை (நிலை) எண்.161, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 06.09.1994 | அரசாணை (நிலை) எண்.518, நிதி (Res) துறை, நாள் 01.12.1999 | அரசாணை (நிலை) எண்.573, நிதி (FC.IV) துறை, நாள் 01.12.2004 | அரசாணை (நிலை) எண்.549, நிதி (FC.IV) துறை, நாள் 01.12.2009 |
| 3. | வரையறை நிர்ணயம் செய்வதற்கான அரசாணை | அரசாணை (நிலை) எண்.350, நிதி (Res) துறை, நாள் 23.04.1994 | அரசாணை (நிலை) எண்.103, நிதி (Res) துறை, நாள் 03.03.2000 | அரசாணை (நிலை) எண்.584, நிதி (FC.IV) துறை, நாள் 14.12.2004 | அரசாணை (நிலை) எண்.549, நிதி (FC.IV) துறை, நாள் 01.12.2009 |
| 4. | அறிக்கை அளிப்பதற்கான காலக் கெடு | 31.10.1995 | 31.10.2001 | 31.05.2006 (பின்னர் இக்காலக்கெடு 30.09.2006 வரை நீட்டிக்கப் பட்டது) | 31.05.2011 (பின்னர் இக்காலக்கெடு 30.09.2011 வரை நீட்டிக்கப் பட்டது) |
| 5. | அரசிற்கு அறிக்கை அளிக்கப்பட்ட நாள் | 29.11.1996 | 21.05.2001 | 30.09.2006 | 30.09.2011 |

| வ. எண். | விவரங்கள் | முதலாவது மாநில நிதி ஆணையம் | இரண்டாவது மாநில நிதி ஆணையம் | மூன்றாவது மாநில நிதி ஆணையம் | நான்காவது மாநில நிதி ஆணையம் |
|---|---|---|---|---|---|
| 6. | இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தான அறிக்கை சட்டமன்ற பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட நாள் | 28.04.1997 | 08.05.2002 | 10.05.2007 | 14.05.2013 |
| 7. | பரிந்துரை காலம் | 4. 5.1997–98 முதல் 2001–02 | 2002–03 முதல் 2006–07 | 2007–08 முதல் 2011–12 | 2012–13 முதல் 2016–17 |
| 8. | ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானிய விகிதாச்சாரம் | 55 சதவீதம் | 58 சதவீதம் | 58 சதவீதம் | 58 சதவீதம் |
| 9. | ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்கு (கிராம ஊராட்சி: வட்டார ஊராட்சி: மாவட்ட ஊராட்சி) | 45:45:10 | 47:45:8 | 60:32:8 | 60:32:8 |

## 2.2.6. ஐந்தாவது மாநில நிதி ஆணையம்

மாநில அரசால் நியமிக்கப்பட்டிருந்த ஐந்தாவது மாநில நிதி ஆணையம், 2017 முதல் 2022 வரையிலான காலத்திற்கான தனது பரிந்துரையை டிசம்பர் 2016ல் அளித்தது. ஐந்தாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்று அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை சட்டமன்ற பேரவையில் 24.03.2017 அன்று வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. கீழ்க்காணும் முக்கிய பரிந்துரைகளின் மீது அரசு உரிய ஆணைகளை வெளியிட்டுள்ளது.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 விழுக்காடு ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆ) பகிர்வு மானியம் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே 56:44 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான பகிர்வு முறையே மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு 8: 37: 55 ஆகும்.

ஈ) 2017–18 ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகளுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ஆண்டுக்கு ரூ.40 இலட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது.

ஊ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதிக் குழு மானிய தொகை பகிர்வு கீழ்காணும் வழிமுறைகளை கொண்டிருக்கும்.

| | | |
|---|---|---|
| 1. 2011ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை | : | 60% |
| 2. பரப்பளவு | : | 15% |
| 3. ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மக்கள் தொகை | : | 15% |
| 4. தனிநபர் செலவு நுகர்வு இடைவெளி | : | 10% |

எ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பங்குத் தொகையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக “மூலதன மானிய நிதி” ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த தொகையில் 10 விழுக்காடு தொகையினை பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2019–20 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு அரசு ரூ.6,573 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதிக் குழு மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

**2.2.7. மூலதன மானிய நிதி**

ஏற்கனவே நடைமுறையில் இருந்த உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மூலதன மானிய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதி தொகுப்பில் 20 விழுக்காடு மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். மாநில அளவில் முக்கியமானதாக கருதப்படும் திட்டங்களை செயல்படுத்த இதில் 20 விழுக்காடு தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர், ஊரக வளர்ச்சி இயக்குநர், நிதித் துறை பிரதிநிதி ஒருவர் மற்றும் மாநில திட்டக் குழு உறுப்பினர் செயலர் ஆகியோர் அடங்கிய குழுவால் இப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்படும். எஞ்சியுள்ள 80 விழுக்காடு நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 2.2.8. பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஒட்டு மொத்த பகிர்மான நிதியில் 10 விழுக்காட்டினை கொண்டு பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 40 விழுக்காடு தொகை அதாவது ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒட்டு மொத்த பகிர்மான நிதியில் 4 விழுக்காடு, கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது மூன்று ஆண்டுகளில் நிதி பற்றாக்குறை உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு இடையே ஐந்தாவது நிதி ஆணைய காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரால் பகிர்ந்து அளிக்கப்படும். இதில் 20 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வசம் இருக்கும். 20 விழுக்காடு தொகை மாநில நிதி ஆணையத்தால் மாவட்ட ஊராட்சிகளுக்கு பரிந்துரைத்துள்ள விகிதாச்சார அடிப்படையில் மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் இத்தொகையினை வேறு எந்த திட்டத்திலும் அல்லது வழிமுறையிலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு இத்தொகையினை மானியமாக வழங்க வேண்டும். மீதமுள்ள 20 விழுக்காடு தொகை கூட்டு குடிநீர் திட்டத்திலுள்ள பற்றாக்குறையினைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மானியமாக விடுவிக்கப்படும்.

### 2.2.9. மத்திய நிதி ஆணைய மானியம்

பதினான்காவது நிதி ஆணையம் கிராம ஊராட்சிகளுக்கு அடிப்படை மானியம் மற்றும் செயலாக்க மானியம் ஆகிய இரு

மானியங்களை பரிந்துரை செய்துள்ளது. மொத்த மானிய தொகையில் **90** விழுக்காடு அடிப்படை மானியமாகும். **10** விழுக்காடு செயலாக்க மானியமாகும். **2015–16** முதல் **2019–20** ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டிற்கான உரிய பங்கு விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.11**

**மத்திய நிதி ஆணைய மானிய விவரம்**

**(ரூபாய் கோடியில் )**

| **மானியம்** | **2015-16** | **2016-17** | **2017-18** | **2018-19** | **2019-20** | **மொத்தம் (2015-20)** |
|---|---|---|---|---|---|---|
| அடிப்படை மானியம் | 947.65 | 1312.19 | 1516.12 | 1753.87 | 2369.86 | 7899.69 |
| செயலாக்க மானியம் | -- | 172.12 | 194.78 | 221.20 | 289.64 | 877.74 |
| **மொத்தம்** | **947.65** | **1484.31** | **1710.90** | **1975.07** | **2659.50** | **8777.43** |

### i) 14வது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியம்

**2018–19** ஆம் ஆண்டிற்கான பதினான்காவது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானிய முதல் தவணைத் தொகையாகத் தொகையாக ரூ. **876.94** கோடியை கிராம ஊராட்சிகளுக்கு மத்திய அரசு விடுவித்துள்ளது. இத்தொகை முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் அடிப்படை பணிகளான குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம்

தொடர்பான பணிகளை மேற்கொள்ளவும், மின்கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை செலுத்தவும் இம்மானியம் பயன்படுத்தப்படுகிறது.

## ii) 14 வது மத்திய நிதிக் குழுவின் செயலாக்க மானியம்

14–வது மத்திய நிதிக் குழு, கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மானியம் வழங்க தேவையான விரிவான நடைமுறைகள், செயல்பாட்டு அளவுகோல்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட வேண்டிய ஊக்கத் தொகையின் அளவு ஆகியவற்றை பரிந்துரைத்துள்ளது.

2017–18 ஆம் ஆண்டிற்கான செயலாக்கம் மானியம் பெறுவதற்கு கிராம ஊராட்சிகள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை சமர்ப்பித்தல் மற்றும் சொந்த வருவாய் ஆதாரங்களை உயர்த்துதல். ஆனால் ஒரு ஊராட்சிக்கு வழங்கப்படும் செயலாக்க மானியமானது அவ்வூராட்சிக்கு விடுவிக்கப்படும் அடிப்படை மானியத்தில் 5 மடங்கு தொகைக்கு மேல் இருக்கக்கூடாது.

14–வது மத்திய நிதிக் குழு செயலாக்க மானிய தொகையை கிராம ஊராட்சிகள் பெறுவதற்குரிய வழிகாட்டி நெறிமுறை மற்றும் அளவுகோல் ஆகியன தமிழ்நாடு அரசு, அரசிதழ் (சிறப்பு) எண். 95, நாள்: 28.02.2019ல் அறிவிக்கையாக வெளியிட்டுள்ளது.

## 2.3. கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரித்திடல்

உள்ளூர் சுயாட்சி அமைப்பான கிராம ஊராட்சிகள் உள்ளூர் குடிமக்களுக்குத் தேவையான அடிப்படை சேவைகளை வழங்குவதோடு ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் நலிவு நிலையினை சீர் செய்யும் பொறுப்புடையவையாகும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 240–ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும், ‘ஆண்டு வளர்ச்சித் திட்டத்தினை’ ஒவ்வொரு ஆண்டும் தயார் செய்திட வேண்டும்.

நியாயமான, வெளிப்படையான மற்றும் தரமான வகையில் நிதி மற்றும் பிற வளங்களை பயன்படுத்துவதை உறுதி செய்வது மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டமிடலுக்கு மிகவும் முக்கியமானதாகும். அதற்கிணங்க 14–வது நிதி ஆணைய மானியத்தை அடித்தள அளவிலான திட்டமிடல் அடிப்படையில் பயன்படுத்திட அரசாணை எண்.34, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1 ) துறை, நாள்:02.03.2016ல் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 2.4. ஊராட்சி ஒன்றியம்

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், குறைந்தபட்சம் 5,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி

ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

## அட்டவணை 2.12
## கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் விவரம்

| ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் வரம்பு விவரம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10– மற்றும் அதற்கு குறைவாக | 23 |
| 11 முதல் 20 வரை | 80 |
| 21 முதல் 30 வரை | 80 |
| 31 முதல் 40 வரை | 83 |
| 41 முதல் 50 வரை | 65 |
| 51 மற்றும் அதற்கு அதிகமாக | 54 |
| **மொத்தம்** | **385** |

மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விவரம் பின்வருமாறு :–

## அட்டவணை 2.13
## மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் விபரம்

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 13 | 633 | **49** | 3,851.45 | 296.27 |
| 2 | திருவள்ளூர் | 14 | 526 | **38** | 2,859.84 | 204.27 |
| 3 | கடலூர் | 13 | 683 | **53** | 2,942.24 | 226.33 |
| 4 | விழுப்புரம் | 22 | 1,099 | **50** | 6,509.43 | 295.88 |
| 5 | வேலூர் | 20 | 743 | **37** | 4,022.30 | 201.12 |
| 6 | திருவண்ணாமலை | 18 | 860 | **48** | 4,826.27 | 268.13 |
| 7 | சேலம் | 20 | 385 | **19** | 4561.41 | 228.07 |
| 8 | நாமக்கல் | 15 | 322 | **21** | 3,119.43 | 207.96 |
| 9 | தர்மபுரி | 8 | 251 | **31** | 4,407.43 | 550.93 |
| 10 | கிருஷ்ணகிரி | 10 | 333 | **33** | 4,965.73 | 496.57 |
| 11 | ஈரோடு | 14 | 225 | **16** | 2,626.99 | 187.64 |

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 12 | திருப்பூர் | 13 | 265 | **20** | 4,545.50 | 349.65 |
| 13 | கோயம்புத்தூர் | 12 | 228 | **19** | 2,534.24 | 211.19 |
| 14 | நீலகிரி | 4 | 35 | **9** | 1,170.39 | 292.60 |
| 15 | தஞ்சாவூர் | 14 | 589 | **42** | 3,657.67 | 261.26 |
| 16 | நாகப்பட்டினம் | 11 | 434 | **39** | 2,400.31 | 218.21 |
| 17 | திருவாரூர் | 10 | 430 | **43** | 2,322.69 | 232.27 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14 | 404 | **29** | 4,028.00 | 287.71 |
| 19 | கரூர் | 8 | 157 | **20** | 2,656.25 | 332.03 |
| 20 | பெரம்பலூர் | 4 | 121 | **30** | 1,609.54 | 402.39 |
| 21 | அரியலூர் | 6 | 201 | **34** | 1,710.17 | 285.03 |
| 22 | புதுக்கோட்டை | 13 | 497 | **38** | 4,433.78 | 341.06 |
| 23 | மதுரை | 13 | 420 | **32** | 3,183.18 | 244.86 |
| 24 | தேனி | 8 | 130 | **16** | 1,159.89 | 144.99 |
| 25 | திண்டுக்கல் | 14 | 306 | **22** | 4,401.34 | 314.38 |
| 26 | இராமநாதபுரம் | 11 | 429 | **39** | 4,116.19 | 374.20 |
| 27 | விருதுநகர் | 11 | 450 | **41** | 3,282.08 | 298.37 |
| 28 | சிவகங்கை | 12 | 445 | **37** | 3,075.90 | 256.33 |
| 29 | திருநெல்வேலி | 19 | 425 | **22** | 4,283.06 | 225.42 |
| 30 | தூத்துக்குடி | 12 | 403 | **34** | 4,260.78 | 355.07 |
| 31 | கன்னியாகுமரி | 9 | 95 | **11** | 626.14 | 69.57 |
| | **மொத்தம்** | **385** | **12,524** | **33** | **1,04,149.61** | **270.52** |

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**, பிரிவு **112**–ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

2. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

3. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்.

4. தொற்றுநோய் பரவாத வண்ணம் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.

6. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

## 2.4.1. நிதி

1. ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு வரி விதித்திடும் அதிகாரம் இல்லை.

2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டதீர்வை ஆகியவை ஊராட்சி ஒன்றியத்தின் வருவாய் இனங்களாகும்.

3. மாநில நிதி ஆணையத்தால் விடுவிக்கப்படும் மானியங்களான மக்கள் தொகை அடிப்படையிலான மானியம் மற்றும் குறைந்த பட்ச மானியம் ஆகியன ஊராட்சி ஒன்றியத்திற்கு மானியங்களாக வழங்கப்படுகிறன. ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் குறைந்தபட்சமான மானியம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு ரூ.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

### 2.4.2. ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாட்டிலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிலையான அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியினை கொண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2011–12 ஆம் ஆண்டு முதல் 2018–19 ஆம் ஆண்டு வரை ரூ.206.23 கோடி செலவில் 99 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

### 2.4.3. நீராதார அமைப்புகள்

ஊரகப் பகுதிகளில் உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் ஆகியன ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான சொத்துக்களில் சிலவாகும். மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் எண்ணிக்கை பின்வருமாறு :

## அட்டவணை 2.14
## மாவட்ட வாரியாக சிறுபாசன கண்மாய்கள், குட்டைகள் / ஊரணிகள் விவரம்

| வ.எண் | மாவட்டம் | சிறுபாசன கண்மாய்கள் | ஊரணிகள்/ குட்டைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1,100 | 1,240 | 2,340 |
| 2 | திருவள்ளூர் | 649 | 2,059 | 2,708 |
| 3 | கடலூர் | 254 | 2,304 | 2,558 |
| 4 | விழுப்புரம் | 1,257 | 3,551 | 4,808 |
| 5 | வேலூர் | 633 | 854 | 1,487 |
| 6 | திருவண்ணாமலை | 1,250 | 2,027 | 3,277 |
| 7 | சேலம் | 242 | 375 | 617 |
| 8 | நாமக்கல் | 152 | 422 | 574 |
| 9 | தர்மபுரி | 555 | 628 | 1,183 |
| 10 | கிருஷ்ணகிரி | 1,172 | 1,211 | 2,383 |
| 11 | ஈரோடு | 19 | 597 | 616 |
| 12 | திருப்பூர் | 10 | 1,434 | 1,444 |
| 13 | கோயம்புத்துார் | 9 | 709 | 718 |
| 14 | நீலகிரி | 0 | 225 | 225 |
| 15 | தஞ்சாவூர் | 63 | 3,131 | 3,194 |
| 16 | நாகப்பட்டினம் | 0 | 3,979 | 3,979 |
| 17 | திருவாரூர் | 0 | 3,602 | 3,602 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 1,406 | 705 | 2,111 |
| 19 | கரூர் | 108 | 388 | 496 |
| 20 | அரியலூர் | 477 | 1,615 | 2,092 |
| 21 | பெரம்பலூர் | 138 | 753 | 891 |
| 22 | புதுக்கோட்டை | 3,824 | 1,795 | 5,619 |
| 23 | மதுரை | 1,029 | 3,233 | 4,262 |
| 24 | தேனி | 26 | 319 | 345 |
| 25 | திண்டுக்கல் | 1,577 | 1,000 | 2,577 |
| 26 | இராமநாதபுரம் | 818 | 2,499 | 3,317 |
| 27 | விருதுநகர் | 300 | 1,730 | 2,030 |
| 28 | சிவகங்கை | 2,776 | 4,156 | 6,932 |
| 29 | திருநெல்வேலி | 769 | 769 | 1,538 |
| 30 | தூத்துக்குடி | 397 | 1,148 | 1,545 |
| 31 | கன்னியாகுமரி | 599 | 300 | 899 |
| மொத்தம் | | 21,609 | 48,758 | 70,367 |

## 2.5. மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24–ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, சம்மந்தப்பட்ட துறைகளோடு ஒருங்கிணைந்து செயல்பட பின்வரும் நிலைக் குழுக்களை அமைக்கலாம்.

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப் பணிகள்
4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு.

இக்குழுக்கள் தவிர, தேவையின் அடிப்படையில் மாவட்ட ஊராட்சி, கூடுதல் நிலைக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத்

தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார்.

### 2.5.1. செயல்பாடுகள்

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப் பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றை முன்னேற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.
4. ஊரக வீட்டு வசதி, குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உரிய வீட்டு வசதி திட்டங்களை திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்
5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

### 2.5.2. நிதி

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில் மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியில் எட்டு விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

### 2.5.3 மாவட்ட திட்டக் குழு

மாவட்ட திட்டக் குழு என்ற அமைப்பினை ஏற்படுத்திட 74வது இந்திய அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 1992ல் வழிவகுத்துள்ளது. அதன்படி மாவட்ட திட்டக் குழு 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத்தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாவட்ட திட்டக் குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விபரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதி வரையிலான விபரங்களைப் பெறுதல்.
2. முன்னுரிமை தேவைகளைக் கண்டறிதல்.
3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.
4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். இவ்வாறு மாவட்டத் திட்டக்குழு தயாரிக்கும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், மாநிலத் திட்டக் குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருக்கும்.

5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.
6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.
8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

மேலே விவரிக்கப்பட்ட பணிகளை தவிர 5 வது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதித் தொகுப்பில் 20 விழுக்காடு, மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். அவற்றில் 80% மூலதன மானிய நிதி பணிகளுக்கு ஒதுக்கீடு செய்வது மாவட்ட திட்டக் குழுவின் பொறுப்பாகும். மூலதன மாநில நிதியில் 80 விழுக்காடு நிதி, மாவட்ட ஊராட்சிகளுக்கான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் வெளியிடப்படும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 2.5.4. மாவட்ட ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

மாநில அளவில் 31 மாவட்ட ஊராட்சிகளுக்கும் சொந்த கட்டடங்கள் உள்ளன. 31 மாவட்ட ஊராட்சிகளிலும்

தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**2.6. மாவட்டத்தலைமையிடங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த கட்டடம் கட்டுதல்:-**

மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த கட்டடங்கள் கட்டுவதற்கு **2017–18** ஆம் ஆண்டு **5** கட்டடங்கள் ரூ.**32.81** கோடி மதிப்பீட்டிலும், **2018–19** ஆம் ஆண்டு **6** கட்டடங்கள் ரூ.**37.78** கோடி மதிப்பீட்டிலும் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியிலிருந்து கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.15**
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டிடங்கள்**

| 2017–18 | 2018–19 |
|---|---|
| 1. தேனி | 1.காஞ்சிபுரம் |
| 2. விழுப்புரம் | 2.திருவள்ளூர் |
| 3. விருதுநகர் | 3.திருவண்ணாமலை |
| 4. நாகப்பட்டினம் | 4. சிவகங்கை |
| 5. வேலூர் | 5. மதுரை |
| | 6. திருவாரூர் |

## 2.7. உள்ளாட்சித் தேர்தல்கள்

### 2.7.1. தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகள், 1995

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடி மற்றும் மறைமுகத் தேர்தல்களை நடத்துவது குறித்து இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல், தேர்தல்

அறிவிப்பு வெளியிடுதல், வேட்பு மனு தாக்கல், வாக்குப் பதிவு, வாக்குகளை எண்ணுதல், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், தேர்தல் செலவினங்கள், தேர்தல் வழக்குகளுக்கு தீர்வு காணும் முறை ஆகியவை குறித்து இவ்விதிகளில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### 2.7.2. மாநிலத் தேர்தல் ஆணையம்

அதிகாரப் பரவலாக்கம் மற்றும் மக்களாட்சியை வலுப்படுத்தும் வகையில் சுதந்திரமான மற்றும் தன்னாட்சி அதிகாரம் பெற்ற அரசியலமைப்பு நிறுவனமாக 1994 ஆம் ஆண்டு, மாநில தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது. வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகிய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தல் நடத்துதல் மற்றும் அதன் தொடர்புடைய பணிகளைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகள் ஆணையரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 239 உட்பிரிவு (3)–ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு, ஆணையர் மற்றும் நிர்வாக பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மாநில தேர்தல் ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். மேலும், மாநில தேர்தல் ஆணையராக நியமிக்கப்படும் ஒரு நபர்

அவருடைய பணிக்காலத்தில் 65 வயதினை நிறைவு செய்தால் பணி ஓய்வு பெற்று விடுவார்.

### 2.7.3. மாநில மறுவரையறை ஆணையம்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 28ன் படி ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிவுற்ற பின்பும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்ய வேண்டும். தமிழ்நாடு மறுவரையறை சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 23, 2017) பிரிவு 12ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

மறுவரையறை ஆணையம் கீழ்க்காணும் அலுவல் சார்ந்த உறுப்பினர்களை கொண்ட ஒரு அமைப்பாகும்—

(அ) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் இதன் தலைவர் ஆவார்.

(ஆ) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்

(இ) நகராட்சி நிர்வாக ஆணையர்

(ஈ) பேரூராட்சிகள் இயக்குநர்

(உ) பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்

(ஊ) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செயலர் இதன் உறுப்பினர் செயலர் ஆவார்.

இந்த ஆணையத்தின் தலைமையிடமானது பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இருக்க வேண்டும். இந்த ஆணையத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு—

(அ) கடைசியாக நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதற்கான பரிந்துரைகளை செய்தல்.

(ஆ) கடைசியாக நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பினையும் வார்டுகளாக பிரிப்பதற்கான பரிந்துரைகளை செய்தல்.

(இ) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பின் வார்டுகளின் எல்லைகளை தீர்மானிப்பதற்கான பரிந்துரைகளை செய்தல்.

(ஈ) உள்ளாட்சி அமைப்புகளின் ஒவ்வொரு வார்டுகளின் மக்கள் தொகையானது கூடுமான வரையில் அந்த குறிப்பிட்ட உள்ளாட்சி அமைப்பு முழுவதும் சரிசமமாக இருக்கும் வகையில் பரிந்துரைத்தல்.

(உ) உள்ளாட்சி அமைப்புகளின் ஒவ்வொரு வார்டும் பூகோள ரீதியில் கூடுமான வரை கச்சிதமான பரப்பளவினை கொண்டதாக இருக்குமாறு பரிந்துரைத்தல்.

(ஊ) கடைசியாக நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய வார்டுகளை நிர்ணயம் செய்வதற்கான பரிந்துரைகளை செய்தல்.

(எ) குறிப்பிட்ட கால இடைவெளியில் இப்பணி தொடர்பான காலமுறை அறிக்கைகளை அரசிற்கு வழங்குதல்.

(ஏ) அரசால் அவ்வப்போது பணிக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மறுவரையறை அலுவலர்களாக பின்வரும் அலுவலர்கள் செயல்படுவர்:

(அ) கிராம ஊராட்சி வார்டுகள் – வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சி)

(ஆ) ஊராட்சி ஒன்றிய வார்டுகள் – உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

(இ) மாவட்ட ஊராட்சி வார்டுகள் – செயலர், மாவட்ட ஊராட்சி

ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பின் மறுவரையறை அலுவலர்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்வதற்கான வரைவு கருத்துருக்களை தயார் செய்வர்.

இவ்வாறு பெறப்படும் உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை தொடர்பான வரைவு கருத்துருக்களை மறுவரையறை ஆணையமானது ஆய்வு செய்யும். ஒவ்வொரு வரைவு கருத்துருவின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்த பின்பு இதன் மீதான தனது பரிந்துரையுடன், மறுவரையறை ஆணையம், இக்கருத்துருக்களை பிரசுரம் செய்யும் வகையில் அரசிற்கு அனுப்பி வைக்கும்.

இதன் அடிப்படையில், மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறை பணிகளை இதற்கென அமைக்கப்பட்ட மறுவரையறை ஆணையம்

தொடங்கியது. இதனைத் தொடர்ந்து, மாவட்ட மறுவரையறை அலுவலர்கள் / மாவட்ட ஆட்சியர்களால் வார்டு மறுவரையறை தொடர்பான வரைவு கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலகங்களில் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை பெறும் வகையில் பார்வைக்கு வைக்கப்பட்டன.

இவ்வாறு பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து மறுவரையறை அலுவலர்களால் பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களை கேட்கும் வகையில் வேலூர், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய ஏழு இடங்களில் மண்டல அளவிலான கூட்ட அமர்வுகள் மறுவரையறை ஆணையத்தால் நடத்தப்பட்டன.

அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனைகள், ஆலோசனைகள் மற்றும் கருத்துகள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு அதன் பின் வார்டு மறுவரையறை கருத்துக்கள் இறுதி செய்யப்பட்டன. டிசம்பர் **2018**ல் வார்டு மறுவரையறை தொடர்பான விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

### 2.7.4. உள்ளாட்சித் தேர்தல் நடத்துதல்

தமிழ்நாட்டில், **1994** ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் **1996–**ம்

ஆண்டு நடத்தப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது சாதாரண தேர்தல்கள் முறையே அக்டோபர் 2001, அக்டோபர் 2006 மற்றும் அக்டோபர் 2011 ல் நடத்தப்பட்டன.

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்களை கட்சி அடிப்படையில் நடத்த மாநில தேர்தல் ஆணையம் அறிக்கை வெளியிடும். ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தல்களில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.16**

**மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரம்**

| வ. எண். | பதவியிடம் குறித்த விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 99,333 |
| 2 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,471 |
| 3 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 655 |
| 4 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 |
| 5 | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் | 385 |
| 6 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 |
| மொத்தம் | | 1,19,399 |

**2.7.5. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243 D–ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும்.

**2.7.6. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்ட இட ஒதுக்கீடும் பதவிகளும் (50 விழுக்காடு ஒதுக்கீடு)**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21,1994)ல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக் குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ள பதவியிடங்கள் மற்றும் தலைமை பதவியிடங்களில், மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆனால், அப்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், உள்ளாட்சி நிர்வாகத்தில் மகளிர் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் மகளிரை அதிகாரப்படுத்தவும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டினை 50 விழுக்காடாக உயர்த்துவது அவசியம் என கருதினார். ஆகவே, மகளிருக்கான இடஒதுக்கீடு மூன்றில் ஒரு பங்கு என்பதை உயர்த்தி 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யும் வகையில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை இட ஒதுக்கீடு) விதிகள் 1995–ல்

திருத்தம் செய்து, அதன் அடிப்படையில் அரசாணை எண். 60 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா1) துறை, நாள்.23.05.2016ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி, மகளிருக்கான உயர்த்தப்பட்ட இட ஒதுக்கீடு எதிர்வரும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் நடைமுறைக்கு வரும்.

## 2.8. பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS).:

ஊரக உள்ளாட்சி அமைப்புகள் சமூகத்தின் நலனுக்காக பல்வேறு அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளை ஊராட்சிகளின் சொந்த வருவாயிலிருந்தும் மத்திய மாநில அரசுகளிடம் இருந்து பெறப்படும் மானியங்களிலிருந்தும் மேற்கொண்டு வருகின்றன.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கென தமிழக அரசு திறம்பட்ட நிதி நிர்வாக அமைப்பு மற்றும் நடைமுறைகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும், வரவு செலவு கணக்கு, கணக்கியல், புத்தக பராமரிப்பு, பரிவர்த்தனைகள் மற்றும் தணிக்கை போன்றவற்றிற்கென விரிவான வழிமுறைகளையும் வெளியிட்டுள்ளது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளில் நடைபெறும் பரிவர்த்தனைகள் மற்றும் செலவினங்களை நிகழ்நேரத்தில் கண்காணித்து செயல்திறன் மிக்க நிதி பயன்பாட்டை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனவே, கிராம ஊராட்சியால் பராமரிக்கப்படும் அனைத்து வங்கி கணக்குகள், வட்டார மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் பராமரிக்கப்படும் அனைத்து மானிய மற்றும் சொந்த வருவாய்

கணக்குகள், பொது நிதி மேலாண்மை அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. பொது நிதி மேலாண்மை அமைப்பு என்பது முழுமையான மின்னணு இயங்குதளத்தின் மூலம் நிதியானது அரசிடம் இருந்து பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளின் மூலம் உரிய பயனாளிகள், விற்பனையாளர்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள் வரை சென்றடைவதை முழுமையாக கண்காணிக்கும் அமைப்பாகும்.

பொது நிதி நிர்வாக அமைப்பினைச் செம்மையாகச் செயல்படுத்திட அரசாணை எண்:104 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்: 26.07.2018 மற்றும் அரசாணை எண்.133, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்:18.09.2018 அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் அவர்கள் பொது நிர்வாக அமைப்பின் மாநில அளவிலான திட்ட மேலாளர் என நியமிக்கப்பட்டுள்ளார். பொது நிதி மேலாண்மை அமைப்பின் மாநில திட்ட மேலாண்மை அலகானது (நிதித் துறை) அமைப்புகளுக்கு ஒப்புதல் வழங்கப்படும்.

31 மாவட்ட ஊராட்சிகள், 385 வட்டார ஊராட்சிகள் மற்றும் 12,524 கிராம ஊராட்சிகள் ஆகியவை தனித்தனி அலகுகளாக பொது நிதி மேலாண்மை அமைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 2.8.1. தரவு உருவாக்குபவர் / ஒப்பதல் அளிப்பவர்

பொது நிதி மேலாண்மை அமைப்பின் கீழ் (PFMS) பணம் வழங்குவதற்கான வழிவகைகளை செயலாக்கும் அலுவலர் தரவு உருவாக்குபவர் ஆவார். அரசால் வகுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் வழிவகைகளுக்குட்பட்டு ஒரு குறிப்பிட்ட பரிவர்த்தனை

ஏற்கத்தக்கதாகவும், சட்டப்பூர்வமானதாகவும் இருக்கும் பட்சத்தில் ஒரு குறிப்பிட்ட கணக்கிலிருந்து பணம் வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கும் அலுவலர் தரவிற்கு ஒப்புதல் அளிப்பவர் ஆவார். உள்நுழைவு / மின்னணு கையொப்ப அட்டை மூலம் நடைபெறும் அனைத்து விதமான பரிவர்த்தனைகளுக்கும் தரவு உருவாக்குபவர் மற்றும் ஒப்புதல் அளிப்பவர் ஆகிய இருவருக்கும் சட்டப்பூர்வமான கடமைகளும் பொறுப்புகளும் சரிசமமாக இருக்கிறது. மாநில, மாவட்ட மற்றும் கிராம ஊராட்சி அளவில் அமையப்பெற்றுள்ள அமைப்புகளுக்கு கீழ்க்காணும் அலுவலர்கள் தரவு உருவாக்கும் மற்றும் ஒப்புதல் அளிக்கும் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அட்டவணை 2.17

## பல்வேறு மட்டங்களில் அமையப்பெற்றுள்ள அலுவலகங்களுக்கான தரவு உருவாக்கும் மற்றும் ஒப்புதல் அளிக்கும் அலுவலர்கள் குறித்த விவரம்

| வ. எண். | அமைப்பு / அலுவலகம் | செயல்பாட்டு நிலை | தரவு உருவாக்குபவர் | தரவிற்கு ஒப்புதல் அளிப்பவர்–1 | தரவிற்கு ஒப்புதல் அளிப்பவர்–2 |
|---|---|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் (ஊராட்சி) | மாவட்ட அளவு | கணக்காளர், உதவி இயக்குநர் (ஊ) அலுவலகம் | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) | மாவட்ட ஆட்சியர் |
| 2 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | மாவட்ட அளவு | கணக்காளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | கணக்கு அலுவலர்/ திட்ட இயக்குநர், மா.ஊ.வ.மு. | திட்ட இயக்குநர், மா.ஊ.வ.மு./ மாவட்ட ஆட்சியர் |
| 3 | மாவட்ட ஊராட்சி | மாவட்ட அளவு | உதவியாளர் / கணக்காளர் | கண்காணிப்பாளர் / மாவட்ட ஊராட்சி | செயலர், மாவட்ட ஊராட்சி |
| 4 | வட்டார வளர்ச்சி அலுவலகம் (வட்டார ஊராட்சி) | வட்டார அளவு | கணக்காளர் | துணை வ.வ.அ (பொது) | வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) |

| வ. எண். | அமைப்பு / அலுவலகம் | செயல்பாட்டு நிலை | தரவு உருவாக்குபவர் | தரவிற்கு ஒப்புதல் அளிப்பவர்–1 | தரவிற்கு ஒப்புதல் அளிப்பவர்–2 |
|---|---|---|---|---|---|
| 5 | வட்டார வளர்ச்சி அலுவலகம் (கிராம ஊராட்சி) | வட்டார அளவு | கணக்காளர் | துணை வ.வ.அ (ஊராட்சிகள்) | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |
| 6 | கிராம ஊராட்சி | கிராம அளவு | ஊராட்சி செயலர் | துணைத் தலைவர் | தலைவர் |

## 2.8.2. பொது நிதி நிர்வாக அமைப்பின் (PFMS) அனுகூலங்கள்

- நிதி பட்டுவாடா மற்றும் பயன்பாடு தொடர்பான நிகழ்நேர கண்காணிப்பினை மேற்கொள்ளவும், பல்வேறு துறைகள், நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களுக்கிடையே நிதி பரிவர்த்தனை தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்கும் பொது நிதி நிர்வாக அமைப்பு உதவி புரிகிறது.
- திட்ட செயலாக்க அமைப்புகளில் நிதி தேவையில்லாமல் ஆங்காங்கே தேக்கமடைவதை கண்டறியவும் உதவிகரமாக உள்ளது.
- பணப்பட்டுவாடாவில் ஏற்படும் தாமதத்தினையும், தேக்க நிலையினையும் இது பெருமளவு குறைக்கிறது.
- ஒட்டு மொத்த நிதி நிர்வாக மேலாண்மையிலும், திட்ட செயலாக்கத்திலும் வெளிப்படைத் தன்மையினையும், உறுதியான முன்னேற்றத்தினையும் எட்டுவதற்கு உதவிகரமாக உள்ளது.
- தேவையற்ற பண விரயத்தினையும், போலியான பயனாளிகள் அகற்றப்படுவதையும் உறுதி செய்கிறது.

## 2.9. ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகளைத் தடை செய்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி **110–ன்** கீழ் **05.06.2018** அன்று ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகள் தயாரிப்பு, சேமித்தல், விநியோகம் மற்றும் பயன்பாடு ஆகியவை **01.01.2019** முதல் தடை செய்யப்படும் என்று ஒரு அறிவிப்பினை வெளியிட்டார். தமிழ்நாட்டினை நெகிழி இல்லா மாநிலமாக மாற்றுவதில் அரசு துறைகள்/நிறுவனங்கள்/முகமைகள் ஆகியவற்றுக்கு மிக முக்கிய பங்கு இருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசானது சுற்றுப்புறம் (பாதுகாப்பு) திட்டம் **1986** ன்கீழ் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய (அனைத்து தடிமன்களும்) நெகிழிகள் **01.01.2019** முதல் தடை செய்யப்படும் என உத்தரவிட்டுள்ளது. இவ்வுத்தரவு **27.06.2018** அன்று தமிழ்நாடு அரசின் சிறப்பு அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டம் **13/2019** இயற்றப்பட்டு, அதன் மூலம் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், **1994** பிரிவு **243** மற்றும் **244** ஆகியவை திருத்தம் செய்யப்பட்டு உப விதிகளை மீறுவோருக்கு அபராதம் விதிப்பதற்குரிய புதிய அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு **244** (2-A) ன்படி, ஊராட்சிகள் இப்பொருள் தொடர்பாக உப விதிகளை உருவாக்கி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகளை உற்பத்தி, சேமிப்பு, விற்பனை மற்றும் விநியோகத்தினை தடை செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 244 (1) ன்படி, ஊராட்சியானது இப்பொருள் தொடர்பான உப விதிகளை உருவாக்கி அட்டவணை III–A ல் குறிப்பிட்டுள்ளபடி அபராதம் விதித்திட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.18**

**பிரிவு 244 (2–A)–ன் கீழ் உப விதிகளை மீறினால் விதிக்கப்படும் அபராதத் தொகை அட்டவணை III–A**

| வ. எண். | குற்றங்கள் | முதல்முறை அபராதம் ரூ | இரண்டாம் முறை அபராதம் ரூ. | மூன்றாம் முறை அபராதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகள் சேமிப்பு, எடுத்துச் செல்லுதல், விநியோகம் மற்றும் விற்பனை | 25,000 | 50,000 | 1,00,000 |
| 2 | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் சூப்பர் மார்க்கெட் போன்ற பெரிய வணிக நிறுவனங்களில் பயன்பாடு மற்றும் விநியோகம். | 10,000 | 15,000 | 25,000 |
| 3 | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்பாடு மற்றும் விநியோகம். | 1,000 | 2,000 | 5,000 |
| 4 | சிறிய அளவிலான கடைகளில் பயன்பாடு விநியோகம் | 100 | 200 | 500 |

## 2.10. தொழிற்சாலை கட்டிடங்களுக்கான அனுமதி–குறு சிறு நடுத்தர நிறுவனங்கள் துறையின் ஒற்றைச்சாளர இணைய தளம் மூலம் வழங்குதல்

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் 2018 மற்றும் விதிகளின் கீழ் தொழிற்சாலை கட்டடங்களுக்கான அனுமதி வழங்குதல் தொடர்பான ஆய்வுக்குறிப்புகள் மற்றும் கேள்விகள்

எழுப்புதல் ஆகியவற்றை குறிப்பிட்டுள்ள காலத்தில் ஒற்றைச் சாளர இணையத்தில் உள்ளீடு செய்ய வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கென, குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையானது ஒற்றை சாளர இணைய வழி முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. **2018–19** ஆம் ஆண்டு முதல் அனைத்து விண்ணப்பங்களும் இணைய வழி மூலம் மட்டுமே பெறப்படுகின்றன. இந்த இணையதளத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்களின் கள ஆய்வுக் குறிப்புகளை பதிவேற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வணிக எளிதாக்குதல் விதிகள் **2018** ன்கீழ் **7** நாட்களுக்குள் வட்டார வளர்ச்சி அலுவலர் தமது ஆய்வுக் குறிப்புகளை ஒற்றை சாளர இணையத்தில் பதிவேற்றுதல் விண்ணப்பதாரர் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருந்தால் கட்டண விவரங்கள் இணையத்தில் குறிப்பிடப்படும். தொழில் முனைவோர் உரிய கட்டணங்களை இணைய வழியே செலுத்திய பின்பு, **14** நாட்களுக்குள் தொழிற்சாலை கட்டிட அனுமதி இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இதற்கென, **385** வட்டாரங்களுக்கும் தனித்தனியே பயனாளர் விவரம் மற்றும் கடவுச் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேற்படி கட்டணத்தைப் பெறுவதற்கு தனியே வங்கிக் கணக்குகள் வட்டார வளர்ச்சி அலுவலர்களால் தொடங்கப்பட்டுள்ளன.

# 3. மாநில அரசு திட்டங்கள்

## 3.1. முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

### திட்டத்தின் நோக்கம்

முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் 2011–12 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. தமிழக அரசின் சிறப்புமிக்க முயற்சியான முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம், கிராமப்புற ஏழை மக்களின் வீட்டு வசதி தேவைகளை பூர்த்தி செய்வதோடு பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதால், இத்திட்டமானது இந்திய அரசின் "அனைவருக்கும் வீடு" திட்டத்திற்கு முன்னோடியாக உள்ளது. விலையில்லா வீடு வழங்கும் இத்திட்டத்தின் கீழ் 2011–12 முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை ரூபாய் 5940 கோடி மதிப்பீட்டில் வருடத்திற்கு 60,000 வீடுகள் வீதம் 3 இலட்சம் பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

நாட்டிலேயே வேறெங்கும் இல்லாத அளவில் இதுபோன்ற விலையில்லா வீடு வழங்கும் திட்டத்தில், 300 சதுர அடி பரப்பளவு மற்றும் சூரிய மின்சக்தி கொண்ட வீடுகள் வழங்கப்படுகிறது. இத்திட்டமானது பயனாளிகள் நலன் கருதியே உள்ளதாலும் மற்றும் இதர குடியிருப்புத் திட்டங்களைக் காட்டிலும் அலகுத் தொகை கூடுதலாக உள்ளதாலும் தமிழக மக்களின் மத்தியில் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டம் மேலும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டு, ஊரகப் பகுதியில் உள்ள ஏழை மக்களின் நலனுக்காக 2016–17 ஆம் ஆண்டு முதல் அடுத்த ஐந்தாண்டுகளில் வருடத்திற்கு 20,000 வீடுகள் வீதம் 1 இலட்சம் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் ரூ.2.10 இலட்சம்

அலகுத் தொகையில் (ரூ.1.80 இலட்சம் கட்டுமானத்திற்கும், ரூ.0.30 இலட்சம் சூரிய மின்சக்தி விளக்குகள் அமைப்பதற்கும்) கட்டப்பட்டு வருகிறது. கட்டுமான பணிகளுடன் சூரிய மின்சக்தி விளக்குகள் பொருத்தும் பணிகளும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிலேயே மேற்கொள்ளப்படும்.

**இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையில் மாநில அரசின் முழுமையான நிதி உதவியுடன் கட்டப்பட்டு வருகிறது. இதில் ரூ.1.80 இலட்சம் கட்டுமானத்திற்கும், ரூ.0.30 இலட்சம் சூரிய மின் சக்தி விளக்குகள் அமைப்பதற்கும் வழங்கப்படுகிறது.
- வீடு கட்டும் பணிகள் பயனாளிகளாலேயே மேற்கொள்ளப்படுகிறது.
- சூரிய மின்சக்தி விளக்குகள் பொருத்தும் பணி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் மேற்கொள்ளப்படும்.
- ஒவ்வொரு வீடும் வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகியவற்றுடன் மழைநீர் சேகரிப்பு அமைப்பையும் கொண்டிருக்கும்.
- ஒவ்வொரு வீட்டிலும் சூரிய மின் சக்தியில் எரியும் 5 ஒளி உமிழும் இருமுனைய (LED) விளக்குகள் படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளில் தலா ஒரு விளக்கு வீதம் பொருத்தப்படும். ஒவ்வொரு பயனாளியும் தனது

விருப்பத்திற்கு ஏற்ப, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலம் மீட்டர் அளவீட்டுடன் கூடிய மின் இணைப்பு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- பயனாளிகளால் மேற்கொள்ளப்பட்ட கட்டுமான பணிகளுக்கான பட்டியல் தொகை கீழ்கண்டவாறு நான்கு நிலைகளில் பயனாளியின் வங்கி கணக்கில் நேரடியாக வழங்கப்படுகிறது.
    1. அடித்தள நிலை
    2. ஜன்னல் மட்ட நிலை
    3. கூரை வேயப்பட்ட நிலை
    4. முடிவுற்ற நிலை
- பசுமை வீடுகள், பயனாளியின் தற்போது குடியிருப்பு அமைந்துள்ள மனையில் (ஏற்கெனவே உள்ள குடியிருப்பு அமைப்பினை அகற்றிவிட்டு) அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதிகளில் அமைந்துள்ள பயனாளிக்கு சொந்தமான மனையில் கட்டப்படுகிறது.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு**

- ஒவ்வொரு பயனாளிக்கும், அலகுத் தொகையுடன் மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வீடு கட்டுவதற்காக 90 மனித சக்தி நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படுகிறது. (90 x Rs.229 = Rs.20,610)

- மேலும், பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.
- இவை தவிர, பயனாளிகளுக்கு மான்ய விலையில் சிமெண்ட் மூட்டைகள் வழங்கப்படுகிறது. மேலும், இரும்பு கம்பிகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பயனாளிகளின் தேவைக்கேற்ப வழங்கப்படுகிறது. இப்பொருட்களுக்கான கிரையத் தொகை, பயனாளிகளுக்கு வழங்கப்படும் பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

**பயனாளிகளின் தகுதிகள்**

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளி கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராகவும், ஏழையாகவும் இருக்க வேண்டும்.
- 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை சொந்தமாக இருக்க வேண்டும்.
- குடும்பத் தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டு மனைப் பட்டா இருக்க வேண்டும்.
- தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.
- அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன் பெற்றவராக இருக்கக் கூடாது.

**பயனாளிகளை தேர்வு செய்யும் முறை**

- ஒவ்வொரு கிராம ஊராட்சியில் வாழும் ஏழை மக்களிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் அப்போதைய புது வாழ்வு திட்டம் மூலம் தேர்வு செய்யப்பட்ட நலிவுற்றவர்கள் பட்டியலில் (PIP) உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- தயார் செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல்களில் அவர்களின் நலிவுற்ற நிலைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில், கிராம சபையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- பயனாளிகளின் பட்டியல் தயாரிக்கப்படும் போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் துணை இராணுவ படையினர், ஊரகப் பகுதிகளில் வாழும் ஊட்டச் சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறையால் (ICDS) அடையாளம் காணப்பட்ட) குழந்தைகளை கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) அவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்ட எச்.ஐ.வி./எய்ட்ஸ்/காசநோய் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டோர், தீ விபத்து, வெள்ளம் போன்ற இதர பிற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை

அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

- ஓராண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் **20,000** பசுமை வீடுகளில், **29** விழுக்காடு அதாவது **5,800** வீடுகள் ஆதி திராவிடர்களுக்கும், **1** விழுக்காடு அதாவது **200** வீடுகள் பழங்குடியினர்களுக்கும், மீதமுள்ள **70** விழுக்காடு அதாவது **14,000** வீடுகள் இதர இனத்தவர்களுக்கும் (ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லாதோர்) ஒதுக்கீடு செய்யப்படும்.
- மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் **4** விழுக்காடு மாற்று திறனாளிகளுக்கு பிரத்தியேகமாக அனைத்து பிரிவுகளிலிருந்தும் ஒதுக்கீடு செய்யப்படும்.

**முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் சாதனைகள்**

- **2011–12** முதல் **2017–18** ஆம் ஆண்டு வரை **3,40,000** பசுமை வீடுகள் **ரூ.6780** கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- **2018–19** ஆம் ஆண்டில் **ரூ.420** கோடி மதிப்பீட்டில் **20,000** பசுமை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.
- மேலும், **2019–20** ஆம் ஆண்டில் **ரூ.420** கோடி மதிப்பீட்டில் **20,000** பசுமை வீடுகள் கட்டப்பட உள்ளன.

**ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில், அனைத்து தரப்பு மக்களும் எளிதில் பெறத்தக்க, தூய்மையான சக்தியும் ஒரு இலக்காகும்.** சூரிய சக்தி நீடித்த நிலையான, புதுப்பிக்கத்தக்க, அனைத்து தரப்பு மக்களும் எளிதில் பெறத்தக்கது என்பதால், இது மரபு

சார்ந்த மின்சார ஆதாரங்களின் பயன்பாட்டினை குறைக்க வழிவகை செய்கிறது. பசுமை வீடுகளில் நிறுவப்படும் சூரியசக்தி மின் விளக்குகள், தூய்மையான சக்தியின் ஆதாரமாக இருப்பதால், ஊரகப் பகுதிகளில் சுற்றுச் சூழலுக்கு ஏற்றவாறும், பசுமை ஆற்றலை ஊக்குவிப்பதாகவும் உள்ளது. எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றை அடைய, சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் தொடர்ந்த செயலாக்கம் உதவி புரிகிறது.

## 3.2. பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகள் பழுது நீக்கம் செய்தல்

### திட்டத்தின் நோக்கம்

**12.06.2018** அன்று சட்டமன்றப் பேரவையில் விதி எண்.**110**–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் **25** ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு, பழுதடைந்த நிலையில் உள்ள **45,594** வீடுகளை பழுது நீக்கம் செய்ய மாநில அரசு நிதியிலிருந்து ரூ.**227.97** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

இச்சிறப்பு திட்டத்தின் கீழ் பழுது நீக்கம் செய்ய வேண்டிய வீடுகளுக்கு மதிப்பீட்டின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிக்கு ஒரு வீட்டிற்கு ரூ.**50,000/–**க்கு மிகாமல் நிதி உதவி வழங்கப்படுகிறது. இப்பழுது பார்க்கும் பணி பயனாளிகளாலேயே மேற்கொள்ளப்படுகிறது மற்றும் கூடுதல் தொகை ஏதும் தேவைப்படின் அச்செலவினம் பயனாளிகளாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பயனாளிகளின் தகுதிகள்**

- ஊரக பகுதிகளில் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகளில், அதாவது **1993–94** ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட வீடுகள் சிறிய மற்றும் பெரிய பழுதுகள் நீக்கம் செய்ய வேண்டியிருப்பின் அப்பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் தகுதியுடையவர்கள் ஆவர். இருப்பினும் பழுது பார்க்க இயலாத நிலையிலுள்ள வீடுகளை தேர்வு செய்ய கூடாது.

- ஊரகப் பகுதிகளில் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு பழுதடைந்த நிலையில் உள்ள வீடுகளை கண்டறிய 2017ம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பே இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளை கண்டறிவதற்கு அடிப்படையானதாகும்.

- அரசு திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட பயனாளியின் பெயரிலோ, ஒதுக்கீடு பெற்றவர் உயிருடன் இல்லையெனில் பயனாளியின் வாரிசுதாரர் பெயரிலோ உள்ள பழுதடைந்த வீடுகள் பழுது நீக்கம் செய்ய பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

- இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் பயனாளி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் வீடு பழுது பார்த்திடும் பொருட்டு அரசு மானியம் அல்லது இதர அரசு உதவிகள் ஏதேனும் பெற்றிருக்க கூடாது.

**பழுதுநீக்கம் செய்ய வேண்டிய வகைகள்**

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு வகையான பழுதுகள் பின்வருமாறு :-

- சேதமடைந்த மேற்கூரைகளை மாற்றியமைத்தல்,
- பழுதடைந்த / கசியும் நிலையில் உள்ள கான்கீரிட் வீடுகளில் தட்டோடுகள் பதித்தல் மற்றும் ஓட்டு வீடுகளில் ஓடுகளை மாற்றம் செய்தல்.
- சுவர்களில் உள்ள விரிசல்களை சரி செய்தல், சுவர் பூச்சு, தரை, மேற்கூரை பூச்சு வேலை பகுதியாக அல்லது முழுமையாக தேவையின் அடிப்படையில் பழுது நீக்கம் செய்தல்.
- சேதமடைந்த கதவு மற்றும் ஜன்னல்களை மாற்றுதல்.
- தரைமட்டத்திலுள்ள கருங்கல்லின் இணைப்புகளை நிரப்புதல் / தரைமட்ட வெளி பூச்சு பூசுதல்.
- ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வகையான பழுதுகள் மேற்கொள்ளலாம். இருப்பினும், ஒரு வீட்டில், வெள்ளையடித்தல், வர்ணம் அடித்தல் மற்றும் வண்ணம் தீட்டுதல் ஆகிய பணிகளை மட்டும் தனியே மேற்கொள்ளக் கூடாது.

பயனாளிகளுக்கு இரண்டு தவணைகளில் நிதிவிடுவிக்கப்படுகிறது. அதாவது 50% பணி முடிவுற்ற பின்னர், மதிப்பீட்டில் 50% தொகை முதல் தவணையாக விடுவிக்கப்படுகிறது. அனைத்து பணிகளும் முடிவுற்ற பின்னர்

மதிப்பீட்டு தொகையில் மீதமுள்ள தொகை இரண்டாம் தவணையாக விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2018–19** ஆம் ஆண்டில், **45,594** வீடுகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

## 3.3. ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள்

ஊரக வளர்ச்சியின் அடிப்படை நோக்கமே கிராமப்புற வறுமை ஒழிப்பு என்பதால், சுதந்திரத்திற்கு பிந்தைய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் அனைத்தும் இதனைச் சார்ந்தே வடிவமைக்கப்பட்டன. பல உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தியதன் மூலம், வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அதன்மூலம் வறுமை ஒழிப்பிற்கான நோக்கம் நிறைவேற்றப்பட்டது. வறுமை நிலை தொடர்வதற்கான அடிப்படை காரணி, இணைப்பு சாலை வசதியின்மை என உலகளவில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே ஊரகச் சாலைகள், கிராமங்களின் தொடர் வளர்ச்சியின் நுழைவு வாயிலாகவும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை வரையறுத்துள்ள நிலையான வளர்ச்சி இலக்குகளை அடையவும் முக்கிய பங்கு வகிக்கிறது. சாலை இணைப்பு வசதி, வருவாய் உருவாக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, சுகாதாரம், கல்வி மற்றும் சமூக–பொருளாதார சேவைகளை அனைத்து மக்களும் பெற்றிடவும் மற்றும் விவசாய உற்பத்தித் திறன் அதிகரிக்கவும் திறவுகோலாக விளங்குகிறது.

ஊரகச் சாலைகள் இணைப்பினால் ஏற்பட்ட நேர்மறையான தாக்கங்களான, பொருள் ஈட்டுவதற்கான வாய்ப்புகள் அதிகரிப்பு, மேம்படுத்தப்பட்ட சந்தை இணைப்பு

மற்றும் வறுமையை குறைக்க அடித்தளமாக இருப்பது குறித்து பல்வேறு ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் ஊரகச் சாலைகள் இணைப்பு கல்வி மற்றும் சுகாதாரத்தின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கிறது.

ஒரு மாநிலத்தில் உள்ள ஊரகச் சாலைகளின் நிலை, ஊரக மக்களின் சமூக பொருளாதார நிலையினை பிரதிபலிப்பதாக கருதுவது ஏற்புடையதாகும். ஒரு மாநிலத்தில், சாலைகளின் இணைப்பு நிலையை அறிந்திட சாலைகளின் அடர்த்தி முக்கிய அளவீடாக விளங்குகிறது. தேசிய அளவில் ஊரகச் சாலைகளின் அடர்த்தி, 100 சதுர கி.மீ. க்கு, 119 கி.மீ ஆக உள்ளது. இதனை ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் ஊரகச் சாலைகளின் அடர்த்தி, 100 சதுர கி.மீ.க்கு, 144 கி.மீ.ஆக உள்ளது. இது மாநிலத்தில் ஊரக சாலைகள் எந்த அளவுக்கு பரந்து விரிந்துள்ளது என்பதனை சுட்டிக்காட்டுகிறது. ஊரகச் சாலைகளின் பெரும்பகுதி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளாகும். இந்த சாலைகளின் மேம்பாட்டிற்காக, இத்துறை, பல வருடங்களாக கணிசமான நிதி பங்களிப்பினை செய்து வருகிறது. மேலும் அடுத்த கட்ட நடவடிக்கையாக, முக்கிய இணைப்பு சாலைகளாகவும், அதிகப்படியான வாகன போக்குவரத்துக் கொண்ட சாலையாகவும் உள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை, இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்தப்படுவதற்கு ஏதுவாக, மாநில நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. இதுவரை, 3,408 கி.மீ நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள், இதர

மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துவதற்கு மாநில நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் நீளம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1**
**ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகள்**

| வ. எண். | சாலையின் மேற்பரப்பின் வகை | ஊராட்சி ஒன்றிய சாலை | ஊராட்சி சாலை | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | நீளம் ( கி. மீ) | | |
| 1. | தார்ச்சாலை | 27,619 | 69,590 | 97,209 |
| 2. | சிமெண்ட் சாலை | 295 | 2,809 | 3,104 |
| 3. | ஈரடுக்கு கப்பிச்சாலை | 212 | 1,808 | 2,020 |
| 4. | ஓரடுக்கு கப்பிச்சாலை | 434 | 8,502 | 8,936 |
| 5. | சரளைக்கல் சாலை | 198 | 5,375 | 5,573 |
| 6. | மண் சாலை | 1,127 | 31,950 | 33,077 |
| | மொத்தம் | **29,885** | **1,20,034** | **1,49,919** |

2011 ஆம் ஆண்டில் இருந்து, இத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கொள்கை அளவிலான நடவடிக்கைகள் மூலம், ஊரகச் சாலைகள் தொகுப்பு நிலைப்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளது. இது, ஊரகச் சாலை தொகுப்பின் அளவு மற்றும் மேற்பரப்பு வகையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதை தெளிவாக காட்டுகிறது.

2011 ஆம் ஆண்டில் இருந்து, எடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள் மற்றும் அதன் பலன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- ஊரகச் சாலைகள் தொகுப்பின் விவரங்கள் முழுமையாக தொகுக்கப்பட்டு, மாநிலத்தில் உள்ள ஊரகச் சாலைகளுக்கு எண்ணெழுத்து இன வாரியான தனிச் சாலைக் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. ஊரகச் சாலைகளின் அனைத்து தகவல்களும் tnrd.gov.in என்கிற இணையதளத்தில் உள்ளது.

- இந்த இணைய தள சாலைப் பதிவேடு, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பற்றிய விவரங்களான சாலைகளின் பெயர், மேற்பரப்பு, சாலைகளின் வகை, வடிவியல், இணைக்கப்படும் சேவைகள், சாலை மேம்பாடு செய்யப்பட்ட விவரங்கள், தொழில் நுட்ப விவரங்களான மண்ணின் தன்மை, போக்குவரத்து மற்றும் பல விவரங்களை வழங்குகிறது.

- ஊரகச் சாலைத் தொகுப்பில், புதிதாக உருவாக்கப்பட்ட சாலைகள் மற்றும் விடுபட்ட சாலைகள் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

- தேர்ந்தெடுக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல்.

- ஏற்கனவே உள்ள திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, சாலைகளுக்குத் தேவையான நிதியினை உகந்த அளவில் மற்றும் தேவைக்கேற்ப வழங்குதல், சாலைகளின் முக்கியத்துவத்தினை பகுத்தறிந்து சரியாக முன்னுரிமைப்படுத்துதல்.

- மாற்று மற்றும் பசுமை தொழிற்நுட்பங்கள் மூலம், சாலைகள் அமைப்பது ஊக்குவிக்கப்படுகிறது.
- இயற்கை நீர்வழித் தடங்களின் மீது, தடையில்லா போக்குவரத்திற்காக உயர்மட்ட பாலங்கள் கட்டப்படுகிறது.
- சாலைகளின் தரம் நிலைத்திடவும் மற்றும் அவற்றின் பயன்பாட்டு சுழற்சியை அதிகப்படுத்திடவும் "தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்பு கொள்கை" உருவாக்கப்பட்டது.

**சிறப்பு நடவடிக்கைகளின் பலன்கள்**

1) **2011** ஆம் ஆண்டில் **1.03** இலட்சம் கி.மீ. ஆக இருந்த ஊரகச் சாலைகளின் ஒட்டுமொத்த நீளம், **2019**–ஆம் ஆண்டில் **45%** அதிகரித்து, **1.49** இலட்சம் கி.மீ. ஆக உயர்ந்துள்ளது.

2) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் புதியதாக அமைக்கப்பட்ட **4,000** கி.மீ. நீளம் கொண்ட ஓரடுக்கு கப்பிச் சாலைகள் உட்பட, **2011**–ஆம் ஆண்டில் இருந்து ஏறக்குறைய **46,000** கி.மீ. நீளச் சாலைகள் புதியதாக சேர்க்கப்பட்டுள்ளன.

3) **2011** ஆம் ஆண்டில், **65,012** கி.மீ. ஆக இருந்த தார்ச்சலைகளின் நீளம், **2019** ஆம் ஆண்டில், **54%** அதிகரித்து **1,00,313** கி.மீ. ஆக உயர்ந்துள்ளது.

4) **28,011** கி.மீ நீளம் கொண்ட தார் இடப்படாத சாலைகள், தார்ச் சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

5) **32,877** கி.மீ. நீளமுள்ள பழுதடைந்த தார்ச் சாலைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

6) 13,986 கி.மீ. நீளமுள்ள சாலைகள், நெகிழி கழிவுகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

7) 17,302 கி.மீ நீளமுள்ள தார்ச்சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

8) 543 உயர்மட்ட பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

9) 2011 ஆம் ஆண்டிலிருந்து, ஒட்டுமொத்தமாக, 78,190 கி.மீ. நீளமுள்ள சாலைகள், ரூ.17,199 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ஊரகச் சாலைத் தொகுப்பின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்படும் திட்டமிடல் மற்றும் அணுகுமுறை பின்வருமாறு :

**ஊரகச் சாலைகள் மேம்பாட்டின் கூறுகள்**

ஊரகச் சாலைகள் மேம்பாடு பின்வரும் கூறுகளை உள்ளடக்கியது.

1. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்.
2. பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல்.
3. தார்ச் சாலைகளை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்.

**முன்னுரிமை**

சாலைகள் மேம்பாடு பின்வரும் முன்னுரிமைகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றன.

- சாலை இணைப்பில்லாத குக்கிராமங்களுக்கு சாலை இணைப்பு வழங்குதல்.
- பல்வேறு காரணிகளான நீளம், பயன்பாட்டுச் சேவைகள், சாலையின் மூலம் இணைக்கப்படும் பிற குக்கிராமங்கள்

ஆகியவற்றின் அடிப்படையில் சாலைகள் தேர்வு செய்யப்படுகின்றன.

- பேருந்து செல்லும் சாலைகள்.

**தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்.**

தார் இடப்படாத சாலைகள் இணைப்பின் தன்மை, இணைக்கப்படும் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பல காரணிகளின் அடிப்படையில் தார்ச் சாலைகளாக மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கடந்த 8 ஆண்டுகளில், 28,011 கி.மீ. நீளமுள்ள தார் இடப்படாத சாலைகள் ரூ.6,455.61 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலைகளாக மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல்**

வடிவமைப்பு காலம் முடிவுற்ற தார்ச் சாலைகளை தற்போதுள்ள போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வலுப்படுத்திட வேண்டிய தார்ச்சாலைகள் இந்த வகையின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கடந்த 8 ஆண்டுகளில், 32,877 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.8,876.49 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

**தார்ச்சாலைகளை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்**

சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு 5 வருடங்கள் முடிவுற்றவுடன் அவற்றை காலமுறையில் புதுப்பிக்க எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கடந்த 8 ஆண்டுகளில், இவ்வகையின்கீழ் 17,302 கி.மீ நீளமுள்ள தார்ச் சாலைகள் ரூ.1,867.36 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

ஊரக சாலைகள் மேம்பாட்டிற்காக தேவைப்படும் நிதி, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் திட்டம், ஒருங்கிணைந்த

ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம், நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, இதர மாநில திட்டங்கள், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாகவும் மாநில நிதிக் குழு மானியம் மற்றும் மத்திய நிதிக் குழு மானியத்தின் மூலமாகவும் பெறப்படுகின்றன.

**பாலங்கள் கட்டுதல்**

நதிகள் மற்றும் நீரோடைகளை கடந்து செல்லும் ஊரகச் சாலைகளில் உயர்மட்ட பாலங்கள் கட்டப்படுகின்றன. இதற்கு முன்னர், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் தேவைப்படும் பாலங்கள், மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவே கட்டப்பட்டு வந்தன. எனினும் **2011** ஆம் ஆண்டில் இருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலமாகவே பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த **8** ஆண்டுகளில், பல்வேறு திட்டங்களின் கீழ், **543** பாலங்கள், ரூ.**807.63** கோடி மதிப்பீட்டில் கீழ்காணும் அட்டவணைப்படி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.2**
**கடந்த 8 ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட பாலங்களின் விவரங்கள்**
**(2011–12 –ஆம் ஆண்டு முதல் 2018–19 ஆம் ஆண்டு வரை)**

| ஆண்டு | பாலங்களின் எண்ணிக்கை | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 2011–12 | 30 | 45.74 |
| 2012–13 | 27 | 31.22 |
| 2013–14 | 93 | 116.40 |
| 2014–15 | 113 | 155.85 |
| 2015–16 | 64 | 112.62 |
| 2016–17 | 79 | 137.48 |
| 2017–18 | 65 | 88.22 |
| 2018–19 | 72 | 120.10 |
| **மொத்தம்** | **543** | **807.63** |

## 3.4. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

இந்த அரசு, நடைமுறையில் இருந்த அனைத்து மாநில ஊரக சாலைத் திட்டங்களையும் ஒன்றிணைத்து, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டு திட்டம் என்ற ஒருங்கிணைந்த திட்டத்தினை **2015–16** ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டமானது கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்ய உகந்த மற்றும் தேவை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு வழிவகுக்கிறது.

இத்திட்டம் கடந்த **2015–16** ஆம் ஆண்டு முதல் **2017–18** ஆம் ஆண்டு வரை ரூ.**800** கோடி ஒதுக்கீட்டிலும் மற்றும் **2018–19** ஆம் ஆண்டில் ரூ.**1,200** கோடி ஒதுக்கீட்டிலும் செயல்படுத்தப்பட்டது.

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

இத்திட்டம், தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல், பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல் மற்றும் தார்ச் சாலைகளை புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்வதன் வாயிலாக ஊரகச் சாலைகளின் மேம்பாட்டில் முழுமையான பங்களிக்கிறது. மேலும், இத்திட்டமானது பல்வேறு வகையான சாலைகளை மாவட்டங்களின் தேவைக்கேற்ப தேர்வு செய்ய போதிய நெகிழ்வுத் தன்மையை அளிக்கிறது.

## அட்டவணை – 3.3
## தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2015–16 | 2,385 | 4,225.10 | 800 |
| 2 | 2016–17 | 2,567 | 4,650.62 | 800 |
| 3 | 2017–18 | 2,201 | 3,913.83 | 800 |
| 4 | 2018–19 | 3,278 | 5,532.04 | 1200 |
| **மொத்தம்** | | **10,431** | **18,321.59** | **3600** |

## 3.5. நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD – RIDF)

மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு, நபார்டு வங்கியின் கீழ் நிதி வழங்கிட, ‘‘ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி’’ யினை மத்திய அரசு நிறுவியுள்ளது. இதில், நபார்டு வங்கி விவசாய பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கத்தோடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்கு உதவுகிறது. இத்திட்டம் நபார்டு வங்கியின் 80% கடன் உதவியின் மூலம் மாநில அரசால் செயல்படுத்தப்படுகிறது.

இந்த நிதியினை, பழுதடைந்த கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைகளை வலுப்படுத்தவும் மற்றும் தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்காகவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பயன்படுத்துகிறது. பாலங்கள் அமைப்பது, நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் மற்றுமொரு முக்கிய கூறாக உள்ளது.

கடந்த **8** ஆண்டுகளில், **7,761.42** கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் **202** பாலங்கள் என மொத்தம் ரூ.**2,050.79** கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் கடந்த 8 ஆண்டுகளில், ஆண்டு வாரியாக எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம் பின்வருமாறு :

## அட்டவணை – 3.4

### கடந்த 8 ஆண்டுகளில் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம்

### (2011–12 ஆம் ஆண்டு முதல் 2018–19 ஆம் ஆண்டு வரை)

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2011-12 | 958 | 2,598.65 | 451.77 |
| 2 | 2012-13 | 381 | 1,000.46 | 198.07 |
| 3 | 2013-14 | 185 | 367.63 | 100.00 |
| 4 | 2014-15 | 615 | 1,183.03 | 339.61 |
| 5 | 2015-16 | 232 | 369.92 | 160.20 |
| 6 | 2016-17 | 297 | 510.31 | 229.00 |
| 7 | 2017-18 | 549 | 993.17 | 316.32 |
| 8 | 2018-19 | 421 | 738.25 | 255.82 |
| | **மொத்தம்** | **3638** | **7,761.42** | **2050.79** |

## 3.6. சிறிய இணைப்பு சாலைகள்

### 1 கி.மீ நீளத்திற்கும் குறைவான சாலைகளை மேம்படுத்துதல்

இத்துறை, ஏற்கனவே குறிப்பிட்டுள்ளவாறு, சாலை தொகுப்பின் மேம்பாட்டில் முழுமையான அணுகுமுறையை கையாண்டு வருகிறது. ஏறக்குறைய அனைத்து திட்ட வழிகாட்டு நெறிமுறைகளிலும், 1 கி.மீ.–க்கு குறைவான நீளமுள்ள சாலைகளை முன்மொழிய கட்டுப்பாடுகள் உள்ளன. இச்சாலைகள், சாலை தொகுப்பில் 30% உள்ளது. இவற்றிற்க்கு வட்டார அளவில் உள்ள நிதி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இச்சாலைகள் முக்கிய இணைப்பு சாலைகளாக விளங்குவதாலும், மேலும், இதன் காரணமாக சாலை தொகுப்பில் சமச்சீரற்ற நிலை ஏற்படுவதை கருத்திற்கொண்டு, அரசாணை எண்.155, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.2) துறை நாள்: 24.10.2018ன் வாயிலாக, 1 கி.மீ–க்கு குறைவான நீளமுள்ள சாலைகளை மேம்படுத்த மாநில நிதிக் குழு மானியத்தின், 20% மூலதன மானிய நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில், 2018–19–ஆம் ஆண்டில், 893.27 கி.மீ. நீளமுள்ள 1 கி.மீ. குறைவான நீளமுள்ள சிறிய இணைப்பு சாலைகள் ரூ.225 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், 1,504 கி.மீ. நீளமுள்ள 1 கி.மீ. நீளத்திற்கும் குறைவான சிறிய இணைப்பு சாலைகள், ரூ.300.33 கோடி மதிப்பீட்டில், மத்திய நிதிக்குழு மானியத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டிலிருந்து இத்துறை மேற்கொண்ட முழு நிறைவான முயற்சிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன. மேலும், குறிப்பான மற்றும் தேவையின் அடிப்படையிலான நடவடிக்கைகள் மூலம், இம்முயற்சிகள் தொடரும். இதன் மூலம் ஊரகச் சாலைகள் தொகுப்பு, ஆண்டு முழுவதும் பயன்படுத்தும் வகையில் இருப்பதை உறுதி செய்யப்படும்.

கடந்த 8 ஆண்டுகளில், திட்ட வாரியாக எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு :

## அட்டவணை – 3.5

## திட்ட வாரியாக கடந்த 8 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சாலை மற்றும் பாலங்களின் விவரம் (2011–12 ஆம் ஆண்டு முதல் 2018–19 ஆம் ஆண்டு வரை)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ.) | மதிப்பு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 18,321.59 | 3,600.00 |
| 2 | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் | 2,135.97 | 644.18 |
| 3 | தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் | 9723.97 | 1,487.54 |
| 4 | 20 % மாநில நிதிக்குழு மானிய நிதி | 893.27 | 225.00 |
| 5 | ஊரக உட்கட்டமைப்பு திட்டம் | 4,318.92 | 616.67 |
| 6 | பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 1,399.28 | 300.00 |
| 7 | மாநில நிதிக்குழு மானியம் | 1,552.46 | 304.30 |
| 8 | ஊரகச் சாலைகள் பராமரிப்புத்திட்டம் | 3,649.19 | 381.07 |
| 9 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 1,551.95 | 247.18 |
| 10 | நபார்டு– ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி | 7,761.42 | 2050.79 |
| 11 | சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி | 429.87 | 37.50 |
| 12 | இதர திட்டங்கள் | 9,492.79 | 2,330.89 |
| | **குறுமொத்தம்** | **61,230.68** | **12,225.12** |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ.) | மதிப்பு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 13 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 7,849.79 | 3,883.81 |
| 14 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 1,032.00 | 168.21 |
| 15 | 13வது நிதிக் குழு மானியம் | 6,573.13 | 622.00 |
| 16 | 14வது மத்திய நிதிக் குழு மானியம் | 1,504.00 | 300.33 |
| | **குறுமொத்தம்** | **16,958.92** | **4,974.35** |
| | **பெரு மொத்தம்** | **78,189.60** | **17,199.47** |

## தரக் கட்டுப்பாடு

தரக் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு என்பது பல்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு திட்டங்களின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்கள், அதன் குறிக்கோளை பூர்த்தி செய்வதும், நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்பதை உறுதி செய்வதும் மிக முக்கியத்தும் வாய்ந்ததாகும். இதற்காக, முறைபடுத்தப்பட்ட தரக் கட்டுப்பாடு அமைப்பு தேவைப்படுகிறது. இத்துறை, இரண்டடுக்கு தரக்கட்டுபாட்டு அமைப்பினை கொண்டுள்ளது. முதல் அடுக்கு என்பது இத்துறையில் உள்ள ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவிலான அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் தரக் கட்டுப்பாடு செயல்முறைகளை உள்ளடக்கியது. இது முழுமையடையும் வகையிலும், பணிகளுக்கான மூன்றாந்தரப்பு ஆய்வாக விளங்கும் வகையிலும் தனிப்பட்ட மாநில தரக் கட்டுப்பாடு ஆய்வாளர்கள் (இரண்டாம் அடுக்கு) முறை உள்ளது. மாநில தரக் கட்டுப்பாடு ஆய்வாளர்கள், மாநில மற்றும் மத்திய அரசு திட்டப் பணிகளை ஆய்வு செய்கிறார்கள்.

இது தவிர, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளை ஆய்வு செய்ய, மத்திய அரசு தேசிய தரக் கட்டுப்பாடு ஆய்வாளர்களை நியமித்துள்ளது. தேசிய மற்றும் மாநில தரக் கட்டுப்பாடு ஆய்வாளர்கள் மாதந்தோறும்

ஆய்வு மேற்கொண்டு, பணிகளின் அனைத்து நிலைகளிலும் தரக் கட்டுப்பாடு சோதனைகளை மேற்கொள்கின்றனர்.

தேசிய மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்களின் குறிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அறிக்கைககளாக தொடர்ந்து சமர்ப்பிக்கப்படுகின்றன.

**தரக் கட்டுப்பாடு அமைப்பினை பலப்படுத்துதல்**

மாநிலத்தின் தரக்கட்டுப்பாட்டு அமைப்பினை பலப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. இவற்றில், அண்மையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன.

i) இத்துறையில், தரக்கட்டுப்பாட்டிற்கென கண்காணிப்பு பொறியாளர் பணிநிலையில், பிரத்தியேகமான பணியிடம் உருவாக்கப்பட்டுள்ளது. கண்காணிப்பு பொறியாளர் (தரக்கட்டுப்பாடு), மாநில அளவில் தரக்கட்டுப்பாட்டிற்கு ஒருங்கிணைப்பாளராவார் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முழுமையான தரக்கட்டுப்பாட்டு மேலாண்மையை செயல்படுத்தும் பொறுப்பும் கொண்டுள்ளார். இதில், இத்துறையில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்ட பணிகளிலும் தர உறுதி மற்றும் தரக் கட்டுப்பாட்டினை உறுதி செய்ய தேவையான அமைப்பு மற்றும் செயல்முறைகளை உருவாக்குதலும் அடங்கும்.

ii) தரக்கட்டுப்பாடு சோதனைகள் செய்ய தேவையான கருவிகள் இருத்தல் இன்றியமையாததாகும். இதற்கென, மாநில அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடம்,

ரூ.26.25 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சி மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது. இது போன்று, மாவட்ட அளவிலான தரக்கட்டுப்பாடு ஆய்வுக் கூடங்கள் 31 மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கூடங்கள் ரூ.65.45 இலட்சம் செலவில் வலுப்படுத்தப்பட்டுள்ளன. புதுமையான மற்றும் முதன் முயற்சியாக 5 நடமாடும் தரக்கட்டுப்பாடு ஆய்வுக் கூடங்கள் ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், அடிப்படைக் கள சோதனைகளுக்கு தேவையான உபகரணங்கள், ஒன்றிய அளவிலும் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களான செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் ஆகியோரிடம் இருப்பதை இத்துறை உறுதி செய்துள்ளது.

iii) மேலும், பயிற்சி அளிக்கவும் மற்றும் திறனை வளர்த்துக் கொள்ளவும், இத்துறை மண்டல தரக்கட்டுபாட்டு ஆய்வுக்கூடங்களை, 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆய்வுக் கூடங்களின் வாயிலாக, மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் கள அளவில் தரக்கட்டுப்பாட்டு சோதனைகளை மேற்கொள்ள தேவையான பயிற்சிகளை பொறியாளர்களுக்கு அளிக்கும்.

iv) களப் பொறியாளர்களுக்கு, பணிகளை செயல்படுத்த தேவையான தொழில்நுட்ப உதவியினை மேம்படுத்தும் வகையில் 60 கணினி மயமாக்கப்பட்ட நில அளவைக்

கருவிகள் (Total Station) அனைத்து மாவட்டங்களுக்கும் ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. இக்கருவியினை, பொறியாளர்கள் உபயோகப்படுத்துவதற்குத் தேவையான பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

**பயிற்சி**

இத்துறையில் பணிபுரியும் களப் பொறியாளர்களின் திறனை மேம்படுத்திடவும், புதிய நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு இணையாக அவர்களை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாகவும், பல்வேறு மாநில மற்றும் மத்திய அளவிலான நிறுவனங்களில் களப் பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வழங்கப்பட்ட பயிற்சிகளின் விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பயிற்சி நிறுவனம் | தலைப்பு |
|---|---|---|
| 1. | மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD), மறைமலை நகர் | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சாலைகளுக்கு புவிசார் தொழில் நுட்பங்களைக் கொண்டு திட்டமிடல் மற்றும் மேலாண்மை. |
| 2. | தேசிய கட்டுமான மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NICMAR) ஹைதராபாத் & புனே | கட்டுமான திட்ட மேலாண்மை. |
| 3. | இந்திய நெடுஞ்சாலை பொறியாளர் கழகம் (IAHE), புதுதில்லி | பாலங்கள் மற்றும் சிறுபாலகளுக்கான திட்டம், வடிவமைப்பு மற்றும் கட்டுமானம். |
| 4. | இந்திய பொறியியல் ஊழியர்கள் கல்லூரி, (ESCI), ஹைதராபாத் | பாலங்கள் மற்றும் சிறுபாலங்களுக்கான திட்டம், வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு. |

| வ. எண் | பயிற்சி நிறுவனம் | தலைப்பு |
|---|---|---|
| 5. | தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், (NIRD)<br>ஹைதராபாத் | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சாலைகளுக்கு புவிசார் தொழில் நுட்பங்களைக் கொண்டு திட்டமிடல் மற்றும் மேலாண்மை. |
| 6. | மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம், (CRRI),<br>புதுதில்லி | சாலைகளின் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் தரக்கட்டுப்பாடு. |
| 7. | நெடுஞ்சாலைகள் ஆராய்ச்சி நிலையம், (HRS), கிண்டி | தரக் கட்டுப்பாடு சோதனைகள் மற்றும் செயல்முறைகள். |

## தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி முயற்சிகள் (R&D Initiatives)

பசுமை மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கும் வகையிலும் மற்றும் பருவநிலை மாற்றம் சார்ந்த தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவும், பல்வேறு பரிசோதிக்கப்பட்ட மற்றும் இந்திய சாலை கூட்டமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் ஊரகச் சாலைகளின் கட்டமைப்பில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில்நுட்ப முயற்சியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த அரசு, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் **2017–18** ஆம் ஆண்டிலிருந்து குறைந்த பட்சம் **5%** பணிகள், மாற்று தொழில் நுட்பங்களை கொண்டு செயல்படுத்துவதை கட்டாயமாக்கியுள்ளது.

இதே போன்று, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்ட நெறிமுறைகளின்படி, தமிழ்நாடு அரசு பல்வேறு வகையான

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில் நுட்பங்களை பயன்படுத்தி பல பணிகளை மேற்கொண்டுள்ளது. இதுவரை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில் நுட்பங்கள் – புதிய முயற்சிகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை – 3.6

### ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில் நுட்பங்கள் – புதிய முயற்சிகளை பயன்படுத்தி எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்

| வ. எண். | திட்டம் | புதிய தொழில்நுட்பத்தின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | வேலையின் மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | நெகிழி கழிவு (ஈர முறை) | 130.32 | 68.56 |
| | | குளிர்கலவை / மேற்பரப்பு சீரமைத்தல் | 216.59 | 162.98 |
| | | உருளையை கொண்டு இறுக்கப்பட்ட கான்கிரீட் சாலை / சிமெண்ட் கான்கிரீட் பிளாக் | 5.45 | 2.73 |
| | | தென்னை நார்/ சணல் ஜியோ டெக்ஸ்டைல்ஸ். | 52.82 | 25.10 |
| | | **சாலையினைபலப்படுத்துதல்** (i).இரசாயனம் | 574.89 | 376.77 |
| | | (ii) தொழிற்சாலை கழிவு | 34.71 | 15.76 |
| | | (iii) சிமெண்ட் | 99.71 | 47.73 |
| | | (iv) மண் | 152.08 | 116.54 |
| | | **குறுமொத்தம்** | **1266.57** | **816.17** |
| 2 | தமிழ் நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | குளிர்கலவை | 26.41 | 4.00 |
| | | நெகிழி கழிவு (ஈர முறை) | 256.21 | 44.07 |
| | | **சாலையினை பலப்படுத்துதல்** (i)இரசாயனம் | 155.62 | 47.25 |
| | | (ii) தொழிற்சாலை கழிவு | 2.30 | 0.80 |

| வ. எண். | திட்டம் | புதிய தொழில்நுட்பத்தின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | வேலையின் மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| | | (iii) மண் | 36.46 | 9.19 |
| | | (iv) சிமெண்ட் | 44.11 | 12.64 |
| | **குறுமொத்தம்** | | **521.11** | **117.95** |
| | **மொத்த தொகை** | | **1787.68** | **934.12** |

இவ்வகை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில்நுட்ப முயற்சிகளால் உள்ளூரில் கிடைக்கக்கூடிய பொருட்களின் பயன்பாடு அதிகரிப்பதன் மூலம் கரிம அடிச்சுவட்டின் அளவு குறைகிறது.

## நெகிழி சாலைகள்

நெகிழி கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகும். நெகிழி கழிவுகளைப் பயன்படுத்துவதால், பாதுகாப்பான முறையில் நெகிழி கழிவுகளை அப்புறப்படுத்துதல் மற்றும் சாலை கட்டுமானத்தில் சேமிப்பு என இருவித பயன்கள் கிடைக்கின்றன. மேலும், சுய உதவிக் குழுக்கள், சாலைகள் அமைப்பதற்கு தேவையான நெகிழிக் கழிவுகளை சேகரித்து விற்பனை செய்வதை ஒரு பொருளாதார நடவடிக்கையாக எடுத்துக் கொண்டனர்.

அரசின் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் விதமாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் மற்றும் இதர மத்திய, மாநில திட்டங்கள் போன்ற பல திட்டங்கள் வாயிலாக

நெகிழி கழிவுகளைக் கொண்டு சாலைப் பணிகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் விளைவாக நெகிழி கழிவுகள் தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி பல்வேறு திட்டங்களின் மூலம் **2011–12** ஆம் ஆண்டு முதல் **13,986** கி.மீ. நீளமுள்ள சாலைகள், ரூ.**2,195.25** கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பாரமரிப்பு கொள்கை**

சாலைகளை நல்ல நிலையில் பராமரிப்பது அவற்றினை வருடம் முழுவதும் பயன்படுத்தத்தக்க வகையில் இருப்பதை உறுதி செய்வது அவசியமாகிறது. மேலும் அதிக முதலீட்டுடன் உருவாக்கப்பட்ட சொத்துக்களை பாதுகாப்பதும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகம். ஊரகச் சாலைகள் தொகுப்பின் விரிவாக்கம் மற்றும் அவற்றின் மேம்பாட்டிற்காக செய்யப்படும் அதிகப்படியான முதலீடு, சாலைகளை தொடர்ந்து பராமரிக்க வேண்டியதை அவசியமாக்குகிறது. தவறும்பட்சத்தில், இச்சாலைகள் பழுதடைவதுடன் விரைவில் பயன்பாடற்ற நிலைக்கு செல்லும் அபாயம் உள்ளது. பெரிய மற்றும் பன்முகத் தன்மை கொண்ட சாலைத் தொகுப்பினை பராமரிப்பதற்கு முறையான அணுகுமுறை தேவைப்படுகிறது.

இத்தகைய அணுகுமுறையின் அடிப்படையில் மாநிலத்தின் அனைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை பாராமரிப்பு செய்திட “தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்பு கொள்கை”யினை அரசு உருவாக்கியுள்ளது.

சாலைப் பராமரிப்பானது பின்வரும் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகிறது.

- வருடம் முழுவதும் சாலைகளை தொடர் பாரமரிப்பு செய்தல்.
- மேற்பரப்பினை புதுப்பித்தல் மூலம் காலமுறை பராமரிப்பு செய்தல்.
- இயற்கை சீற்றங்களால் பழுதடைந்த சாலைகளை, அவசரத் தேவைக்காக சீரமைத்தல்.

வலுவான ஊரகச் சாலைகள் தொகுப்பினை உருவாக்குவதில் இந்த அரசின் தொடர் முயற்சிகள் விவரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்பு கொள்கையினை, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், நபார்டு—ஊரக உட்கட்டமைப்பு நிதி, ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம், மாநில நிதிக் குழு மானியம், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதி போன்ற திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம், ஊரகச் சாலைகளின் பராமரிப்பில் அரசின் கடமையினை வெளிப்படுத்துகிறது.

## சொத்து மேலாண்மை

ஊரகப் பகுதிகளில் பொதுமக்களுக்கு பயன்படக் கூடிய பல்வேறு வகையான சொத்துக்களை உருவாக்குவது ஊரக வளர்ச்சித் துறையின் பொறுப்பாகும். இதில், சாலைகள், பாலங்கள், பொதுப் பயன்பாட்டு கட்டடங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் கட்டடங்கள், குடிநீர் விநியோகம் மற்றும் நீர்பாசன கட்டமைப்புகள் முதலியவை அடங்கும். இக்கட்டமைப்புகள் அதன் ஆயுட்காலம் வரை முழுமையான பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய, அதன் வடிவமைப்புத் தேவைக்கேற்பவும், செயலாக்கம்

உரிய தரநிலையிலும் மற்றும் அதனை தகுந்த நிலையில் பராமரிப்பதும் முக்கிய காரணிகளாக திகழ்கின்றன.

இத்துறை, ஒரே மாதிரியான வடிவமைப்பு மற்றும் தரநிலையை உறுதி செய்யும் வகையில் பல்வேறு கட்டடங்களுக்கு மாதிரி வடிவமைப்புகளை உருவாக்கியுள்ளது. இதுவரை, **32** மாதிரி வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்து வகையான பணிகளும், கட்டடங்கள் இந்திய தர நிர்ணய ஆணையத்தின் (BIS) விவர குறிப்பீட்டிற்கு ஏற்பவும், சாலைகள் மற்றும் பாலங்கள் இந்திய சாலைக் கூட்டமைப்பின்(IRC) விவரக் குறிப்பீட்டிற்கு ஏற்பவும் மற்றும் இதர பணிகள், தகுந்த தரநிலைக்கேற்றவாறும் வடிவமைக்கப்படுகின்றன. இப்பணிகள், இவ்வியக்ககத்தில் உள்ள வடிவமைப்புப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது.

பணிகளை தகுந்த தரக்கட்டுபாட்டிற்கு ஏற்றவாறு செயலாக்கும் பொறுப்பு மாவட்ட, உபகோட்ட மற்றும் ஒன்றிய அளவிலான தொழில்நுட்பப் பிரிவினுடையது.

**புவிசார் தகவல் அமைப்பு**

புவிசார் தகவல் அமைப்பானது, திட்டமிடல் மற்றும் சொத்து மேலாண்மை சார்ந்த முடிவுகளை மேற்கொள்ள துணை புரிகிறது. புவிசார் தகவல்களின் நன்மைகளை பயன்படுத்தவும், அதன் ஆற்றலை வளர்ச்சித் திட்டங்களில் செயல்படுத்தவும், ஊரக வளர்ச்சித் துறையின் இயக்குநரகத்தில் புவிசார் தகவல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. புவிசார் அமைப்பின் பயன்பாடு ஆரம்ப நிலையில் இருக்கும்போதும், இதற்குண்டான அடிப்படை களப்பணிகள் கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக வரும் ஆண்டுகளில் புவிசார் தகவல்களின்

அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள ஏதுவாகும். இதுவரையில், புவிசார் தகவல் அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- கிராம ஊராட்சிகளின் எல்லை, ஊராட்சி ஒன்றியங்களின் எல்லை, சாலைகள், நீர்நிலைகள், குக்கிராமங்கள் ஆகியவை புவி சார்ந்த தகவல்களாக முதலில் உருவாக்கப்பட்டது.
- தேசிய ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்திற்கு (NRIDA) 18 வகையான, புவிசார் தகவல் அடுக்குகள் உருவாக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்தகவல்கள் www.pmgsy-grris.nic.in என்ற இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில், இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கு (NRM) புவிசார் தகவல்களை பயன்படுத்த ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் பணிக்கப்பட்டுள்ளது. செயற்கை நீர்ச்செறிவூட்டல் கட்டமைப்பு பணிகள் (ARS) மேற்கொள்ளப்பட வேண்டிய சரியான இடங்கள், புவிசார் தகவல் அமைப்பின் மூலம் கண்டறியப்படுகிறது. இதன் முன்மாதிரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டது. தற்போது, மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் (MoRD) புவிசார் தகவல் அமைப்பின்படி திட்டப் பணிகள் மேற்கொள்வதை விரிவாக்கம் செய்து ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு, இரண்டு கிராம ஊராட்சிகள் வீதம் 2019–20–ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.
- மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் (MoRD), மத்திய அரசுத் திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக

வேலை உறுதித் திட்டம், தூய்மை பாரத இயக்கத்தின்கீழ் தனி நபர் கழிப்பறை, பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) ஆகியவற்றின் கீழ் உருவாகும் சொத்துக்களுக்கு புவிசார் குறியீடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் புவிசார் தகவல் அமைப்புப்பிரிவின் மூலம் கண்காணிக்கப்படுகிறது.

மேலும், ஊரகச் சாலைகளுக்கான முழுமையான புவிசார் தகவல்கள் உருவாக்கும் முயற்சியில் இத்துறை ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு காரணிகளை அடிப்படையாக கொண்டு சாலைகளைத் தேர்வு செய்யவும், சாலைகளுக்கு முன்னுரிமை வழங்கவும் ஏதுவாகும். மேலும், புவிசார் தகவல்ளைப் பயன்படுத்தி சாலைப் பராமரிப்பினை நன்கு திட்டமிட முடியும்.

## 3.7. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில், தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து அவற்றுக்கான பணிகளை தேர்வு செய்து செயல்படுத்துவதற்காகவே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 2017–18 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 2 கோடியிலிருந்து ரூ.2.50 கோடி ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் பணிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படுவதுடன், பணிகளை செயல்படுத்துவதற்கான செயலாக்கத் துறைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட கூறு நிதியாக

ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.50 கோடியில் நிர்ணயிக்கப்பட்ட முன்னுரிமைப் பணிகளை எடுத்துச் செய்திட வேண்டும். மீதமுள்ள வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1 கோடியில் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையிலும், தடைசெய்யப்பட்ட பணிகள் பட்டியலில் இல்லாத பணிகளை இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்யலாம்.

**வரையறுக்கப்பட்ட கூறு நிதியான ரூ. 1.50 கோடியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகள்**

**1. பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.25 இலட்சம்:**

2019-20 ஆம் நிதியாண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி/ நகராட்சி / ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக குறைந்தபட்சம் ரூ.25 இலட்சத்தினை ஒரு சட்டமன்ற உறுப்பினரின் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதில் பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான கழிவறை வசதிகள் (குறிப்பாக மாணவிகள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தனித்தனியாக கழிப்பறைகள்) குடிநீர் விநியோகம், பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர், பள்ளிகளில் வகுப்பறைகள், நூலகங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

**2. பள்ளிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் அமைத்திட ரூ.20 இலட்சம்:**

பள்ளி மாணவ மாணவியர்க்கு சுத்தமான மற்றும் சுகாதாரத்துடன் கூடிய குடிநீர் வழங்கும் பொருட்டு, 2019-20

ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி/ நகராட்சி / ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் **(Rerverse Osmosis (RO) System**) ஏற்படுத்திட குறைந்தபட்சம் ரூ.20 இலட்சம் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

**3. அங்கன்வாடி / சமையல் கூடம் / குழந்தை நேயக் கழிப்பறைகள் / அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி பணிகளுக்காக ரூ.20 இலட்சம்:**

ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில், அங்கன்வாடி மையங்கள் மற்றும் சத்துணவு மையங்கள் ஆகியவற்றுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையல் கூடங்கள், அங்கன்வாடி குழந்தை நேயக் கழிப்பறை கட்டுதல், அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் அங்கன்வாடி சமையல் அறைகளை எரிவாயு இணைப்பு கொண்டு நவீனபடுத்தும் பணிகள் ஆகியவற்றை எடுத்துச் செய்திட ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்திடல் வேண்டும்.

**4. குடிநீர்ப் பணிகளுக்காக ரூ. 30 இலட்சம்:**

குறிப்பாக கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையைத் தணிப்பதற்காக தற்போதுள்ள குடிநீர் வழங்கும் நீராதாரத்தினைப் பெருக்குவதற்கான, மின் விசை இறைப்பான், சிறு மின் விசை இறைப்பான், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுதல், புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல், ஆழ்குழாய் கிணறு ஆழப்படுத்தும் பணிகள், புதிய கைப் பம்பு அமைத்தல், மோட்டார் திறன் உயர்த்துதல், திறந்த வெளி கிணறு அமைத்தல், ஏற்கனவே

உள்ள திறந்த வெளி கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் ரூ.30 லட்சத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

**5. இதர வரையறுக்கப்பட்ட பணிகளுக்கு ரூ.55 இலட்சம் :**

இதர வரையறுக்கப்பட்ட கூறு நிதியின் கீழ், சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை மொத்த வரம்பான ரூ.55 இலட்சத்தில் கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்ட பணிகளை தேர்வு செய்யலாம்.

**அ) ஊரகப் பகுதிகளில்**

1. ஊரகப் பகுதிகளில் சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல். (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து, வழங்கப்படும் மான்யத் தொகையினை பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்)
2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார் சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் இடுகின்ற பணிகளை மட்டும் மேற்கொள்ளல்)
4. தெருக்கள் மற்றும் பாதைகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்/ பேவர் பிளாக் அமைக்கும் பணிகள்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப்

பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் /அல்லது சுற்றுச்சுவர் கட்டுதல்

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்

7. பாலங்கள் கட்டுதல்

8. கிராம ஊராட்சிகளில் தேவைப்படின் கூடுதல் இடுகாடு / சுடுகாடு அமைத்தல்

9. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால், இப்பணிகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்

10. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்

11. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்

12. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்

**ஆ). நகர்ப்புறப் பகுதிகளில்**

1. நகர்ப்புறப் பகுதிகளில் சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி

நிறுவுதல் மற்றும் LED தெருவிளக்குகள் நிறுவுதல், (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து வழங்கப்படும் மான்யத் தொகையினைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்)

2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்

3. மிகவும் பழுதடைந்துள்ள தார் சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் இடப்படும் பணி மட்டும் மேற்கொள்ளல்).

4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் /அல்லது சுற்றுச்சுவர் கட்டிக்கொடுத்தல்

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்

8. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல்

9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்

10. புதிய பொது பூங்காக்கள் அமைத்தல்

11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்

12. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்

13. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற கழிவு நீர் அகற்றும் இயந்திரங்கள் வாங்குதல்

14. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால், இப்பணிகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்

15. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்

## வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1.00 கோடியில் எடுத்து செய்யப்படக்கூடிய பணிகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், “எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட கீழ்கண்ட பணிகளைத்’’ தவிர பிற எந்தப் பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியின் கீழ் எடுத்துச் செய்யலாம். அதே போல் வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யப்படக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1 கோடியில்

இருந்து மேற்கொள்ளலாம். பயணிகள் நிழற்குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச் செய்திட அனுமதிக்கப்படுகின்றது.

## எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள்

1. மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

**விதிவிலக்கு**

(i) நேரடிக் கொள்முதல் நிலையங்கள் (Direct Procurement Centres), கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மைய (Bulk Chilling Centre) கட்டடங்கள் கட்டுதல்

(ii) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச் சுவர், சிமிண்ட் கான்க்ரீட் தளம், தொழிலாளர் ஓய்வறை மற்றும் கழிவறை கட்டுதல்.

2. தனிநபர் / குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்

**விதிவிலக்கு**

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)–ன் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு பேரூராட்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்டுதல்

3. அனைத்து வகையான புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளுதல்

**விதிவிலக்கு**

அரசுத் திட்டங்களின் கீழ் **31.12.2009** வரை கட்டப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்பு / தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.**50,000**/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது

நீக்கம் செய்ய எடுத்துக் கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் / தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்

4. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

**விதிவிலக்கு**

(i) **2016–17** ஆம் ஆண்டில் **15**வது சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் **14**–வது சட்டமன்றப் பேரவையில் பணியாற்றி தற்போது மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மடிக்கணினி (Laptop) அல்லது மேசைக் கணினி (Desktop), பிரிண்டர் (Laser / Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broadband/ Internet Data card connection) ஆகியவற்றை ஒரு முறை மட்டும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு வரையில் கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை / இணைய இணைப்பு வசதிகள் வாங்கப்படாமல் விடுபட்டு இருப்பின், அவ்வினங்களில் மட்டும், **2019–20** ஆம் ஆண்டின் வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து அரசாணை **(**நிலை**)** எண். **95** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் **(**மா.அ.தி**–1)** துறை நாள்:**18–8–2016**ல் அனுமதி அளித்துள்ளவாறு வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு கொள்முதல் செய்து கொள்ளுதல்.

(ii) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழிற்பயிற்சி

நிலையங்கள் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்

(iii) அரசு ஆணை (1டி) எண். 405, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி-1) துறை, நாள். 17.08.2010 மற்றும் அரசு கடித (1டி) எண். 653, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்:31.12.2012ல் குறிப்பிட்டுள்ளபடி மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.5 லட்சம் அல்லது அதற்கு மேலான மதிப்பிற்கு வாங்குதல்

(iv) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப் பெட்டிகள் வாங்குதல்

(v) உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடத்தில் (Physical fitness centre /Gymnasium) உடற்பயிற்சி செய்ய தேவையான கருவிகள் வாங்குதல். இவை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்

(vi) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரியசக்தி மின்கலன்கள் (Solar Power Equipement) நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்

(vii) பொதுமக்களின் பாதுகாப்பிற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் / காவல் கண்காணிப்பாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / பெருநகர சென்னை மாநகரக் காவல் ஆணையர் மூலம் உரிய கொள்முதல் விதிகளைப் பின்பற்றி கண்காணிப்பு (CCTV-Closed Circuit

Television) கேமிராக்கள் மற்றும் அது தொடர்புடைய உபகரணங்களை வாங்குதல்

5. அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள், சுயநிதிக் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்

6. அனைத்து வணிக நிறுவனங்கள்/ அலகுகள் குறித்த பணிகள்

7. மானியம் மற்றும் கடன் வழங்குதல் மற்றும் மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்

8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்

9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்

10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்

11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்

12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவைகளைத் தூர் வாருதல்

13. சரளை / கப்பி சாலைகள் (தார்ச் சாலை வரை அமைக்கும் சாலைப் பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்)

14. உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்

**2018–19 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம்**

**2018–19** ஆம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ. 429.20 கோடி மதிப்பீட்டில்

பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை – 3.7**
**சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2018–19 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்**

| வ.எண் | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கட்டடங்கள் | 1911 |
| 2. | சாலைகள் | 1707 |
| 3. | குடிநீர் வழங்கல் | 3355 |
| 4. | வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள் | 914 |
| 4. | இதர பணிகள் | 1953 |
| **மொத்தம்** | | **9840** |

இத்திட்டத்தின் கீழ் **2019–20** ஆம் ஆண்டிற்கு ரூ.**587.50** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.8. தன்னிறைவுத் திட்டம்

அரசாங்கம் மற்றும் பொது மக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டமே தன்னிறைவு திட்டம் ஆகும். சமுதாய சொத்துக்களை உருவாக்குவதில் பொது மக்கள் பங்களிப்பை ஊக்கப்படுத்திடும் நோக்கில் இத்திட்டம் அரசால் **2011–12** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறான பொது மக்கள் பங்களிப்பு மற்றும் அரசு நிதி உதவி அணுகுமுறை சமூகத்தில் சுய உதவி மற்றும் சுய சார்பு தன்மையை மேம்படுத்துவதோடு மக்களது உணரப்பட்ட தேவையை பூர்த்தி செய்ய வழிவகை செய்கிறது. தேர்வு செய்யப்படும் பணியின் மதிப்பீட்டு தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொது மக்களின் பங்களிப்பு இருக்க

வேண்டும். எனினும், பங்களித்தோர், அச்சொத்தின் மீதோ, அதனை பராமரிப்பதற்கோ எவ்வித உரிமையும் கோரக் கூடாது.

**பணிகளைத் தேர்வு செய்தல்**

1. தனிநபர், குழுக்கள், நிறுவனங்கள், பொது அல்லது தனியார் பெருநிறுவனங்கள் அல்லது சமூக அமைப்புகள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தேவையான பணிகளை எடுத்துச் செய்யலாம்.
2. தேர்வு செய்யப்பட்ட பணிகள் குறித்த விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பங்களிப்பு தொகையினை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதம் ஆகியவற்றை பொது மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.
3. மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் குறித்து பரிசீலனை செய்த பின்பு திட்டப் பணிகளை மேற்கொள்ளவிருக்கும் முகமையிடம் விளக்கமான மதிப்பீடு மாவட்ட ஆட்சித் தலைவரால் கோரப்பட வேண்டும். அனுமதி வழங்க ஏதுவாக, விண்ணப்பதாரர் உரிய தொகைக்கான கேட்பு வரைவோலையை மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரிடம் செலுத்த வேண்டும்.
4. இத்திட்டத்தின் கீழ் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது

5. பணிகளை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்மந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில் அதற்கான அனுமதியினை, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன் பெற வேண்டும்
6. உருவாக்கப்படவுள்ள சொத்துக்கள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் மூலம் பராமரிக்க வேண்டிய அவசியம் இருப்பின், சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு/துறையின் இசைவு பெறப்பட வேண்டும்
7. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீட்டு தொகைக்கு கூடுதலாக பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின் அவற்றுள், மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்

**பணிகளை நிறைவேற்றுதல்**

சம்மந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம் **1998** மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட விதிகளைப் பின்பற்றி ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் பணிகளை செயல்படுத்த வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் பெரிய அளவிலான மக்கள் பங்கேற்பு ஊக்குவிக்கப்படுகிறது. பொது மக்களின் பங்களிப்பு, மதிப்பீட்டில் **50** விழுக்காடு அல்லது அதற்கு மேல் இருப்பின், பங்களித்தவர் அல்லது அவரின் முகமை அப்பணியை செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்குவார். ஆனால், பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில்

உள்ள நீராதாரக் குளங்களைத் தூர்வாரும் பணியின் மதிப்பீட்டில் **50** விழுக்காட்டிற்கும் மேலாக பொதுமக்களின் பங்களிப்புத் தொகை இருப்பினும், ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே அப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

**2011 – 12 முதல் 2018–19 வரையிலான திட்ட செயல்பாடு:**

**2011–12** முதல் **2018–19** வரை சமுதாயத்திற்கு பயன்தரத்தக்க 12,765 சொத்துக்கள் ரூ.854.27 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

**திட்ட செயலாக்கம் 2019–20**

இத்திட்டம் **2019–20** ஆம் ஆண்டிலும் ரூ.**50** கோடி திட்ட மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**சுகாதாரம்**

**3.9. ‘‘முழு சுகாதார தமிழகம்’’**

தூய்மை மற்றும் பாதுகாப்பான சுகாதார பழக்க வழக்கங்கள், சமூக, பொருளாதார மற்றும் சுகாதார குறியீடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களின் வளமான மற்றும் ஆரோக்கியமான சூழலை உருவாக்கி ‘‘முழு சுகாதார தமிழகம்’’ என்ற நிலையை அடைய, மாநில அரசு தொடர்ந்து அதிமுக்கியத்துவம் அளித்து நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதனடிப்படையில், அனைத்து பங்கேற்பாளர்களையும் மக்கள் இயக்கமாக ஒருங்கிணைத்து, திறந்த வெளியில் மலம் கழித்தல் பழக்கத்தினை களையவும் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை தக்கவைப்பதின் மூலம் “முழு சுகாதார தமிழகம்’’ என்ற நோக்கத்தை எய்த, தொடர்ச்சியான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

‘‘முழு சுகாதார தமிழகம்’’ என்கிற நிலையை அடைவதன் மூலம், ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றான ‘‘அனைவருக்கும் சுகாதாரம்’’ என்ற முக்கிய நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 3.9.1. மாநில அரசின் முன்முயற்சிகள்

மாநிலத்தில் சுகாதாரப் புரட்சி ஏற்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. 2001–04 வரையிலான காலத்தில், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு கிராம ஊராட்சிக்கு ஒரு சுகாதார வளாகம் வீதம், அப்போது இருந்த 12,618 கிராம ஊராட்சிகளில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன. 2011–12ம் ஆண்டில், பயன்படுத்தாமல், பழுதடைந்திருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு, ஊரகப் பெண்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டது. இந்த சுகாதார வளாகங்களின் தொடர் பராமரிப்பினை சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிகளும், தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்களும் மேற்கொள்கின்றன. முழுமையான சுகாதார நிலையினை வேகமாக அடையும் பொருட்டு, 2003ம் ஆண்டு, தூய்மை கிராம இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2006 ஆம் ஆண்டு கைவிடப்பட்ட இத்திட்டம், 2011–12 ஆம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை மற்றும் தூய்மையான சுற்றுச்சூழல் உடைய கிராம ஊராட்சிகள் பரிந்துரைக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு கிராம

ஊராட்சி வீதம் **31** கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு கிராம ஊராட்சிக்கு தலா ரூ.**5** இலட்சம் வீதம் ரொக்க பரிசு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஊரக மகளிருக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டதை போன்று, **2012–13** ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கிராம அளவில் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றை தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் மற்றும் அதன் பயன்பாட்டைக் கண்காணித்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுத்தியதன் மூலம் முழுமையான சுகாதார நிலையை விரைவாக அடைய வழிவகுத்தது. தமிழகத்திலுள்ள அனைத்து **12,524** கிராம ஊரட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதில், “தூய்மைக் காவலர்கள்” அறிமுகப்படுத்தியதன் மூலம் மேற்படி கிராமங்கள் தூய்மையாக பராமரிக்கப்படுவதை தெளிவாக உணர முடிவதுடன் அது வெளிப்படையான ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஊரக பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில் சுகாதார வசதிகளை தொடர்ந்து பராமரித்திட தேவையான அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பள்ளி கழிப்பறைகள் சுத்தமாக பராமரிப்பதுடன் அவை பயன்பாட்டில் உள்ளதையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மாநில அரசின் இந்த அனைத்து முன்முயற்சிகளும் தேசிய அளவில் முன்னோடியாக திகழ்கின்றன.

### 3.9.2. தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் சுகாதாரம் அடைந்தநிலை

தமிழ்நாட்டில், **2013** ஆம் ஆண்டு சுகாதார அடிப்படை கணக்கெடுப்பின்படி, **51.06** இலட்சம் குடும்பங்களில் கழிப்பறை வசதி இல்லை என கண்டறியபட்டது. மேற்படி அடிப்படை

கணக்கெடுப்பிற்குப்பின் **2013–14** முதல் **2018–19** ஆம் ஆண்டு வரை சாதனை அளவாக **49.86** இலட்சம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டதன் மூலமும், **1.19** இலட்சம் குடும்பங்கள் சமுதாய கழிப்பறைகள் மற்றும் இதர கழிப்பறைகளை பயன்படுத்துவதின் மூலமும், தமிழ்நாட்டின் சுகாதாரம் அடைந்த நிலை **45** விழுக்காட்டிலிருந்து **100** விழுக்காடாக உயர்ந்துள்ளது. சுகாதார அடிப்படை கணக்கெடுப்பின்படி, அனைத்து **31** ஊரக மாவட்டங்களும் **100** விழுக்காடு சுகாதாரம் அடைந்த நிலையை எட்டியுள்ளது.

மத்திய அரசு, சுகாதாரம் அடைந்த நிலையை கணக்கிடும்போது, **2013** ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட அடிப்படை கணக்கெடுப்பின்படி, மத்திய குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சக இணையதள ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின்படி (IMIS) கழிப்பறை இல்லாத வீடுகளின் எண்ணிக்கை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி **2013** ஆம் ஆண்டு கணக்கெடுப்பிற்கு பின் புதியதாக கட்டப்பட்ட வீடுகள் சேர்க்கப்படவில்லை. மேலும், **2013** ஆம் ஆண்டு அடிப்படைக் கணக்கெடுப்பின்படி பழுதடைந்த கழிப்பறைகளும் (Defunct toilets) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மேற்படி சுகாதார கணக்கெடுப்பின் போது கிராம ஊராட்சிகளில் **12.25** இலட்சம் கழிப்பறைகள் பழுதடைந்து உள்ளதாக கண்டறியப்பட்டது. இந்த பழுதடைந்த கழிப்பறைகள், முந்தைய திட்டங்களில் கட்டப்பட்டவையாகும். மேற்படி குடும்பங்களுக்கு தற்போதுள்ள திட்டங்களின் கீழ் ஊக்கத் தொகை வழங்க வழிவகை இல்லை. எனவே, பயனாளியின் சொந்த நிதி, பெருநிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதி, வங்கிக்கடன் மற்றும்

சுய உதவிக் குழுக்களின் உள் கடன் ஆகியவற்றின் மூலம் நிதியை திரட்டி, **11.80** இலட்சம் பழுந்தடைந்த கழிப்பறைகளை புதுப்பித்தல்/ மீளவும் கழிப்பறைகள் கட்டுதல் ஆகியவை மாவட்ட நிர்வாகங்களின் நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இதைத் தவிர தூய்மை பாரத கோஷ் நிதி மற்றும் உலக வங்கி உதவியுடன் வழங்கப்படும் செயல்திறன் அடிப்படையிலான ஊக்க மானியம் ஆகிய நிதிகளின் மூலம் **45,000** பழுந்தடைந்த கழிப்பறைகள் புதியதாக கட்டப்பட்டுள்ளன.

மேலும், **2018–19** ஆம் ஆண்டு, **2013** ஆம் ஆண்டு சுகாதார கணக்கெடுப்பில் விடுபட்டுபோன கழிப்பறை அற்ற **5.29** இலட்சம் குடும்பங்களுக்கு, தூய்மை பாரத திட்டம் (ஊரகம்) கீழ் கழிப்பறைகள் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

### 3.9.3. திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலை மற்றும் அதை சரிபார்த்தல்

கிராம ஊராட்சிகள், திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைந்தவுடன் கிராம சபைக் கூட்டங்களில் சுயமாக அறிவிப்பு செய்கின்றன. மேற்படி அறிவிப்பிற்கு பின், உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி வட்டார மற்றும் மாவட்ட அளவில் சரிபார்த்த பின்பு, திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அங்கீகரிப்பதுடன் உறுதியும் செய்யப்படுகிறது. தமிழகத்தில் மொத்தமுள்ள **12,524** கிராம ஊராட்சிகளும் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற கிராம ஊராட்சிகளாக கிராம சபைக் கூட்டத்தில் சுயமாக அறிவிப்பு செய்துள்ளன. அவ்வாறு திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற கிராம ஊராட்சிகளாக சுயமாக கிராம சபைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டவுடன், வட்டார அளவிலான குழு, **100** விழுக்காடு சரிபார்க்கப்பட்டதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்கின்றனர். அவ்வாறு உறுதிச் செய்த பின், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உதவி இயக்குநர்

நிலையிலான அலுவலர்களை கொண்டு மாவட்ட அளவிலான குழுக்கள், ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட வினாப் பட்டியலின்படி, அங்கொன்றும் இங்கொன்றுமாக (Random) சரிபார்ப்பு செய்கின்றனர். மாவட்ட அளவிலான குழு, கிராம ஊராட்சியின் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை உறுதி செய்த பிறகு, மத்திய குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சக ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை இணையதள அமைப்பில் (IMIS) உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது.

### 3.9.4. மூன்றாம் தரப்பு முகமைகள் மூலம் ஊரக சுகாதார கணக்கெடுப்பு

மத்திய அரசு, தேசிய வருடாந்திர ஊரக சுகாதார கணக்கெடுப்பு செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதன்படி இந்த கணக்கெடுப்பு வருடத்திற்கு ஒருமுறை மூன்றாம் தரப்பு முகமைகள் மூலம் மேற்கொள்ளவும், கிராம ஊராட்சிகளின் செயல்திறன் **(1)** திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை குறைத்தல் **(2)** கிராமங்களில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைத்தல் மற்றும் **(3)** திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தில் பயன்பெறும் ஊரக மக்கள் தொகை விழுக்காடு ஆகிய குறியீடுகளின் அடிப்படையில் அளவிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு கணக்கெடுப்பின் சுற்றிலும், திறந்த வெளியில் மலம் கழிக்கும் நிலை, திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்தல் மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டங்கள் ஆகிய கூறுகளில் தகவல்கள் சேகரிக்கப்படுகிறது. இது தனிப்பட்ட சரிபார்ப்பு நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும் மூன்றாம் தரப்பு மாதிரி கணக்கெடுப்பு ஆகும். தேசிய வருடாந்திர ஊரக கணக்கெடுப்பின் முடிவுகளின் அடிப்படையில் மாநிலங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

தரமான சுகாதார உட்கட்டமைப்புகளை மதிப்பீடு செய்ய, மாநில அரசு மூன்றாம் நபர் சுகாதார ஆய்வை மாநில தர கண்காணிப்பாளர்கள் மூலமாகவும் அவ்வபோது மேற்கொள்கிறது.

### 3.9.5. சுகாதாரம் குறித்து எடுக்கப்பட்ட பல்வேறு முன்முயற்சிகள்

**(அ) திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைப்பதில் சமுதாய அமைப்புகளின் பங்கு**

தமிழ்நாட்டில் ஏற்கெனவே செயல்படும் “பெண்கள் சுய உதவிக் குழு அமைப்புகள்” மாபெரும் சமுதாய மூலதனமாகும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின் கீழ் கிராம அளவில் செயல்படும் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், நேர்முக தகவல் பரிமாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் முழு அளவில் ஈடுபடுத்தப்படுகின்றனர். திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்குதல் மற்றும் அதனை தொடர்ந்து தக்க வைத்தலில் மக்களிடையே பெரிய அளவில் செல்வாக்கு உடையதாக திகழும், இந்த சமூகம் சார்ந்த அமைப்புகள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றன.

**(ஆ) சுகாதாரத்தோடு தொடர்புடைய பங்கேற்பாளர்களை ஒருங்கிணைத்தல்**

திறந்த வெளியில் மலம் கழிக்கும் தவறான பழக்கம், சிறார்களின் உடல் வளர்ச்சியிலும் மற்றும் மன வளர்ச்சியிலும் ஒரு எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, அவர்களுக்கு இரத்த சோகை மற்றும் குடற்புழு தொற்று ஏற்படுவதற்கும் மூல காரணமாக அமைந்துள்ளது. எனவே, திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கமுடைய மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவது என்பது மிக முக்கியமானதாகும்.

அதன் மூலம் மட்டுமே திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடைவதுடன், அவர்கள் தொடர்ந்து கழிப்பறை பயன்படுத்தும் பழக்கத்தை தக்க வைக்க இயலும். எனவே, பல்வேறு இதர துறைகளின் பங்கேற்பாளர்கள் மூலமாகவும் சுகாதாரம் குறித்த தகவல்களை தொடர்ந்து வலியுறுத்துவதின் மூலமாகவே இந்த நோக்கம் சாத்தியமாகும். மேற்படி வழியில், மாநில மற்றும் மாவட்ட அளவில், சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், பள்ளிக் கல்வி மற்றும் சமூக நலம் ஆகிய அரசு துறைகளின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகள் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் புறநோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துச் சீட்டில் கழிப்பறை பயன்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையை செய்தல், பாடப் புத்தகங்களின் அட்டைகளில் சுகாதாரம் குறித்த தகவல்களை அச்சிடுதல், அங்கன்வாடி நிலையங்களுக்கு வரும் வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையே நேரடி தகவல் தொடர்பு மூலம் சுகாதாரத்தை வலியுறுத்துதல் போன்ற மாநில அரசின் முன்னோடி முயற்சிகள், தேசிய அளவில் கவனத்தை ஈர்க்கின்றது.

**(இ) ஊக்குவிப்பாளர்களின் பங்கு**

சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து கண்டறியப்பட்ட ஊக்குவிப்பாளர்களுக்கு, சமூக அணுகுமுறை பயிற்சியும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலையை தக்க வைத்துக் கொள்ள சமூக அடிப்படையிலான கண்காணிப்பு பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது. இந்த ஊக்குவிப்பாளர்களுக்கு திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலையுடன் கூடுதல்

(ODF Plus) நடவடிக்கைகளாக, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, கழிப்பறைகளை மறுசீரமைத்தல், மாதவிடாய் கால சுகாதார மேலாண்மை, பாதுகாப்பான சுகாதாரம், தன்சுத்தம் பழக்கங்களை சமூகத்தினரிடையே பொதுவாகவும் மற்றும் குறிப்பாக பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளிலும் கற்பித்தலாகும். சிறப்பாக பணியாற்றும் ஊக்குவிப்பாளர்கள், மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் அடையாளம் காணப்பட்டு அவ்வப்போது விருதுகள் வழங்கப்படுகிறது.

**(ஈ) களப்பணியாளர்களுக்கு பயிற்சி**

மனமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தகவல்கள் மற்றும் தங்களின் திறமைகளை வளர்த்து கொள்ள களப்பணியாளர்களுக்கு தொடர்ந்து வழங்கப்படும் திறன் வளர்ப்பு பயிற்சி மிகவும் முக்கியமானதாகும். ஊக்குநர்களிலிருந்து கண்டறியப்பட்ட முதன்மை பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் மூலம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பணித்தள பொறுப்பாளர்கள், கள அளவில் பணியாற்றும் பிற துறை பணியாளர்களான ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் இதரர்கள் ஆகியோருக்கு சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் அவ்வப்போது அளிக்கப்படுகிறது. களப் பணியாளர்களுக்கு கழிப்பறை கட்டுதல் மற்றும் கழிப்பறை சீரமைத்தல் குறித்த தொழில்நுட்ப பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சி திட்டங்களில் சுகாதாரம் ஒரு முக்கிய கூறாக சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**(உ) கண்காணிப்பு**

சுகாதார திட்டத்தினை ஒட்டு மொத்தமாக கண்காணிக்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவரை சார்ந்ததாகும். தரமான முறையில் கழிப்பறை கட்டுவதையும், செயல்படும் கழிப்பறையின் தொடர் பயன்பாட்டினை உறுதி செய்யவும், வட்டார மற்றும் மாவட்ட அளவிலான மூத்த அலுவலர்களால் அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

**(ஊ) சுகாதார கையேடு**

திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையுடன் கூடுதல் (ODF Plus) நடவடிக்கைகள் சார்ந்த விரிவான தகவல்கள் மற்றும் பல்வேறு சுகாதார செய்திகளுடன் சுகாதார கையேடு தயார் செய்யப்பட்டுள்ளது. ஊக்குநர்கள் மற்றும் முதன்மை பயிற்றுநர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளில் இந்த கையேடு வள ஆதார ஆவணமாக பயன்படுத்தப்படுகிறது. மேலும், உடல்நலம் மற்றும் சுகாதாரத்தோடு தொடர்புடைய பங்கேற்பாளர்களின் துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு இந்த கையேடு பயனுள்ளதாக இருக்கும்.

## 3.10. ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள்

### 3.10.1. ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள்

குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்தும் வசதிகளுடன் கூடிய திடக்கழிவு

மேலாண்மைத் திட்ட அமைப்புகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து **12,524** கிராம ஊராட்சிகளிலும் முழுமையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதில் இந்தியாவிலேயே தமிழகம் தான் முதல் மாநிலம் ஆகும். திடக் கழிவு மேலாண்மைத் திட்ட செயல்பாடுகளில், சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தூய்மைக் காவலர்களாக ஈடுபடுத்தப்பட்டு, அவர்கள் வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல், கழிவுகளை குழிகளில் கொட்டுதல் மற்றும் கழிவுகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர். திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் தொடர்ச்சியாக செயல்படுத்தும் விதமாக, **2018–19** ஆம் ஆண்டு மாநில அரசு ரூ.**206.04** கோடி மாநில நிதிக்குழு மானிய நிதியிலிருந்து ஒதுக்கியதுடன், திட்டம் செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளையும் வெளியிட்டுள்ளது.

திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் படிப்படியாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து **12,524** கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் பாதுகாப்பாக அப்புறப்படுத்தலுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான, பிரித்தல் மற்றும் சேமித்து வைப்பதற்கான கொட்டகைகள், தெருவில் வைக்கும் குப்பைத் தொட்டிகள், குப்பைகளை கொண்டு செல்ல மூன்று சக்கர மிதி வண்டிகள் / தள்ளு வண்டிகள் முதலியன வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திடக் கழிவுகள் அகற்றுவதற்கு முன்னர் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக பிரிக்கப்படுகிறது. தற்போது கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வெளி ஆதாரம் (outsourcing) முறையில், **66,130** தூய்மைக் காவலர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

நகர்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள கிராம ஊராட்சிகளின் சிறப்பு தேவையை பூர்த்தி செய்யும் விதமாக, முறையே மின்கலம் பொருத்திய தள்ளுவண்டிகள் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான மூத்த அலுவலர்கள் மற்றும் வட்டார அளவிலான அலுவலர்கள் தங்களது கள ஆய்வின் போது திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுவதை குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணிக்கின்றனர். தினந்தோறும், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுவது மற்றும் தூய்மைக் காவலர்களின் அன்றாட வருகை ஆகியவை தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் இத்துறையின் இணையதளத்தின் மூலம் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. 2019–20 ஆம் ஆண்டு திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்திட, மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து ரூ. 206.04 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 3.10.2. ஊரகப் பகுதிகளில் திரவக் கழிவு மேலாண்மை திட்டம்

ஊரகப் பகுதிகளில், கழிவு நீரை திறம்பட மேலாண்மை செய்திடவும், வீடுகளில் உள்ள சமையலறை மற்றும் குளியலறைகளிலிருந்தும், ஊரக பகுதிகளில் பொது இடங்களில் உள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி, கைப்பம்பு, ஆழ்துளைக் கிணறு போன்ற பொது இடங்களிலிருந்தும் வெளியேறும் கழிவு/ சாக்கடை நீரை, பாகுபாடு இன்றி கையாளவும், திரவக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளான தனிநபர் உறிஞ்சுக் குழிகள் மற்றும் சமுதாய உறிஞ்சு குழிகள் அமைக்கும் பணிகள்

**2017–18** மற்றும் **2018–19** ஆகிய ஆண்டுகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் முன்னுரிமைப் பணிகளாக எடுத்து செய்யப்பட்டு வருகிறது.

**2017–18**ம் ஆண்டில், சுமார் **1.75** இலட்சம் தனிநபர் உறிஞ்சுக்குழிகள் மற்றும் **25,000** சமுதாய உறிஞ்சுக்குழிகள் அமைக்கும் பணிகள் ரூ.**144** கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதே போல, **2018–19**ம் ஆண்டில், சுமார் **1.75** இலட்சம் தனிநபர் உறிஞ்சுக்குழிகள், **25,000** சமுதாய உறிஞ்சு குழிகள், **100** சமதள வகை சமுதாய தொகுப்பு உறிஞ்சு குழிகள் மற்றும் **400** செங்குத்து வகை சமுதாய உறிஞ்சு குழிகள் அமைக்கும் பணிகள் ரூ.**168.94** கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு உறிஞ்சு குழிகள் அமைப்பதன் மூலம், நிலத்தடி நீர் மட்டம் உயர்வது மற்றும் சாலைகள்/ தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கழிவு நீர் தேங்குவது தடுக்கப்படுவதுடன் அசுத்த நீர் வாயிலாக பரவும் நோய்கள் குறைக்கப்படுகிறது. கழிவு நீரை திறம்பட சுத்திகரிப்பு செய்திட, தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் படிப்படியாக இத்திட்டம் விரிவுப்படுத்தப்படும்.

### 3.11. பள்ளிக் கழிப்பறைகள் பராமரித்தல், வகுப்பறை மற்றும் பள்ளி வளாகம் தூய்மை படுத்துதல்

மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி அவர்களது உடல் நலம் மற்றும் ஆரோக்கியத்தை பேணுவதில் சுகாதார வசதிகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஊரக பகுதிகளிலுள்ள **28,031** ஊராட்சி ஒன்றிய ஆரம்ப / நடுநிலைப் பள்ளிகளிலும் மற்றும் **6,916** அரசு பள்ளிகளிலும் மாணவ மாணவியருக்கு தனித்தனியே கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதை உறுதி

செய்ய அரசு போதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசு பள்ளிகளிலுள்ள பள்ளிக் கழிப்பறைகளை சுத்தமாக பராமரிப்பதற்காக, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அல்லது இதர தனியார் நிறுவனங்கள் மூலமாக வெளி ஆதாரம் (outsourcing) முறையில் ஈடுபடுத்தப்படும் சுகாதார பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்குவதற்கும், தூய்மைப்படுத்த தேவையான பொருட்களை வாங்குவதற்கும், திடக் கழிவு மேலாண்மைத் திட்ட நிதியிலிருந்து **2015–16, 2016–17** மற்றும் **2017–18** ஆகிய ஆண்டுகளுக்கு அரசால் ரூ.**138.96** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2018–19** ஆம் ஆண்டு, அரசு ரூ.**63.92** கோடி நிதி ஒதுக்கீடு செய்து, ஊரக பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப / நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் பள்ளிக் கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கும், வகுப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத்தினை தூய்மைபடுத்துவதற்கும் உத்தரவிட்டுள்ளது.

வெளி ஆதாரம் மூலம் ஈடுபடுத்தப்படும் துப்புரவு பணியாளர்கள் வழக்கமான சுத்தம் செய்யும் பணியோடு, கிராம ஊராட்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தூய்மைக் காவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஈடுபடுத்தப்பட்டுள்ள மஸ்தூர்களை கொண்டு, **2** மாதத்திற்கு ஒரு முறை (அல்லது) காலாண்டு / அரையாண்டு / வருடாந்திர தேர்வு விடுமுறைக்கு பின்னர் மற்றும் பள்ளி திறக்கப்படும் முன்னர், பள்ளி வளாகம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை ஒட்டு மொத்தமாக சுத்தம் செய்திட வேண்டும். ஒட்டு மொத்த சுத்தப்படுத்தும் பணியினை மேலே குறிப்பிடப்பட்ட முன்னரே தீர்மானிக்கப்பட்ட

நாட்களைத் தவிர, தேவையின் அடிப்படையிலும் ஒட்டு மொத்த சுத்தப்படுத்தும் பணியை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**2019–20** ஆம் ஆண்டும் இத்திட்டம் ரூ.**64.26** கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 3.12. சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளால் ஏற்படும் பிரச்னைகளை தடுத்திடும் வகையில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டமாக **2003–04** ஆம் ஆண்டு சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் முறையே ரூ.**700** இலட்சம் மற்றும் ரூ. **50** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், **2017–18** ஆம் ஆண்டு முதல், மேற்படி மாவட்டங்களில் தேவை மற்றும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் நிதியைப் பகிர்ந்தளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டுதல், ஆவின் பாலகம் கட்டுதல், விவசாயத் தொழிலாளர்களுக்கு பூச்சி மருந்து தெளிப்பான் வாங்குதல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குதல், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்தல், அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளும் பல்வேறு பயிற்சித் திட்டங்களும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

**2019–20** ஆம் நிதியாண்டிற்கும் இத்திட்டத்திற்காக ரூ.**7.50** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 4. மத்திய அரசுத் திட்டங்கள்

## 4.1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 2.2.2006 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு நிதியாண்டிலும் ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்கு குறையாமல் வேலை வாய்ப்பினை அளிக்க இச்சட்டம் உறுதி செய்கிறது. ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு அடிப்படை உரிமையான 'சமத்துவ உரிமையை' அளிக்கும் விதமாக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இத்திட்டம் மட்டுமே ''வேலை பெறும் உரிமையை'' உறுதிப்படுத்தும் சட்டப்பூர்வ பாதுகாப்பு கொண்ட ஒரே வறுமை ஒழிப்பு திட்டமாகும்.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்க் குறிப்பிட்டவாறு திருத்தியமையக்கப்பட்டுள்ளன.

அ) ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.

ஆ) ஏழை மக்களின் வாழ்வாதாரத்திற்கான அடிப்படை வளத்தை வலுப்படுத்துதல்.

இ) சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்குவதை உறுதி செய்தல்.

ஈ) ஊராட்சி அமைப்பு முறைகளை வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டில் முதலில் இத்திட்டம் 6 மாவட்டங்களில் 2.2.2006ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் படிப்படியாக மீதமுள்ள 25 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

1) பத்து முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:

(i). வேலை அட்டை பெறுவதற்கான (Job card) உரிமை

(ii). வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

(iii). வேலையில்லாப்படி பெறுவதற்கான உரிமை

(iv). தேவையான பணிகளைத் தொகுத்து திட்டமிடும் உரிமை

(v). 5 கி.மீ. தொலைவிற்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

(vi). பணித்தளத்தில் அடிப்படை வசதிகள் பெறுவதற்கான உரிமை

(vii). அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை

(viii). பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை

(ix). காலங்கடந்து ஊதியத் தொகை வழங்கினால் இழப்பீட்டு உரிமை

(x). குறித்த காலத்திற்குள் குறைகள் மீது தீர்வு காணல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அனைத்து செலவுகள் மீது தொடர் தணிக்கை மற்றும் சமூக தணிக்கை மேற்கொள்ளுதல்.

2) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணி வாரம் என்பது ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வரை வேலை நடைபெறுகிறது.

3) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களுக்கு கூடுதலாக பணி வாய்ப்புகள் வழங்கும் பொருட்டு, கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை ஒரு தொகுப்பாக உருவாக்கி, கூடுதலாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4) திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை–I.ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது ஓர் வயது வந்த நபர் 1 மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய 8 மணி நேர பணிக்கு பெறக்கூடிய (அதாவது 7 மணி நேர செயல் விளைவுடைய வேலை) சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

5) மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப் புள்ளி பட்டியலைப் பின்பற்றி அரசாணை வெளியிடப்பட்டு பின்பற்றப்பட்டு வருகிறது. இவ்வரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கென மண் வேலை தொடர்பான மற்றும் இதர சிறப்பு பணிகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6) ஒப்பந்ததாரர்கள் அல்லது உடல் உழைப்பை அப்புறப்படுத்தும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை. எனினும், கீழ்க்காணும் பணிகளுக்கு இயந்திரங்கள் பயன்படுத்தலாம்.

(அ) கிணறுகள் தோண்டுவது மற்றும் ஆழப்படுத்தும் பணிகள்

(ஆ) சாலைகள் அமைப்பதற்கு ஜல்லிகளை சரியான விகிதத்தில் சேர்க்கும் பணிகள் மற்றும் கான்கிரீட் கலவை சேர்த்தல்

(இ) சிமிண்ட் கான்கிரீட் மேற்கூரை, தூண்கள், பீம்கள் மற்றும் மேற்கூரை போன்ற கட்டிடங்கள் கட்டுமான பணிகள்

(ஈ) உலர் சாம்பல் மற்றும் அழுத்தப்பட்ட நிலைப்படுத்தப்பட்ட செங்கற்கள் உற்பத்தி பணிகள்

(உ) காடு வளர்ப்பு பணிகளில் நிலத்தை துளைக்கும் இயந்திரங்களை ஈடுபடுத்துதல்

7) திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு மத்திய அரசால் வழங்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியம், மத்திய அரசு மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் பிரிக்கப்படுகிறது.

8) அனைத்து ஊராட்சிகள் மற்றும் முகமைகள் மூலம் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்குண்டான ஊதியம் மற்றும் பொருட்கள் 60:40 எனும் விகிதாச்சார அடிப்படையில் மாவட்ட அளவில் கணக்கிடப்படும்.

9) அனைத்து கட்டுமான பணிகளிலும் தொழிலாளர் ஊதியக்கூறிற்கு ஊரக விலைப் புள்ளி பட்டியலையும்,

பொருள்செலவினக்கூறிற்கு பொதுப் பணித் துறை விலைப் புள்ளி பட்டியலையும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.

10) குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பயனாளியும் வேலைக்கு விண்ணப்பித்து அவ்வேலையினை பெறும் பொருட்டு வேலை அட்டையினை பெற உரிமை பெற்றுள்ளனர். ஒவ்வொரு 5 ஆண்டிற்கும் வேலை அட்டை புதுப்பிக்கப்படுகிறது. 01.04.2017லிருந்து 5 வருடங்களுக்கு செல்லத்தக்க புதிய வேலை அட்டைகள் 100 சதவிகித சரிபார்ப்பிற்குப் பின் அனைத்து செயற்படும் (active) தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

11) 2017–18 ஆம் ஆண்டிலிருந்து 12,523 கிராம ஊராட்சிகளிலும் மின்னணு வருகைப்பதிவேடு (e-MR) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

12) அனைத்து ஊராட்சிகளிலும் மத்திய அரசால் பரிந்துரை செய்யப்பட்ட ஏழு சட்டப்பூர்வ பதிவேடுகளுடன் வேலை அடையாள அட்டைக்கான இருப்புப் பதிவேடும் கூடுதலாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

13) 2019–20 ஆம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் 1.4.2019 முதல் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வேறுபாடின்றி ஒரு நாளுக்கு ரூ.229 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

14) அரசாணை (நிலை) எண்.25, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி1) துறை நாள்.27.02.2014ன் படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுத்திட்ட பணியாளர் முழு ஊதியம் பெற 37 கன அடி மண் வேலை செய்ய வேண்டும்.

15) பணித் தளம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வினத் தொகையாக ஊதியத்தில்

10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ. சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

16) பணித்தளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.

17) 07.11.2016 முதல் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் ஊதியம் நேரடியாக திட்ட தொழிலாளர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகின்றது.

18) கிராம சபையில் ''கிராம சமூகத் தணிக்கையாளர்கள்'' மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள் சமூகத் தணிக்கை செய்யப்படுகின்றது.

19) கிராம சபை கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அந்தந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்வதற்கு அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

20) வேலை நடைபெறும் அனைத்து இடங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி நடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் கூடிய குடிமக்களுக்கான தகவல் பலகை (Citizen Information Board) வைக்கப்படுகிறது.

21) குறைகளை தீர்க்கும் வகையில் குறை தீர்க்கும் அமைப்பின் ஒரு பகுதியாக கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை (Toll free Helpline) ''1299'' ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.

## அட்டவணை – 4.1
## மத்திய அரசின் 2018–19 ஆம் ஆண்டு முக்கிய சுற்றறிக்கையின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம்

| வகைப்பாடு – அ | வகைப்பாடு – ஆ | வகைப்பாடு – இ | வகைப்பாடு – ஈ |
|---|---|---|---|
| இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப்பணிகள் | நலிவுற்ற இனத்திற்கான பொதுச் சொத்துக்கள் / தனி நபர் சொத்துக்களை உருவாக்குதல். | தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்கள் மற்றும் பொது உட்கட்டமைப்பு–களை அமைத்தல் | ஊரக உட்கட்டமைப்பு வசதிகள் |
| • நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்பு கட்டமைப்புகளான நீர் தடுப்புச் சுவர், மண் அணைக்–கட்டுகள், நிறுத்த அணைக்கட்டுகள் மற்றும் தடுப்பணைகள் கட்டுவதன் மூலம் நிலத்தடி நீரினை அதிகப்படுத்தலாம் மற்றும் மேம்படுத்தலாம். குடிநீர் ஆதார அமைப்பு உள்ளிட்ட நிலத்தடி நீரினை மேம்படுத்தும் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.<br>• நீர் வடிப்பகுதி மேலாண்மைப் பணிகளான சம உயர அகழி வெட்டுதல், படியடுக்குத் தளமேடை–யமைத்தல், சமமட்ட வரப்பு அமைத்தல், வலைப்பின்னல் தடுப்பணை, வலைகம்பி அமைப்புகள்/ நீர்ப்பாசன மேலாண்மை போன்ற சிறப்பான பணிகள். | • கிணறுகள் தோண்டுதல், பண்ணைக் குட்டைகள் மற்றும் இதர நீராதாரப் பணிகள் மூலம் சிறந்த நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் பத்தி எண்.5ல் குறிப்பிடப்பட்டுள்ள பயனாளிகளின்நிலங்களை மேம்படுத்துதல்<br>• தோட்டக்கலை சார்ந்த பணிகள், பட்டு வளர்ப்பு, மரக் கன்றுகள் நடுதல் மற்றும் காடு வளர்ப்பு மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல்.<br>• வகைபாடு 1 பத்தி எண்.5ல் குறிப்பிட்டுள்ள பயனாளிகளின் தரிசு நிலம் அல்லது பயனற்ற நிலங்களை மேம்படுத்தி விவசாய நிலங்களாக மாற்றுதல்<br>• நீடித்து நிலைத்து வளர்கிற புல்களான ஸ்டைலோ மற்றும் வெட்டிவேர் போன்ற புல்களை வளர்த்து மேய்ச்சல் நிலத்தினை மேம்படுத்துதல் | • வேளாண்மை உற்பத்தியினை பெருக்கும் வகையில் நாடப் மற்றும் மண்புழு போன்ற உயிர் உரங்கள் தயாரிக்கும் அலகுகள் அமைத்தல் மற்றும் வேளாண் உற்பத்தி பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கு சேமிப்பு கூடங்கள் அமைத்தல்.<br>• சுய உதவிக் குழுக்களுக்–கான பொது பணிமனை தளங்களை அமைத்தல். | • உணவு தானிய சேமிப்பு கிடங்கு அமைத்தல்<br>• சாலை வசதி இல்லாத ஊரகப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல்<br>• விளையாட்டு மைதானம் அமைத்தல்<br>• பேரழிவினை தடுக்கும் ஆயத்தப்பணிகள் மற்றும் சாலைகளை சீரமைத்தல்<br>• வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு பணிகள் உள்ளிட்ட பொது உட்கட்டமைப்பு பணிகள்<br>• கிராம ஊராட்சி அலுவலகங்–களுக்கான அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்<br>• மகளிர் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பிற்–கான கட்டிடங்கள் கட்டுதல்<br>• புயல் நிவாரணக் கூடங்கள் |

| | | | |
|---|---|---|---|
| • மிக நுண்ணிய மற்றும் சிறு நீர்ப்பாசனப் பணிகள் மற்றும் பாசனக் கால்வாய்கள் உருவாக்குதல் மற்றும் புனரமைத்தல் பராமரித்தல்.<br>• பாரம்பரிய நீராதாரங்களான பாசன குளங்கள், இதர நீர்நிலைகள் போன்றவற்றை தூர் வாருதல் மற்றும் படிக்கட்டு கிணறுகளை பாதுகாத்தல்<br>• காடு வளர்ப்பு, மரம் நடுதல் மற்றும் வனப்பகுதி, சாலையோரங்கள், கால்வாய் வரப்புகள், குளங்களின் ஓரங்கள் மற்றும் ஆற்றுப்படுகைகளில் பத்தி எண்.5ல் இடம் பெற்றுள்ள குடும்பங்களுக்கு பயன்படுத்துதல் உரிமையுடன் பழ மரக் கன்றுகள் நடுதல் போன்ற தோட்ட வளர்ப்பு.<br>• நீடித்து நிலைத்து வளர்கின்ற புல்களான ஸ்டைலோ மற்றும் வெட்டிவேர் போன்ற மேய்ச்சல் நிலத்தினை மேம்படுத்துதல்<br>• மூங்கில், இரப்பர், மற்றும் தென்னை மர வளர்ப்பு.<br>• பொது இடங்களில் நில மேம்பாட்டு பணிகள் | • மூங்கில், இரப்பர் மற்றும் தென்னை மர வளர்ப்பு.<br>• மாட்டுக் கொட்டகை ஆட்டுக் கொட்டகை, கோழிக் கொட்டகை, பன்றிக் கொட்டகை, அமைத்தல், கால்நடைத் தீவனத் தொட்டிகளை அமைத்து கால்நடைகளை பாதுகாக்க உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.<br>• மீன் உலர் களம், சேமிப்பு வசதிகள், பொது இடங்களில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்த்தல் போன்ற மீன்வளர்ப்புகளை ஊக்குவித்தல் மற்றும் மீன்வளர்ப்புக்கான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்<br>• உயிர் உரங்கள் (நாடப், மண்புழு உரங்கள்) தயாரித்தல்<br>• மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகள் கட்டு வதற்கான திறன்சாரா செலவினத்தினை மேற்கொள்ளல்<br>• மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகளில் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல் | | • அங்கன்வாடி மையகட்டிடங்கள்<br>• கிராம சந்தை மற்றும் சுடுகாட்டு கொட்டகைகளை ஊராட்சி மற்றும் வட்டார அளவில் கட்டுதல்<br>• சட்டத்தில் அனுமதிக்கப்–பட்ட கட்டட பணிகளுக்கு தேவையான கட்டுமானப் பொருட்களை அந்த கட்டிடத்தின் மதிப்பீட்டில் ஒரு அங்கமாக மேற்கொண்டு தயாரித்தல்..<br>• இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஊரக பொது சொத்துக்களை பராமரித்தல். |

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் நீடித்த நிலைத்த வளர்ச்சியினை ஏற்படுத்துதல் (Sustainable Development Goals)**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் உன்னதமான வழிமுறைகள் மற்றும் நோக்கங்களின் மூலம், 'ஐக்கிய நாடு சபையின் நிலைத்த வளர்ச்சி'–யின் நான்கு இலக்குகளான 'பசியின்மை', 'வறுமையின்மை', 'பருவநிலை மாற்றம்' மற்றும் 'ஆண், பெண் சமத்துவம்' போன்றவற்றை அடைய வழிவகை செய்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஆண் மற்றும் பெண் அவர்கள் செய்த பணி அளவீடுகளுக்கு ஏற்ப சம ஊதியம் வழங்கப்படுகிறது.

நீடித்த வளர்ச்சியின் முதல் மற்றும் முக்கிய இலக்கான வறுமை இன்மையை அடைய ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கும் ஒரே வறுமை ஒழிப்பு திட்டமாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஊரகப் பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதன் மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி பசியினை போக்க உதவுகிறது.

தனி நபர் மற்றும் பொது நிலங்களில் மரங்கள் நடுதல் மூலம் காலநிலை மாறுபாடு மற்றும் அதன் நிகழ்வுகளில் இருந்து நிலங்கள் பாதுகாக்கப்படுகிறது. 2019–20 ஆம் ஆண்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், பெருமளவு மரம் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 71 இலட்சம்

மரங்கள் நடப்பெற உள்ளன. அரசுப்பள்ளிகள், கல்லூரிகள், அரசு புறம்போக்கு நிலங்கள், பூங்காக்கள், பொது இடங்கள் மற்றும் சாலையின் இரு ஓரங்களிலும் மரங்கள் நடுவதன் மூலம் கார்பன் வரவு (carbon credit) சரி செய்யப்படுகிறது. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மண் மற்றும் அதன் ஈரப்பதத்தினை பாதுகாக்கும் பணிகள், சிறுபாசன குளம், குட்டை, கால்வாய்கள், ஊரணிகள் மற்றும் பிற நீராதாரங்கள் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்வதன் மூலம் நிலத்தடி நீர் நிலையாக தக்கவைக்கப்பட்டு, காலநிலை மாறுபாட்டினை தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இயற்கை வள மேலாண்மை பணிகளான தடுப்பணைகள் கட்டுதல், அகழிகள் அமைத்தல், நிலமேம்பாட்டு பணிகள், பாரம்பரிய நீராதாரங்களை பாதுகாத்தல் போன்ற வகைபாடு ‘அ’ பிரிவில் உள்ள பணிகள் மொத்த செலவினத்தில் **65** சதவிகிதத்துக்கு குறையாமல், ஊரக பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

**திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள சிறப்பு முயற்சிகள்**
**கால நிர்ணய வேலை அளவீடு**

- பலவகையான வேலைகளுக்கு உரிய கால நிர்ணய வேலை அளவீடு (Time & Motion Study) மேற்கொள்ளப்பட்டு, திருத்திய ஊரக விலைப் புள்ளி பட்டியலின்படி, பல்வேறு பணிகளுக்கு செய்ய வேண்டிய வேலையின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது.

**ஊரகப் பகுதிகள் இணைப்பு (Rural Connectivity)**

- தமிழகத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பல்வேறு பகுதிகளில் உள்ள சுகாதாரம், கல்வி, வேலை, சந்தை மையங்கள் மற்றும்

இதர சேவைகளை ஊரகப் பகுதியில் வசிக்கும் மக்கள் பெறத்தக்க வகையிலான இணைப்பினை ஏற்படுத்தும் பொருட்டு ஓரடுக்கு மெட்டல் சாலைகள் அமைக்கும் (WBM GR-II) பணிகள் ஊரக இணைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **2018–19** ஆம் நிதியாண்டில், **1500** கி.மீ. நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**உறிஞ்சுக் குழி (Soak Pit)**

- ஊரக பகுதிகளில், கழிவு நீரை மிகச் சிறப்பாக மேலாண்மை செய்திடவும், குடியிருப்பு பகுதிகளில் திரவ கழிவுகள் புகுவதை தடுத்திடவும், கழிவு / சாக்கடை நீரை ஒவ்வொரு வீட்டிலும் மேலாண்மை செய்திடல் மிகவும் அவசியமானதாகும். ஒவ்வொரு வீட்டிலும் உறிஞ்சுக் குழி அமைப்பதினால், தெருக்களில் கழிவு நீர் ஓடுவது தடுக்கப்படுவதுடன் நீர் சேமிப்பு அமைப்பாகவும் செயல்படுகிறது. **2018–19** ஆம் ஆண்டில், **25,500** சமுதாய உறிஞ்சு குழிகள் மற்றும் **1,75,000** தனி நபர் உறிஞ்சுக் குழிகள் அமைக்கும் பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**பள்ளி கட்டிடங்களுக்கு சுற்றுச் சுவர் / வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டுதல் (Compound Wall)**

- பள்ளி மாணவர்களை வெளி நபர்களிடமிருந்தும், விலங்குகளிடமிருந்தும் பாதுகாத்திடவும், பள்ளி சொத்துக்களை அழிவிலிருந்தும், வெள்ள அபாயங்களிலிருந்தும் பாதுகாத்திடவும், மாணவர்கள் கல்வி கற்று வளர்ந்திட பாதுகாப்பான சுற்றுச்சூழலை ஏற்படுத்தும் பொருட்டும், ஊரகப் பகுதிகளில் ஆரம்ப மற்றும் நடு நிலைப்பள்ளிக் கட்டடங்களுக்கு சுற்றுசுவர் / வெள்ளத்

தடுப்புச் சுவர் அமைத்து தர திட்டமிட்டு, **2018–19** ஆம் ஆண்டில் **200** கீ.மீ. நீளத்திற்கு ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு சுற்றுசுவர் / வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

### தடுப்பணைகள் கட்டுதல் (Check Dam)

- நிலத்தடி நீரினை அதிகரிக்கும் விதமாக அரசு பண்ணைக் குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை சீரமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள குளங்கள், ஊரணிகள் மற்றும் குட்டைகளை தூர் வாருதல் போன்ற பணிகளை செய்து வருகிறது. எனவே மழைநீரினை சேமிப்பதற்கும் மற்றும் நிலத்தடி நீர் அளவை மீள்நிரப்புவதற்கும் **2018–19** ஆம் ஆண்டில் இயற்கை வள மேலாண்மை பணிகளின் ஒரு பகுதியாக **10,000** தடுப்பணைகள் கட்டும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- பாறை, சிமெண்ட் கான்கீரிட் மற்றும் கம்பிவலைத் தடுப்பணை கட்டும் பணிகளை மேற்கொண்டு வாய்க்கால் வழியாக ஓடும் நீரோடைகளில் தண்ணீர் சேமித்து வைக்கப்படுகின்றன. வாய்க்கால், கால்வாய் ஆகியவற்றின் குறுக்கே கட்டப்படும் இந்த சிறிய தடுப்பணைகளானது மழைக் காலங்களில் ஓடும் நீரினை தடுத்து நிலத்தடி நீரினை செறிவூட்டச் செய்யும்.

### 2018–19 ஆம் ஆண்டின் சிறப்பு முயற்சிகள்

### உலர்களம் அமைத்தல்

- அரிசி, கோதுமை, மக்காச் சோளம், தானியங்கள் மற்றும் பிற சிறுதானியங்கள் போன்ற விவசாய உணவு பொருட்கள் அறுவடை செய்யும் பொழுது வைக்கோல் மற்றும் உமி போன்ற

பொருட்கள் கலந்திருக்கும். அறுவடை செய்யப்பட்ட பிறகு உணவு தானியங்கள் வைக்கோல் போன்ற பொருட்களிலிருந்து கதிரடித்தல் மூலம் பிரிக்கப்படும். பொதுவாக, விவசாய நிலங்களுக்கு அருகில் உள்ள திறந்த வெளி தரைப் பகுதியில் இக்கதிரடித்தல் பணியினை விவசாயிகள் மேற்கொள்வர். இதன் மூலம் விவசாய நிலங்களில் உள்ள சிறிய கற்கள் உணவு பொருட்களுடன் கலப்பதற்கு வாய்ப்புள்ளது. மேலும் விவசாயிகள், விளை பொருட்களுக்கு அதிக விலை பெறும் பொருட்டு உலரவும் வைப்பர். ஆனால் விவசாய நிலத்தின் ஈரப் பதத்தினாலும், கற்களினாலும் விளை பொருட்களின் தரம் குறைவதோடு அதற்கான விலையும் குறைகிறது. எனவே, கதிரடிப்பதற்கும் மற்றும் விளைப் பொருட்களை உலர வைப்பதற்கும் உலர்களம் மிகவும் பயனுள்ளதாகும். ஊரகப் பகுதிகளில் விவசாய நிலங்களுக்கு அருகில் உள்ள ஊராட்சி புறம்போக்கு பகுதிகளில் கட்டப்படும் உயர்ந்த சிமெண்ட் காங்கிரீட் தளங்களே உலர்களங்களாகும். மேலும் இத்தகைய தளங்கள் அறுவடை செய்த பயிர்களை உலர வைப்பதற்கும் பயன்படுகிறது. **2018–19** ஆம் ஆண்டில் **385** உலர் களங்கள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**அங்கன்வாடி குழந்தை நேய கழிப்பறைகள்**

- குழந்தைகளுக்கு திறந்த வெளியில் மலம் கழிப்பதினால் ஏற்படும் உடல் நலக் கோளாறுகள் குறித்து விழிப்புணர்வினையும், அதனை அவர்களின் மனதில் ஆழமாக பதிய வைக்க, ஆரம்ப பள்ளி முதலே அவர்களை கழிப்பறையை உபயோகிப்பதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.

பெரும்பாலும் பழைய அங்கன்வாடி மையங்களில் கழிப்பறை வசதிகள் இல்லை. எனவே **2018–19** ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்துடன் ஒருங்கிணைந்து, **3,708** பழைய அங்கன்வாடி மையங்களில், குழந்தை நேய கழிப்பறைகள் கட்டும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**கிராம சந்தைகள்**

- கிராம சந்தைகளானது ஊரக விவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு ஊரக விற்பனை சந்தைகளாக விளங்குகிறது. இவ்வூரகச் சந்தைகளானது சிறந்த விற்பனை வசதியையும், வருடம் முழுவதும் ஊரக ஏழை மக்கள் தங்கள் பொருட்களை விற்பனை செய்வதற்கும், மொத்த வியாபாரிகள், சில்லரை வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்களுக்கு உள்ளூர் ஊரக பொருட்களை விற்பனை செய்ய ஒரே தளமாக விளங்குவதால் அதன் மூலம் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கும் பயன்படுகிறது. **2018–19** ஆம் ஆண்டில் **50** ஊரக சந்தைகளை மேம்படுத்தும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**சிமெண்ட் காங்கிரீட் சாலைகள்**

- சிமெண்ட் காங்கிரீட் சாலைகள் என்பது அனைத்து பருவ நிலைகளுக்கும் ஏற்ற ஊரக இணைப்பு சாலைகளில் ஒன்றாகும். இச்சாலைகள் மழை காலங்களில் ஊரக பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு பாதுகாப்பாக செல்வதற்கும் மற்றும் பண்ணை விளை பொருட்கள் மற்றும் இதர உணவு

விளை பொருட்களை உலர வைப்பதற்கும் சிமெண்ட் காங்கிரீட் சாலைகள் உதவுகின்றன. 2018–19 ஆம் ஆண்டில் 300 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் காங்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பேவர் பிளாக் சாலைகள்**

- பேவர் பிளாக் சாலைகள் என்பது அனைத்து பருவ நிலைகளுக்கும் ஏற்ற ஊரக இணைப்பு சாலைகளில் ஒன்றாகும். இச்சாலைகள் மழை காலங்களில் ஊரக பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு பாதுகாப்பாக செல்ல ஏற்றதாகும். 2018–19 ஆம் ஆண்டில் 300 கிமீ நீளத்திற்கு பேவர் பிளாக் பதிக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**குறு பாலங்கள், சிறு பாலங்கள் மற்றும் தரைப்பாலங்கள் (குறுக்கு வடிகால் கட்டமைப்புகள்)**

- ஊரகப் பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படா வண்ணம், சாலையின் ஒருபுறமிருந்து மற்றொரு புறம் வெள்ள நீர் மற்றும் ஓடை நீரினை கடத்திட குறு பாலங்கள், சிறு பாலங்கள் மற்றும் தரைப் பாலங்கள் போன்ற வடிகால் கட்டமைப்புகள், பெரும்பங்கு வகிக்கின்றன. 2018–19 ஆம் ஆண்டில் 600 குறு பாலங்கள், 250 சிறிய பாலங்கள் மற்றும் 100 தரைபாலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**அசோலா பசுந் தீவனத்திற்கு உட்கட்டமைப்புகள் ஏற்படுத்துதல்**

- அசோலா என்பது பாசி போன்ற ஒருவகையான படர் செடியினமாகும். இதில் முக்கிய அமினோ அமிலங்கள், வைட்டமின்கள் (வைட்டமின்கள் ஏ, வைட்டமின்கள் பி12

மற்றும் பீட்டா கரோட்டீன்கள்), வளர்ச்சிக்கான புரதங்கள் மற்றும் கனிமங்கள் அதிக அளவில் நிறைந்துள்ளது. இது கால்நடைகளுக்கு சிறந்த கரிம உணவுப் பொருளாகவும் மற்றும் ஊட்டச்சத்திற்கு உறுதுணையாகவும் உள்ளது. இது பாலின் தரத்தினையும், அளவினையும் கூடுதலாக (15 முதல் 20 சதவிகிதம் வரை) பெற உதவுகிறது. விவசாயிகளின் நிலங்களில் அதிக உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திடாமல், இதனை விளைவிக்கலாம். மாட்டுச்சாணம் மற்றும் தண்ணீர் மட்டுமே அசோலா வளர்ப்பதற்கான வளர்ச்சி காரணிகளாகும். 2018–19 ஆம் ஆண்டில், 10,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அசோலா அலகுகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சாதனைகள்**

- 2018–19 ஆம் ஆண்டில் 25.77 கோடி மனித சக்தி நாட்கள், ரூ.5771.54 கோடி மொத்த செலவினத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

**கஜா புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களில் சிறப்பு நடவடிக்கைகள்**

- கஜா புயலினால் பாதிக்கப்பட்ட கடலூர், திண்டுக்கல், கரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர் மற்றும் மதுரை போன்ற 12 மாவட்டங்களை சேர்ந்த 133 வட்டாரங்களில் வாழும் ஊரக பகுதிகளைச் சேர்ந்த மக்களை துன்பம் மற்றும் துயரத்திலிருந்து மீட்டு அவர்களின் வாழ்வாதாரத்தினை காக்கும் பொருட்டு ஆண்டிற்கு ஒரு குடும்பத்திற்கு 100 வேலை நாட்களிலிருந்து 150 வேலை

நாட்களாக உயர்த்தி வழங்கப்பட்டது. மேலும், கஜா புயலினால் பாதிக்கப்பட்ட சிறு/குறு விவசாயிகளின் நிலங்களில், தென்னை மரங்களை நடுவதற்கான குழிகள் தோண்டுதல் மற்றும் அதனை நடுதல் போன்ற பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதல்**

- **2018–19** ஆம் நிதியாண்டில் **98.65** சதவிகிதம் ஊதியத் தொகையினை பதினைந்து நாட்களுக்குள் வழங்கியதன் மூலம் குறித்த காலத்திற்குள் ஊதியத்தினை வழங்குவதிலும் தேசிய அளவில் சிறந்த மாநிலமாக திகழ்கிறது.

**சிறந்த ஆளுமை முயற்சிகள்**

மத்திய அரசின் அறிவுரைகளின்படி, மாவட்ட அளவில் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் செயற்பொறியாளர் (ஊ.வ), அனைத்து உதவி இயக்குநர்கள் / மண்டல அலுவலர்கள் கொண்ட கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டு சிறந்த ஆளுமை முயற்சிகள், வேலை அடையாள அட்டையினை புதுப்பித்தல், ஊராட்சி அளவில் 7 பதிவேடுகள் பராமரித்தல், பணிக்கோப்பு மற்றும் மக்கள் தகவல் பலகை அமைத்தல் போன்ற சிறந்த ஆளுமை முயற்சிகள் சிறப்பான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அதே நேரத்தில், மாநில அளவில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, மாவட்ட அளவில் சிறந்த ஆளுமை முயற்சிகள் மாவட்ட அளவில் செயற்படுத்தப்படுவது கண்காணிக்கப்படுகிறது.

**வங்கிகள் மூலம் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதல் / மின்னணு நிதி மேலாண்மை மூலம் ஊதியம் வழங்குதல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பயனாளிகளுக்கு, **07.11.2016** முதல் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் நேரடியாக மத்திய அரசால் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் ஊதியத் தொகை வரவு வைக்கப்படுகிறது.

இதைப் போலவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் **01.04.2017** முதல் நிர்வாகச் செலவினம் மற்றும் பொருட்கூறு செலவினமும் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-PFMS) மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

**மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) முறையை செயற்படுத்துதல்**

- மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ் நாட்டில் மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) **2017**ஆம் ஆண்டிலிருந்து வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தொழிலாளர்களின் வங்கி கணக்குகளுடன் ஆதார் எண்களை இணைத்தல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது வங்கி கணக்கில் ஆதார் எண் அடிப்படையில் ஊதியம் வழங்கும் முறையில் (Aadhar Based Payment System) ஊதியத்தினை ஈடு செய்வதற்காக தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட வலைதளத்தில் அனைத்து மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது ஆதார் எண்களும் இணைக்கப்பட்டு வருகிறது. ஆதார் எண்களை

இணைப்பதன் மூலம் மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தகவல் தளம் சீராவதோடு தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் விரைவாகவும், வெளிப்படையாகவும் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படுகின்றது.

இதுவரை 2018–19 ஆம் ஆண்டில் மொத்தம் உள்ள 88.07 இலட்சம் செயற்பாட்டு தொழிலாளர்களில், 86.84 இலட்சம் (98.61%) தொழிலாளர்களின் ஆதார் எண்கள் இணைக்கப்பட்டு, ஆதாருடன் இணைந்த ஊதியம் செலுத்தும் முறையில் (Aadhar Based Payment System) ஊதியம் 71.85 இலட்சம் (81.58%) பயனாளிகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## சொத்துக்களுக்கு புவிக் குறியிடுதல் (Geo tagging)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், புவிக் குறியிடுதல் (**Geo tagging**) என்பது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்கள், புள்ளி விவரங்கள் மற்றும் தகவல்களை ஆய்வு செய்வதற்கு உதவுகின்றன. இதன் மூலம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் உருவாக்கப்பட்ட சொத்துக்களை வரைபடத்தில் காணலாம். இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (Indian Space Research Organisation) ஒரு அமைப்பான தேசிய தொலை உணர்வு மையம் (National Remote Sensing Corporation) மூலம் புவன் என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் NREGASoft என்ற இணையதளத்திலிருந்து சொத்து குறித்த விவரங்களை புவன் மென்பொருள் மூலம் அறியலாம். NREGASoft மற்றும் புவன்

மென்பொருளின் தனித்துவ சிறப்புகளை ஒருங்கிணைத்து, புவிசார் சொத்து மேலாண்மை கருவியாக உருவாக்கப்பட்டு அதற்கு 'ஜியோ நரேகா' (Geo MGNREGA) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

திட்டம் துவங்கப்பட்டது முதல் உருவாக்கப்பட்ட சொத்துக்களில் **21,91,690** சொத்துக்கள் புவிக்குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயலாக்கத்தில் மாநிலம் மற்றும் மாவட்டங்கள் பெற்ற தேசிய அளவிலான விருதுகள்:**

**2017–18** ஆம் ஆண்டில் மாநில அளவில் "குறித்த காலத்திற்குள் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதல் வகையில் சிறந்த செயல்பாட்டிற்காக (Timely Payment of Wages) அகில இந்திய அளவில் முதலிடமும், "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் உருவாக்கப்படும் சொத்துக்களுக்கு புவிக்குறியிடுதலில் சிறந்த முயற்சிகளுக்காக" (Geo – mgnrega – Geo tagging) அகில இந்திய அளவில் முதலிடமும் மற்றும் "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைத்து ஊதியம் செலுத்துதலில் சிறந்த செயல்பாட்டிற்காக" அகில இந்திய அளவில் இரண்டாமிடம் என மூன்று தேசிய விருதுகள், மத்திய அரசு, ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் **11.09.2018** அன்று தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டன.

மேலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தஞ்சாவூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு தேசிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.

## 2019–20 ஆம் ஆண்டின் மனித சக்தி நாட்கள் மதிப்பீடு செயலாக்க முயற்சிகள்

மனித சக்தி நாட்கள் மதிப்பீடு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் தயாரிக்கப்பட்டு கிராம சபையினால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. 2019–20 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் வரவு செலவு திட்டம் தொகுதி வாரியாக பகுத்தாய்வு செய்யப்பட்டு 2.10.2018 அன்று நடைபெற்ற கிராம சபை மற்றும் 25.10.2018 அன்று நடைபெற்ற சிறப்பு கிராம சபைகளின் மூலம் ஒப்புதல் பெறப்பட்டும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின்கீழ் 18.2.2019 புதுதில்லியில் நடைபெற்ற மத்திய அதிகாரக்குழு கூட்டத்தில் 2019–20 ஆண்டிற்கு 22 கோடி மனித சக்தி நாட்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## சமூகத் தணிக்கை

### வரையறை

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தணிக்கை விதிகள் 2011 பிரிவு 3(1)ன்படி சமூக தணிக்கையானது ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கிராம சபையால் மேற்கொள்ளப்படுகிறது. சமூக தணிக்கையானது சமூக தணிக்கை அலுவலர்களின் உதவியுடன் உள்ளூர் கிராம மக்களால் நடத்தப்படும் விரிவான தணிக்கையாகும். சமூக தணிக்கையானது வெளிப்படை தன்மையை உறுதிபடுத்தவும், சமூக பொறுப்பினை அதிகபடுத்தவும், தகவல் பரிமாற்றத்திற்கான கல்வி தகவல் தொடர்பு அமைப்பாகவும் செயல்படுகிறது. மேலும் திட்டமிடுதலிலும், பணிகள் தேர்வு செய்வதிலும், பணிகள் செயல்படுத்துவதிலும் பொது மக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்துகிறது.

**நோக்கம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை செம்மையாக செயல்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு, மத்திய மாநில அரசுகளின் வழிகாட்டுதலின் படி, ஊராட்சிகளிலுள்ள கிராம சபைகளால் சமூக தணிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் வழிவகை செய்கிறது.

**திட்ட செயலாக்கப் பகுதி**

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கத்தின் திட்ட செயலாக்கப்பகுதியானது அனைத்து ஊரகப்பகுதிகளை உள்ளடக்கிய 31 மாவட்டங்கள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 12,524 கிராம ஊராட்சிகள் ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருவட்டார் வட்டாரத்திற்குட்பட்ட ‘‘பாலமோர்’’ என்ற கிராம ஊராட்சியைத் தவிர மற்ற அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சமூக தணிக்கைப் பணி செயல்படுத்தப்படுகிறது. பாலமோர் கிராம ஊராட்சியானது முழுவதும் இரப்பர் தோட்டங்களால் சூழப்பட்டுள்ளதால் இக்கிராம ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

**சமூக தணிக்கை நிகழ்வுகள்**

சமூக தணிக்கை நிகழ்வுகளானது பின்வருமாறு 5 நாட்களுக்கு மேற்கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| நாள் 1: | (அ) வட்டார அளவிலான திட்ட செயலாக்கத்தினர், தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு கிராம ஊராட்சி அளவில் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்துதல்.<br>(ஆ) கிராம ஊராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட பதிவேடுகள்/ஆவணங்களை ஒப்பிட்டு சரிபார்த்தல்.<br>(இ) சமூகத் தணிக்கை குறித்து, குடியிருப்பு வாரியாக மக்களுக்கு விழிப்புணர்வு கூட்டம் மாலையில் நடத்துதல். |

| | |
|---|---|
| நாள் 2: | வசிப்பிடம் வாரியாக வேலை அட்டையினை வைத்திருக்கும் தொழிலாளர்களைத் தனித்தனியாகச் சந்தித்து வேலை அட்டையினை ஆவணங்களுடன் ஒப்பீடு செய்த பின்னர் பயனாளிகளிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று கலந்துரையாடல் பணி மேற்கொள்ளுதல். |
| நாள் 3: | கள ஆய்வு மற்றும் பணிகளின் கள அளவீடு மேற்கொள்ளுதல். |
| நாள் 4: | சமூகத் தணிக்கை அறிக்கை தயார் செய்தல். |
| நாள் 5: | சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்துதல். |

**பயிற்சி**

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம், சமூக தணிக்கையின் முக்கியத்துவம், அவசியம் மற்றும் நடைமுறை ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய பயிற்சியினை அளித்துள்ளது. **2017–18** மற்றும் **2018–19** ஆம் நிதியாண்டுகளில் **24,831** கிராம ஊராட்சி வள அலுவலர்களுக்கான **4** நாட்கள் சமூக தணிக்கை தொடர்பான உறைவிடப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**சமூக தணிக்கை செயல்பாடுகள்**

**2018–19** ஆம் நிதியாண்டின் முதல் சுழற்சியில் **12,523** கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை நிறைவு பெற்றுள்ளது மற்றும் இரண்டாவது சுழற்சியானது அனைத்து மாவட்டங்களிலும் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

**2019–20** ஆம் நிதியாண்டில் **12,523** கிராம ஊராட்சிகளில் **22** சுற்றுகளாக சமூக தணிக்கை மேற்கொள்ள விரிவான கால அட்டவணை தயார் செய்யப்பட்டுள்ளது.

**சமூக தணிக்கையின் தாக்கம்**

சமூக தணிக்கை திட்ட பயனாளிகளால் கிராம சபையின் மூலம் மேற்கொள்ளப்படுவதால் திட்ட பயனாளிகள் மற்றும் திட்டத்தை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் மிகபெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கைக்கான

சிறப்பு கிராம சபையானது, திட்ட செயல்பாட்டின் பொது கருத்து கேட்பாக இருப்பதால் இத்திட்டத்தில் செயல்படுபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பயன்களை அறிந்து கொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாக அமைகிறது. சிறப்பு கிராம சபைகளில் சமூக தணிக்கையினால் கண்டறியப்படும் பத்திகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுகிறது. சமூக தணிக்கையால் கிராம ஊராட்சியளவிலும், வட்டார அளவிலும் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பராமரிப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

## 4.2. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)

மத்திய அரசின் பங்களிப்பு திட்டமான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், **2016–17** ஆம் ஆண்டு முதல் சீரமைக்கப்பட்டு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாத, குடிசை வீடுகளில் மற்றும் மிகப்பழுதடைந்த வீடுகளில் வசிக்கும் ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய நிலையான வீடு கட்டிக் கொடுப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் **2011**ன் அடிப்படையில் கிராம சபை மூலம் பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர்.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் மொத்த ஒதுக்கீட்டில் **60** விழுக்காடு ஆதிதிராவிடர்கள் / பழங்குடியினர் வகுப்பினருக்கும், **40** விழுக்காடு இதர வகுப்பினருக்கும் (சிறுபான்மையின வகுப்பினர் உட்பட) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட இரு இனங்களில் **5** விழுக்காடானது, மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு

செய்யப்பட வேண்டும். ஒரு வீட்டின் கட்டடப் பரப்பளவு **269** சதுர அடி ஆகும்.

ஒரு வீட்டிற்கான மத்திய அரசின் அலகுத் தொகை ரூ.**1.20** இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி பங்கீடு **60:40** என்ற விகிதத்தில் உள்ளது (மத்திய அரசு ரூ.**72,000** மற்றும் மாநில அரசு ரூ.**48,000**). தமிழக அரசு, கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக, அலகுத் தொகையை விட ரூ.**50,000** கூடுதல் நிதியாக மாநில நிதியிலிருந்து வழங்குகிறது. எனவே தமிழ்நாட்டில் ஒரு வீட்டின் மொத்த அலகுத் தொகை ரூ.**1.70** இலட்சம் ஆகும்.

அலகுத் தொகையுடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் அறிவிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வீடு கட்டுவதற்காக **90** மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படுகிறது. (**90** x ரூ.**229** = ரூ.**20,610**)

மேலும், பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.**12,000** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.

இவை தவிர, பயனாளிகளுக்கு மான்ய விலையில் சிமெண்ட் மூட்டைகள் வழங்கப்படுகிறது. மேலும் இரும்பு கம்பிகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பயனாளிகளின் தேவைக்கேற்ப வழங்கப்படுகிறது, இப்பொருட்களுக்கான கிரையத் தொகை, பயனாளிகளுக்கு வழங்கப்படும் பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

**2015-16** ஆம் ஆண்டு முதல் பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை பொது நிதி மேலாண்மை

முறையின் (PFMS) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு ஆகியவை ஆவாஸ்சாப்ட் மற்றும் ஆவாஸ்ஆப் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இவ்விரண்டு தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள் இத்திட்டத்தினை ஒவ்வொரு நிலையிலும் செயல்படுத்துவதற்கான பயனுள்ள கண்காணிப்பு தொழில் நுட்பத்தை வழங்குகிறது.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011–ன் அடிப்படையில் கிராம சபை மூலம், பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர். ஆனால் பல தகுதி வாய்ந்த பயனாளிகள் சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011–ல் விடுபட்டுள்ளனர். தகுதியுள்ள விடுபட்ட பயனாளிகளை சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011–ல் சேர்த்திட மத்திய அரசின் அறிவுரைப்படி, மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, 8.28 இலட்சம் தகுதியுள்ள பயனாளிகள் கண்டறியப்பட்டு, பயனாளிகளின் பெயர் மற்றும் விவரங்கள் "ஆவாஸ்பளஸ்" மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் பயனாளிகளிடமிருந்து பெறப்படும் புகார்களை பரிசீலனை செய்து, பயனாளிகளின் பெயர்களை பயனாளிகள் பட்டியலில் சேர்க்கவும் / நீக்கவும் மற்றும் தீர்வு செய்யவும் ஒரு குறை தீர்க்கும் அமைப்பாக மேல்முறையீட்டுக் குழு மாவட்ட அளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் 2016–17 முதல் 2018–19 வரை, 3,27,552 வீடுகள், ரூ.3,210.01 கோடி மாநில அரசின் பங்குத் தொகையுடன் மொத்தம் ரூ.5,568.38 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

2019–20 ஆம் நிதியாண்டில், 2 இலட்சம் வீடுகள், ரூ.3,400 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளன.

## 4.3. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம்

1993 ஆம் ஆண்டு மத்திய அரசால் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது தொடங்கப்பட்டு, ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துவதில் உள்ள இடைவெளியினை நிரப்பிட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்திற்கான நிதியை 2011–12 ஆம் ஆண்டு முதல் ரூ.2 கோடியில் இருந்து ரூ.5 கோடியாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. தமிழ்நாட்டில், இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

**2018–19** ஆம் ஆண்டில், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ. **290** கோடி ஒதுக்கீட்டில் பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை – 4.2**

**நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 2018–19 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்**

| வ. எண் | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கட்டடங்கள் | 688 |
| 2. | சாலைகள் | 562 |
| 3. | குடிநீர் வழங்கல் | 287 |
| 4. | வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள் | 574 |
| 5. | இதர பணிகள் | 2,098 |
| **மொத்தம்** | | **4,209** |

## 4.4. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், **500–**க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இணைப்பு சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு அனைத்து பருவகாலங்களிலும் பயன்படுத்தத்தக்க வகையில் சாலை இணைப்பு வசதியினை ஏற்படுத்தித் தருவதற்காக **2000** ஆம் ஆண்டில், மத்திய அரசால் **100%** நிதி உதவியுடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், ஏற்கனவே உள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் வழிவகுக்கிறது.

**2015–16** ஆம் ஆண்டு முதல் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் **60%** மத்திய அரசு நிதி மற்றும் **40%** மாநில அரசு நிதி என்ற நிதிப் பங்களிப்பின் அடிப்படையில்

செயல்படுத்தப்படுகிறது. மேலும் ஒரு முக்கிய அம்சமாக, இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சாலைகளில், **5** ஆண்டு தொடர் பராமரிப்பு, மாநில அரசின் நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்– I**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்– **I** ன்கீழ், தமிழ்நாடு முழுமையான ஒதுக்கீட்டினை பெற்றுள்ளது. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்– **I** ன்கீழ் பகுதி **I** முதல் XI வரை, **16,364** கி.மீ. நீளமுள்ள **7,692** கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய சாலைகள், இதர மாவட்டச் சாலைகள் மற்றும் **98** பாலங்கள் ஆகியவை ரூ.**4,884** கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் மாநில அரசின் பங்கு தொகையான ரூ.**741.32** கோடியும் அடங்கும்.

**அட்டவணை – 4.3**

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–Iன் கீழ், எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்**

| வ.எண் | பகுதி | வருடம் | எடுத்துக் கொள்ளப்பட்டவை | | |
|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ.கோடியில்) |
| 1 | I | 2000-01 | 862 | 1442.12 | 152.91 |
| 2 | II | 2001-02 | 444 | 795.09 | 114.27 |
| 3 | III | 2003-04 | 491 | 1096.40 | 159.07 |
| 4 | IV | 2004-05 | 393 | 778.31 | 111.35 |
| 5 | V | 2005-06 | 365 | 799.59 | 170.84 |
| 6 | VI | 2006-07 | 810 | 2049.02 | 459.82 |
| 7 | VII | 2007-08 | 1581 | 3010.32 | 853.72 |
| 8 | VIII | 2012-13 | 1338 | 3089.06 | 1125.85 |
| 9 | IX | 2014-15 | 401 | 940.47 | 352.97 |
| 10 | X | 2016-17 | 602 | 1362.27 | 754.47 |
| 11 | XI | 2018-19 | 503 | 1001.57 | 628.84 |
| | | **மொத்தம்** | **7790** | **16364.22** | **4884.11** |

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி IX வரை அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் **2019–20** ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் – II**

ஊரக சந்தை மற்றும் வளர்ச்சி மையங்களுக்குச் செல்லும் பிரதான சாலையினை மேம்படுத்துவதன் மூலம், ஊரகச் சாலை தொகுப்பினை வலுப்படுத்தும் குறிக்கோளுடன், மத்திய அரசு **2013** ஆம் ஆண்டு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் II–ஐ அறிமுகப்படுத்தியது. தமிழ்நாடு, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-I ன்கீழ் வரையறுக்கப்பட்ட இலக்குகளை அடைந்ததை தொடர்ந்து, **2017** ஆம் ஆண்டில் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II ஐ மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் – II ன்கீழ், **2,940** கி.மீ. நீளமுள்ள, **860** ஊரகச் சாலைகளை மேம்பாடு செய்வதற்கும் மற்றும் **34** பாலங்கள் கட்டும் பணிகளுக்கும் ரூ.**1,434** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்கு தொகையான ரூ.**621.77** கோடியும் அடங்கும்.

**அட்டவணை – 4.4**

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–IIன் கீழ், எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்**

| வ. எண் | வருடம் | எடுத்துக் கொள்ளப்பட்டவை | | |
|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ.கோடியில்) |
| 1 | 2017-18 | 790 | 2653.58 | 1240.94 |
| 2 | 2018-19 | 104 | 286.84 | 192.80 |
| | **மொத்தம்** | **894** | **2940.42** | **1433.74** |

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் செயல்திறனுக்கான ஊக்கத் தொகை**

**2016–17** ஆம் ஆண்டு, வருடாந்திர இலக்குகளின் நிறைவேற்றியதன் அடிப்படையில், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் செயல் திறனுக்கான ஊக்கத்தொகையினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. வருடாந்திர இலக்கு எல்லை முடிக்கப்பட வேண்டிய சாலைகளின் நீளம், இணைக்கப்பட வேண்டிய குக்கிராமங்களின் எண்ணிக்கை, பராமரிப்பு கொள்கை உருவாக்கம், தரக் கட்டுப்பாட்டின் நிலை மற்றும் சாலைகளின் **5** வருட தொடர் பராமரிப்பு மற்றும் அதற்கு பிந்தைய காலமுறை பராமரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் சிறந்த செயல்பாட்டின் அடிப்படையில், நமது மாநிலத்திற்கு **2016–17** மற்றும் **2017–18** ஆம் ஆண்டிற்கு முறையே ரூ.**55.58** கோடி மற்றும் ரூ.**45.32** கோடி நிதி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறையின்படி, ஊக்கத்தொகை நிதி, **5** ஆண்டு காலம் தொடர் பராமரிப்பு முடிவுற்ற பிரதம மந்திரி கிராம சாலைகளின், கால முறை பராமரிப்புப் பணிக்காக பயன்படுத்தப்படுகிறது. இப்பணிகளுக்கு மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ. **67.26** கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை – 4.5
## பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் செயல்திறன் ஊக்கத் தொகை விவரம்

| வ. எண் | வருடம் | ஊக்கத் தொகை மதிப்பு (ரூ.கோடியில்) | | | எடுக்கப்பட்ட பணிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | | மத்திய அரசு | மாநில அரசு | மொத்தம் | சாலைகள் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) |
| 1 | 2016-17 | 55.58 | 37.05 | 92.63 | 561 | 959 |
| 2 | 2017-18 | 45.32 | 30.21 | 75.53 | 443 | 731 |
| | **மொத்தம்** | **100.90** | **67.26** | **168.16** | **1004** | **1690** |

இது போன்று, **2018–19**–ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு, ரூ.**30.14** கோடி செயல்திறனுக்கான ஊக்கத் தொகையாக அனுமதி அளித்துள்ளது. இதற்கு நிகரான மாநில பங்களிப்பாக ரூ.**20.09** கோடி, அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

இதுவரை, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து ரூ.**131.04** கோடி செயல்திறன் ஊக்கத் தொகையாக நமது மாநிலம் பெற்றுள்ளது.

**இணைப்புச் சாலை வசதி இல்லாத குக்கிராமங்கள்**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், **2000**– ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட பொழுது, தமிழ்நாட்டில் **500**–க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட இணைப்புசாலை வசதி இல்லாத **2402** குக்கிராமங்கள் இருந்தன. இவற்றில் **2,386** குக்கிராமங்களுக்கு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் மற்றும் இதர மாநில திட்டங்களின் மூலம் இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர, வனத் துறை அனுமதி பெற வேண்டிய நிலம் மற்றும் பட்டா நில பிரச்சனை உள்ள **16** இணைக்கப்படாத குக்கிராமங்கள் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் முன்மொழியப்படவில்லை.

அனைத்து குக்கிராமங்களுக்கும், 100% இணைப்பு வசதியினை உறுதி செய்யும் விதத்தில், **2018–19–** ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், "அனைத்து ஊரக குடியிருப்புகளுக்கும் சாலை இணைப்பு மற்றும் இதர அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற சாலைகளுடன் இதுவரை இணைக்கப்படாத **500–**க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட **16** பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு **2018–19** ஆம் ஆண்டில் சாலை இணைப்புகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்", என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை, **9** குக்கிராமங்களுக்கு இதர மாநில திட்டங்களின் மூலம் இணைப்புசாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள **7** குக்கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி வழங்க வனத்துறையின் அனுமதியினை பெற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.5 தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்)

''தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)'', **2014** ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் **2** ஆம் நாள் மத்திய அரசால் தொடங்கப்பட்டு, அனைவருக்குமான சுகாதார வசதிகள் முழுமையாக அடைவதன் மூலம், மகாத்மா காந்தி அவர்களின் **150–**வது பிறந்த நாளில் அவருக்குப் பொருத்தமான அஞ்சலி செலுத்தும் வகையில், **2019** ஆம் ஆண்டிற்குள்ளாக 'தூய்மை பாரதம்' என்ற நிலையை எய்த அனைத்து முயற்சிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

**திட்டத்தின் நோக்கங்கள்**

**தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:**

அ) திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்து, தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தி, ஊரகப் பகுதிகளிலுள்ள மக்களின் பொதுவான வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றம் அடையச் செய்தல்.

ஆ) 2.10.2019க்குள் தூய்மை பாரதம் என்ற இலக்கினை எய்த, ஊரகப் பகுதிகளில் முழு அளவிலான சுகாதார செயல்பாடுகளை முடுக்கி விடுதல்.

இ) சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வு மூலம் ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்களுக்கிடையே ஆர்வத்தை தூண்டி, சுகாதார வசதிகள் மற்றும் நிலையான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்திட செய்தல். நிலையான சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான வகையில், சிக்கனமான மற்றும் பொருத்தமான தொழில் நுட்பத்தை ஊக்குவித்தல்.

ஈ) ஊரகப் பகுதியில் ஒட்டுமொத்த சுகாதாரத்தினை ஏற்படுத்த அறிவியல் பூர்வமான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை முறைகளை, தேவையான இடங்களில் சமூகத்தால் நிர்வகிக்கப்படும் வகையில் ஏற்படுத்துதல்.

**தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கூறுகள்:**

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமூக சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவை தூய்மை பாரத இயக்கத் (ஊரகம்) திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

**அ) தனி நபர் இல்லக் கழிப்பறை**

முழுமையாக முடிக்கப்பட்ட தனி நபர் இல்ல சுகாதார கழிப்பறையானது, அடித்தள கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அனைத்து ஊரக குடும்பங்களும் கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்ட தலா ரூ. 12,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்த தொகை 2015–16 ஆம் ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குத் தொகையினை 60:40 என்ற விகிதத்தில் அதாவது மத்திய அரசு ரூ.7,200/– மற்றும் மாநில அரசு ரூ. 4,800/– ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தூய்மை பாரத இயக்கம் (ஊரககம்)–ன் கீழ் சுகாதாரம் அடைந்த நிலை குறித்த விவரங்கள் ஏற்கெனவே, முழு சுகாதார தமிழகம் தலைப்பின்கீழ் 3.9.2–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**(ஆ) சமூக சுகாதார வளாகங்கள்**

போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள், குளியலறைகள், துணி துவைக்கும் மேடைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமூக சுகாதார வளாகங்கள், கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் எளிதில் அணுகக் கூடிய இடத்தில் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு சமூக சுகாதார வளாகம் அமைப்பதற்கு நிதி உதவி அதிகபட்சமாக

ரூ. 2 லட்சம் வரை, மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சமுதாய பங்குத் தொகை 60:30:10 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

### (இ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை

திட மற்றும் திரவ கழிவுக் மேலாண்மை இத்திட்டத்தின் ஒரு கூறாகும். தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு கிராம ஊராட்சியின் மொத்த தனி நபர் இல்லங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கணக்கிடப்படும்.

## 4.6. தேசிய ரூர்பன் மிஷன்

கிராமத் தொகுப்புகளை நகர்ப்புறங்களுக்கு இணையான வளர்ச்சி உடையதாக ஏற்படுத்த **"தேசிய ரூர்பன் மிஷன்"** திட்டம் மத்திய அரசால் **16.09.2015** அன்று துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தி சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி சரியான திட்ட வடிவமைப்புடன் கூடிய **"ரூர்பன் தொகுப்பினை"** உருவாக்குவதாகும்.

### ரூர்பன் தொகுப்பினை தேர்வு செய்வதற்கான வழிமுறைகள்

தேசிய ரூர்பன் மிஷன் வழிகாட்டுதலின்படி **"ரூர்பன் தொகுப்பு"** என்பது பூகோள அடிப்படையில் தொடர்ச்சியான நிலப்பரப்பில் உள்ள ஊராட்சிகளில் 25,000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளின் தொகுப்பாகும்.

தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்தின்படி பழங்குடியினர் தொகுப்பு மற்றும் பழங்குடியினர் அல்லாத தொகுப்பு என இரண்டு பிரிவுகளில் ரூர்பன் தொகுப்புகள் உள்ளன. தமிழ்நாட்டிற்கு

பழங்குடியினர் அல்லாத தொகுப்புகளை தேர்வு செய்ய புதுடெல்லி, மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் கீழ்க்கண்ட அளவுகோலின் படி ரூர்பன் தொகுப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

| | முக்கியத்துவம் |
|---|---|
| • 10 ஆண்டுகளில் ஊரக மக்கள் தொகை வளர்ச்சி<br>• நிலங்களின் மதிப்பு உயர்வு<br>• 10 ஆண்டுகளில் விவசாயம் சாராத பணிகளில் மக்களின் பங்களிப்பு<br>• மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களின் சேர்க்கை சதவீதம் | **80 சதவீதம்** |
| • பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் (PMJDY) வங்கி கணக்குகள் துவங்கப்பட்டுள்ள குடும்பங்களின் சதவீதம்<br>• தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) திட்டத்தின் செயல்பாடு | **20 சதவீதம்** |

அதன்படி மத்திய அரசு மூன்று கட்டங்களாக கீழ்க்கண்ட 11 தொகுப்புகளை (Cluster) உருவாக்கிட அனுமதி வழங்கியுள்ளது.

| **வ.எ.** | **மாவட்டத்தின் பெயர்** | **தொகுப்பின் பெயர்** | **கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| **நிலை – I (2016-2019)** | | | |
| 1 | திருவள்ளூர் | குத்தம்பாக்கம் | 11 |
| 2 | சிவகங்கை | வாணியன்குடி | 7 |
| 3 | திருப்பூர் | வேலாயுதம்பாளையம் | 6 |
| 4 | கோயம்புத்தூர் | மதுக்கரை | 9 |
| 5 | திருநெல்வேலி | சுத்தமல்லி | 14 |
| **மொத்தம்** | | | **47** |

| வ.எ. | மாவட்டத்தின் பெயர் | தொகுப்பின் பெயர் | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிலை – II (2017-2020) | | | |
| 1 | காஞ்சிபுரம் | சிங்கபெருமாள் கோவில் | 7 |
| 2 | மதுரை | கோவில் பாப்பாக்குடி | 16 |
| 3 | தஞ்சாவூர் | திருமலை சமுத்திரம் | 9 |
| மொத்தம் | | | 32 |
| நிலை – III (2018-2021) | | | |
| 1 | கன்னியாகுமரி | சடையமங்களம் | 5 |
| 2 | தேனி | சீலயம்பட்டி | 7 |
| 3 | கிருஷ்ணகிரி | அலசபள்ளி பட்ரவபள்ளி | 7 |
| மொத்தம் | | | 19 |

## நிதி செயல்பாடு

ஒரு தொகுப்பிற்கு தேவையான நிதி, மாநில மற்றும் மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளவும், மீதமுள்ள பணிகளை நிறைவேற்றிட இடை நிரவல் நிரப்பு நிதியினை மத்திய அரசு வழங்குகிறது. இடை நிரவல் நிரப்பு நிதி திட்ட மதிப்பீடு செலவில் 30 சதவீதம் அல்லது ரூபாய் 30 கோடி இவற்றில் எது குறைவோ அத்தொகை ஒவ்வொரு தொகுப்பிற்கும் வழங்கப்படுகிறது.

தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்திற்கான இடைநிரவல் நிரப்பு நிதி (Critical Gap Fund) பகிர்வானது மத்திய அரசின் பங்கு 60 சதவீதம் மற்றும் மாநில அரசின் பங்கு 40 சதவீதம் என்ற விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

## அட்டவணை – 4.6

### தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடைநிரவல் நிரப்பு நிதி

**(ரூபாய் கோடியில்)**

| வ. எ. | நிலை | திட்ட காலம் | தொகுப்புகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|---|
| 1 | நிலை – I | 2016–2019 | 5 | 150.00 |
| 2 | நிலை – II | 2017–2020 | 3 | 90.00 |
| 3 | நிலை – III | 2018–2021 | 3 | 90.00 |
| மொத்தம் | | | 11 | 330.00 |

மத்திய, மாநில அரசு திட்டங்களின் ஒருங்கிணைப்பு நிதி மற்றும் இடைநிரவல் நிரப்பு நிதியின் மூலம் பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி, வேளாண்மை தொடர்பான திட்டப் பணிகள், கல்வி, சுகாதாரம், குடிநீர், திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை, கிராம தெருக்கள் மற்றும் வடிகால், தெரு விளக்கு, சாலை வசதிகள், போக்குவரத்து, சமையல் எரிவாயு இணைப்பு, கணினி எழுத்தறிவு மற்றும் மக்கள் சேவை மையம் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

ஒருங்கிணைந்த தொகுப்பு செயல்திட்டம் (ICAP) மற்றும் விரிவான செயல்திட்ட அறிக்கை ஆகியன ரூர்பன்சாஃப்ட் இணைய தளத்தில் பதியப்படுகின்றன. மத்திய அரசின் அறிவுறுத்தலுக்கிணங்க, ரூர்பன்சாஃப்ட்–ல் பொது நிதி மேலாண்மை அமைப்பின் (PFMS) செலவினத் தொகுப்பு முறையைப் பயன்படுத்தி நிதிச் செலவினம் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 4.7. தேசிய கிராம சுயராஜ்ய திட்டம் (RGSA)

ஊராட்சி நிறுவனங்களின் திறனை வலுப்படுத்தவும் ஊரக உள்ளாட்சி நிர்வாகம் உள்ளூர் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கவும் இந்திய அரசானது சீரமைத்த தேசிய கிராம சுயராஜ்ய திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. மேலும் மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப உதவியுடன் உள்ளூர் வளங்களை திறமையாக பயன்படுத்தி நீடித்த, நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய உள்ளூர் பிரச்சனைகளுக்கு தீர்வுகள் ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) 2030க்குள் அடைவதற்கு ஊராட்சிகள் ஒரு முக்கிய அங்கமாக வகிக்கின்றன.

**நோக்கங்கள்**

- நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய ஊராட்சி நிறுவனங்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்துதல்
- அனைவரையும் உள்ளடக்கிய உள்ளாட்சி நிர்வாகத்தை அளித்திடவும், உள்ளூர் வளங்களை தேவையான அளவு பயன்படுத்தி மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைந்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்
- கூடுதல் வருவாய் ஆதாரங்களை திரட்டும் வண்ணம் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்
- ஊராட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்களிப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையுடன் செயல்பட கிராம சபைகளை வலுப்படுத்துதல்

- ஊராட்சிகளின் திறன் மேம்பாடு மற்றும் அதனை வழி நடத்துவதற்காக கல்வி மற்றும் சீர்மிகு நிறுவனங்களை பயன்படுத்துதல்
- ஊராட்சி நிறுவனங்களின் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு நிலைகளில் நிறுவனங்களை வலுப்படுத்துதல்
- நிர்வாக திறன் மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் வண்ணம் ஊராட்சிகளில் மின் ஆளுமை மற்றும் இதர தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல்
- திறம்பட செயல்படும் ஊராட்சிகளை அடையாளம் கண்டு ஊக்குவித்தல்.

**நிதி முறை**

தேசிய கிராம சுயராஜ்ய திட்டமானது (RGSA) மத்திய மற்றும் மாநில அரசுகள் **60:40** என்ற நிதி விகிதாச்சார முறையில் செயல்படுத்தப்படுகிறது. இந்திய அரசானது பயிற்சி, பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளம், தொலைதூரக் கல்வி, புதுமையான முயற்சிகள், ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள், நிர்வாகம் மற்றும் நிதி தகவல் பகுப்பாய்வு மற்றும் திட்டப் பிரிவு, ஊராட்சி கட்டிடம் மற்றும் சமுதாய கூடம், ஊராட்சி மின்னணு செயலாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்படுத்துதலுக்கு திட்ட அடிப்படையில் உதவிகள், தகவல் கல்வி மற்றும் தொடர்பு **(2%)** மற்றும் திட்ட மேலாண்மை **(5%)** ஆகியவைகளுக்கு நிதி அளிக்கிறது.

**2018–19** ஆம் ஆண்டிற்கு தேசிய கிராம சுயராஜ்ய திட்டம் (RGSA) திட்டத்திற்கு அரசு ரூ.**96** கோடி நிதி வழங்கியுள்ளது.

இதில் மத்திய அரசு பங்கு ரூ.57.60 கோடியும், மாநில அரசு பங்கு 38.40 கோடியும் அடங்கும்.

மேலும் தேசிய கிராம சுயராஜ்ய திட்டத்தின் (RGSA) கீழ் 2019–20ஆண்டு வருடாந்திர செயல்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ.150.17 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

## 4.8. நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY)

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 11.10.2014ல் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் www.saanjhi.gov.in வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, செயல்படுத்தி மாதிரி கிராமங்களாக மாற்றி அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப்பகுதிகளில், 3000 முதல் 5000 வரை மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சிகளையும் மலைப்பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில் மக்கள் தொகை 1000 முதல் 3000 வரையும் உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள் தொகை கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே அளவுக்கு மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தனது (அ) தனது மனைவியின் /

கணவரின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய ஒரு கிராம ஊராட்சியை உடனடியாகவும் மற்ற இரண்டு கிராம ஊராட்சிகளை பின்னரும் தெரிவு செய்ய வேண்டும். முக்கியமாக, 2019 மார்ச் மாதத்திற்குள் மூன்று மாதிரி கிராமங்களை உருவாக்க வேண்டும், அதில் ஒன்று 2016க்குள் உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறாக 2024–க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

அரசு தலைமை செயலாளரின் தலைமையிலான உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அரசாணை நிலை எண்.23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி 2) துறை நாள் 13.02.2015ன்படி அமைக்கப்பட்டு திட்ட செயல்பாடுகளை கண்காணித்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் பல்வேறு துறைகளில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு என தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. மேலும், புதிய உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம் தொடர்புடைய திட்டங்களும் அனுமதிக்கப்படவில்லை. அனைத்து வளங்களும் ஒரே இலக்கினை நோக்கி ஒருங்கிணைந்த வகையில் அதிகபட்ச பயன்களை தரும் வகையில் உபயோகிக்கப்பட வேண்டும். மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் தொடர்புடைய அமைச்சகம், மத்திய அரசுத் துறைகள் / மத்திய அரசு நிதிப் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாதிரி கிராங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளில் தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் அதிகபட்ச பலன்களை அடைய மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும்.

## 4.9. புதிய தேசிய கரிமவாயு மற்றும் உயிர் உர மேலாண்மைத் திட்டம் (NNBOMP)

மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டமான, புதிய தேசிய கரிமவாயு மற்றும் உயிர் உர மேலாண்மைத் திட்டத்தின் நோக்கம், ஊரகப் பகுதிகளில் இயற்கைக் கழிவுகளைத் திறம்பட பயன்படுத்தி, புதுப்பிக்கவல்ல எரிசக்தியாக மாற்றம் செய்வதே ஆகும்.

இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசு வகுத்துள்ள முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு –

i) ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள இல்லங்களில் இயற்கை கழிவுகளை மாசற்ற எரிபொருளாக உருவாக்கிட, முக்கியமாக சமையல் செய்வதற்கு கரிமவாயு எரி கலன்கள் அமைத்தல்.

ii) ஊரக பகுதிகளில் உள்ள மகளிர், காடுகளுக்கு சென்று எதிர்கொள்ளும் கடினமான சுமையை குறைத்து சமூக நன்மைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

iii) கிராமப்புறங்களில் சுகாதாரத்தை மேம்படுத்திட கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்கள் அமைத்தல்.

iv) மேம்படுத்தப்பட்ட உயிர் செரிமானம் மூலம் (திட திரவ நிலையில் மற்றும் உலர்த்தப்பட்ட) இரசாயன உரங்களை செறிவூட்டல் / அல்லது அவற்றுக்கு இணையாக இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் அளவினை குறைத்தல் / உயிர் செரிமானக் குழம்பினை செறிவூட்டும் அலகான மண்புழு உர அலகுகளுடன் இணைத்தல்.

v) திட்ட குழுவின் ஒருங்கிணைந்த ஆற்றல் கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு சமைப்பதற்கான உயிர்சக்தி ஆற்றல் தேவைகளை பூர்த்தி செய்தல்.

இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## அட்டவணை – 4.7

## மானியக் கூறுகள் விவரம்

| வ. எண் | பிரிவுகள் | தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சமையல் எரிவாயு கலன்கள் (NNBOMP) அமைப்பதற்கான மானிய விவரம் (ரூபாயில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 கன அடி | 2–6 கன அடி | 8–10 கன அடி | 15 கன அடி | 20–25 கன அடி |
| 1 | பொது பிரிவு | 7,500 | 12,000 | 16,000 | 20,000 | 25,000 |
| 2 | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் | 10,000 | 13,000 | 18,000 | 21,000 | 28,000 |
| 3 | கால்நடை கழிவுகள் மற்றும் தனிநபர் வீடுகளில் உள்ள கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்களுக்கு கூடுதல் மானியம் –– ரூ. 1600/– | | | | இல்லை | இல்லை |
| 4 | பணி கட்டணம் (Turn key Cost) | ஒரு கலனுக்கு ரூ. 2,500/– வீதம் | | | | |

2019 –20 ஆம் நிதி ஆண்டில் 2000 கரிமவாயுக் கலன்கள் அமைத்திட செயல் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# 5. பணியமைப்பு

## 5.1. அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையானது மாநில நிர்வாகத்தில் ஒரு முக்கியமான துறையாக விளங்குவதோடு, மத்திய மற்றும் மாநில அரசு நிதிகளின் மூலம் ஊரக கட்டமைப்பு, அடிப்படை வசதிகள் பராமரிப்பு, இணைப்பு சாலைகள், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் வாழ்வாதாரத்தை உருவாக்குதல், ஊராட்சி நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகளை அர்ப்பணிப்போடு செயல்படுத்துகிறது. மத்திய நிதி உதவியுடன் கூடிய மாநில நிதித் திட்டங்கள் உள்ளிட்ட இத்தகைய பணிகள் இத்துறையின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களால் திட்டமிட்டு, செயல்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

**அட்டவணை 5.1**
**வகைவாரியான பணியாளர்கள் விபரம்**
**அரசுப் பணியாளர்கள் அரசிதழ் பதிவு பெற்றவர்கள்**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் | 19 | ரூ..123400-216300 |
| 2. | இணை இயக்குநர் | 84 | ரூ.61900-196700 |
| 3. | உதவி இயக்குநர் | 406 | ரூ.56100-177500 |
| 4. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1067 | ரூ.37700-119500 |
| மொத்தம் | | **1576** | |

தமிழக அரசு போதுமான அளவிலான பணியிடங்களுக்கு அங்கீகாரம் வழங்கி அலுவலர்களின் உரிமைகள், பதவி உயர்வு உள்ளிட்ட பயன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்துள்ளது.

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 19 கூடுதல் இயக்குநர்களும், அவற்றில் இதர துறைகளில் 2 கூடுதல் இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- இணை இயக்குநர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 84 இணை இயக்குநர்களும், அவற்றில் இதர துறைகளில் 7 இணை இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- உதவி இயக்குநர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 406 உதவி இயக்குநர்களும், அவற்றில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 2 உதவி இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

500 ஊராட்சிகளுக்கு மேல் உள்ள மாவட்டங்களான திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கூடுதலாக உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அதில் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

## 5.2. பொறியியல் பணியமைப்பு

ஊரக உள்கட்டமைப்பு, பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கான பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பொறியியல் பிரிவில் மொத்தம் 5279 பொறியியல் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

## அட்டவணை 5.2.

### வகைவாரியாக பொறியியல் பணியாளர்கள் விவரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கண்காணிப்பு பொறியாளர் | 3 | ரூ..123100-215900 (நிலை 28) |
| 2. | செயற்பொறியாளர் | 45 | ரூ.61900-196700 (நிலை 26) |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 189 | ரூ.59300-187700 (நிலை 25) |
| 4. | உதவிப் பொறியாளர் | 939 | ரூ.56100-177500 (நிலை 22) |
| 5. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 34 | ரூ.37700-119500 (நிலை 20) |
| 6. | இளநிலைப் பொறியாளர் | 317 | ரூ.35900 – 113500 (நிலை 13) |
| 7. | பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் | 2605 | ரூ.35400 – 112400 (நிலை 11) |
| 8. | சாலை ஆய்வாளர் | 1147 | ரூ.19500-62000 (நிலை 8) |
| மொத்தம் | | **5279** | |

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 45 செயற்பொறியாளர்களும் இதர துறைகளில் 7 செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- உதவி செயற்பொறியாளர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 189 உதவி செயற்பொறியாளர்களும், அவற்றில் மாற்றுப்பணியில் இதர துறைகளில் 11 உதவி செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

- தொழில்நுட்ப துறையில் பல்வேறு பிரிவுகளில் 939 உதவிப் பொறியாளர்களும், 317 இளநிலைப் பொறியாளர்களும், 34 முதுநிலை வரைதொழில் அலுவலர்களும், 2,605 பணிப்பார்வையாளர்கள் / இளநிலை வரைதொழில் அலுவலர்களும் உள்ளனர். உதவிப் பொறியாளர் நிலையில் பணிபுரியும் **939** பணியிடங்களில், மாற்றுப்பணியில் இதர துறைகளில் **05** உதவிப்பொறியாளர் பணியிடங்கள் உள்ளன. அதே போல், இளநிலைப் பொறியாளர் நிலையில் பணிபுரியும் **317** பணியிடங்களில், மாற்றுப்பணியில் இதர துறைகளில் **06** இளநிலைப் பொறியாளர் பணியிடங்கள் உள்ளன. மேலும், அரசாணை (நிலை) எண். 49 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (இ3) துறை நாள் 31.03.2015ல் சாலை ஆய்வாளர் நிலை-1 மற்றும் சாலை ஆய்வாளர் நிலை-2 ஆகியவற்றை ஒருங்கிணைத்து சாலை ஆய்வாளர் என ஆணையிடப்பட்டு, 1147 சாலை ஆய்வாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## 5.3. முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்பு திட்டங்கள் நிறைவேற்றல் துறை, தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், மாநில திட்டக் குழு, கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, மின் வாரியம், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மோனோ ரயில் திட்டம், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும்

மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக் கழகம் (TANUVAS) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), சென்னை பெருநகர வளர்ச்சி கழகம் (CMDA), பேரூராட்சிகள் இயக்ககம், தேசிய மாநில நலவாழ்வு சங்கம் (NRHM), தேசிய ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு முகமை (NRIDA), சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (IFAD assisted PTSLP), இந்து சமய அறநிலையத் துறை (HR & CE), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கழகம் போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு இதர துறைகளில் பணிபுரிவதன் மூலம் பெறப்படும் அனுபவங்களை கொண்டு தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், பொது மக்களுக்கு சேவை புரிந்திடவும் உறுதுணையாக உள்ளது.

## 5.4. அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அடிப்படை விதிகள், தமிழ்நாடு அமைச்சுப்பணி மற்றும் சார்நிலை பணி விதிகளுக்குட்பட்டு வரும் பணியாளர்களின் பணியமைப்பு, அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனுடன் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பணியாளர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் விபரம் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் அவற்றின் ஊதியக்கட்டு விகிதம் ஆகியவை கீழே அட்டவணையிடப்பட்டுள்ளன.

## அட்டவணை – 5.3
## அரசிதழ் பதிவுபெறா பணியாளர்களின் விபரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| அ) அரசுப் பணியாளர்கள் | | | |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 3938 | ரூ.36900–116600 |
| 2 | உதவியாளர் | 5563 | ரூ.20600–65500 |
| 3 | இளநிலை உதவியாளர் | 3137 | ரூ.19500–62000 |
| 4 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 182 | ரூ.20600–65500 |
| 5 | தட்டச்சர் | 1042 | ரூ.19500–62000 |
| 6 | ஓட்டுநர் | 899 | ரூ.19500–62000 |
| 7 | பதிவுரு எழுத்தர் | 137 | ரூ.15900–50400 |
| 8 | அலுவலக உதவியாளர் | 716 | ரூ.15700–50000 |
| 9 | இரவுக் காவலர் | 128 | ரூ.15700–50000 |
| 10 | மசால்ஜி | 14 | ரூ.15700–50000 |
| உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம் | | | |
| ஆ)ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் விவரம் | | | |
| 1 | ஓட்டுநர் | 770 | ரூ.19500–62000 |
| 2 | பதிவுரு எழுத்தர் | 387 | ரூ.15900–50400 |
| 3 | அலுவலக உதவியாளர் | 1521 | ரூ.15700–50000 |
| 4 | இரவுக் காவலர் | 377 | ரூ.15700–50000 |
| 5 | மசால்ஜி | 9 | ரூ.15700–50000 |
| இ)கிராம ஊராட்சிப் பணியாளர்கள் | | | |
| 1 | ஊராட்சி செயலர் | 12,524 | ரூ.7700–24200 |
| 2 | துப்புரவு பணியாளர் | | |
| | சிறப்பு காலமுறை ஊதியம் | 9,896 | ரூ.4100–12500 |
| | தொகுப்பூதியம் | 16,508 | ரூ.2600/– தொகுப்பு ஊதியம் |
| 3 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 40,419 | ரூ.2600/– தொகுப்பு ஊதியம் |

### 1) காலிப் பணியிடங்களை நிரப்புதல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018–2019ம் ஆண்டில், 224 இளநிலை உதவியாளர்கள், 87 தட்டச்சர்கள் மற்றும் 26 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகிய காலிப்பணியிடங்கள் நேரடியாக நிரப்பப்பட்டுள்ளன. அடிப்படை பணியிட நிலைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களைப்

பொறுத்தவரையில், வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் நேரடியாக நிரப்பப்பட்டுள்ளன. அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / இரவுக் காவலர் மற்றும் ஊராட்சி செயலர்கள் ஆகியோருக்கு முறையே 10% மற்றும் 20% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 2018–19 ம் ஆண்டில் அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / இரவுக் காவலராக பணியாற்றிய 54 நபர்கள் 10% இட ஒதுக்கீட்டின் கீழும், 227 ஊராட்சி செயலர்கள் 20% இட ஒதுக்கீட்டின் கீழும் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். இது தவிர, ஊராட்சி செயலர் காலி பணியிடங்களை நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் நாளிதழ் விளம்பரம் மூலமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு நாளது வரை 494 ஊராட்சி செயலர் காலிப் பணியிடங்கள் நிரப்பட்டுள்ளன.

இவற்றுடன் 2018–2019 ஆம் ஆண்டில், 515 தட்டச்சர்கள்/இளநிலைஉதவியாளர்கள் உதவியாளர்கள் ஆகவும், 500 உதவியாளர்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும் மற்றும் 250 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டு பணிநிலை உயர்த்தப்பட்டுள்ளனர்.

**2) கருணை அடிப்படை பணி நியமனம்**

பணியிடைக் காலமான அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு தெரிவித்திடும் வண்ணம் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் தனியர்களது கல்வித்தகுதிக்கேற்ப இரவுக் காவலர் / அலுவலக

உதவியாளர் / இளநிலை உதவியாளர் ஆகிய நிலைகளில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2016–17 ஆம் ஆண்டு முதல் பணியிடைக் காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு இணையாக பணியிடைக்காலமான ஊராட்சி செயலர்களின் வாரிசுதாரர்களுக்கும் அவர்களது கல்வித் தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கிட விரிவுபடுத்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து பணியிடைக்காலமான அரசு ஊழியர்கள் மற்றும் ஊராட்சி செயலர்களின் தகுதி வாய்ந்த வாரிசுதாரர்கள் 98 நபர்களுக்கு, 2018–19 ஆம் நிதியாண்டில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

### 3) கிராம ஊராட்சி பணியாளர்களுக்கான சலுகைகள்

கிராம ஊராட்சி பணியாளர்களின் நலன் கருதி சிறப்பு காலமுறை ஊதியம் வழங்குதல், சிறப்பு படிகள், அறுதியிட்ட பயணப்படி, பெண் ஊராட்சி செயலாளர்களுக்கு 180 நாட்களாக மகப்பேறு விடுப்பினை நீட்டித்தல், சிறப்பு ஓய்வூதியம் வழங்குதல், ஓய்வூதிய ஒட்டுமொத்த தொகை வழங்குதல், கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்குதல் மற்றும் கூடுதல் பொறுப்பு படி வழங்குதல் தொடர்பாக 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை பல்வேறு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

### கிராம ஊராட்சி செயலர்களுக்கு காலமுறை ஊதியத்தில் ஊதியம் வழங்குதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அடித்தள நிர்வாகத் திறனை வலுப்படுத்தும் பொருட்டு, கிராம ஊராட்சி

செயலர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.2500–5000 + 500 தர ஊதியம் என்ற விகிதத்திலிருந்து ரூ.15900–50400 என்ற விகிதத்தில் உயர்த்தி வழங்கிட அரசாணை (நிலை) எண்.171, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ5) துறை, நாள்.30.11.2018ன்படி ஆணையிடப்பட்டுள்ளது.

12,524 கிராம ஊராட்சிகளில் 40,419 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் ரூ.2600 தொகுப்பூதியத்தில் பகுதிநேரமாக பணிபுரிந்து வருகின்றனர். அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு ஒவ்வொரு முறை வழங்கப்படும் பொழுதும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கும் தற்காலிக உயர்வாக ரூ.100 வழங்கப்பட்டு வருகிறது.

சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் ஓய்வுபெறும் பொழுது ரூ.2,000/– சிறப்பு ஓய்வூதியமாகவும், ரூ.50,000/– ஓய்வூதிய ஒட்டுமொத்தத் தொகையாகவும் 2017 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

### 4) அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி

இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் ஆகிய நிலை பணியிடங்களின் அலுவலக ரீதியான முன்னேற்றத்திற்கு தேவையான அலுவலக நடைமுறை சார்ந்த அறிவு மற்றும் ஆற்றல் ஆகியவற்றை அளிப்பதில் அடிப்படை பயிற்சி முக்கிய பங்கு வகிக்கிறது. இதன்படி 2601 பணியாளர்கள் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.

# 6. திறன் மேம்பாடு

### 6.1. திறன் மேம்பாடு

ஊரகப் பகுதிகளில் சமூக பொருளாதார நிலையில் ஏற்பட்டு வரும் நவீன மாற்றங்களுக்கேற்ப பங்குதாரர்களின் திறன் மற்றும் ஆற்றலை மேம்படுத்தி உயர்த்த முதலீடு செய்வது அவசியமாகிறது. மக்கள் தங்கள் திறனை மேம்படுத்தி வளர்க்கவும், பல தகவல்களை கற்று தெரிந்து கொள்ளவும், தேவையான தரமான நிலைத்த பயிற்சி அமைப்புகள் நிறுவுதலை இது குறிக்கும். ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் இதர பங்குதாரர்கள் தங்களின் பணி தொடங்கிய நாள் முதல் பணி நிறைவு பெறும் வரையும் சந்திக்கும் பல மாற்றங்களை கையாள அவர்களை தகுதிப்படுத்தும் வகையில் பயிற்சி நிலையங்களில் (மாநில மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்) முதலீடு செய்வது அவசியமாகிறது. பொருத்தமான தரம் வாய்ந்த பயிற்சிகளை அளிப்பது திறமையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிர்வாகத்தின் ஒரு முக்கியமான படியாகும்.

இத்துறையின் நிர்வாக அமைப்பின் கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை ஒருங்கிணைந்து நடத்த தனி ஆணையரகம் செயல்பட்டு வருகிறது. பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ள மாநில அளவில், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்திய விஜயநகரம், ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி

ஆகிய ஐந்து இடங்களில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி நிறுவனங்களின் மூலம் பல்வேறு நிலை ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் இதர பொறுப்பாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## அட்டவணை 6.1

## மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் குறித்த அடிப்படை விவரங்கள்

| வ. எண். | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | அமைந்துள்ள மாவட்டம் | எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள் | துவங்கப் பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | ச.வி.நகரம் | திருவண்ணாமலை | காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர்,கடலூர், திருவண்ணாமலை (5 மாவட்டங்கள்) | 1956 |
| 2. | கிருஷ்ணகிரி அணை | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம்,தர்மபுரி, வேலூர் (5 மாவட்டங்கள்) | 1958 |
| 3. | பட்டுக்கோட்டை | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டிணம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை (6 மாவட்டங்கள்) | 1954 |
| 4. | பவானிசாகர் | ஈரோடு | ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருப்பூர் (8 மாவட்டங்கள்) | 1972 |
| 5. | தே .கல்லுப்பட்டி | மதுரை | மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி (7 மாவட்டங்கள்) | 1948 |

### 6.1.1. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், அரசு சாரா நிறுவனங்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், பிற துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தன்னார்வ இளைஞர்கள் ஆகியோருக்கு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 6.1.2. பயிற்சிகள்

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள் பராமரிப்பு, தணிக்கை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்கள், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, மரபு சாரா எரிசக்தி, மனவியல் மேலாண்மை, ஆளுமை வளர்ச்சி, சமூக தணிக்கை, கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம், நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG), மின் ஆளுமை, தகவல் அறியும் உரிமைச் சட்டம், பணமில்லா பரிவர்த்தனை, வாழ்வாதாரம் போன்ற பொருட்கள் குறித்து பயிற்சி மற்றும் கணினி பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள் போன்ற கட்டமைப்பு பணிகள் தரமான முறையில் மேற்கொள்ள தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 5,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும்,

அதிகபட்சம் 25,000 நபர்களுக்கு வெளி வளாகப் பயிற்சியும் அளிக்க இயலும்.

### 6.1.3. பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர்/இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையின் கீழ், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

### 6.1.4. நிதி

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு ரூ.6.55 கோடி நிதி வழங்கியுள்ளது. மத்திய அரசு ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கும் அவ்வப்போது பயிற்சித் திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும் இந்நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் மத்திய அரசு தொடரா செலவினத்தின் கீழ் நிதியினை வழங்குகிறது.

**அட்டவணை 6.2**

**2018–19 ஆம் ஆண்டில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களால் வழங்கப்பட்ட பயிற்சி விவரங்கள் (பொது, கணினி மற்றும் சிறப்புப் பயிற்சிகள்)**

| வ .எண். | பயிற்சியின் பெயர் | அணிகள் | பயிற்சியாளர்கள் |
|---|---|---|---|
| 1 | பயிற்சிகள் | 844 | 27361 |
| | **மொத்தம்** | **844** | **27361** |

**2018–19** ஆம் ஆண்டில், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில், மாநில அரசு, மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், பணியாளர் மற்றும் பயிற்சி துறை நிதி உதவியுடன் அலுவலர்கள் உட்பட **27,361** நபர்களுக்கு **844** அணிகளில் பலவகையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.1.5. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதி மேம்பாடு

சத்திய விஜயநகரம், பவானிசாகர், கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை மற்றும் தே.கல்லுப்பட்டி ஆகிய ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசாணை நிலை எண்.**59**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா-3) துறை, நாள்.**24.4.2018**ல் ரூ.**5** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 6.1.6.மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் சிறப்பு செயல்பாடுகள்

### அ) கிராம தத்தெடுப்புத் திட்டம்

ஒரு புதுமை செயலாக, கிராம தத்தெடுப்புத் திட்டம் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களால் **2018–19**ம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. இதற்கென பிரத்தியேக வழிகாட்டுமுறைகள் கூடுதல் தலைமை செயலர் மற்றும் தலைமை இயக்குநர் (பயிற்சி) அவர்களால் வெளியிடப்பட்டது. ஒரு சிறந்த ஊராட்சி மற்றும் ஒரு பின்தங்கிய ஊராட்சி, மண்டல ஊரக வளர்ச்சி மற்றம் ஊராட்சி நிறுவனங்களால் கண்டறியப்பட்டு அந்த ஊராட்சிகளில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், பாதுகாப்பான குடிநீர் குறித்த மக்கள் விழிப்புணர்வு முகாம், சுய உதவிக்

குழுக்கள் மூலம் சுகாதார பிரச்சாரம், கல்லூரி மற்றும் பள்ளி குழந்தைகளுக்கான அடிப்படை கணினி பயிற்சி, அரசு செயல்படுத்தும் திட்டங்களை மக்களுக்கு சென்றடைதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**ஆ) வெளி நிறுவனங்கள் மூலம் மதிப்பீடு – புதிய முயற்சி**

கடந்த ஆண்டு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் தங்களுடைய பயிற்சி திட்டங்களை மதிப்பீடு செய்ய வெளி நிறுவனங்களை நியமித்துள்ளனர். இது தொடர்பாக நியமிக்கப்பட்ட வெளி நிறுவனங்களான பாரதியார் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் உட்பட அனைத்து நிறுவனங்களும் தங்களுடைய அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன.

**அட்டவணை 6.3**

**வெளி நபர் மதிப்பீடு செய்யும் தலைப்புகள் விவரம்**

| வ எண் | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | பொருள் | மதிப்பீடு செய்யும் வெளி நபர் விவரம் |
|---|---|---|---|
| 1 | ச.வி.நகரம் | கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் | ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் நல மேம்பாட்டு நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2 | பவானிசாகர் | கணினி பயற்சி | பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் மாவட்டம் |
| 3 | பட்டுக்கோட்டை | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி |
| 4 | கிருஷ்ணகிரி அணை | சுகாதாரம் | பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் மாவட்டம் |
| 5 | தே.கல்லுப்பட்டி | பொது பயிற்சி | மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை மாவட்டம் |

**இ.ஆராய்ச்சிப் பணிகள்**

தலைமை இயக்குநர் பயிற்சி அவர்களின் முயற்சியால் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன விரிவுரையாளர்கள் தங்களுடைய திறமைகளை வளர்த்து கொள்வதற்காக பல்வேறு தலைப்புகளில் ஆராய்ச்சி பணிகளை மேற்கொண்டனர்.

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன விரிவுரையாளர்கள் ஆராய்ச்சி நுட்பங்களை அறிந்து கொண்டு பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், ஐதராபாத்திலுள்ள தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வல்லுநர்களை கொண்டு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பல்வேறு சிறப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டன.

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன விரிவுரையாளர்கள் தங்களுடைய ஆராய்ச்சி பணிகளுக்கான திட்டங்களை சமர்ப்பித்து அதற்கு நியமிக்கப்பட்ட குழுவும் ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆராய்ச்சி தலைப்புகளின் விவரம் **1)** ஊரகப் பகுதிகளில் நடைமுறையில் உள்ள சொத்துவரி முறை மற்றும் செயலாக்கம் குறித்த ஆய்வு, **2)**கிராம ஊராட்சிகளின் வரியில்லா வருவாயினை பெருக்குதல் குறித்த விளக்கமான ஆய்வு, **3)** ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகத்தில் எழும் பிரச்சனைகள் குறித்த ஆய்வு, **4)** ஊரகப் பகுதிகளில் மின்னணு சேவை பயன்பாடு மற்றும் விழிப்புணர்வு குறித்த ஆய்வு மற்றும் **5)** கடலோர பகுதிகளில் அமைந்துள்ள கிராம ஊராட்சிகளின் குடிநீரின் தரம் குறித்த ஆய்வு.

**ஈ) பவானிசாகர், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் சாண எரிவாயு கலன் அமைத்தல்**

மேற்குத்தொடர்ச்சிமலை அருகில் அமைந்துள்ள பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், உயிரின பல்வகைமை மற்றும் சமையலறை கழிவு பொருட்கள் போன்ற புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றுள்ளது. பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் உணவு, காய்கறி மற்றும் சமையலறை கழிவுகளை கொண்டு இயங்கும் சாண எரிவாயு ஆலை ரூ**95,190/–** மதிப்பீட்டில் கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் அமைக்கப்பட்டு தற்போது செயல்பட தொடங்கியுள்ளது. மேலும் இது போன்ற சாண எரிவாயு ஆலை இதர மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**உ) கிருஷ்ணகிரி மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் விவசாயம் சார்ந்த சூழல் சுற்றுலா**

கிருஷ்ணகிரி மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் விவசாயம் மற்றும் தோட்டக்கலை உற்பத்தி செய்ய தேவையான சாகுபடிக்குரிய நிலம் உள்ளது. மேலும் இந்நிறுவனம் சுற்றுலா பயணிகளை கவரும் சூழலில் அமைந்துள்ளது. விவசாயம் சார்ந்த சூழல் சுற்றுலா சமீப காலமாக பிரசித்தி பெற்று திகழ்கிறது. மேலும் இது பண்ணை விவசாயம், இயற்கை வழி விவசாயம், பண்ணை சார்ந்த வணிகம் மற்றும் சுற்றுலா ஆகிய அம்சங்களை கொண்டது. வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா என்பது விவசாய பண்ணைக்கு சென்று இயற்கை வழி

விவசாயம், தோட்டக்கலை, நீர் சேமிப்பு யுக்திகள், விவசாயம் சார்ந்த தொழில்கள் ஆகியவற்றில் நேரில் அனுபவ பூர்வமாக கற்றறிதல், ஈடுபடுதல் மற்றும் களிப்புறுதலும் ஆகும். இது இளைய தலைமுறை அதிகம் பயன்பெற உதவும்.

எனவே கிருஷ்ணகிரி மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் வேளாண்மை சார்ந்த சூழல் சுற்றுலா ரூ.56.61 இலட்சத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ஊ) ஈரோடு பழங்குடியினருக்கு சிறப்பு பயிற்சி**

ஈரோடு மாவட்டத்தில் மூன்று வட்டாரங்களிலுள்ள 14 மலைப்பகுதி கிராம ஊராட்சிகளை சேர்ந்த 992 பழங்குடியினருக்கு உடல் நலம், சுகாதாரம், விவசாயம், தோட்டக்கலை மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய தலைப்புகளில் ஒரு சிறப்பு பயிற்சி பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் டிசம்பர் மாதம் 2018–ல்அளிக்கப்பட்டது.

**எ) சமூக நலத் துறை சார்ந்த மகளிர் ஊர்நல அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி**

சமூக நலத்துறை சார்ந்த மகளிர் ஊர்நல அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அனைத்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் அளிக்கப்பட்டது. குழந்தை நலம், மகளிர் நலம், பெண்களுக்கான சட்டங்கள், முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலம், மூன்றாம் பாலினர் நலம் போன்ற தலைப்புகளில் 175 மகளிர் ஊர்நல அலுவலர்களுக்கு பயிற்சிஅளிக்கப்பட்டது.

**ஏ) தீன் தயாள் அந்தியோதய யோஜனா –தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கக சமூக அமைப்பாளர்களுக்கு பயிற்சி**

தீன் தயாள் அந்தியோதய யோஜனா –தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் உள்ள சமூக அமைப்பாளர்களுக்கு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் டிசம்பர் 2018–ல் பயிற்சி அளிக்கப்பட்டது.

## 6.2. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமானது தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் மாநில அளவிலான தலைமைப் பயிற்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் 1961–ஆம் ஆண்டில் பவானிசாகரில் நிறுவப்பட்டது. பின்னர் 1990–ஆம் ஆண்டில் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் ஓர் சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 1991 ஆம் ஆண்டு முதல் சென்னைக்கு அருகில் உள்ள மறைமலை நகரில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது.

### 6.2.1. குறிக்கோள்

பயிற்சிகள் மூலம் பயிற்சியாளர்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவது, மேலும் குடிமக்களை மையப்படுத்தும் அணுகுமுறை குறித்த நேர்மறை மனப்பான்மையை உருவாக்குவதன் மூலம் பல்வேறு ஊரக வளர்ச்சி திட்டங்களை அவற்றின் நோக்கம் நிறைவேறும் வகையில் செயல்படுத்துவது இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஊரகப் பகுதி மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியினை நோக்கமாக கொண்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை இந்நிறுவனம் மேற்கொள்கிறது.

- பயிற்சிகள், மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் சொற்பொழிவுகளை நடத்துதல்.
- மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் நிறுவப்பட்டுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து அல்லது தனித்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல் அல்லது அதற்கான உதவிகளை வழங்குதல்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிர்வாகத்திற்கான பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்து அதற்கான தீர்வுகளை கண்டறிதல்.
- அரசின் புதிய கொள்கைகளை வரையறை செய்ய ஆலோசனைகள் வழங்குதல்.

### 6.2.2. பயிற்சி பங்கேற்பாளர்கள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள், சமுதாய பயிற்றுநர்கள், கிராம தன்னார்வலர்கள், பயிற்சி வல்லுநர்கள், பயிற்றுநர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிற துறை அலுவலர்களுக்கும் பயிற்சி வழங்குகிறது.

### 6.2.3. பயிற்சி முறைகள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பங்கேற்புடன் கூடிய பயிற்சி முறைகள், விரிவுரைகள், களப்பார்வை, மேற்கோள் காட்டுதல், கலந்துரையாடல், அனுபவ பகிர்வு போன்ற பயிற்சி முறைகளை கடைபிடிக்கிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பயிற்சிகளுக்கு, சிறந்த பயிற்றுநர்கள் மாநில நிலை முதல் கிராம நிலை வரை அனைத்து மட்டங்களிலும் படிப்படியாக பயிற்சி அளிக்கும் முறையில் (Cascading Model) பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை மறைமலை நகரில் உள்ள அதன் நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. மேலும் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் வெளிவளாக பயிற்சிகளை நடத்துகிறது.

### 6.2.4. பயிற்சிக்கான நிதி ஆதாரம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மாநில மற்றும் மத்திய அரசு மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பயிற்சிகள் நடத்துவதற்காக பின்வரும் விவரப்படி நிதி உதவியினை பெறுகிறது.

- மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கான மானிய நிதி உதவியினை (Grants-in-aids) தொடர் செலவினத் தலைப்பில் மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து **50 : 50** என்ற விகிதாச்சார அடிப்படையில் பெறுகின்றது.

- பயிற்சி தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளான பயிலரங்கு கூடங்கள், விடுதிகள் கட்டுதல் மற்றும் பயிற்சி உபகரணங்கள் கொள்முதல் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு ஆண்டும் தேவையின் அடிப்படையில் மத்திய அரசின் ஊரக அமைச்சகம் 100 சதவிகித நிதி உதவி வழங்குகிறது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்பு பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி பல்வேறு தலைப்புகளில் வழங்க மத்திய ஊராட்சிகள் அமைச்சகம் இராஷ்டிரிய கிராமின் ஸ்வராஜ் அபியான் திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்குகிறது. 2018-19 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.44.14 கோடியினை இவ்வமைச்சகம் வழங்கியுள்ளது.

### 6.2.5. விரிவுரையாளர்கள் மற்றும் பயிற்றுநர்கள்

ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சி நிர்வாக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு பயிற்சிகள் நடத்த தேவையான விரிவுரையாளர்கள், பயிற்றுநர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. மேலும், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மேலாண்மை, வாழ்வாதாரம், குடிநீர் மற்றும் சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம் (கணினி வல்லுநர்), கூட்டுறவு மற்றும் விரிவாக்க கல்வி ஆகிய பிரிவுகளில் பயிற்சியளிக்க ஐந்து பிரத்தியேக விரிவுரையாளர்களை (Core Facultity) பயன்படுத்திக்கொள்ள மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

### 6.2.6. பயிற்றுநர்கள்

இந்நிறுவனத்தில் பணிபுரியும் பல்வேறு விரிவுரையாளர்களை தவிர, தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் ஐதராபாத், தேசிய தகவல் மையம் சென்னை, அண்ணா பல்கலைக் கழகம் இந்திய தொழில் நுட்ப நிறுவனம், சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனம், காந்தி கிராம பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களிலிருந்து வல்லுநர்களை பயிற்சி வழங்க பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களைத் தவிர சிறப்பாக பணியாற்றும் கிராம ஊராட்சித் தலைவர்கள், பல்வேறு துறைகளில் பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உள்ள முதன்மை பயிற்றுநர்கள், சமுதாய வள பயிற்றுநர்கள், வல்லுநர்கள் ஆகியோரும் பயிற்சிகளில் பயிற்றுநராக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர்.

### 6.2.7. உட்கட்டமைப்பு

பயிற்சிகளை நடத்துவதற்குத் தேவையான பயிற்சி அரங்குகள், ஒலி ஒளி சாதனங்கள், படிப்பகத்துடன் கூடிய நூலகம், இணைய தள வசதியுடன் கூடிய கணினி பயிற்சி கூடங்கள், உணவு வசதியுடன் தங்கும் விடுதி, தானியங்கி மின்னாக்கி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் உள்ளன.

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் ரூ.12.70 கோடியில் 55,200 சதுர அடி பரப்பளவில் பல்நோக்கு கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

## 6.2.8. 2018–19–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகள் விவரம்

இந்நிறுவனம் 2018–19 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளபடி **3,18,439** ஊரக வளர்ச்சி மற்றம் ஊராட்சி துறை அலுவலர்கள், ஊராட்சி அமைப்பின் களப்பணியாளர்கள், பிற துறை பணியாளர்கள், வள அலுவலர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

### அட்டவணை 6.4

### மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தில் வழங்கப்பட்ட பயிற்சி விவரம் – 2018–19

| வ.எண் | திட்டம் | சாதனை | |
|---|---|---|---|
| | | அணிகள் | எண்ணிக்கை |
| 1. | தேசிய கிராம சுயராஜ்ய திட்டம் | | |
| 1.1 | நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் | 1522 | 62341 |
| 1.2 | கிராம ஊராட்சி வளர்ச்சித்திட்டம் | 2854 | 114135 |
| 1.3 | சுயஉதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு பயிற்சி | 1804 | 71929 |
| 1.4 | பொது நிதி மேலாண்மை அமைப்பு பயிற்சி | 492 | 20608 |
| 1.5 | தொழில் நுட்ப பயிற்சி | 10 | 425 |
| 2. | தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், ஐதராபாத் - வெளி பயிற்சி மற்றும் ஒருங்கிணைந்த பயிற்சிகள் | 11 | 465 |
| 3. | சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் | 915 | 45126 |
| 4. | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பற்றிய மூன்று மாத கால சான்றிதழ் படிப்பு | 1 | 142 |
| 5. | பிற துறையினரால் நடத்தப்பட்ட பயிற்சிகள் | 4 | 905 |
| 6. | ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை பயிற்சி | 16 | 2221 |
| 7. | இதர பயிற்சிகள் | 6 | 142 |
| | **மொத்தம்** | **7,635** | **3,18,439** |

**6.2.9. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தை வலுப்படுத்துதல்.**

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட அணுகுமுறைகளின் காரணத்தால் அதன் திறன் மேம்பாடு நடவடிக்கைகளையும் வலுப்படுத்தும் வகையில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பல சீர்மிகு மையங்களை அமைக்கவும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் வகையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
2. இதற்காக ஒரு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து வழங்க ஐதராபாத்தில் இயங்கிவரும் தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டது.
3. மேற்படி விரிவான திட்ட அறிக்கையினை ஆராய்ந்திட துறை அளவிலான ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.
4. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ள சீர்மிகு மையங்களின் விவரம் :
    1. ஊராட்சி நிர்வாக மையம் / மாநில ஊரக வள மையம்.
    2. மனிதவள மேம்பாடு மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பு மையம்.
    3. ஊரக வளர்ச்சி திட்ட செயல்பாட்டு மையம்
    4. ஊரக தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு மையம்
    5. வாழ்வாதாரம் மற்றும் மகளிர் மேம்பாட்டு மையம்
    6. பொறியியல் மற்றும் தொழில் நுட்ப மையம்
    7. தகவல் தொடர்பு தொழில் நுட்ப மையம்
    8. பருவ நிலை மாற்றம் மற்றும் இயற்கை வள மேலாண்மை மையம்
    9. ஒருங்கிணைப்பு, தொடர்பு மற்றும் புதிய முயற்சிகள் மையம்.

### 6.2.10. ஆராய்ச்1சி நடவடிக்கைகள்

தமிழ்நாட்டில் கடலோர பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சிகளில் வசிக்கும் ஊரக சமுதாயத்தில் தீவிர பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை கண்டறிவதற்கு ஏதுவாக சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுதவிர கீழ்க்காணும் இனங்களிலும் மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தால் ஆராய்ச்சிப் படிப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அ). தமிழ்நாட்டின் ஊரக பகுதியில் உள்ள உள்ளூர் சமுதாயம், தீவிர பருவநிலை மாற்றங்களை ஏற்றுக் கொள்ளவும், மட்டுப்படுத்தவும் மேற்கொண்ட வளர்ச்சி நடவடிக்கைகள், குறிப்பாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணிகள் பற்றிய விரிவான ஆராய்ச்சி.

ஆ). கிராம ஊராட்சிகளின் தணிக்கை நடைமுறைகள் மற்றும் செயல்பாடு குறித்து ஆய்வு.

இ). நகர பகுதிகளை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் வீட்டு வரி வசூலிப்பதில் உள்ள சவால்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்தல்.

### 6.2.11. இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்

புகழ்மிக்க பல்கலைகழகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றும் முயற்சிகள் இந்நிறுவனத்தால் **2018–19** ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன. ஆசிரியர் மேம்பாடு, ஆய்வு, களப்பார்வை, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, வெளியீடு, ஊரக வளர்ச்சி,

பேரிடர் மேலாண்மை போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்றிட இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று பங்கேற்கும் நிறுவனங்களுக்கும், தங்களுடைய மாணவர்களுக்கு (கள) பயிற்சியளித்திடவும், பணி அனுபவம் (Internship) பெற்றிடவும், திட்டங்கள் தொடர்பாக நிறுவனத்துடன் இணைந்த ஆய்வு மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளவும், ஆசிரியர்களாக பணியாற்றவும், நடைமுறையில் உள்ள சிறந்த முறைகளை ஆவணப்படுத்தவும் ஏதுவாகிறது.

### 6.2.12. தொழில்நுட்ப அலுவலர் பயிற்சி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் தொழில் நுட்ப அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளித்திட ரூ.**31.65** இலட்சத்தில் மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தில் தொழில்நுட்ப பயிற்சி பிரிவு ஏற்படுத்த, அரசாணை எண்.**150** ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (ப.ரா–3) துறை நாள்.**21.12.2017**ல் உத்தரவிடப்பட்டுள்ளது. திறன் வளர்ப்பு பயிற்சிகளில் இதுவரை **210** உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

### 6.2.13 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இதர பயிற்சிகள்

### அ) பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS)

பொது நிதி மேலாண்மை அமைப்பை (PFMS) செயல்படுத்தும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் **19,659** அலுவலர்களுக்கு **492** பிரிவுகளாக மாநில ஊராட்சி நிறுவனம் மற்றும் இதர மாவட்ட மையங்களில் ரூ.**2.32**கோடி செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## ஆ) வளாக மேம்பாடு மற்றும் நிறுவன வளர்ச்சி குறித்த பெருமேம்பாட்டுத் திட்டம்

முழுமையான மற்றும் நீடித்த வளர்ச்சிக்காக, மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் வளாக மேம்பாடு மற்றும் நிறுவன வளர்ச்சிக்கென பெருமேம்பாட்டுத் திட்டத்தினை தயாரித்துள்ளது. இப்பெரு மேம்பாட்டு திட்டம் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன வளாகத்தில் அமைந்துள்ள மற்றும் அமையவுள்ள நீர்மேலாண்மை பணிகள், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, மூலிகைத் தோட்டம், கலையரங்கங்கள், புத்துணர்வு தோட்டங்கள், பூந்தோட்டம், குளம், மாதிரி கிராமம், மற்றும் வருங்கால கட்டடங்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் மேம்பாடு ஆகியவை அடங்கும்.

## இ) சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம்(CBDRM)

தமிழகஅரசு, உலக வங்கி உதவியுடன் கடலோர பேரிடர் இன்னல் குறைப்பு திட்டத்தின் ஒரு பகுதி திட்டமான சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ஆரம்ப எச்சரிக்கை நடவடிக்கைகள், வெளியேற்றம், தேடுதல் மற்றும் மீட்பு, பாதுகாப்பு புகலிடம் மேலாண்மை மற்றும் முதல் உதவி ஆகியவற்றில் வல்லுநர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## ஈ) தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளூரைடு தீவிரத்தினை குறைக்கும் திட்டம்(HWS& FMP)

தமிழகஅரசு ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நடுவம் என்ற நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெற்று தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் முழுவதும் ஒகேனக்கல் குடிநீர்

விநியோகம் மற்றும் புளூரைடு தீவிரத்தினை குறைத்திடும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தேவையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளை ரூ.**276.64** லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மேற்கொள்ளும்.

**உ) தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தில் (TNRTP)- மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அறிவுசார் பங்குதாராக செயல்படுதல்.**

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட செயலாக்கத்தில் (TNRTP) அறிவுசார் பங்குதாரராக மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் செயல்பட புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி திட்ட செயலாக்க அலுவலர்களின் திறன்மேம்பாடு மற்றும் அறிவுசார் பரிமாற்றங்களுக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் பொறுப்பேற்கும்.

### 6.2.14. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு அயல்நாட்டு பிரதிநிதிகளின் வருகை

“ஊரக வளர்ச்சிக்கான நீடித்த வேளாண் முறைகள்” என்ற தலைப்பில் பயிற்சி மேற்கொள்ள தஜிகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், இலங்கை மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளிலிருந்து பன்னாட்டு பிரதிநிதிகள் **29.01.2019** அன்று பார்வையிட்டனர்.

### 6.2.15. மாநில ஊராட்சி வள மையம் (SPRC)

ஊராட்சி அமைப்புகளின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியில் தனி கவனம் செலுத்தும் பொருட்டு மாநில ஊரக

வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் மத்திய அரசு நிதி உதவியுடன் மாநில ஊராட்சி வள மையம் அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி நிர்வாகிகளின் திறனை விரைந்து மேம்படுத்துதல், ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி பற்றிய அறிவை ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் இதர துறை அலுவலர்களுக்கு வழங்குதல், ஊராட்சி நிர்வாகத்தின் மாநில அரசுக்கு ஆலோசனைகள் வழங்குதல் போன்றவை இந்நிலையத்தின் முதன்மை பொறுப்புகளாகும்.

### 6.2.16. ஊராட்சிகளுக்கான மாவட்ட வளமையங்கள்

மாவட்ட அளவில் ஊராட்சி அமைப்புகளுக்கு தேவையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளை சிறப்பாக மேற்கொள்ள ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் மத்திய அரசு நிதி உதவியுடன் தேசிய கிராம சுயராஜ் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் செயல்படும் இம்மையங்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு பணிகள் சம்பந்தப்பட்ட மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**2019–20**ஆம் ஆண்டில், மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனம் மற்றும் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் மூலம் சுமார் **11,68,266** நபர்களுக்கு **29,289** அணிகளில் பல்வேறு பயிற்சிகளை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது அனைத்து திட்டங்களையும் நீண்ட காலத்திற்கு திறம்பட செயலாக்க பயனளிக்கும்.

# 7. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

## 7. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

“நான் தமிழகத்தைப் பற்றி ஒரு மிகப்பெரிய கனவு அல்லது தொலைநோக்குப் பார்வை கொண்டுள்ளேன். அந்த கனவில், வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாத ஒரு தமிழகத்தை, வறுமை முற்றிலும், ஒழிக்கப்பட்ட ஒரு தமிழகத்தை கல்வி, சுகாதாரம், குடிநீர் உள்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் அனைத்து மக்களும் பெற்றுள்ள ஒரு தமிழகத்தை எல்லாவற்றுக்கும் மேலாக, அனைத்து மக்களும் செல்வச் செழிப்பாக, பாதுகாப்பாக, அமைதியுடன் வாழ்கின்ற ஒரு தமிழகத்தைப் பார்க்கிறேன். தமிழகம், அனைத்து சமூக, பொருளாதாரக் குறியீடுகளிலும் முதன்மையாகத் திகழ்ந்து இந்த புத்தாயிரமாவது ஆண்டில் அறிவுசார் பொருளாதாரமாக பரிணமிக்க வேண்டும் என்பதே எனது கனவு ஆகும்.”

– ***மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தை வெளியிட்டு ஆற்றிய உரையிலிருந்து ஒரு பகுதி.***

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு ஆகியவற்றின் மூலம் பெண்கள் சமூக பொருளாதார ஆற்றல் மேம்பாடு அடைய வேண்டும் என்ற நோக்கோடு **1983**ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசினால் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, நிதி இணைப்புகளையும் தொழில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி, பெண்களின் ஆற்றல்

மேம்பாட்டை அதிகரித்து சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

இந்நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயல்பாடுகளின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள ஏழை மக்களின் வாழ்வில் வெளிப்படையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. மேலும் அவர்களை ஐக்கிய நாடுகள் சபையின் கீழ்க்கண்ட நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை நோக்கி (Sustainable Development Goals) முன்னேற்றுவதற்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வழிவகை செய்கிறது.

- வறுமையின்மை (SDG - 1)
- பசியின்மை (SDG - 2)
- நல்ல ஆரோக்கியம் மற்றும் வளமான வாழ்வு (SDG-3)
- பாலின சமத்துவம் (SDG - 5)
- சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் (SDG - 6)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கீழ்க்காணும் மூன்று முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

i. **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்:**

ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் **60:40** என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

ii. **தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்:**

நகர்ப்புற ஏழை மக்களுக்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் **60:40** என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

### iii. தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம்:

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டமானது (NRETP) தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் (NRLP) மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் (NRLM) வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு, சிறப்பான செயல்பாடுகளின் மூலம் வட்டார அளவிலான கூட்டமைப்புகளை உருவாக்குதல், முழுமையான நிதி உள்ளாக்கம், பண்ணை மற்றும் பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டம் ஆகும். இத்திட்டமானது **2019** முதல் **2023** ஆம் ஆண்டு வரை **20** வட்டாரங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான நிதியானது மத்திய மாநில அரசுகளால் **60:40** என்ற விகிதாசாரத்தில் பங்களிப்பு செய்யப்படுகிறது.

## 7.1. மகளிர் திட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் துவக்கத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை அமைத்து மகளிர் மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்தியது. இத்திட்டம் முதலில் தர்மபுரி மாவட்டத்திலும் பின்னர் சேலம், இராமநாதபுரம், விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பெரும் வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு இத்திட்டத்தில் சில மாற்றங்களை செய்து ‘மகளிர் திட்டம்’ என்ற பெயரில் இந்த மாவட்டங்களில் செயல்படுத்தி, பின்னர் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தியது. சமூக பொருளாதார

மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி, அவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க தேவையான வங்கிக்கடன் இணைப்புகள் ஏற்படுத்தி சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்த இத்திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் யாவும் மகளிர் திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட வடிவங்களேயாகும்.

### 7.1.1. சுய உதவிக் குழுக்கள்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழு உறுப்பினர்களிடையே சேமிப்பு பழக்கத்தையும், அவர்களுக்குள்ளேயே உள்கடன் வழங்குதலையும், ஒன்று கூடி ஒற்றுமையாகவும் மற்றும் ஜனநாயக ரீதியாகவும் முடிவெடுக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதும் சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களாகும். மகளிரின் பொருளாதார மற்றும் சமுதாய மேம்பாட்டினை உறுதிசெய்யும் பொருட்டு சுய உதவிக் குழுக்களுக்கு சேமிப்பு பழக்கம், முறையான கணக்குப் பதிவேடுகள் பராமரித்தல், ஒன்றுகூடி முடிவெடுத்தல், வங்கிக்கடன் பெற்றுத்தருதல் மற்றும் கடன்களை திரும்ப செலுத்துதல் ஆகியவற்றில் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

**அட்டவணை 7.1**
**சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம் (31.03.2019)**

| | | |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | **6.75 இலட்சம்** |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | **100.73 இலட்சம்** |
| 2 | ஊரகப் பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | **4.57 இலட்சம்** |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | **68.02 இலட்சம்** |
| 3 | நகர்ப்புற பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | **2.18 இலட்சம்** |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | **32.71 இலட்சம்** |
| 4 | மொத்த சேமிப்பு | **ரூ. 8,285.52 கோடி** |
| 5 | ஆதார நிதி பெற்ற சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை | **5.78 இலட்சம்** |
| 6 | சுய உதவிக் குழுக்கள் பெற்ற ஒட்டு மொத்த கடன் இணைப்பு (2011–2019) | **ரூ. 52,629 கோடி** |

## 7.2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற திட்டத்தினை தமிழ்நாடு அரசு **2012–13** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. ஊரக ஏழை மக்களுக்காக வலுவான மற்றும் துடிப்பான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் சமுதாயத்தில் உள்ள ஏழைகள் மற்றும் நலிவுற்ற பிரிவினர் இலக்கு மக்கள் ஆவர். இலக்கு மக்களுக்கு நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக அவர்களைக்

கொண்டு செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் அமைக்கப்படுகின்றன.

### 7.2.1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்

- பிற திட்டங்களைப் போல் அல்லாது ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரிடத்தில் சிறப்பு கவனம் செலுத்துதல்.
- விடுபட்ட ஏழை மக்களை கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுவில் ஒருங்கிணைத்தல்.
- ஊரகப் பகுதிகளில் ஏழைகளைக் கொண்ட சமுதாய நிறுவனங்களை உருவாக்கி வலுப்படுத்துதல்.
- சமூக மேம்பாட்டிற்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகளின் மூலம் ஊரக ஏழை மக்களை மேம்பாடு அடையச் செய்தல்.
- சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி சந்தைப்படுத்துதலை எளிதாக்குதல்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு கடன் வழங்கும் பொருட்டு குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன்மேம்பாடு பயிற்சி அளித்தல்.
- அரசுத்துறைகள் மூலம் கிடைக்கப் பெறும் பல்வேறு நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை ஒருங்கிணைத்து திறம்பட பயன்படுத்திட வழிவகை செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்கள் அனைவரும் அடிப்படை வசதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்குதல்,

சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான பயிற்சிகள் வழங்குதல்.

### 7.2.2. திட்டச் செயலாக்கப் பகுதி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை நீங்கலாக, தமிழ் நாட்டின் 31 மாவட்டங்களில் 385 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றுள் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் செயல்படும் 120 வட்டாரங்கள் மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் செயல்படும் (NRETP) 5 மாவட்டங்களில் உள்ள 20 வட்டாரங்களும் அடங்கும்.

**அட்டவணை 7.2**
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் விபரம்**

| வ. எண் | திட்டம் | மாவட்டங்கள் | வட்டாரங்கள் | பகுதிகள் | ஊராட்சி கள் |
|---|---|---|---|---|---|
| 1 | முதற் கட்டம் | 15 | 60 | 199 | 2250 |
| 2 | இரண்டாம் கட்டம் | 27 | 110 | 317 | 3391 |
| 3 | மூன்றாம் கட்டம் | 21 | 95 | 226 | 2471 |
| 4 | நான்காம் கட்டம் (புதுவாழ்வுத் திட்ட வட்டாரங்கள்) | 26 | 120 | 302 | 4174 |
| **கூட்டுத்தொகை** | | **31** | **385** | **1,044** | **12,286** |
| 5 | சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP) | – | – | – | 238 |
| **மொத்தம்** | | **31** | **385** | **1,044** | **12,524** |

**முதற் கட்டம் :– 2012–13** ஆம் ஆண்டு முதல் **60** வட்டாரங்களில் உள்ள **2,323** கிராம ஊராட்சிகளில் **2,250** கிராம ஊராட்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழும், 73 கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலமும் செயல்படுத்தப்படுகிறது.

**இரண்டாம் கட்டம் :– 2013–14** ஆம் ஆண்டு முதல் **27** மாவட்டங்களிலுள்ள **110** வட்டாரங்களைச் சார்ந்த **3,491** கிராம ஊராட்சிகளில் **3,391** கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமும், எஞ்சியுள்ள **100** கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப்பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலமும் பயன்பெற்று வருகின்றன.

**மூன்றாம் கட்டம் :– 2014–15** ஆம் ஆண்டு முதல் மூன்றாம் கட்டமாக **95** வட்டாரங்களில் உள்ள **2,536** கிராம ஊராட்சிகளில் **2,471** கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. எஞ்சியுள்ள **65** கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப்பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.


**நான்காம் கட்டம் (ஜூலை 2017 முதல்) :–** தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் **26** மாவட்டங்களில் **120** வட்டாரங்களில் உள்ள **4,174** கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டது. தற்போது இவை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 7.2.3. இயக்க செயலாக்க அமைப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்த மாநில இயக்க மேலாண்மை அலகாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தை மாநில அரசு நியமித்துள்ளது. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு கொள்கை வடிவிலான வழிகாட்டுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற பணிகளுக்காக மாண்புமிகு

அமைச்சர், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அவர்களின் தலைமையில் உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் இயக்குநராக அரசு கூடுதல் தலைமைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களும், முதன்மைச் செயல் அலுவலராக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வியக்கத்தின் நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் தனி நிர்வாக அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 7.2.4. வரிசைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்



## 7.3. திட்ட செயல்பாடுகள்

ஒவ்வொரு கிராம அளவில் திட்ட செயல்பாடுகள் கீழ்க்கண்ட வரிசைப்படி மேற்கொள்ளப்படுகிறது

### 7.3.1. தகவல், கல்வி மற்றும் தொடர்பு மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

பேரணி, தெரு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றின் மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கிராமங்களிலுள்ள மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. மேலும், சுவர் ஓவியங்கள், சுவரொட்டிகள், இயக்க தகவல் பலகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் ஆகியவைகளும் அனைத்து கிராமங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 7.3.2. அடிப்படை விவரக் கணக்கெடுப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் செயலாற்றிய சமுதாய வளப் பயிற்றுநர்களைக் கொண்டு, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சுய உதவிக் குழுக்களின் விவரக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, செயல்பாட்டில் உள்ள குழுக்கள், செயலிழந்த குழுக்கள் போன்றன கண்டறியப்பட்டுள்ளன. செயல்பாட்டில் இல்லாத சுய உதவிக் குழுக்களை திறன் மேம்பாடுப் பயிற்சிகள் மூலமாக மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டுவர இப்புள்ளி விவரங்கள் பயன்படுத்தப்படுகிறது.

### 7.3.3. மக்கள் நிலை ஆய்வு

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள ஏழைகள், மிகவும் ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர்,

பழங்குடியினர் மற்றும் விளிம்புநிலை சமூகத்தினரைக் கண்டறிந்திட அனைத்து சமுதாயத்தினரின் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஏழைக் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மக்கள் பங்கேற்புடன் கூடிய ஊரக மதிப்பீட்டு முறையில் கீழ்க்கண்ட யுக்திகளை கடைப்பிடிக்கிறது.

**நடைப்பயணம்**

மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நிலப்பரப்பு தன்மையினை ஆராய்ந்து அறிந்து கொள்ள கிராமம் முழுவதும் நடைப் பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

**சமூக வரைபடம்**

கிராம வரைபடத்தில், கிராமத்தில் உள்ள பொது இடங்கள், வீட்டின் வகைகள், குடும்ப வாரியான மக்களின் விபரங்கள் போன்றவை மக்களால் வரையப்படுகிறது. மேலும் அந்த விபரங்கள் வரைபடத் தாள் மற்றும் குடும்ப வாரியான அட்டையிலும் குறிக்கப்படுகிறது.

**பொருளாதார மதிப்பீடு**

பொருளாதார மதிப்பீட்டின் மூலம் கிராம மக்களால், கிராமத்தில் உள்ள அனைத்து குடும்பங்களின் பொருளாதார நிலை (மிகவும் ஏழை, ஏழை, நடுத்தர மக்கள் மற்றும் வசதியானவர்) கண்டறியப்படுகிறது.

**மூன்று வெவ்வேறு குழுக்களில் சரிபார்க்கும் முறை**

குடும்பங்களை இறுதியாக வகைப்படுத்தும் போது குழு–1 மற்றும் குழு–2 க்கு இடையே முரண்பாடு தோன்றின்,

அக்குறிப்பிட்ட குடும்பங்களை வகைப்படுத்துதல் குறித்து குழு–3 ல் விவாதிக்கப்படுகிறது. கிராமத்தில் உள்ள பெரும்பான்மையோரின் கூற்றின்படி அக்குடும்பத்தின் வகைபாடு முடிவு செய்யப்பட்டு, இலக்கு மக்கள் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

இந்த இலக்கு மக்கள் பட்டியல் அனைத்து குக்கிராமங்களிலும் உள்ள முக்கியமான இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டு, சேர்த்தல் மற்றும் மறுத்தல் ஏதேனும் இருப்பின், அவற்றையும் பெற்று, இறுதி இலக்கு மக்கள் பட்டியல் கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறப்படுகிறது.

இத்தகைய மக்கள் நிலை ஆய்வு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களை சார்ந்த அனைத்து கிராம ஊராட்சிகளிலும் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்கு இப்பட்டியலே அடிப்படையாக உள்ளது.

### 7.3.4. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் போன்ற இலக்கு மக்களை உள்ளடக்கிய ஒரு சங்கமாகும். இச்சங்கம் இலக்கு மக்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தனி நபர் கடன் வழங்கி அவர்களை வறுமையில் இருந்து மீட்கவும், அவர்களின் நலிவுநிலையைக் குறைக்கவும் உதவுகின்றது. இதுவரை 12,734 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் (பழங்குடியினருக்கான 472 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட) திட்ட செயலாக்கப் பகுதிகளான 385 வட்டாரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

### 7.3.5. சமூகத் தணிக்கை குழு

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் சமூகத் தணிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது. சமூகத் தணிக்கை குழுவில் **5** முதல் **7** உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை சமூகத் தணிக்கை குழு கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கின்றது.

### 7.3.6. புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறிந்த, விடுபட்ட ஏழை மகளிரைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழுவிலுள்ள ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் மற்றும் குழுவின் உறுப்பினர்களுக்கும் குழு செயல்பாடுகள் மற்றும் கணக்குப் புத்தக பராமரிப்பு பயிற்சியும் வழங்கப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் முறையான கூட்டங்கள், சேமிப்பு, உள்கடன், கணக்கு பதிவேடுகள் பராமரிப்பு மற்றும் கடன் திருப்பம் ஆகிய பஞ்சசூத்திரங்களைக் கடைப்பிடிக்கின்றன.

**2018–19** ஆம் ஆண்டில் **8,940** சுய உதவிக் குழுக்கள் (புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட குழுக்கள் சேர்த்து) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் அமைக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்கள் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக, குழுக்களை தரமதிப்பீடு செய்து, ஆதார நிதி, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வங்கிக் கடன் போன்ற நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன.

### 7.3.7. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து தகுதிவாய்ந்த சுய உதவிக் குழுக்களும் ஜனநாயக முறையில் ஒன்றாக இணைந்து செயல்படவும், சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்தி பல்வேறு நிதி சார்ந்த மற்றும் இதர சேவைகளை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கி வழி நடத்திடவும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்ட ஒரு சமுதாயம் சார்ந்த அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு பெற்ற அமைப்பாகும்.

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–ன் விதி எண். 25 (பதிவு பெற்ற சங்கத்தின் நிதியானது மிகை ஊதியமாகவோ, ஈவுத் தொகையாகவோ அல்லது வேறு விதமாகவோ அதன் உறுப்பினரிடையே பகிர்ந்தளிக்கப் படமாட்டாது) மற்றும் விதி எண்.42–ன் (சங்கம் கலைக்கப்படும் போது எந்த உறுப்பினரும் லாபம் பெறமாட்டார்) படி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்த விலக்களிப்பு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வருவாய் ஈட்டும் தொழிலை மேற்கொண்டு அவற்றிலிருந்து பயன்கள் அடையும் வகையில் ஒரு நிறுவன அமைப்பாக உருவாக வழிவகுக்கிறது.

மேலும் இந்த அமைப்பானது ஊராட்சி அளவிலான முதல் நிலை கூட்டமைப்பாக செயல்பட்டு, ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும் கிராம மக்களுக்கும் இடையே மிக முக்கியமான இணைப்பாக உள்ளது.

**கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

- மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட தகுதிவாய்ந்த மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை அமைத்தல்.
- தேவையான நிதியினை பெற்று வழங்குதல் மூலம் சுய உதவிக் குழுக்களை வலிமைப்படுத்துதல் மற்றும் வழிநடத்துதல்.
- திட்டம் சார்ந்த தகவல்கள் சுய உதவிக் குழுக்களிடம் சென்றடையச் செய்தல்.
- சுய உதவிக் குழுக்களின் கணக்கு மற்றும் பதிவேடுகளை பராமரித்தல், தணிக்கை செய்தல், குழுக்களை தரம் பிரித்தல் மற்றும் கடன் மதிப்பீட்டிற்கு ஏற்பாடு செய்தல்.
- வங்கிகளிலிருந்து நேரிடையாக கடன் பெற்று, சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டியிலான கடன் அளிப்பதன் மூலம் இடைநிலை நிதி நிறுவனமாக செயல்படுதல்.
- அரசின் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து மகளிரின் வளர்ச்சி மற்றும் ஆற்றல் மேம்பாடு தொடர்பான சமூக பிரச்சனைகள், சுகாதாரம், ஊட்டச்சத்து, மற்றும் பாலின பிரச்சினைகள் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

**துணைக் குழுக்கள்**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது கிராம வளர்ச்சி மற்றும் குழு உறுப்பினர்களின் நலனுக்காக பல்வேறு செயல் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றும் பொருட்டு கீழ்க்காணும் துணைக் குழுக்களை அமைத்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

- குழு அமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல் துணைக் குழு
- கடன் இணைப்பு மற்றும் கடன் கண்காணிப்பு துணைக் குழு
- வாழ்வாதார துணைக் குழு
- சமூக மேம்பாட்டிற்கான துணைக் குழு

மொத்தம் **385** வட்டாரங்களில், **12,358** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும் **166** வாழ்வாதார துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.3**
**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் விபரம்**

| வ. எண் | திட்டம் | வட்டாரங்கள் | கிராம ஊராட்சிகள் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு | வாழ்வாதார துணைக் குழுக்கள் * | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் முந்தைய புதுவாழ்வு திட்டம் | 385 | 12,286 | 12,120 | 166 | 12,286 |
| 2 | சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டம் | – | 238 | 238 | – | 238 |
| **மொத்தம்** | | **385** | **12,524** | **12,358** | **166** | **12,524** |

*10 க்கும் குறைவான மகளிர் சுய உதவிக் குழுக்கள் உடைய கிராம ஊராட்சிகளில் வாழ்வாதாரத் துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துணைக் குழுக்கள் அவ்வூராட்சிகளில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பாக செயல்படுகிறது.

### 7.3.8. வட்டார அளவிலான கூட்டமைப்பு

தமிழ்நாட்டில், **385** வட்டாரங்களிலும் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. வட்டாரத்தில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை முதன்மையாகக் கொண்டு வட்டார அளவிலான கூட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. வட்டார அளவிலான கூட்டமைப்பில் பொதுக் குழு, செயற்குழு மற்றும் நான்கு துணைக் குழுக்கள் அதாவது நிறுவன மேம்பாட்டுக் குழு, நிதி உள்ளாக்கக் குழு, வாழ்வாதாரக் குழு மற்றும் சமூக மேம்பாட்டுக் குழு

ஆகியவை உள்ளன. வட்டார அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகத்தை நடத்துவதற்காக ஒவ்வொரு வட்டார அளவிலான கூட்டமைப்பிலும் நான்கு நிர்வாகிகள் அதாவது தலைவர், துணைத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் உள்ளனர். இவர்கள் 2 வருடங்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இரண்டாம் நிலை கூட்டமைப்பான வட்டார அளவிலான கூட்டமைப்பின் முக்கிய செயல்பாடுகள் கீழ்க்கண்டவாறு:

- முதல் நிலை சமுதாயம் சார்ந்த அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக உதவுதல்.
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளை தரமதிப்பீடு மற்றும் தணிக்கை செய்ய வழிகாட்டுதல்.
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு பல்வேறு அரசு நல திட்டங்களைப் பெற உதவுதல்.
- நலிவுற்றோர், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமுதாயத்தின் விளிம்பு நிலையில் உள்ளவர்களின் மேம்பாட்டுக்கு உதவுதல்.
- சுய உதவிக் குழுக்கள் / சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு வங்கிகளின் மூலம் கடன் இணைப்பு, வட்டி மானியம், வங்கி சேவை முகாம்கள் நடத்துதல், வங்கி கணக்குகள் துவக்குதல், காப்பீடு, கடன் திருப்பம் மற்றும் நிலுவை திருப்பம் போன்ற நிதி உள்ளாக்க சேவைகளை ஒருங்கிணைத்தல்.
- வாழ்வாதாரம் மற்றும் தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கான தொழில் வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.

- வட்டார அளவிலான கூட்டமைப்புகளை நடத்துவதற்கும் மற்றும் வலுப்படுத்துவதற்கும் உறுப்பினர்களான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடமும் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களிடமும் சந்தா திரட்டுதல்.
- பல்வேறு கருப்பொருட்கள் மற்றும் கருத்துகளுக்கும் கருத்தாளர்கள் / பயிற்றுநர்களை உருவாக்குதல்.
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் நலனுக்காக சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் சமுதாய வளர்ச்சி செயல்பாடுகளுக்கு உதவுதல்.
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் வாழ்வாதார வளர்ச்சிக்கான காலாண்டு, அரையாண்டு மற்றும் ஆண்டு செயல்திட்டங்களை தயாரித்தல்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், பகுதி அளவிலான மன்றங்கள் மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தல்.
- ஊரகப் பகுதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம்கள் வழிநடத்துதல் மற்றும் பணியமர்வை உறுதிப்படுத்துதல்.
- வட்டார அளவில் தகவல் தொடர்பு செயல்பாடுகளை ஆவணப்படுத்துதல் .
- சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களுக்கான தரம் வாய்ந்த மூலப்பொருட்களை மலிவு விலையில் கொள்முதல் செய்வதற்கு வழிநடத்துதல் மற்றும் மாவட்ட விற்பனை சங்கத்தின் ஒத்துழைப்போடு சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளுக்கு உதவுதல்.

- வட்டார அளவிலான கூட்டமைப்பு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நீடித்த திட்டங்களை தீட்டி, வட்டார அளவில் ஒருங்கிணைப்பதற்கு உதவுகிறது. மேலும், சேவைக் கட்டணத்தின் அடிப்படையில் தேவையான இனங்களில் சேவைகளை வழங்குதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சிகளை செயல்படுத்துவதற்காக வட்டார அளவிலான பயிற்சி மையமாக செயல்படுகிறது.

### 7.3.9. முன்மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு

**2019–20** ஆம் ஆண்டில் தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டத்தின் கீழ் **15** வட்டாரங்கள் இரண்டு கட்டங்களில் முன்மாதிரி வட்டாரங்களாக உருவாக்கப்படவுள்ளன.

இந்த **15** வட்டார அளவிலான கூட்டமைப்புகளும் **24.4.2019** தேதியிட்ட இந்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம், தேசிய ஊரக வாழ்வாதார இயக்க இணை செயலாளரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வரையறைகளின் படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**முன்மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பின் தேர்வுக்கான வரையறைகள்**

- குறைந்தபட்சம் **6** மாதங்களான வட்டார அளவிலான கூட்டமைப்பு
- வங்கி கணக்கு துவக்கப்பட்ட வட்டார அளவிலான கூட்டமைப்பு
- குறைந்த பட்சம் **50** சதவீதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் கொண்ட குடும்பங்களை சுய உதவிக் குழுக்களில் கொணர்தல்.
- வட்டார அளவில், குறைந்த பட்சம் **60** சதவீத சுய உதவிக் குழுக்கள் ‘அ’ அல்லது ‘ஆ’ தர மதிப்பீடு பெற்றிருத்தல்.

- வட்டார அளவில், குறைந்த பட்சம் 70 சதவீத சமுதாயம் சார்ந்த அமைப்புகள் 'ஆ' தரமதிப்பீடு பெற்றிருத்தல்.
- வட்டார அளவில், தகுதி வாய்ந்த 70 சதவீத சுய உதவிக் குழுக்கள் ஆதார நிதியும், தகுதி வாய்ந்த 50 சதவீத சுய உதவிக் குழுக்கள் சமுதாய முதலீட்டு நிதியும் பெற்றித்தல்.
- வட்டார அளவிலான கூட்டமைப்பு, மேலாண்மை மற்றும் கணக்கியல் தொடர்பான அடிப்படை பயிற்சி பெற்றிருத்தல்.
- பயிற்சி பெற்ற சமுதாய வளப்பயிற்றுநர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பயன்படுத்துதல்.
- வாழ்வாதாரம், சமுதாய உள்ளாக்கம் மற்றும் சமுதாய வளர்ச்சி, உணவு, ஊட்டச்சத்து, சுகாதாரம், குடிநீர், பாலின சமத்துவம், மின்னணு நிதி பரிமாற்றம் போன்றவற்றில் பெரும் பங்காற்றியிருத்தல்.

உறுப்பினர் சார்ந்த, உறுப்பினரால் நிர்வகிக்கப்படும், உறுப்பினரால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிலைத்த நிதி ஆதாரம் கொண்ட சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி வலுப்படுத்துவதன் மூலம் ஊரக வறுமையை ஒழிப்பதே முன்மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பின் நோக்கமாகும்.

### 7.3.10. சமுதாயம் சார்ந்த அமைப்புகளை தரமதிப்பீடு செய்தல்

**2018–19** ஆம் ஆண்டில் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான தரமதிப்பீட்டு வழிமுறைகள் திருத்தியமைக்கப்பட்டு, திருத்திய படிவங்கள் வடிவமைக்கப்பட்டன.

**தரமதிப்பீட்டின் நோக்கங்கள்**

- சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் செயல் திறனை மதிப்பீடு செய்தல்.
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் செயல்பாட்டில் உள்ள குறைகளை கண்டறிதல் மற்றும் களைதல்.
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான திறன் மேம்பாட்டு திட்டத்தை வகுத்தல்.
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் நிலைத்த வளர்ச்சியினை உறுதி செய்தல்.

**2018–19** ஆம் ஆண்டில், தரமதிப்பீட்டிற்காக **18.39** கோடி ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டது. **11,886** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், **11,626** கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் **1,00,000** மகளிர் சுய உதவிக் குழுக்கள் தரமதிப்பீடு செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**7.3.11. சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி**

**அ. சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி**

மூன்று மாதம் முடிவு பெற்று தரமதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ.**15,000/–** வீதம் நிதி வழங்கப்படுகிறது. இந்த ஆதார நிதியானது அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி அதிகமான உறுப்பினர்கள் உள்கடன் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது.

**2018–19** ஆம் ஆண்டில் தகுதியான **14,394** சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ.**15,000/–** வீதம் மொத்தம் ரூ.**21.59** கோடி வழங்கப்பட்டுள்ளது.

## ஆ. சமுதாய முதலீட்டு நிதி

சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார செயல்பாடுகளுக்காக திட்டத்தின் கீழ் கடனாக வழங்கப்படும் தொகை சமுதாய முதலீட்டு நிதியாகும். சமுதாய முதலீட்டு நிதியானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டு, அவைகளின் மூலம் தகுதியான சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படுகிறது. சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்ச தொகையாக ரூ.75,000/– வீதம் ஆண்டிற்கு 9% வட்டியுடன் கடனாக வழங்கப்படுகிறது. இத்தொகையானது குறைந்தது 50% சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் கடனாக விடுவிக்கப்படுகிறது.

சமுதாய முதலீட்டு நிதியின் பாதுகாவலனாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு செயல்படுகிறது. 100 சதவீத கடன் திரும்ப செலுத்துதல், முறையான பயன்பாடு மற்றும் சமுதாய முதலீட்டு நிதி சுழற்சியை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுதி செய்யும்.

**சமுதாய முதலீட்டு நிதி பெற தேவையான தகுதிகள்**

- பஞ்சசூத்திரங்களை கடைபிடிக்கும் குறைந்தபட்சம் 6 மாதம் முடிவடைந்த சுய உதவிக் குழுக்கள்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள்
- மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் உள்ளிட்ட சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அளித்தல்.

- அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் உள்கடன் மற்றும் ஆதார நிதியிலிருந்து உள்கடன் அளிக்கும் சுய உதவிக் குழுக்கள்.
- பெற்ற உள்கடனை முறையாக திரும்ப செலுத்தும் உறுப்பினர்களைக் கொண்ட சுய உதவிக் குழுக்கள்.
- நுண்நிதி கடன் திட்டம் தயாரித்த சுய உதவிக் குழுக்கள்.

**2018–19** ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்கான சமுதாய முதலீட்டு நிதி ரூ.**50,000/–**வீதம் **33,247** சுய உதவிக் குழுக்களுக்கு மொத்தம் ரூ.**166.23** கோடி வழங்கப்பட்டுள்ளது.

## இ. நலிவுற்றோர் மேம்பாட்டு நிதி

மக்கள் நிலை ஆய்வின்போது மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக ரூ.**10,000/–** முதல் ரூ.**25,000/–** வரை தனி நபர் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. நலிவுற்றோருக்கான நிதியானது மாற்றுத்திறனாளிகளின் உணவு பாதுகாப்புக்கும், வாழ்வாதார செயல்பாடுகளுக்கும், உடல்நலக் குறைவு அல்லது எதிர்பாரா மருத்துவ செலவிற்கும் மற்றும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்விற்கும் பயன்படுத்தப்படுகிறது. நலிவுற்றோர் மேம்பாட்டு நிதி கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் தனிநபர் கடனாக வழங்கப்படுகிறது.

**2018 – 19** ஆம் ஆண்டில் ரூ.**20.73** கோடி நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக **5,839** கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு ரூ.**10,000/–** முதல் ரூ.**25,000/–** வரை வழங்கப்பட்டுள்ளது.

## 7.4. திறன் மேம்பாடு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் மனிதவள மேம்பாடு என்பது மிக முக்கியமான வழிமுறையாகும். எனவே திட்டத்தின் பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு என்பது ஒரு திட்டத்தின் அனைத்து கூறுகளும் வெற்றிகரமாக செயல்படுவதற்கு உறுதுணையாக இருக்கும் மிக முக்கியமான அம்சமாகும்.

### 7.4.1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பணியாளர்களுக்கான பயிற்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பணியாளர்களுக்கு பல்வேறு கருப்பொருள் குறித்து ஆழ்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் கூறுகளை புரிந்து கொள்ளுவதற்காக பணியாளர்களுக்கு, கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**தூண்டல் பயிற்சி – I (நிறுவன கட்டமைப்பு)**

இப்பயிற்சியின் கீழ் ஒரு மாவட்டத்தில் ஏதேனும் ஒரு ஊராட்சியில் உள்ள கிராமத்தில் திட்டத்தின் செயல்களை முழுமையாக அறியும் வண்ணம் தங்கி பயிற்சி பெறுதல், மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பயிற்சி பெறுதல், பெற்ற பயிற்சியினை வேறு ஒரு மாவட்டத்தில் உள்ள ஊராட்சியில் செயல்படுத்துதல் ஆகியன அடங்கும். இப்பயிற்சியில் பங்கேற்பவர்கள் இலக்கு மக்களின் வீடுகளுக்கு சென்று அவர்களின் சமூக பொருளாதார நிலைமையினை ஆய்வு செய்வர். மேலும் திட்டத்தின் குறிக்கோள்களை புரிந்து கொள்வதற்காக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச்

சங்கங்கள், சமூக தணிக்கை குழுக்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் துணைக்குழு உறுப்பினர்கள் ஆகியவர்களுடன் கலந்து உரையாடுவர்.

**தூண்டல் பயிற்சி – II**

தகவல் தொடர்பு திறன், கற்றதை வெளிப்படுத்தும் முறை, சுய உதவிக்குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நிலை, சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் கணக்கு பராமரிப்பு முறை, வாழ்வாதார உத்திகள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த ஒருங்கிணைப்பு பணிகள் ஆகியவை குறித்து இதில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**கருப்பொருள் குறித்த பயிற்சிகள் – III**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பணியாளர்களுக்கு, அவர்கள் திட்டத்தின் பல்வேறு கருப்பொருட்களை புரிந்து கொள்ளுவதற்கும் திறம்படச் செயல்படுவதற்கும் நுண்நிதி, வாழ்வாதார மேம்பாடு, இளைஞர் & திறன் பயிற்சி, மாற்றுத் திறன் & பாதிப்பு நிலை, மலைவாழ் மக்கள் நலம், திறன் வளர்ப்பு மற்றும் தகவல் தொடர்பு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு, அலுவலக மேலாண்மை, நிர்வாகம் & சமூகப்பொறுப்பு போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 7.4.2. சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான திறன் மேம்பாடு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வெற்றிகரமான செயல்பாட்டிற்கு சமுதாயம் சார்ந்த அமைப்புகள் அடித்தளமாக அமைந்துள்ளன. ஏழை மக்களுக்கு துணை நிற்கும் அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான

கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு சிறந்த சேவையினை அளிப்பதை உறுதிசெய்யும் பொருட்டு தேவையான தொடர் பயிற்சிகளைப் பெறுகின்றன. இச்சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு வழங்கப்படும் பயிற்சியில், நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை ஆகிய இரண்டு முக்கிய கூறுகளில் தனி கவனம் செலுத்தப்படுகிறது.

சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு வழங்கப்படும் அடிப்படை பயிற்சிகள்:

- புதிதாக உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்குநர், பிரதிநிதிகளுக்கான பயிற்சி மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு சமுதாய வழிகாட்டி கையேடு குறித்த பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் துணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் சமூகத் தணிக்கைக் குழு நிர்வாகிகளுக்கான பயிற்சி.
- வட்டார அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கான பயிற்சி.

**2019–20**ஆம் ஆண்டில் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு அவைகள் தர மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர்,

தேவைகள் கணக்கிடப்பட்டு அதன் அடிப்படையில் உரிய திறன் பயிற்சிகள் வழங்கப்படும்.

**7.4.3. முதன்மைப் பயிற்றுநர்கள் மற்றும் சமுதாய வளப் பயிற்றுனர்கள் தேர்வு**

எந்த ஒரு சமுதாய மேம்பாட்டுத் திட்டத்திற்கும் பெரும் சொத்தாக திகழ்வது சமூக மூலதனமாகும். சமுதாய மக்களை முன்னிறுத்தி வளர்ச்சித் திட்டங்களை உறுதிப்படுத்துவதற்கென தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கான வலைதளம் (eCRP.in) தனியாக உருவாக்கப்பட்டு, தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் மார்ச் மற்றும் ஜுன் 2018 ஆம் ஆண்டு பல்வேறு தரக்காரணிகளைக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்ட சமுதாய வளப் பயிற்றுநர்களின் பட்டியல் விபரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக அடையாளம் காணப்பட்ட சிறந்த வளப்பயிற்றுனர்களுக்கு பின்னர் முதன்மை பயிற்றுநர்களுக்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் தங்களது மாவட்டம் மற்றும் வட்டார அளவில் பல்வேறு கருப்பொருள் குறித்து இதர வளப் பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிப்பர். இப்பயிற்றுநர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட சமுதாயத்திற்கும் பயிற்சி அளிப்பர்.

சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் வரிசைப்படுத்தப்பட்ட முதன்மைப் பயிற்றுனர்களைக் கொண்டு பயிற்சி வழங்கப்படும். இதன் மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது அதன் திட்டம் சார்ந்த பயிற்சிகள் பயனாளிகளுக்கு உரிய வகையில் சென்றுள்ளதை உறுதிப்படுத்தும்.

பல்வேறு விதமான சமுதாய வள பயிற்றுநர்கள் மற்றும் அவர்களின் பொறுப்புகள் பின்வருமாறு:

**சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் –** சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் அடிப்படையில் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களாவர். இப்பயிற்றுநர்கள், ஊரகப் பகுதிகளில் செவ்வனே செயல்படும் சுய உதவிக் குழுக்களில் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களாக அறியப்பட்டவர்களாவர். மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கண்காணிக்கவும் அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்யவும் சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு வழங்கப்பட்டுள்ளது. இச்சுய உதவிக் குழுப் பயிற்றுநர்களின் முதன்மைப் பணியானது, தங்களின் மேற்பார்வையில் உள்ள சுய உதவிக் குழுக்களின் செயல்பாட்டினை சிறப்பாக செயல்படுத்துதலும் மற்றும் அவர்களின் தொடர் கூட்டங்கள், சேமிப்பு, உள்கடன், கடன் திருப்பம் மற்றும் கணக்குப் புத்தகங்களைப் பராமரித்தல் (பஞ்ச சூத்திரம்) போன்றவைகளை உறுதிப்படுத்துதலும் ஆகும்.

ஒவ்வொரு சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநரும் கிராம அளவில் 10 முதல் 15 சுய உதவிக் குழுக்களைக் கண்காணிக்கின்றார். இப்பயிற்றுநர்களை அவர்கள் தொடர்புடைய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் கண்காணிக்கின்றன. தங்கள் ஊராட்சியில் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சுய உதவிக் குழுக்களை கண்காணிப்பதற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலமாக சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு

மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. **31.03.2019** வரை 15,912 பயிற்றுநர்கள் விபரம் வலைதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது

**2019–20**ஆம் ஆண்டில் இ–மதி வலைத்தளத்தில் சுய உதவிக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாட்டினை நிகழ் பொழுதில் (Real Time) கொண்டு வருவதற்காக அவைகளின் மாதாந்திரப் பரிவர்த்தனைகள், மாதாந்திர வங்கி ஒத்திசைவுக் கணக்குகள் மற்றும் புத்தகப் பராமரிப்பு போன்றவற்றை பதிவு செய்யும் மிக முக்கியமான பணியினை சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுனர்கள் மேற்கொள்வதன் மூலம் சுய உதவிக் குழு இயக்கம் வளர்ச்சி பெறவும் பெரும் உயரத்தை எட்டவும் உதவிபுரிகின்றனர்.

**சமுதாய மாற்றுத் திறனாளி வழிநடத்துனர்கள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாற்றுத் திறனாளிகளின் நலவாழ்விலும் அவர்களின் மேம்பாட்டிலும் சிறப்பு கவனம் செலுத்துகிறது. மாநிலத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிதல், ஆதரவளித்தல் மற்றும் மறுவாழ்வு ஏற்படுத்துதல் போன்ற செயல்பாடுகளில் சமுதாய மாற்றுத் திறனாளி வழிநடத்துனர்கள் ஈடுபடுகின்றனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு மேலாண்மைப் பயிற்சியினை இவ்வழிநடத்துனர்களுக்கு வழங்கி அவர்களை களப்பணியாளர்களாக உருவாக்கியுள்ளது. மாற்றுத் திறனாளிகளின் தேவைகளைக் கண்டறிந்து, அவர்கள் மறுவாழ்வுப் பயிற்சிகள் பெற்றிட வழிநடத்துதல் மற்றும்

ஒருங்கிணைப்பு மூலமாக அரசுத் திட்டங்களில் பயன் பெறுவதற்கு உதவுதல் இவர்களின் முக்கிய பணியாகும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் **31.03.2019** வரை **6,370** சமுதாய மாற்றுத் திறனாளி வழிநடத்துனர்கள் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். **2019–20**ஆம் ஆண்டில் **110** வட்டாரங்களில், **3.30** கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

**சமுதாய வளப் பயிற்றுநர்கள் (வேலை வாய்ப்பு)**

கிராமப்புற ஏழை இளைஞர்களை இலக்காகக் கொண்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 'தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா' என்ற வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இது போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த இளைஞர்களை அடையாளம் கண்டறிதல் மற்றும் ஒன்றுதிரட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இத்தகைய ஒருங்கிணைக்கும் பணிகளுக்காக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சமுதாய வளப் பயிற்றுநர்களை (வேலைவாய்ப்பு) ஈடுபடுத்தியுள்ளது. இப்பயிற்றுநர்கள் கிராம அளவில் இளைஞர்கள் பற்றிய புள்ளி விபரங்களை பராமரித்தல், ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பு அல்லது சுயவேலைவாய்ப்பு தரும் திறன் பயிற்சிகளுக்கு செல்லும் இளைஞர்களை வழிநடத்துதல் மற்றும் அவர்களைக் கண்காணித்தல் போன்ற பணிகளை செய்கின்றனர். **31.03.2019** வரை **8,000** பெண்கள்

சமுதாய வளப்பயிற்றுநர்களாக (வேலை வாய்ப்பு) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுகின்றனர்.

**சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்**

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மிக அதிக அளவிலான நிதி உள்ளாக்கத்தினை ஏற்படுத்தும் நோக்கில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வங்கி இணைப்பு, கடன் வசதி, கடன் திருப்பம், வட்டி மானியம், மின்னணு நிதி மேலாண்மை மற்றும் காப்பீடு போன்ற செயல்பாடுகளில் முறையான கூட்டங்கள் நடத்தி அவர்களுக்கு விழிப்புணர்வையும் வழிகாட்டுதலையும் ஏற்படுத்துகின்றனர். மேலும் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கியிலிருந்து கடன் இணைப்பு பெறுவதற்கும் உதவி செய்கின்றனர். ஒரு தொகுப்பிற்கு வழக்கமாக இரண்டு சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் இருப்பர். அவர்கள் சுய உதவிக் குழு – வங்கி கடன் இணைப்பு, நிதி உள்ளாக்கம், நிதி கல்வி, காப்பீடு, அரசு மற்றும் வங்கிகளைச் சார்ந்த புத்தறிவுப் பயிற்சி பெற்றுள்ளனர்.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு மாவட்டத்தில் முதன்மை பயிற்றுநர்கள் புத்தறிவுப் பயிற்சி அளித்த பின், மேற்கண்ட தலைப்புகளில் இந்திய வங்கி மற்றும் நிதி நிறுவனம் (IIBF) மூலம் 2 வார பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் பயிற்சி முடித்த பிறகு, இணைய வழித் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டு வெற்றி பெற்ற நபர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தற்போது வரை **1,798** சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அதில் 647 ஒருங்கிணைப்பாளர்கள் இந்திய வங்கி மற்றும் நிதி நிறுவனத்தின் (IIBF) மூலம் பயிற்சி பெற்றுள்ளனர். மீதம் உள்ள 1,151 சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு 2019–2020ஆம் ஆண்டில் பயிற்சி வழங்கப்படும்.

### 7.4.4. வங்கி அலுவலர்களுக்கான பயிற்சி

சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்புப் பெற்றுத் தருவது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். சுயஉ உதவிக் குழுக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் வருவாய் பெருக்கத்திற்கு கடன் இணைப்பு சரியான வட்டி விகிதத்தில் தேவைப்படுகிறது. வங்கிக் கடன் அளிப்பதில் வங்கி மேலாளர்கள் / அலுவலர்கள் பணியானது மிக முக்கியம் வாய்ந்ததாகும். எனவே சுய உதவிக் குழு இயக்கம், வறுமை ஒழித்தலில் அதன் பங்கு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூறுகள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தும் மற்ற திட்டங்கள் பற்றி வங்கி அலுவலர்களுக்கு உணர வைத்தல் அவசியமாகிறது. இந்த நோக்கத்திற்காக சுய உதவிக் குழு – வங்கி இணைப்பு, நிதிக் கல்வி, நிதி உள்ளாக்கம், டிஜிட்டல் அறிவு போன்ற பல தலைப்புகளில் பயிற்சிகள், கருத்தரங்குகள், கருத்துப் பட்டறைகள் நடத்தப்படுகிறது. மாநில மற்றும் மாவட்ட அளவில் வங்கியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு திறன் மிக்க வளப்பயிற்றுநர்கள் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 7.4.5. 2018–19ஆம் ஆண்டில் திறன் மேம்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

- சுய உதவிக்குழு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு பயிற்சிகள் வழங்குவதற்காக 11,764 சமுதாய சுய உதவிக்

குழு பயிற்றுநர்களுக்கு கணக்கு பாராமரிப்பில் பயிற்சி வழங்கப்பட்டது.

- பகுதி 2ல் உள்ள வட்டாரங்களில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதிகள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வங்கியாளர்கள் உள்ளிட்ட 3,327 நபர்களுக்கு நிதி உள்ளாக்கத்தை வலிமைப்படுத்தும் பயிற்சி வழங்கப்பட்டது
- பகுதி 3ல் உள்ள வட்டாரங்களில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதிகள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வங்கியாளர்கள் உள்ளிட்ட 2,450 நபர்களுக்கு நிதி உள்ளாக்கத்தை வலிமைப்படுத்தும் பயிற்சி வழங்கப்பட்டது.
- பகுதி 2 மற்றும் 3ல் உள்ள வட்டாரங்களில் 4,281 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் 4,281 கணக்கு புத்தக பராமரிப்பாளர்கள் மற்றும் 5,390 & 7,440 உறுப்பினர்களுக்கு (மொத்தம் 12,830) கணக்கு புத்தக பராமரிப்பு பயிற்சி வழங்கப்பட்டது.
- 2017–18ஆம் ஆண்டு இறுதிக் காலாண்டில் ஏற்படுத்தப்பட்ட சுய உதவிக்குழுக்கள் மற்றும் 2018–19ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சுய உதவிக்குழுக்களின் ஊக்குநர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர்களுக்கு 7,172 தொகுப்புகளில் (தொகுப்பிற்கு 30 உறுப்பினர்கள்) பயிற்சி வழங்கப்பட்டது.

### 7.5. தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி

தமிழ்நாட்டில் கிராமப்புற இளைஞர்களுக்காக 2012 முதல் தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தை செயல்படுத்த (முந்தைய பெயர் ஆஜிவிகா திறன் வளர்ப்பு)

தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் பொறுப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

இத்திட்டமானது மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மூலம் மாநில அரசின் வாயிலாக **60:40** விகிதாச்சார அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கிராமப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பிற்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. "ஊரக ஏழை இளைஞர்களைப் பொருளாதார ரீதியாக சுதந்திரம் உடையவர்களாகவும் மற்றும் உலகளவில் பொருத்தமான தொழிலாளர் சக்தியாகவும் மாற்றுவதே" இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டம் **18** முதல் **35** வயதிற்கு உட்பட்ட ஊரக ஏழை இளைஞர்களுக்கு தொடர்ச்சியான மாத வருமானம் அல்லது மாநில அரசின் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயத்திற்கு மேலான மாத வருமானத்துடன் கூடிய வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- ஊரக பகுதியின் ஏழைக் குடும்பங்களில் உள்ள **18** முதல் **35** வயது வரையிலான ஆண், பெண் இருபாலரும் இப்பயிற்சிக்கு தகுதியானவர்களாக கருதப்படுவார்கள். (பெண்கள், பழங்குடியினர், விதவைகள், கொத்தடிமைகள் மற்றும் திருநங்கைகள் ஆகியவர்களுக்கான அதிகபட்ச வயது வரம்பு **45** ஆகும்.)

- நிரந்தர பதிவெண் பெற்ற, வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சியில் நிபுணத்துவம் பெற்ற பயிற்சி நிறுவனங்கள் / தொழில் நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் திட்ட செயலாக்க முகமையாக விண்ணப்பிக்கவும், பயிற்சி

வழங்கவும் தகுதியானவர்களாக அனுமதிக்கப்படுகின்றனர்.

- சமூகத்தில் பின் தங்கிய பிரிவினர்களான தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 62%, பழங்குடியினர் 3%, சிறுபான்மையினர் 16%, மாற்றுத்திறனாளிகள் 3% மற்றும் பெண்கள் 33% (அனைத்து பிரிவுகளிலும் சேர்த்து) ஆகியோரைக் கட்டாய ஒதுக்கீடு மூலம் சமூக உள்ளாக்கத்தின் கீழ் சேர்ப்பது இத்திட்டத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும்.
- பயிற்சி பெற்ற 70% இளைஞர்களுக்கு கட்டாய பணியமர்வு.
- தொழில் பயிற்சி பிரிவு, திறன் தேவை மற்றும் வேலைவாய்ப்பு சந்தையின் தேவைக்கேற்ப பயிற்சி காலமானது 3 முதல் 12 மாதங்கள் வரை வேறுபடும்.
- உண்டு உறைவிடப் பயிற்சியாகவும், உண்டு உறைவிடம் அல்லாத பயிற்சியாகவும் வழங்கப்படுகிறது.
- இளைஞர்களைப் பயிற்சிக்காக ஒன்றுதிரட்டுவதும் சமுதாய அடிப்படையிலான கண்காணிப்பும் களப்பணியாளர்களான சமுதாய வள பயிற்றுநர் / வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் – திறன் மூலம் (CRP Jobs, BC skills) எளிதாக்கப்பட்டுள்ளது.
- பயிற்சி கட்டமானது தொழிற் சார்ந்த திறன்கள் மற்றும் தொழிற் சாரா திறன்களான ஆங்கில அறிவு, அடிப்படை கணினி அறிவு, மென் திறன்கள் மற்றும் பணியிடப் பயிற்சி (OJT) ஆகியவற்றிற்கான பாடத்திட்டத்தை உள்ளடக்கியதாகும்.

- பயிற்சியில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மதிப்பீடு மற்றும் சான்றிதழ்கள் அரசு நிறுவனங்களான தேசிய தொழிற் பயிற்சி குழு (NCVT) மற்றும் திறன் பிரிவு குழுவின் மூலம் (SSC) வழங்கப்படுகிறது.
- குறைந்தபட்ச மாத வருமானம் ரூ.6000/– அல்லது மாநிலத்தில் பகுதித் திறன் வாய்ந்த இளைஞர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்திற்கு குறையாமல் பயிற்சியளிக்கப்பட்ட இளைஞர்களுக்கு பணியமர்வின் போது வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது
- இத்திட்டம் பணியமர்வுக்கு பின்பான உதவித் தொகை, பணி முன்னேற்றம் மற்றும் இடப் பெயர்வு ஆதரவு மைய வசதி ஆகியவற்றோடு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பணியமர வழிவகை செய்கிறது.
- பணியமர்வுக்கு பின் ஓர் ஆண்டு தொடர் கண்காணிப்பு அளிக்கப்படுகிறது.
- இளைஞர்களைத் திரட்டும் நிகழ்வில் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

**மாநிலத்தில் வழங்கப்படும் முக்கிய திறன் வளர்ப்புப் பயிற்சி பிரிவுகளாவன:**

| | |
|---|---|
| ஆட்டோமொபைல் மற்றும் ஆட்டோமோட்டிவ் | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் |
| சுகாதாரம் | மின் மற்றும் மின்னணுவியல் |
| தோல் துறை | கட்டுமானம் |
| தகவல் தொழில்நுட்பம் | விவசாய உபகரணங்கள் பராமரிப்பு மற்றும் குறு பாசன வசதி |

| | |
|---|---|
| ஆயத்த ஆடைகள் | வெல்டிங் |
| சில்லரை வர்த்தகம் | தொழில் சார்ந்த உற்பத்தி |
| வங்கி நிதி சேவை மற்றும் காப்பீடு | தளவாடங்கள் மற்றும் விநியோக மேலாண்மை |
| அழகு மற்றும் ஆரோக்கியம் | புதுப்பிக்கத்தக்க ஆற்றல் |
| கப்பல் கட்டுமானம் மற்றும் பராமரித்தல் | மூலதனப் பொருட்கள் |

**31.3.2019** வரை **43,530** இளைஞர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டு உள்ளது.

**அட்டவணை 7.4**
**தொழில் வாரியான திறன் பயிற்சி சாதனை விபரம்**
**(2012–13 முதல் 31.03.2019 வரை)**

| **வ. எண்** | **தொழில் பிரிவு** | **பயிற்சி பெற்றவர்கள்** |
|---|---|---|
| 1 | தொழிற்சாலைகள் | 3,753 |
| 2 | தகவல் தொழில்நுட்பம் | 13,948 |
| 3 | உடைகள் மற்றும் ஆயத்த ஆடைகள் | 9,590 |
| 4 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | 3,033 |
| 5 | கட்டுமானம் | 771 |
| 6 | ஆட்டோமொபைல் | 3,903 |
| 7 | அழகுக்கலை பயிற்சி | 786 |
| 8 | தீ மற்றும் பாதுகாப்பு | 8 |
| 9 | சுகாதாரம் | 2,454 |
| 10 | சில்லரை வணிகம் | 2,085 |
| 11 | தோல் பொருட்கள் | 270 |
| 12 | ஓட்டுநர் பயிற்சி | 2,115 |
| 13 | ஆட்டோமோடிவ் | 310 |
| 14 | மின்னணுவியல் | 182 |
| 15 | மூலதனப் பொருட்கள் | 91 |
| 16 | தளவாடங்கள் | 197 |
| 17 | வங்கி நிதி சேவை மற்றும் காப்பீடு | 34 |
| **மொத்தம்** | | **43,530** |

**2016–17**ம் ஆம் ஆண்டு முதல், அரசு கூடுதல் தலைமை செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட திட்ட ஒப்புதல் குழு மூலம் இளைஞர்களுக்கு பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு திட்டங்கள் திட்ட செயலாக்க முகமைகளுக்கு மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் **2016** முதல் **2019** வரையிலான ஆண்டுகளுக்கான இலக்காக **44,416** இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, இதுவரை **57** பயிற்சி நிறுவனங்களுக்கு திட்ட ஒப்புதல்கள் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2019** முதல் **2022** வரையிலான காலத்திற்கு மொத்தம் **84,000** இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க **1,026.50** கோடி ரூபாய் மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### 7.5.1. திறன் மேம்பாட்டு முயற்சிகள்

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து நிலை அலுவலர்களையும் தயார்படுத்தும் வகையில் உணர்திறன் கருத்துப்பட்டறைகள் மாநில மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் கருப்பொருள்கள் தெரிவு செய்யப்பட்டு அவை சார்ந்த தொடர் பயிற்சிகள் திட்ட செயலாக்க முகமைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### 7.5.2. தொடர் கண்காணிப்பு

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்ட செயலாக்கத்தின் தொடர் கண்காணிப்பினை உறுதி செய்திடும்

வகையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலுவலர்கள் ஆய்வுகள் மேற்கொள்ள கள ஆய்வுக்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டு பயிற்சி மையங்களுக்கு சென்று தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் & பஞ்சாயத்து ராஜ் (NIRD&PR) மத்திய தொழில்நுட்ப ஆதரவு நிறுவனமாக தமிழ்நாட்டிற்காக தெரிவு செய்யப்பட்டு இத்திட்டத்தின் கீழ் செயல்படும் திட்ட செயலாக்க நிறுவனங்களை சுயமாக கண்காணித்து வருகிறது.

### 7.5.3.தகவல் கல்வி தொடர்பு செயல்பாடுகள்

### i. தொலைபேசி அழைப்பு மையம் ( Dial a Job)

மாநில இயக்க மேலாண்மை அலகானது இத்திட்டத்திற்கு சரியான பயனாளிகளை தேர்ந்தெடுத்து ஒருங்கிணைக்கும் பொருட்டு Dial a Job எனும் அழைப்பு மையத்தை அமைத்து செயல்படுத்தி வருகிறது. இவ்வழைப்பு மையம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை அழைப்பாளர்களுக்கு கீழ்க்கண்ட தகவல்களை வழங்கி வருகிறது.

- திட்ட விபரம் (DDU-GKY)
- மாநில / மாவட்டங்களில் தற்பொழுது செயல்படும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அவற்றில் வழங்கப்படும் பயிற்சிகளின் விபரம்
- கிராமப்புற இளைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்திட ஏதுவாக மாவட்ட அளவிலான அலுவலக தொடர்பு விவரம் / பயிற்சி நிறுவனங்களின் விபரம் அளித்தல்.

- மாவட்ட அளவில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஏற்படுத்த நடைபெறும் வேலைவாய்ப்பு முகாம்களில், விருப்பமுள்ள இளைஞர்கள் பங்கேற்க உதவி செய்தல்.

**ii. சுவரொட்டிகள்**

தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் **02.02.2019** அன்று விளம்பர சுவரொட்டிகள் வெளியிடப்பட்டன.

இவ்விளம்பர சுவரொட்டிகளில் இத்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அழைப்பு மையத்தின் விபரங்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இளைஞர்கள் பதிவு செய்வதற்காக திட்ட விபர சுவரொட்டிகள் அனைத்து கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் / வட்டார அலுவலகங்கள் / பொது இடங்களிலும் வைக்கப்படவுள்ளது.

கிராமப்புற இளைஞர்கள் இத்திட்டத்தின் பயன்களை அறிந்து கொள்ள உதவும் பொருட்டு மேற்படி சுவரொட்டிகள் அனைத்து முக்கிய இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட அளவிலான அலுவலர்கள் வாயிலாக உறுதி செய்யப்படுகிறது.

**iii. பயிற்சி அட்டவணை**

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தை சிறந்த முறையில் கண்காணிக்க முதன் முறையாக பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி அட்டவணை இத்திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து பயிற்சி நிறுவனங்களின் இலக்குகளைப் பற்றிய விவரங்களை

வழங்குகிறது. மாவட்ட அளவிலுள்ள அணிகள் செயல் திட்டம் தயாரிக்கவும், இளைஞர்களை பயிற்சிக்கு ஒன்று திரட்டவும் இப்பயிற்சி அட்டவணை பயனுள்ளதாக உள்ளது.

### iv. உலக முதலீட்டாளர்கள் மாநாடு

சென்னையில் நடைபெற்ற 2018–19 ஆம் ஆண்டிற்கான உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை வாய்ப்பாக பயன்படுத்தி, தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கமானது, தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டம் தொடர்பான விழிப்புணர்வினை முதலீட்டாளர்கள்/ முதன்மை செயல் அலுவலர்கள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களின் மத்தியில் ஏற்படுத்தியது.

இந்த முதலீட்டாளர்களின் கூட்டத்தில் தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்ட மாநில மேற்பார்வை அலகு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் பங்கேற்று அந்நிறுவனத்தின் தோற்றம் மற்றும் தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் மாநில அளவிலான தற்போதைய செயல்பாடுகளையும் எடுத்துரைத்துள்ளது. இந்த முதலீட்டாளர்களின் கூட்டத்தின் முக்கிய ஒரு விளைவாக திட்ட பயனாளிகளுக்கு தரமான ஆங்கில மற்றும் மென் திறன் பயிற்சி வழங்க பயிற்சியாளர்களுக்கான பயிற்றுனர்கள் உருவாக்கிட ‘‘பிரிட்டிஷ் கவுன்சில்’’ நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

### v. முதல் நிலை அலுவலர்கள் (CXO) கூட்டம்

மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கடந்த அக்டோபர் மாதம் 2018ல் ஆடை தயாரிப்பு நிறுவனம் அதிகமுள்ள திருப்பூரில், தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் கீழ் தொழில் தேவைகள் பற்றி, பயிற்சி நிறுவனத்துடன்

கலந்தாலோசிக்க முதல் நிலை அலுவலர்கள் (முதன்மை நிர்வாக அலுவலர், முதன்மை செயல் அலுவலர்) கூட்டத்தை நடத்தியது. இக்கூட்டமானது திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் சார்பு நிறுவனங்களையும், இத்திட்டத்தின் கீழ் செயல்படும் பயிற்சி நிறுவனங்களையும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தையும் ஒருசேர ஒருங்கிணைக்க உதவியது. ஆயத்த ஆடை பிரிவில் திறன் பணியாளர்களின் தேவையை நிவர்த்தி செய்ய இக்கூட்டத்தில், திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத்திற்கும், திறன் பயிற்சி வழங்கும் பயிற்சி நிறுவனங்களுக்கும் இடையே பயிற்சி பெற்றவர்களை பணியமர்த்திக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### vi.பயிற்சியால் பயனடைந்தோர் சந்திப்பு (Alumni meet)

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 200க்கும் மேற்பட்ட பயிற்சியால் பயனடந்தோர் சந்திப்பு கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 25.02.2019 அன்று சேலத்தில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் இத்திட்டத்தில் பயிற்சியால் பயனடந்தோர் கலந்து கொண்டு தங்களது பயிற்சி அனுபவங்கள் குறித்து கருத்து பரிமாற்றம் செய்தனர். இந்த அனுபவ பரிமாற்றமானது, தற்பொழுது பயிற்சி பெற்று வருகின்ற புதிய பயிற்சியாளர்களை ஊக்குவிப்பதாக இருந்தது. பயிற்சி பெற்று பணியமர்த்தப்பட்டவர்கள், பயிற்சி பெறுபவர்கள் மற்றும் பயிற்சியில் சேர இருக்கும் இளைஞர்களுக்கிடையே 2019–20 ஆம் ஆண்டில் அடிக்கடி கூட்டங்கள் நடத்தப்படவும் அவர்களிடையே கலந்துரையாடல் ஏற்படவும் இக்கூட்டம் பயனுடையதாக அமைந்தது.

### 7.5.4. விரிவுபடுத்தப்பட்ட கிராம சுயாட்சி திட்டம் (EGSA)

மத்திய அரசின் நிதி ஆயோக் அமைப்பானது விரிவுபடுத்தப்பட்ட கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களை விருப்ப மாவட்டங்களாகத் (Aspirational Districts) தேர்வு செய்வதின் அடிப்படையில் அம்மாவட்டங்களில், கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் படி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அ. விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் வேலையற்ற இளைஞர்களின் விபரம் 100 விழுக்காடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆ.அனைத்து வட்டாரங்களிலும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

இ. தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

ஈ. ஒவ்வொரு கிராமத்திலும் கள ஒருங்கிணைப்பாளர் (திறன்)களுக்கு தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டப் பயிற்சிக்கு, இளைஞர்களை ஒன்றுதிரட்டும் பணியை எளிதாக்க பயிற்சி வழங்கப்பட்டது.

உ. விரிவுபடுத்தப்பட்ட கிராம சுயாட்சி திட்ட (EGSA) மாவட்டங்களில் மாணவர்களை ஒன்று திரட்டுவதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

ஊ. இம்மாவட்டங்களில் உள்ள அனைத்து வங்கி கிளைகளிலும் தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டம்

குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சுவரொட்டிகள் தகவலுக்காக பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

### 7.5.5. திறன் வளர்ப்பு பயிற்சிக்கான பதிவு செயலி (கௌசல் பஞ்சி)

**18** முதல் **35** வயதிற்குட்பட்ட கிராமப்புற இளைஞர்களின் திறன் விபரங்களை சேகரித்து பதிவு செய்திட மத்திய அரசின் ஊரக மேம்பாட்டு அமைச்சகம் திறன் வளர்ப்பு பயிற்சிக்கான பதிவு செயலியை (கௌசல் பஞ்சி) துவக்கியுள்ளது. திட்ட செயலாக்க முகமைகள் இச்செயலி மூலம் பயிற்சியாளர்களின் திறன் தேவைகளை பதிவு செய்வதில் பங்களிக்க முடியும்.

ஒரு இளைஞர் ஏற்கனவே உள்ள சமூக பொருளாதார மற்றும் சாதி வாரியான கணக்கெடுப்பின் விவரங்களை பயன்படுத்தியோ அல்லது புதிய விண்ணப்பதாராகவோ விவரங்களை உள்ளிடுவதன் மூலம் தன்னை பதிவு செய்யலாம்.

இச்செயலி மத்திய ஊரக அமைச்சகம், மாநில அரசு மற்றும் பயிற்சி அளிக்கும் திட்ட செயலாக்க நிறுவனங்களுக்கு உதவும் வகையில் கிராமப்புற இளைஞர்களின் பயிற்சி தேவைகள், விருப்பங்கள் மற்றும் எதிர்பார்க்கும் வேலைவாய்ப்பு துறை ஆகியவற்றை அறிந்து கொள்ள உதவுகிறது.

**31.03.2019** வரை இச்செயலி மூலமாக **3,68,734** இளைஞர்களின் விவரங்களை பதிவு செய்து தமிழ்நாடு தேசிய அளவில் முதலிடத்தை பெற்றுள்ளது.

### 7.5.6. ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs)

கிராமப்புற இளைஞர்களிடையே வேலையின்மையைக் குறைக்கும் நோக்கத்தோடு கனரா வங்கி மற்றும் சிண்டிகேட்

வங்கியால் ஊரக மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்பு பயிற்சி (RUDSETI) நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக இம்மாதிரியை கொண்டு ஊரகப்பகுதிகளில் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கிராமப்புற இளைஞர்களை தொழில் முனைவோராக உருவாக்கிட ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs) அமைக்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள இளைஞர்களுக்கான பயிற்சி செலவினத்தையும் பயிற்சி நிறுவனத்தின் உள்கட்டமைப்பிற்கான நிதி உதவியையும் மத்திய ஊரக வளர்சிசி அமைச்சகம் ஏற்கிறது. மாநில அரசுகள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், பாரத சிறு தொழில் வளர்ச்சி வங்கி (SIDBI), தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) போன்ற மேம்பாட்டு நிறுவனங்களும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் **(RSETIs)** பயிற்சித் திட்டங்களுக்கு நிதி உதவிகளை செய்து வருகிறது.

இந்திய அளவில் நாளது வரை **586** ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையங்களும், (RSETI) தமிழகத்தில் **30** ஊரக சுய வேலைவாய்ப்பு (RSETI) பயிற்சி நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய பயிற்சி நிறுவனங்களின் பயனுள்ள செயல்பாட்டினை உறுதிசெய்திட வங்கிகளின் மூலம் மாநில அளவில் / வட்டார அளவில் / மண்டல அளவிலான பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இந்நிறுவனங்கள் வெற்றிகரமாக செயல்பட முக்கிய பங்கு வகித்து வருகின்றனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களுக்குத் தேவையான இளைஞர்களைப் பயிற்சிக்காக ஒன்று திரட்டுவதிலும், அதற்கான

நிதி விடுவிப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளை மாநில அளவில் மேற்கொள்வதிலும் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

**ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் நோக்கங்கள்**

வேலைவாய்ப்பற்ற ஊரக இளைஞர்களுக்கு,

- ஊரகப் பகுதியில் சுய வேலைவாய்ப்பு மற்றும் ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகளை பெற்றிட வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை கண்டறிந்து விளக்கமளித்து, ஊக்கப்படுத்தி பயிற்சி அளித்தல்.
- வேளாண் சார்ந்த (உற்பத்தி மற்றும் செயல்முறை) மற்றும் பொதுவான தொழில் முனைவோருக்கான திட்டங்களில் இளைஞர்கள் அறிவு மற்றும் திறன்கள் பெற பயிற்சி திட்டங்கள் ஏற்படுத்துதல்.
- பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருதல்.
- பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வங்கி கடன் இணைப்பு பெற உதவுதல்.

**தேர்வு முறை**

கிராமப்புறத்தைச் சார்ந்த 18 முதல் 45 வயதிற்கு உட்பட்ட, வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள, தொடர்புடைய பிரிவில் அடிப்படை அறிவு கொண்ட இளைஞர்கள் எவ்வித இன, மத, பாலின வேறுபாடின்றி சுய வேலைவாய்ப்பு அல்லது ஊதியத்துடனான வேலைவாய்ப்பு பெறுவற்கு இத்திட்டத்தின் கீழ் இலவசமாக பயிற்சி பெறலாம்.

ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி (RSETI) நிறுவனம் துவங்கப்பட்ட **2011–12** முதல் **31.03.2019** வரை **53,755** இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

மேலும் **2018–19** ஆம் ஆண்டு மாநிலத்தில் இயங்கி வரும் பயிற்சி நிறுவனங்களின் விபரம், பயிற்சி மற்றும் பயன்பெற்ற இளைஞர்களின் விபரம் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.5**

**RSETI பயிற்சி மற்றும் பயன்பெற்றோர் விபரம் – 2018–19**

| வ. எண் | வங்கியின் பெயர் | RSETI பயிற்சி நிறுவங் களின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றவர்கள் | பயன் பெற்றவர்கள் | சுய வேலைவாய்ப்பு | | ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வங்கி கடன் | சுய நிதி | |
| 1 | இந்தியன் ஓவர் சீஸ் வங்கி | 11 | 1451 | 1357 | 683 | 674 | 94 |
| 2 | இந்தியன் வங்கி | 10 | 1437 | 1355 | 521 | 834 | 82 |
| 3 | கனரா வங்கி | 6 | 1449 | 1316 | 728 | 588 | 133 |
| 4 | பாரத ஸ்டேட் வங்கி | 2 | 433 | 386 | 150 | 236 | 47 |
| 5 | RUDSETI (மதுரை) | 1 | 214 | 171 | 74 | 97 | 43 |
| **மொத்தம்** | | **30** | **4,984** | **4,585** | **2,156** | **2,429** | **399** |

## ஆண்டு செயல் திட்டம் – 2019–20

ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் ஊரகப் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் அச்சாணியாகக் கருதப்படுகிறது. **2019–20** ஆண்டிற்கு ஒரு மாவட்டத்திற்கு **750** இளைஞர்கள் வீதம் **30** மாவட்டங்களில் மொத்தம் **22,500** கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க

மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 7.6. நிதி உள்ளாக்கம் மற்றும் நுண்கடன்

### 7.6.1. சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி கடன் இணைப்பு

தமிழக அரசின் பெருமைமிகு திட்டமான மகளிர் சுய உதவி குழுத்திட்டம் நபார்டு நிறுவனத்தால் **1992** ஆம் ஆண்டு முறைப்படுத்தப்பட்டது. அதே ஆண்டில் ரிசர்வ் வங்கி (RBI), சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக்கடன் இணைப்புத் திட்ட சுற்றறிக்கை வெளியிட்டு நடைமுறைப்படுத்தியது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் ஜுலை முதல் தேதியில், அறிவுரைகள் அடங்கிய தலைமை சுற்றறிக்கையினை (Master Circular) தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. நமது நாட்டிலேயே சுய உதவிக் குழு – வங்கிக்கடன் இணைப்பு திட்டத்தின் மூலம் அதிக எண்ணிக்கையிலான குழுக்களுக்கு கடன் வழங்குவதிலும் மற்றும் அதிக அளவில் கடன் தொகை வழங்குவதிலும் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது.

சுய உதவிக் குழு – வங்கிக் கடன் இணைப்பு திட்டத்தின் தலையீட்டால் முறையான வங்கி மற்றும் நிதி சேவைகள் ஏழை மக்களை அடைந்து அவர்களுக்கு“*கடன் பெறும் உரிமை*” உள்ளது என்பதை உறுதி செய்துள்ளது. இந்த கடன் பெறும் உரிமை, வங்கிகளை சுலபமாக அணுகுதல் மட்டும் அல்லாமல் போதுமான கடன் அளவு, உரிய நேரத்தில் மற்றும் குறைந்த வட்டி விகிதத்தில் கிடைப்பதை உறுதி செய்கிறது. வங்கிக்கடன் இணைப்பு எண்ணற்ற குடும்பங்கள் கடன் சுமையிலிருந்து மீளவும், வருமானம் ஈட்டக்கூடிய பல்வேறு தொழில்களை தொடங்கி நடத்திடவும், வீட்டின் வருமானத்தைப் பெருக்கி

குடும்ப சூழ்நிலையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ளவும் மற்றும் வறுமை சுழற்சியிலிருந்து விடுபடவும் உதவிகரமாக உள்ளது.

மகளிர், வங்கிகளில் குறைந்த வட்டியில் கடன் பெறவும் மற்றும் வங்கிகளுடன் வலுவான நல்லுறவை ஏற்படுத்திக்கொண்டு பொருளாதார தொழில்கள் தொடங்கி நடத்தவும், அதிக அளவு கடன்கள் தொடர்ச்சியாக பெறவும் சுய உதவிக் குழு கடன் இணைப்பு திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் வட்டி மானிய பிரிவின் கீழ் நியாயமான வட்டி விகிதத்தில், குறித்த நேரத்தில், போதுமான அளவு கடனுதவி பெறுவதின் மூலம் நமது மாநிலத்தில் பெண்களுக்கு பொருளாதார அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**அட்டவணை 7.6**

**மகளிர் சுய உதவிக் குழு – ஆண்டு வாரியான இலக்கு (ம) சாதனை**

| ஆண்டு | சுய உதவி குழுக்களின் எண்ணிக்கை | இலக்கு (ரூ.கோடியில்) | சாதனை தொகை (ரூ.கோடியில்) | சாதனை (சதவீதத்தில்) | சராசரி கடன் அளவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 2011 வரை | - | - | 11,603.83 | - | - |
| 2011-12 | 2,34,386 | 4,000.00 | 4,030.00 | 101 | 1.72 |
| 2012-13 | 2,23,172 | 4,000.00 | 4,031.94 | 101 | 1.81 |
| 2013-14 | 2,37,719 | 6,000.00 | 6,035.56 | 101 | 2.54 |
| 2014-15 | 2,41,953 | 6,000.00 | 6,171.74 | 103 | 2.55 |
| 2015-16 | 2,28,746 | 6,000.00 | 6,191.49 | 103 | 2.71 |
| 2016-17 | 2,16,738 | 6,000.00 | 6,387.52 | 106 | 2.95 |
| 2017-18 | 2,72,089 | 7,000.00 | 8,331.73 | 119 | 3.06 |
| 2018-19 | 2,95,612 | 11,000.00 | 11,448.99 | 110 | 3.87 |
| **மொத்தம்** | **19,50,415** | **50,000.00** | **52,628.97 (64,232.80)** | **105** | **2.70** |

கடந்த **2018–19** ஆம் ஆண்டில், **2,95,612** மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.**11,448.99** கோடி வங்கி கடன் வழங்கியதன் மூலம் வங்கி கடன் இணைப்பு இலக்கான

ரூ.11,000 கோடிக்கு மேல் எய்தி சாதனை புரிந்துள்ளது. இந்த சாதனை, நமது மாநிலத்தில் மகளிர் சுய உதவி குழு வங்கி கடன் இணைப்பு திட்டத்தின் கீழ், முதல் முதலாக எப்போதும் கண்டறியாத உயரிய சாதனையாகும்.

இந்த சாதனையால், நமது மாநிலத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சராசரி கடன் ரூ.3.87 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. இது தேசிய அளவில் சராசரி கடன் அளவான ரூ.1.94 இலட்சங்களை விட அதிகமானதாகும்.

நமது மாநிலத்தில் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் வருமானம் ஈட்டக்கூடிய, நீடித்ததன்மையுடைய தொழில்கள் தொடங்கி குடும்ப வருமானத்தை உயர்த்திக் கொண்டு வறுமையிலிருந்து வெளிவர, ஒவ்வொரு சுய உதவி குழுவின் சராசரி வங்கிக் கடனுதவி அளவு ரூ.6 இலட்சங்களாக இருக்க வேண்டுமென்பது அரசின் குறிக்கோளாகும்.

பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள், கிராமப்புற வங்கிகள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் (DCCB/PACCs) மூலமாக நமது மாநிலத்தில் கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் ரூ.52,629 கோடி வங்கிகடன் தொகை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

80 சதவீத மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கடன் தொகை மூலம் வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களைத் தொடங்கி, வீட்டு வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்பதே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் குறிக்கோளாகும்.

### 7.6.2 வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

வங்கிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு போதிய அளவு மற்றும் குறைந்த வட்டி விகிதத்தில் தொடர்ந்து கடன்கள் வழங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட நான்கு வங்கிகளுடன் இதுவரையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.7**

| வ. எண் | வங்கியின் பெயர் | புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த நாள் |
|---|---|---|
| 1 | ஐ டி பி ஐ வங்கி (IDBI Bank) | 07.09.2017 |
| 2 | ஐசி ஐசி ஐ வங்கி (ICICI Bank) | 07.09.2017 |
| 3 | பேங்க் ஆப் பரோடா (BOB) | 25.07.2018 |
| 4 | பாரத ஸ்டேட் வங்கி (SBI) | 25.01.2019 |

புரிந்துணர்வு ஒப்பந்தம் கீழ்கண்ட முக்கிய கூறுகளை உள்ளடக்கியது

1. மத்திய ரிசர்வ் வங்கி (RBI) அறிவுறுத்தலின்படி வங்கி கிளைகள் சுய உதவிக் குழுக்களுக்கு காலதாமதமின்றி, போதுமான அளவு கடன்கள், தொடர்ந்து மறுகடன்கள் மற்றும் குறைந்த வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்க வேண்டும்.
2. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான இந்திய பயிற்சி நிறுவனம் (Indian Institute of Banking and Finance – IIBF-Pune) மூலம் வங்கி வணிக தொடர்பாளர்களுக்கான (Business Correspontent) பயிற்சி பெறப்பட்ட மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களை வங்கிகளில் நேரிடையாகவோ அல்லது அந்த வங்கியின் வணிக தொடர்பாளர்களுக்கான பெரு

நிறுவனம் (Corportate BC) மூலமாகவோ வங்கி வணிக தொடர்பாளர்களாக நியமிக்க வேண்டும்.

3. வங்கிகள், IIBF மூலமாக பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை, வணிக வசதிகள் வழங்கும் (Business Faclitators) தொடர்பாளர்களாக நியமித்து, வங்கி சார்பாக பொது மக்களிடமிருந்து சேமிப்பு, கடன் திரட்டுதல் மற்றும் வாராகடன்களை மீட்டுக் கொடுத்தல் போன்ற சேவைகளை, அதற்குரிய ஊக்க தொகை வழங்கும் அடிப்படையில் நியமிக்க வேண்டும்.

மேற்கண்ட வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிட்ட பிறகு சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உதவி வழங்கியது கணிசமாக அதிகரித்துள்ளது. நடப்பாண்டில் (2019–20) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி மற்றும் தமிழ்நாடு கிராம வங்கி ஆகிய வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 7.6.3 தமிழ்நாடு கிராம வங்கி

தமிழகத்தில் இரண்டு ஊரக வங்கிகள் அதாவது 1) பல்லவன் கிராம வங்கி, இந்தியன் வங்கியின் ஆதரவுடன் சேலத்தை தலைமை இடமாக கொண்டு வட தமிழகத்தின் 15 மாவட்டங்களை உள்ளடக்கியும், 2) பாண்டியன் கிராம வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆதரவுடன் விருதுநகரை தலைமை இடமாக கொண்டு தமிழகத்தின் தென் பகுதியில் 16 மாவட்டங்களில் செயல்பட்டு வந்தன.

இந்த இரண்டு வங்கிகளும் மத்திய அரசின் நிதித் துறை (Department of Financial Services-GoI) ஆணைப்படி

ஒருங்கிணைந்த (Amalgamation) ''தமிழ்நாடு கிராம வங்கியாக'' 01.04.2019 முதல் சேலம் மாநகரை தலைமை இடமாக கொண்டு இந்தியன் வங்கி ஆதரவுடன் செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு கிராம வங்கியின் இயக்குநர் குழுமத்தின் (Board of Directors) 9 இயக்குநர்களில், 2 இயக்குநர்கள் தமிழ் நாடு அரசின் பிரதநிதிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர், 1. அரசு கூடுதல் தலைமைச் செயலர், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி துறை 2. மேலாண்மை இயக்குநர் (ம) முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் / தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கம்.

தமிழ்நாடு கிராம வங்கியும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் ஒருங்கிணைந்து மாநிலம் முழுவதும் செயல்படுவதால், சுய உதவிக் குழுக்கள் வங்கிக்கடன் மூலம் முழுமையான நிதி உள்ளாக்கம் (Deepening Financial Inclusion) அடையவும் சுய உதவிக் குழு சிறு தொழில் நிறுவனம் (Enterprises) துவங்க நிதி பெறுவதற்கும் கூடுதல் வழிவகை கிடைத்துள்ளது.

### 7.6.4 சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குதல் குறித்து இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டி நெறிமுறைகள்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடக்க நிலையில், வங்கிக்கடன்களை வெளிக்கடன்கள் மற்றும் வீட்டின் நுகர்வு செலவுகளுக்கும் பயன்படுத்திக் கொண்டு அதன் பின்னர் பலநிலைகளில் வங்கிகளில் அதிக அளவில் கடன் பெற்று நிலையான நீடித்த வாழ்வாதார தொழில்கள் தொடங்கி, வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ளவும் வறுமையிலிருந்து வெளிவரவும் முக்கியத்துவம் கொடுக்க ஒவ்வொரு ஆண்டின்

ஜுலை முதல் தேதியில் இந்திய ரிசர்வ் வங்கி, சுய உதவிக் குழு – வங்கிக் கடன் இணைப்புக்கான தலைமைச் சுற்றறிக்கையினை (Master Circular) வெளியிடுகிறது.

**ஆ. சுய உதவி குழுக்கள் வங்கி கடன் பெறுவதற்கான தகுதிகள்**

- சுய உதவிக் குழுக்கள் தங்களது கணக்கு புத்தகங்களின் அடிப்படையில் குறைந்தது கடந்த ஆறு மாத காலங்கள் தீவிர செயல்பாட்டில் இருக்க வேண்டும்.
- சுய உதவி குழுக்கள் தங்களது செயல்பாட்டில் 'பஞ்ச சூத்திரங்களான' 1) தவறாது கூட்டங்கள் நடத்துதல் 2) தவறாமல் சேமிப்பது 3) உள்கடன் வழங்குதல், 4) குறித்த காலத்தில் கடன் தொகை திரும்ப செலுத்தல் மற்றும் 5) கணக்கு புத்தகங்களை முறைப்படி பராமரித்தல் ஆகியவை நடைமுறை வழக்கித்திலிருக்க வேண்டும்.
- மகளிர் சுய உதவி குழுக்கள் நபார்டு வங்கி நிர்ணயித்துள்ள தர மதிப்பீட்டின் படி தர மதிப்பீடு பெற்று இருக்க வேண்டும்.
- செயலிழந்த (Defunct) சுய உதவிக் குழுக்கள் புதுப்பிக்கப்பட்ட பிறகு தொடர்ந்து 3 மாத காலங்கள் நல்ல செயல்பாட்டில் இயங்கினால் அக்குழுக்களும் வங்கிகடன் தொகை பெறுவதற்கு தகுதி பெறும்.

**ஆ. கடன் தொகை**

சுய உதவிக்குழுக்கள் தேவையின் அடிப்படையில், தவணை கடன்கள் (Term Loan) அல்லது உச்ச வரம்பு ரொக்ககடன் (**Cash Credit Limit–CCL)** அல்லது இரண்டு வகை கடன்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் தேவையின் அடிப்படையில் முன்னர் வழங்கிய கடன் தொகை நிலுவையில் இருப்பினும் கூடுதல் கடன் தொகை வழங்கப்படும்.

**இ. உச்ச வரம்பு ரொக்க கடன் (Cash Credit Limit–CCL)**

உச்ச வரம்பு ரொக்கக்கடன் திட்டத்தின் கடன் உதவி பெற தகுதிப்பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் குறைந்தபட்சம் ரூபாய் 5 இலட்சம் கடன் தொகையை 5 ஆண்டு காலத்திற்கு கடன் தொகையாக வழங்கிடவும் ஆண்டு வாரியான பணம் எடுக்கும் கடன் அளவு (Drawing Power) முறையை பின்பற்ற வேண்டும் என்று வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது

சுய உதவிக் குழுவின் அனுமதிக்கப்பட்ட வருடாந்திர கடன் தொகை அளவு, (Drawing power) சுய உதவிக் குழு திரும்ப செலுத்தும் செயல்பாட்டின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது.

**சுய உதவிக் குழுவின் வருடாந்திர கடன் தொகை அளவு (Drawing power) கணக்கிடுதல் பின்வருமாறு:**

| | | |
|---|---|---|
| முதல் வருட கடன் அளவு | : | குழுவின் தொகுப்பு நிதியின் 6 மடங்கு (அ) குறைந்தபட்சம் 1 இலட்சம் ரூபாய், இவை இரண்டில் அதிகம் உள்ள தொகை |
| இரண்டாம் வருட கடன் அளவு | : | குழுவின் தொகுப்பு நிதியின் 8 மடங்கு அல்லது குறைந்தபட்சம் 2 இலட்சம் ரூபாய் இவை இரண்டில் அதிகம் உள்ள தொகை |
| மூன்றாம் வருட கடன் அளவு | : | சுய உதவி குழு நுண்கடன் திட்டம், கடந்த கால கடன் திரும்ப செலுத்திய வரலாறு முறை மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பரிந்துரையின் அடிப்படையில் குறைந்தபட்சம் 3 இலட்சம் ரூபாய் |

| | | |
|---|---|---|
| நான்காம் வருடம் அதற்கு மேலும் கடன் அளவு | : | சுய உதவி குழு நுண்கடன் திட்டம், கடந்த கால கடன் திரும்ப செலுத்திய வரலாறு முறை மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புபின் பரிந்துரையின் அடிப்படையில் குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாய் |

## ஈ. தவணைக் கால கடன் (Term Loan)

வங்கிகள் தவணைக்கடன் தொகைகளை கீழே குறிப்பிட்டுள்ள அளவுகளின் அடிப்படையில் கடன் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| முதல் வருட கடன் அளவு | : | குழுவின் தொகுப்பு நிதியின் 6 மடங்கு (அ) குறைந்தபட்சம் 1 இலட்சம் ரூபாய், இவை இரண்டில் அதிகம் உள்ள தொகை |
| இரண்டாம் வருட கடன் அளவு | : | குழுவின் தொகுப்பு நிதியின் 8 மடங்கு அல்லது குறைந்தபட்சம் 2 இலட்சம் ரூபாய் இவை இரண்டில் அதிகம் உள்ள தொகை |
| மூன்றாம் வருட கடன் அளவு | : | மகளிர் சுய உதவி குழு நுண்கடன் திட்டம் கடந்த கால கடன் திரும்ப செலுத்திய வரலாறு முறை மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புபின் பரிந்துரையின் அடிப்படையில் குறைந்தபட்ச 3 இலட்சம் ரூபாய் |
| நான்காம் வருடம் அதற்கு மேலும் கடன் அளவு | : | மகளிர் சுய உதவி குழு நுண்கடன் திட்டம் கடந்த கால கடன் திரும்ப செலுத்திய வரலாறு முறை மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புபின் பரிந்துரையின் அடிப்படையில் குறைந்தபட்ச 5 இலட்சம் ரூபாய் |

**உ. கடன் பெறுவதற்கான நோக்கம் மற்றும் திரும்ப செலுத்துதல்**

சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட நுண்கடன் திட்டத்தின் அடிப்படையில் கடன் தொகை பெறும் நோக்கம் அல்லது பயன்படுத்தப்படும் விதம் தீர்மானிக்கப்படுகிறது. மகளிர் சுய உதவி குழுக்களுக்கு முதல் மற்றும் இரண்டாம் அளவை (dose) கடன்களில் உறுப்பினர்கள் முன் பெற்றுள்ள அதிக வட்டி வெளிகடன் தொகை திரும்ப செலுத்துதல் மற்றும் சமூக தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள பயன்படுத்திக் கொள்ளலாம். மூன்றாம் கால அளவை கடன் தொகைகள் உறுப்பினர்களின் நீடித்த வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ளும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

**ஊ. கடன் திரும்ப செலுத்தும் கால அட்டவணை பின்வருமாறு**

| | | |
|---|---|---|
| முதலாண்டு / முதல் கடன் இணைப்பு | : | 6 மாதம் முதல் 12 மாதங்கள் வரை மாதந்தோறும் / மூன்று மாதங்களுக்கு ஒரு முறை என்ற தவணைகளில் திரும்ப செலுத்தவேண்டும். |
| இரண்டாம் ஆண்டு / இரண்டாம் கடன் இணைப்பு | : | 12 மாதம் முதல் 24 மாதங்கள் வரை மாதந்தோறும் / மூன்று மாதங்களுக்கு ஒரு முறை என்ற |
| மூன்றாம் ஆண்டு / மூன்றாம் கடன் இணைப்பு | : | 24 மாதம் முதல் 36 மாதங்கள் வரை மாதந்தோறும் / மூன்று மாதங்களுக்கு ஒரு முறை எனும் தவணைகளில் திரும்ப செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| நான்காம் ஆண்டு / நான்காம் கடன் இணைப்பிலிருந்து | : | 3 ஆண்டு முதல் 6 ஆண்டு வரை குழுவின் பண சுழற்சியின் அடிப்படையில் மாதந்தோறும் / மூன்று மாதங்களுக்கு ஒரு முறை எனும் தவணைகளில் திரும்ப செலுத்த வேண்டும். |

**ஏ. பிணையத் தொகை மற்றும் விளிம்பு தொகை**

சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்படும் ரூ.10 இலட்சம் வரையிலான கடன் தொகைகளுக்கு பிணையம் (அ) விளிம்பு தொகை கிடையாது. வங்கிகள் கடன் வழங்கும் பொழுது அவர்களின் சேமிப்பு கணக்குகளின் மீது பற்றுரிமையோ (lien) மற்றும் வைப்புத்தொகை வைக்கவோ வலியுறுத்த கூடாது.

**ஏ. கடன் தவணை கட்ட தவறியவர்களை கையாளும் முறை**

- சுய உதவிக் குழுவில் வேண்டும் என்றே கடன் தொகையினை திரும்ப செலுத்தாத உறுப்பினர்கள் தீனதயாள் அந்தோதாய திட்டம்–தேசிய ஊரக வாழ்வதார இயக்கத்திலும், தீனதயாள் அந்தோதயா–தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்திலும் பயன் பெற இயலாது.
- சுய உதவிக் குழுக்கள் வங்கிக் கடனுக்கான விண்ணப்பங்கள் தயாரிக்கும் பொழுது மேற்படி திரும்ப செலுத்தாத உறுப்பினர்களை தவிர்க்க வேண்டும்.
- குழு உறுப்பினர்களின் உறவினர்கள் வாங்கிய வங்கி கடனை அவர்கள் திரும்ப செலுத்தாததை முன்மாதிரியாக கொண்டு வங்கிகள் குழுவிற்கு கடன் வழங்க மறுக்க கூடாது.

- உண்மையான காரணங்களால் கடனை திரும்ப செலுத்த முடியாதவர்களுக்கு மீண்டும் கடன் வழங்குவதை வங்கிகள் நிறுத்தி வைக்க கூடாது.

### 7.6.5 சமுதாயம் சார்ந்த கடன் மீளப் பெறும் முறை

சமுதாயமும் வங்கிகளும் இணைந்து கடன் தொகையை மீள பெறும் முறை என்பது சமுதாயமும் வங்கியும் இணைந்து இரு நிறுவனங்களுக்கும் உதவிகரமாக செயல்படும் குழுவாகும். சுய உதவிக் குழுக்களுக்கு அதிக கடன் தொகைகள் வழங்குவதையும், கடன் தொகையை உபயோகிக்கும் முறையை கண்காணிக்கவும், மற்றும் வாராக்கடன் வசூலிக்கவும் இக்குழுக்கள் கிராமங்கள் / தொகுதிகள் / வட்டார அளவில் துவங்கப்பட்டு கடன் வழங்கும் வங்கிகளுக்கு ஒத்துழைப்பு கொடுக்கும்.

**குழுவின் உறுப்பினர்கள்**

**அ.கூட்டத் தலைவர்** : வங்கி கிளை மேலாளர்

**உறுப்பினர்** :

1. மகளிர் சுய உதவி குழு உறுப்பினர் / ஊக்குவிப்பவர்
2. வட்டார வளர்ச்சி அலுவலர் / தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார உதவித் திட்ட அலுவலர்
3. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் அலுவலக பொறுப்பாளர்கள்

**ஆ.கூட்டத்தின் கால அளவு** : மாதம் ஒரு முறை

**இ. கட்டாய நிகழ்ச்சி நிரல்** :

1. புதிய மற்றும் மறுகடன்கள்
2. கடன் தொகையின் பயன்பாடு

3. கடன் திரும்ப செலுத்துதல் கண்காணிப்பு
4. வாராகடன் மீளப் பெறுதல்
5. சேமிப்பு கணக்கு துவக்குதல்

இக்குழுவினை அனைத்து சுய உதவி குழு கடன் வழங்கும் வங்கிகளில் உருவாக்குமாறு ரிசர்வ் வங்கி தனது முதன்மை சுற்றறிக்கை (Master Circular) மூலம் வங்கிகளை கேட்டுக் கொண்டுள்ளது.

**அறிக்கை:**

சமுதாயம் சார்ந்த கடன் மீளப்பெறும் குழு துவக்கியதை, வங்கிகள், வட்டார அளவிலான வங்கியாளர்கள் குழு (BLBC) மற்றும் மாவட்ட அளவிலான சீராய்வு குழுக்களுக்கு (DLRC) தெரியப்படுத்த வேண்டும். கூட்ட நடவடிக்கையின் சுருக்க குறிப்பு (Minutes) வட்டார அளவிலான வங்கியாளர்கள் குழுவில் சமர்ப்பித்து அவர்களது மேல் ஆலோசனைகளை பெற்று வங்கி கிளைகளை பயனுள்ள செயல்களில் வழி நடத்திட வேண்டும்.

**31.03.2019** அன்று வரையில் **2975** வங்கி கிளைகளில் **3,072** சமுதாயம் சார்ந்த கடன் மீள பெறும் முறை செயல்பாட்டில் உள்ளது.

### 7.6.6. மண்டல அளவிலான வங்கியாளர்கள் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்ட பேரவையில் விதி எண் **110**ன் கீழ் ஆண்டுதோறும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன்கள் வழங்க கடன் அளவு இலக்கை நிர்ணயம் செய்து அறிவித்து வருகிறார்கள்.

மேற்கூறிய அறிவிப்பு இலக்கை எய்தவும், வங்கியாளர்களை ஊக்குவித்து அதிக அளவில் கடன்கள் வழங்க ஏதுவாக **2018–19**ம் ஆண்டில் கூடுதல் தலைமை செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அவர்களால் மாநில

அளவிலான வங்கியாளர்கள் கூட்டமைப்புடன் (SLBC) இணைந்து மண்டல அளவில் வங்கியாளர்கள் கூட்டம் ஒரு புதிய முயற்சியாக நடத்தப்பட்டது. **2018–19**ம் ஆண்டில் **5** மண்டலங்களில் (திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்பத்தூர், வேலூர் மற்றும் சென்னை) **32** மாவட்டங்களுக்கான "**மண்டல வங்கியாளர்கள் கூட்டம்**" நடத்தப்பட்டது.

இந்த கூட்டங்களில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், வங்கிகளை சார்ந்த தலைமை மண்டல மேலாளர்கள் மாவட்ட கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை இயக்குநர்கள் மற்றும் அந்தந்த மாவட்டத்தை சார்ந்த தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள் (Project Director - TNSRLM) பங்கு கொண்டனர். இந்த கூட்டங்களில் பல்வேறு கருத்துருக்கள் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டு மகளிர் சுய உதவி குழுக்களின் தற்போதைய நிலைமையும் கருத்தில் கொண்டு கலந்துரையாடல் மூலம் முடிவுகள் எடுக்கப்பட்டது. இந்த கூட்டங்களில் வங்கிக்கடன்கள் உரிய நேரங்களில் திரும்ப செலுத்துவதற்கு அரசின் உதவிகள் எப்பொழுதும் வங்கிகளுக்கு உண்டு என்று உத்திரவாதம் அளிக்கப்பட்டது.

இந்த புதிய வழிமுறை (Strategy), **2018–19** ஆம் ஆண்டில் வங்கி கடன் இணைப்பிற்கான உயரிய இலக்கை எய்த உதவிகரமாக இருந்தது. இதேபோல் **2019–20** ஆண்டிலும் மண்டல அளவிலான கூட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**7.6.7 மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு**

எல்லா மாநிலங்களும் சீரான வளர்ச்சி பெற வேண்டி மாநில அளவிலான வங்கியாளர்களின் குழு **1977**ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அனைத்து வங்கிகளையும் உள்ளடக்கிய உச்ச நிலை குழுவாக (Apex-Instituion) ஏற்படுத்தப்பட்டது.

இந்த குழுமம் மத்திய அரசின் ஆணைப்படி அதிக வங்கி கிளைகள் கொண்ட வங்கியால் நடத்தப்படுகிறது. தமிழகத்தில்,

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மாநில வங்கியாளர்களின் குழு ஒருங்கிணைப்பாளராக செயல்படுகின்றது.

இக்குழுவில் அனைத்து பொதுத்துறை, தனியார் துறை வங்கிகள் மற்றும் கிராம வங்கிகள், காப்பீடு நிறுவனங்கள், நபார்டு (NABARD), மத்திய ரிசர்வ் வங்கி (RBI), மத்திய அரசு மற்றும் மாநில அரசின் துறைகள் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவர்.

**செயல்பாடுகள்**

மாநில அளவிலான வங்கியாளர்களின் கூட்டம் காலாண்டுக்கு ஒருமுறை கட்டாயம் நடத்தப்பட வேண்டும். இந்த மாநில வங்கியாளர்கள் கூட்டம் மாநில அளவிலான வங்கியாளர்களின் கூட்டத்தின் தலைவரும், மாநில அரசின் கூடுதல் தலைமை செயலர், மத்திய ரிசர்வ் வங்கியின் மண்டல இயக்குநர் மற்றும் மத்திய அரசின் நிதி சேவை (Ministry of Finance) துறையின் இயக்குநர் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் நடத்தப்படுகிறது.

இக்குழு கூட்டங்களில் கொள்கை முடிவுகள் கலந்தாய்வு செய்யப்படுகின்றது. வழக்கமான செயல்பாடுகள் பற்றிய கருத்துக்கள் துணைக் குழுக்களில் (Sub-Committee) கலந்தாலோசிக்கப்படுகின்றது. நிதி உள்ளாக்கம் மற்றும் கடன் இணைப்புக்கென்றே ஒரு துணைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

**7.6.8 சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்**

ஏழை எளிய மக்கள் வறுமையிலிருந்து விடுபட நிதி உள்ளாக்கக் குழு அறிக்கையின்படி தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், வட்டி மானிய திட்டத்தை **2013–14** ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வட்டி மானியத் திட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள கடன்களில் ரூ.**3** இலட்சம் வரை உள்ள கடன்களுக்கு நமது மாநிலத்தில் தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருச்சிராபள்ளி மற்றும் திண்டுக்கல் ஆகிய **9** மாவட்டங்களில் மத்திய அரசால் இந்த வட்டி மானியத் திட்டம் நேரிடையாக செயல்படுத்தப்படுகிறது.

மீதமுள்ள 22 மாவட்டங்களில் வட்டி மானிய திட்டம் மத்திய அரசு பங்கேற்புடன் மாநில அரசால் 60:40 விழுக்காடு பங்கேற்புடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றது. தவணை தவறாது கடன் தொகை திரும்ப செலுத்தும் சுய உதவி குழுக்கள் வட்டி மானியம் பெற தகுதி வாய்ந்தவை.

2018–19ம் ஆண்டு வரையில், பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள், கிராமபுற வங்ககிள் மூலம் வங்கி கடன்கள் வழங்கப்பட்டுள்ள 2,23,651 குழுக்களுக்கு ரூ.40.35 கோடி வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2018–19ம் ஆண்டில் மட்டும் 94,246 குழுக்களுக்கு ரூ.13.04 கோடி வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த வட்டி மானிய திட்டத்தில், ஒரு முக்கிய நிகழ்வாக 2018–19ம் ஆண்டில் நமது மாநிலத்தில் இயங்கும் அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், ஆரம்ப விவசாய கூட்டுறவு கடன் சங்கங்கள் (PACCS)யும் இணைத்துக் கொண்டு மகளிர் சுய உதவி குழுக்களின் கடன் விவரங்களை தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணையத்தில் (Portal) பதிவிறக்கம் செய்துள்ளது. மொத்த கடன் தொகையில் மாவட்ட கூட்டுறவு சங்கம் மற்றும் துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் கடன் அளவு சுமார் 10% ஆகும். இவ்வங்கிகளுடன் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்கள் முதன் முறையாக இவ்வட்டி மானியத்தை பெறுவார்கள்.

நிதியாண்டு 2019–20ல், டிசம்பர் 2017 வரையிலான கேட்பு தொகை ரூ.20.00 கோடி விடுவிக்கப்படும்.

**7.6.9 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன்**

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு போதுமான வங்கி கடன்கள் கிடைக்கப் பெறாதபட்சத்தில் அதிக வட்டிக்கு கடன் வழங்கும் நிறுவனத்தில் கடன் பெறுவதை தடுக்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பெருங்கடன் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ரூ.10 இலட்சம் முதல் ரூ.1.50 கோடி வரை வங்கிகளில் பெருங்கடனாக பெற்று கூட்டமைப்பில்

உள்ள குழுக்களின் அதிகபட்ச கடன் தேவைகளை பூர்த்தி செய்கின்றது. கடந்த **8** ஆண்டுகளில் **620** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.**152.60** கோடி கடன் பெற்று மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த **2018–19** ஆம் ஆண்டில், **23** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.**11.59** கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் **(2019–20)** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் மூலம் குறைந்தது ரூ. **50** கோடி கடன் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.6.10. தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டத்தின் கீழ் நிதி உள்ளாக்கத்தினை செயல்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் **2019–20**ம் ஆண்டில் சேலம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள **20** வட்டாரங்களில், கீழ்க்கண்ட **5** வகையான செயல்பாடுகளின் மூலம் முன் மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு (Model Block Level Federation) உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**i. சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன்**

- வட்டாரத்திலுள்ள (Block) அனைத்து **(100%)** மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் கடன் இணைப்பு பெற்றுத் தருதல்.
- இந்த வட்டாரத்தில் சராசரியாக ஒவ்வொரு சுய உதவிக் குழுவும் ரூ.**6** இலட்சங்கள் வரை கடனுதவி பெற வழிவகை செய்யப்படுதல்.
- குழுவின் குறுகிய கால நிதி தேவைகளை பூர்த்தி செய்ய வங்கிக் கணக்கில் உள்ள உச்ச வரம்பு ரொக்க கடன் திட்டத்தில் (Cash Credit Limit) மீதமுள்ள தொகையை (Undrawn amount) பெற்று பயன்படுத்துதல்.

- சமுதாய சார்ந்த கடன் தொகை மீளப் பெறும் இயக்க முறையை (CBRM) கடன் வழங்கும் அனைத்து வங்கி கிளைகளிலும் துவக்கி திறம்பட நடத்துதல்.

## ii. மின்னணு நிதி சேவை (Digital Finance)

மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன்பெற்று திரும்ப செலுத்திய விதத்தை தொகுத்து அவற்றை வங்கி கணக்குகளுடன் இணைக்க செய்வது இந்த திட்டத்தின் நோக்கமாகும். இவ்வாறு தொகுக்கப்பட்ட தகவல்கள், அடுத்தகட்ட அதிக அளவிலான கடன் இணைப்பு பெறுவதற்கு CIBIL மற்றும் Hi-Mark மதிப்பீடு செய்வதற்கு உறுதுணையாக இருக்கும்.

**இந்த பிரிவில் 2 செயல் திட்டங்கள் உள்ளது:**

- பூனாவில் உள்ள இந்திய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனம் மூலம் பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களை வங்கிகளில் நேரிடையாகவோ (அ) வங்கிகளின் வணிக தொடர்பு நிறுவனங்கள் மூலமாகவோ ‘‘வங்கி முகவர்களாக’’ (Business Correspondent -BC) பணி அமர்த்துவது.
- மகளிர் சுய உதவிக் குழுக்களின் உள்கடன் (ம) கணக்கு பரிவர்த்தனைகளை வங்கி கணக்குகளில் பரிவர்த்தனை செய்ய ஊக்குவித்து கிராமப்புறங்களிலேயே உள்ள வங்கி முகவர்களிடமோ (BC Location) (அ) ரூபே (Rupay- Card) அட்டைகளின் மூலமும் மற்றும் பல மின்னனு உபகரணங்கள் மூலம் பணபரிவர்த்தனைகள் மேற்கொள்ள உதவுதல்.

**iii. மகளிர் சுய உதவிக் குழுக்கான நிதி கல்வி (Financial Literacy)**

- மத்திய ரிசர்வ் வங்கியின் நிதி உள்ளாக்க கல்வி திட்டத்தினை மாவட்ட நிதிக்கல்வி ஆலோசகர் உதவியோடு 100 சதவீத மகளிருக்குக் கொண்டு செல்லுதல்.
- 3 அடுக்கு பயிற்றுநர் பயிற்சி மூலம் முதன்மை பயிற்றுநர் (Master Trainer) மற்றும் சமுதாய வள வல்லுநர்களுக்கு (FLCRP) நிதி சார்ந்த கல்வி பயிற்சி அளித்து கிராமங்களில் முகாம்கள் மூலம் நிதி உள்ளாக்கம் மற்றும் நிதிக் கல்வியை 2019–20 ஆம் ஆண்டின் இரண்டாவது காலண்டு முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் வழிகாட்டு நெறிகளின்படி தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் தயாரித்துள்ள பயிற்சிக் கையேடு மற்றும் உபகரணங்களை உபயோகித்து நிதிக்கல்வி வழங்குதல்.

**iv. காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டம்– (Insurance and Pension Scheme)**

- பிரதம மந்திரியின் காப்பீடு திட்டங்களான பாரத பிரதமரின் ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY) மற்றும் பாரத பிரதமரின் சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY) திட்டங்களில் உயிர் மற்றும் விபத்து காப்பீடுகளில் 100% மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை இணைத்து இடர்ப்பாடுகளிலிருந்து மீட்க வழிவகை செய்யப்படும்.

- வரையறுக்கப்படாத தொழில்களில் (unorganised sector) பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரையும் பிரதம மந்திரியின் அடல் பென்சன் திட்டத்தில் (Atal Pension Yojana - APY) இணைத்து 60 வயதிற்கு மேல் உள்ள உறுப்பினர்களுக்கு ஓய்வு ஊதியம் பெற வழிவகை செய்யப்படும்.

- காப்பீட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) செய்து மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களில் உள்ள பெண்களை "**காப்பீடு சகோதரிகளாக**" (Insurance Sisters) நியமினம் செய்து, பயிற்சி அளிக்கப்பட்டு காப்பீடு முகவர்களாக நியமித்து மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரையும் காப்பீடு திட்டத்தில் இணைத்து, பதிவு செய்யவும், அவர்களுக்கு இழப்பீடு தொகை பெறுவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கவும், ஒரு மாத காலத்திற்குள் இழப்பீட்டுத் தொகையை பெற்றுத் தரவும் **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால்** "**காப்பீடு உதவி மையம்**" (Insurance Facilitation Centre) துவக்கப்பட்டு சுய உதவிக் குழு உறுப்பினர்கள் காப்பீடு சேவைகள் பெற வழிவகை செய்யப்படும்.

- பிரதம மந்திரியின் காப்பீடு திட்டங்களான PMJJBY, PMSBY மற்றும் அட்டல் பென்சன் திட்டங்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஒருங்கிணைப்பு நிறுவனமாக செயல்படும்.

## v. சிறு / குறு தொழில் நிறுவனங்கள்

- இத்திட்ட செயல்பாட்டிலுள்ள 20 வட்டாரங்களில் உள்ள தலா 250 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நுண்

தொழில் நிறுவனங்கள் (Nano enterprises) துவங்குவதற்கு வங்கிகள் மூலம் நிதி உதவி பெற வழிவகை செய்யப்படும்.

- பல்வேறு விதமான தொழில்கள் துவங்க கடன் வகைகள் உருவாக்கப்பட்டு ரூ.30,000/– வரையில் வங்கிக் கடன்கள் / சமுதாய முதலீட்டு நிதி / உள் கடன்கள் மூலம் தொழில்கள் துவங்க வழி வகை செய்யப்படும்.
- இந்த 5 மாவட்டங்களில் ஏதாவது ஒரு மாவட்டத்தில் வங்கி உதவியுடன் ரூ.50 இலட்சம் முதலீட்டில் ஒரு கூட்டுத் தொழில் நிறுவனம் (Collective Enterprises) துவங்க வழிவகை செய்யப்படும்.
- இத்தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம் (Tamil State Supply Marketing Society) மூலம் சந்தை படுத்த வழிவகை செய்யப்படும்.

### 7.7. வாழ்வாதார மேம்பாடு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது ஏழை மக்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட வாழ்வாதார வாய்ப்புகள் தேவை என்பதை உணர்ந்துள்ளது. ஊரக ஏழை மக்களின் தற்போதைய வாழ்வாதாரத்தை பெருக்குதல் மற்றும் விரிவாக்குதல், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய அங்கம் ஆகும். ஊரகப் பகுதிகளில் 70%க்கும் மேலான மக்கள் வேளாண்மையை சார்ந்த ஒரு விவசாயி ஆகவோ அல்லது விவசாயக் கூலியாகவோ வாழ்கின்றனர். இது தவிர, கால்நடை வளர்ப்பும் ஊரக மக்களின் முக்கிய வாழ்வாதார அங்கமாகத் திகழ்கிறது. வேளாண் சார்ந்த வாழ்வாதார மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு மாநில ஊரக

வாழ்வாதார இயக்கமானது, கீழ்க்கண்ட நோக்கங்களுடன் பல்வேறு திட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

- ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் **2** விதமான வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.
- இரண்டு ஆண்டுகள் தொடர் ஆதரவின் மூலம் ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.**50,000** க்கு மேல் ஈட்ட உறுதி செய்தல்.
- வருடம் முழுமையும் ஒவ்வொரு குடும்பத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்திற்கான பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- வருடம் முழுவதும் தொடர் வருமானம் ஈட்டச் செய்தல்.
- வேளாண்மை, மரம் நீங்கலான வனம் சார்ந்த பொருள் தயாரித்தல் மற்றும் கால்நடை சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்களிலிருந்து, தேர்ந்த நபர்களை, சமூக மூலதனமாக உருவாக்கி, விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளச் செய்தல்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, மேற்கண்ட குறிக்கோள்களை எய்திட முனைப்புடன் பணியாற்றி வருகிறது.

**வாழ்வாதார நடவடிக்கைகளை விரிவாக்குவதில் முன்னேற்றம்**

வாழ்வாதார நடவடிக்கைகள், முதன் முதலாக "பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்" (மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா) கீழ் **2015–16** ஆண்டு முதல் துவங்கப்பட்டது. தொடர்ந்து **2016–17** ஆம் ஆண்டு முதல், வாழ்வாதார மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் தேசிய ஊரக

வாழ்வாதார இயக்கத்தின் ஆண்டு செயல் திட்டத்தின் கீழும் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திட்ட வாரியாகவும், ஆண்டு வாரியாகவும் வாழ்வாதார நடவடிக்கைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதற்கான முன்னேற்ற விவரம் கீழே கண்ட அட்டவணையில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.8**

| வ. எண் | வருடம் | மாவட்டங்களின் எண்ணிக்கை | வட்டாரங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **I– பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம்** | | | | |
| 1 | 2015–18 (முதல் கட்டம்) | 3 | 10 | 16,800 |
| 2 | 2017–20 (இரண்டாவது கட்டம்) | 2 | 4 | 12,000 |
| **I I – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்** | | | | |
| 3 | 2016–17 | 14 | 26 | 38,400 |
| 4 | 2017–18 | 9 | 28 | 28,950 |
| 5 | 2018–19 | 9 | 62 | 47,150 |
| 6 | 2019–20 | 30 | 65 | 1,60,500 |

## 7.7.1. செயல்பாட்டு உத்திகள்

பண்ணை சார்ந்த வாழ்வாதார உத்திகளின் முக்கிய நோக்கமானது, நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல், உள்ளூரிலேயே கிடைக்கும் இடுபொருட்களை பயன்படுத்துதல், வேளாண் சாகுபடியில் உள்ள பிரச்சனைகளை குறைத்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவை ஆகும். இதன் மூலம் ஒரு குடும்பத்தின் நிகர வருமானத்தை அதிகரிக்க இயலும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, குறைந்த செலவிலான, நிலைத்த இயற்கை வேளாண் சாகுபடி முறைகளான, வேதி மருந்தில்லா பயிர்பாதுகாப்பு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை உள்ளிட்ட சாகுபடி முறைகள், காலநிலை மாற்றங்களுக்கேற்ற வழிமுறைகள், மண்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை, நீர்வளப் பாதுகாப்பு, பல்வகைப் பயிர்களை பயிரிடுதல் மற்றும் தொன்மை வாய்ந்த பாரம்பரிய விதை இரகங்களை பயிரிடச் செய்வதன் மூலம் தகுந்த வேளாண் சூழலை உருவாக்க முனைகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஏழை மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஆடுகள், மாடுகள் மற்றும் கோழி வளர்ப்பு முதலான கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துள்ளது. விவசாயம் சார்ந்த வாழ்வாதாரத்தில் கால்நடை வளர்ப்பையும் ஒரு அங்கமாக இணைத்து, சமூக மூலதனத்தை உருவாக்கி, கால்நடை வளர்ப்பு சம்பந்தப்பட்ட பல்வேறு சேவைகளை நேரிடையாக சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஒவ்வொரு கிராம அளவிலும் குடும்ப அளவிலும் செயலாக்கப்படவுள்ள வாழ்வாதார உத்திகள் கீழ்வருமாறு.

**அ. குடும்ப அளவில்**

- குடும்ப உறுப்பினர்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்கும், நிரந்தரமான வருமானம் ஈட்டவும் காய்கறி தோட்டம் அமைத்தல்.
- விதை நேர்த்திக்காக பீஜாமிர்தத்தையும், மண்வளத்தை மேம்படுத்துவதற்காக கஞ்சீவாமிர்தத்தையும் தயாரித்து

பயன்படுத்துதல். குறைந்தது 2 உயிர்ப்பூச்சிக் கொல்லிகளை உபயோகப்படுத்த ஊக்குவித்தல்.

- மண்புழு உரம், “நாடெப்” தொட்டிகள், ஒட்டும் பொறி, முதலியவற்றை உபயோகப்படுத்த ஊக்குவிக்குதல்.
- மண்ணின் ஈரப்பதத்தைக் காக்க நிலப்போர்வை உபயோகப்படுத்துதல்.
- ஒற்றை நெல் சாகுபடி, நிலையான கரும்பு சாகுபடி, அசோலா வளர்ப்பு, பொறிப் பயிர் வளர்ப்பு, வரப்பில் சாகுபடி போன்ற முன்னேற்ற நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

**ஆ. கிராம அளவில்**

- வேதி மருந்தில்லா உயிர் பூச்சிகொல்லிகளின் விற்பனையகம்
- பண்ணை இயந்திர வாடகை மையம்
- முறையான பண்ணை விவசாய பள்ளிகள்
- சமுதாய வள பயிற்றுநர்கள்
- விதை வங்கி
- கிராம அளவிலான துணைக் குழுக்கள்
- உற்பத்தியாளர் குழு – போன்ற அமைப்புகளை உருவாக்கி வேளாண்மை சார்ந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த வாழ்வாதார இயக்கத்தின் மொத்த கவனமும் ஒவ்வொரு கிராமத்திலும் வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும் சிறந்த அனுபவமுள்ள நபர்களை, வேளாண்மைக்கு ஒருவர் மற்றும் கால்நடைக்கு ஒருவர் என சமுதாய வள பயிற்றுநர்களாகத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாக வாழ்வாதார முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு ஒன்றியத்திலும், வாழ்வாதாரத் திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ஆதரவற்ற மற்றும் சிறு மற்றும் குறு விவசாயிகள் முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகளாகத் தேர்ந்து எடுக்கப்படுவர். அதிலும் நலிவுற்ற மற்றும் குறிப்பாக சுய உதவிக் குழுவில் இணைந்த சிறு குறு விவசாயிகள், விதவைகள், பெண்கள் குடும்பத்தலைவியாகக் கொண்ட குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளாக தேர்வு செய்வதில் முன்னுரிமை பெறுவர்.
- அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் பயனாளிகளை ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்குதல்.
- பண்ணை விவசாயப் பள்ளிகள் மூலம் நீடித்த நிலைத்த இயற்கை சாகுபடி முறைகள், தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் நவீன சாகுபடி முறைகளைக் கற்றுத் தருதல்.
- ஏழை மக்களுக்குத் திறன் மேம்பாட்டுப்பயிற்சி அளித்து அவர்களை தற்சார்பு மிக்கவர்களாக மாற்றுதல்.
- சமுதாய மூலதனத்தை உருவாக்கிடவும், புதிய பகுதிகளில் வாழ்வாதாரத் திட்டத்தை விரிவுபடுத்திடவும் தேர்ந்த அனுபவமுள்ள நபர்களில் இருந்து சமுதாய வள பயிற்றுநர்களை தேர்வு செய்து அவர்கள் மூலம் திட்ட நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல்.
- வேளாண்மையையும், கால்நடையையும் ஒருங்கிணைத்து மக்களின் முழுமையான வாழ்வாதாரத் தேவையை பூர்த்தி செய்தல்.

### 7.7.2. முதன்மை உற்பத்தியாளர் குழுக்கள்

தனிநபர் விவசாயிகள் தங்கள் தடைகளைக் கடந்து வரவும், தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களின் விலையினை தாங்களே நிர்ணயம் செய்யும் திறனை மேம்படுத்தவும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது கூட்டு அணுகு முறையினை ஊக்கப்படுத்திட விவசாயிகளை ஒருங்கிணைத்து முதன்மை உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்குகிறது. வேளாண் தொழிலில் ஈடுபட்டு வரும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் விவசாயிகள் குழுவாக ஒருங்கிணைக்கப்பட்டு ‘‘உற்பத்தியாளர் குழு’’ உருவாக்கப்படுகிறது.

இந்த உற்பத்தியாளர் குழுக்கள் சாகுபடி செய்யும் பிரதான பயிருக்கேற்ப, அவர்களுக்கு, நீடித்த நிலையான சாகுபடி முறைகளான நுண்ணீர்ப்பாசனம், இயற்கைப் பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவற்றிற்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் செயல் விளக்கங்கள், சம்மந்தப்பட்ட வேளாண்மை மற்றும் கால்நடைத் துறை மூலமாக ஒருங்கிணைத்து வழங்கப்படுகிறது.

இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 850 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு 20,000க்கு மேற்பட்ட மகளிர் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். உற்பத்தியாளர் குழுக்கள் விவசாயம் சார்ந்தது மட்டுமில்லாமல் பால்மாடுகள் வளர்ப்பு, ஆடுகள் வளர்ப்பு போன்றவற்றிக்காகவும் உருவாக்கப்படுகிறது. மேலும் ஊறுகாய் தீவனப் புல் தயாரிக்கும் அலகுகள், சிறந்த சந்தைப்படுத்தும் முறைகள் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்றவைகளும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வேளாண் சார்ந்த செயல்பாடுகள் **2019–20–**ம் ஆண்டில், மேலும் கூடுதலாக **3,921** கிராம ஊராட்சிகளில் விரிவாக்கம் செய்து **2.70** இலட்சம் பயனாளிகளை திட்டத்தில் இணைக்கவும், மேலும் கூடுதலாக **1,000** உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு உற்பத்தியாளர் குழுவுக்கும் சுழல்நிதியாக ரூ.**1.50** இலட்சம் வழங்கி வேளாண் மற்றும் அது சார்ந்த செயல்பாடுகளான இடுபொருள்கள், இயந்திரம் மற்றும் கருவிகள், பயிர் பாதுகாப்பு மற்றும் சந்தைப் படுத்த தேவையான உள்ளீட்டு வசதிகளை கூட்டு முயற்சியில் மேற்கொள்ள ஊக்கப் படுத்தப்படும்.

### 7.7.3. உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்

தற்போதுள்ள சந்தையில் போட்டியிட்டு நீடிக்கவும், மதிப்புக்கூட்டு சங்கிலியில் உள்ள வாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றை திறம்பட தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவும் ஏதுவாக பத்து முதல் பன்னிரெண்டு உற்பத்திக் குழுக்களை ஒருங்கிணைத்து அந்தந்த திட்டப்பகுதிகளில் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்படவுள்ளது. இந்த உற்பத்தியாளர் நிறுவனங்கள் கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும். இத்தகைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உயரிய சேவைகள் வழங்கும் விதமாக மூலதன ஆதாரம் வழங்குதல், சுத்திகரிப்பு, அறுவடை பின்செய் நேர்த்தி, தேவைப்படும் இடுபொருள் மற்றும் இதர பிற சேவைகளையும் வழங்கி விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கிடவும் உதவிடும். **2019–20** ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் **30** உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் உருவாக்கப்படவுள்ளது.

### 7.7.4. இயந்திர வாடகை மையம்

இயந்திர வாடகை மையம் என்பது வெவ்வேறு பயிர்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள் மற்றும் இயந்திரங்களை ஒரே இடத்தில் சேகரித்து விவசாயப் பணிகளுக்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விலையில் வாடகைக்கு கொடுப்பது ஆகும். வங்கியின் சேவை தேவைப்படும் நபர், அதற்குரிய கட்டணத்தை செலுத்தி தேவைப்படும் கருவிகளைப் பெற்று கொள்ளலாம். இத்தகைய இயந்திர வாடகை மையத்துக்குத் தேவையான கருவிகள் மற்றும் இயந்திரங்களை, அந்தந்த பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகின்ற பயிர், இயந்திரங்களின் தேவை, அவற்றின் விலை, நிர்வகிக்கும் திறன் போன்றவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

இயந்திர வாடகை மையம், சிறந்த முறையில், வருடம் முழுவதும் இயங்குவதற்கு ஏதுவாக அந்தந்த பகுதியில் சாகுபடி செய்யப்படுகின்ற பயிர்களுக்கு ஏற்ற கருவிகள், இயந்திரங்கள் மற்றும் அக்கருவிகளை இயக்கிடத் தேவையான நபர்களையும் மிகவும் கவனத்துடன் தேர்வு செய்வது அவசியமாகிறது. நடப்பு **2019 –20**ஆம் ஆண்டில் **336** இயந்திர வாடகை மையங்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உருவாக்கப்பட்ட உற்பத்தியாளர் குழு, அந்தந்த கிராமத்துக்குரிய இயந்திர வாடகை மையத்தை நிர்வகிக்கும். உற்பத்தியாளர் குழு இல்லாத ஊராட்சிகளில் அந்த ஊராட்சியில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, இயந்திர வாடகை மையத்தை நிர்வகிக்கும்.

**இயந்திர வாடகை மையத்தின் குறிக்கோள்களாவன:**

1. மகளிர் குழுக்களுக்கு இயந்திர வாடகை மையத்தை வழங்கி அதன் மூலம் வருமானம் பெறுவதற்கு ஒரு வாய்ப்பைத் தருதல்.
2. பயிர்களுக்கேற்ற மற்றும் மகளிர் கையாள ஏதுவான கருவிகள் மற்றும் இயந்திரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மகளிர் விவசாயிகளின் வேலைப்பளுவினைக் குறைத்தல்.
3. பண்ணை இயந்திரமயமாக்கலை சிறு மற்றும் குறு விவசாயிகளிடம் விரிவுபடுத்துதல்.

### 7.7.5. பண்ணை விவசாயிகள் பள்ளி

பண்ணைத் தொழிலில் விவசாயிகளை தீவிரமாக ஈடுபடுத்துவதற்கும் வெவ்வேறு வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு செல்வதற்கும் "பண்ணை விவசாயிகள் பள்ளிகள்" நடத்துவதற்கு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்டமிட்டுள்ளது. இந்த பண்ணை விவசாய பள்ளிகள் என்பது, அடிப்படையில் விவசாயிகளை பங்கேற்பு முறை மூலம், விவசாயம் சார்ந்த பிரச்சனைகளை குழுவாக ஆராய்ந்து தீர்வை சோதித்துப் பார்த்துக் கற்றுக்கொள்ள வழிவகுக்கிறது. இந்த பண்ணை விவசாய பள்ளியில், ஒவ்வொரு பயிருக்கும் அந்த பயிரின் பருவகாலம் முடியும் வரை விவசாயிகள் குழுவாக வாரம் ஒரு முறை ஒரு மேற்பார்வையாளரின் தலைமையில் ஒன்றிணைந்து, கலந்துரையாடி தங்களின் சந்தேகங்களை தீர்த்துக் கொண்டு, அந்த பயிருக்குரிய தொழில் நுட்பங்களை 8 முதல் 12 வாரங்களில் கற்றுக்கொள்வார்கள். பண்ணை விவசாயிகள் பள்ளியின்

தன்மையானது, ‘சிறந்த கல்வி என்பது கேட்பதைவிட செய்வதின் மூலம் தான் அமைகிறது’ என்ற தத்துவத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. இப்பள்ளியில் விவசாயிகள் தாங்களாகவே பயிருக்குரிய விவசாய நடைமுறைகளை செய்து பார்த்து முடிவெடுக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். பண்ணை விவசாய பள்ளியில் விவசாயம் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பை மட்டும் கற்றுக்கொடுக்காமல் நீர் மேலாண்மை, குடும்ப வாழ்வாதார பாதுகாப்பு போன்றவற்றையும் கற்றுக்கொள்வதற்கும் வழிவகை செய்யப்படுகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், வேளாண் சார்ந்த வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்படும் **116** வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு **20** பண்ணை விவசாய பள்ளிகள் வீதம் (விவசாயம் சார்ந்த பள்ளிகள் **10**ம், கால்நடை சார்ந்த பள்ளிகள் **10**ம்) ஆக மொத்தம் **2,320** விவசாய பள்ளிகள் **2019–20** ஆம் ஆண்டில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.7.6. இயற்கை வேளாண் தொகுப்புகள்

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கமானது, வேளாண் சாகுபடியில் நீடித்த நிலைத்த இயற்கையான சாகுபடி முறைகளையும், முன்னோடியான கால்நடை பாரமரிப்பு முறைகள், மரம் நீங்கலான வனப்பொருட்களை சேகரித்தல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றின் மூலமாக ஏழை எளிய மக்களின் வாழ்வாதார முறைகளை வலுப்படுத்தி வருகிறது. பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமும் மகளிர் விவசாயிகள் இயற்கை முறையில் வேளாண் தொழிலில் ஈடுபட

ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர். விவசாயிகளை அடுத்த நிலைக்கு முன்னேற்றுவதற்கு இயற்கை வேளாண்மை சான்று பெறுவதும், சந்தைப்படுத்துதலில் இலாபகரமான விலை பெறவும் வழிவகை செய்ய வேண்டும். சிறு மற்றும் குறு மகளிர் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க இயற்கை வேளாண்மை ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

**இயற்கை வேளாண் தொகுப்புகளை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகள்:**

இயற்கை வேளாண் தொகுப்புகளை உருவாக்க தெளிவான நன்கு வரையறுக்கப்பட்ட கீழே கண்ட திட்ட செயலாக்க நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

1. இயற்கை விவசாயம் செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளைக் கொண்ட அருகாமையில் உள்ள தொகுப்பு கிராமங்களை தேர்வு செய்வது.
2. திட்டத்தை செயல்படுத்தத் திறமையான அலுவலர்களை நியமிப்பது.
3. தொழில் நுட்ப நிறுவனத்தின் ஆதரவுடன் திட்ட செயல்பாடு
4. ஆர்வமுள்ள மகளிர் விவசாயிகளை தேர்வு செய்வது
5. பயிற்றுநர்கள் தேர்வு (சமுதாய வள பயிற்றுநர்கள் மற்றும் முதன்மை பயிற்சியாளர்கள்).
6. அங்ககச் சான்றிதழ் (Organic Certification) வழங்கும் முறையை தொடங்குவது (இயற்கை வேளாண்மையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு, ஒரு தனித்துவமான விற்பனை சந்தையை உருவாக்குவதற்கு அனைத்து தொகுப்புகளும் அங்ககச் சான்றிதழ்

பெறுவது என்பது ஒரு அத்தியாவசியமான நடைமுறையாகும்).

7. இந்த திட்டத்தில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கும், சமுதாய வள பயிற்றுநர்களுக்கும் உரிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல்.
8. மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான ஆலோசனைகளை உரிய அமைப்புகள் மற்றும் சார்புடைய துறைகளிலிருந்து பெறுவது மற்றும் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள பாரம்பரிய இயற்கை வேளாண் திட்டத்தில் இணைந்து செயல்படுதல்.

2018–19ஆம் ஆண்டில் இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்த 2,000 விவசாயிகளை உள்ளடக்கிய 20 இயற்கை வேளாண் தொகுப்புகள் அமைத்திடவும் அத்தகைய விவசாயிகளை ஆங்காங்கே உள்ளூர் தொகுப்பு குழுக்களாக மாற்றும் பணியும் நடைபெற்று வருகிறது. 2019–20ஆம் ஆண்டில் மேலும் 2,000 விவசாயிகளை உள்ளடக்கிய 20 இயற்கை வேளாண் தொகுப்புகள் கூடுதலாக உருவாக்கப்பட உள்ளது.

### 7.7.7. பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்

பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டமானது, 2010 –11 ஆம் ஆண்டில் வாழ்வாதார மேம்பாட்டிற்கான சிறப்பு திட்டமாக தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தொடங்கப்பட்டது. இத்திட்டமானது வேளாண்மையில் மகளிர் விவசாயிகளின் பங்கினை உணர்ந்து கொள்ளவும், அவர்களின் திறன் மேம்பாட்டிற்கும் வேளாண் மற்றும் அது சார்ந்த துறை செயல்பாடுகளின் மூலம் அவர்களின் வருமானத்தைப் பெருக்கவும் கூடிய ஒருமித்த முயற்சியாகும்.

தமிழ்நாட்டில், பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டமானது விழுப்புரம், திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கரூர் மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

- வேளாண்மையில் ஈடுபடும் பெண்களுக்கு நிலையான வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- பண்ணை சார்ந்த நடவடிக்கைகளில் மகளிர் விவசாயிகளின் திறன்களையும், ஆற்றலையும் அதிகரித்து மகளிரை அதிகாரப்படுத்துதல்.
- சமூக அளவிலும், குடும்ப அளவிலும் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்தல்.

**இதன் முக்கிய கூறுகள்:**

- வேளாண் சாகுபடி முறைகளை விளக்குதல்.
- மகளிர் விவசாயிகளின் வேலைப் பளுவினை பல்வேறு உத்திகளின் மூலம் குறைப்பதற்கான நடவடிக்கைகள்.
- ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்த ஏதுவாக வேளாண் மற்றும் சார்ந்த துறை நடவடிக்கைகளுக்கு ஆதரவு
- தேர்ந்த சமுதாய வள பயிற்றுநர்களை அதிக அளவில் உருவாக்கி வேளாண் சார்ந்த சேவைகளையும் தொழில்நுட்பங்களையும் அவர்கள் பங்களிப்புடன் அனைவரும் பின்பற்றுவதை ஊக்குவித்தல்.

இத்திட்டம் தமிழ்நாட்டில் ரூ.24.35 கோடி நிதி ஒதுக்கீட்டில் 4 மாவட்டங்களிலுள்ள 14 வட்டாரங்களில் இரண்டு கட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 28,800 மகளிர் விவசாயிகள் பயனடைவர்.

### 7.7.8. கிராமிய தொழில் முனைவோர் திட்டம்

கிராமிய தொழில் முனைவோர் திட்டம் என்பது பண்ணை சாரா வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு துணைத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராமப்புற இளைஞர்களை சிறு தொழில்கள் துவங்க ஊக்குவித்து அதன் மூலம் வறுமையையும் வேலையில்லா சூழ்நிலையையும் குறைத்து, கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தத்திட்டம் 2014–15ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் 60:40 பங்களிப்பில் நிதி வழங்குகின்றன.

**இந்த திட்டத்தின் அடிப்படை குறிக்கோள்களாவன:**

- கிராமப்புற ஏழை மக்கள் தொழில் துவங்க உதவி செய்து, அந்தத் தொழில் நிலைபெறும் வரை தேவையான வழிகாட்டுதல் தந்து அவர்களை வறுமையிலிருந்து மீட்டு வருவது.
- புதிய தொழில்கள் தொடங்கத் தேவையான கடன்வசதி, திறன் வளர்த்தல், கண்டுணர்வு பயணங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்து அத்தொழில் துவங்கிய முதல் ஆறுமாதத்திற்குத் தேவையான ஆதரவை சுய

உதவிக் குழுக்கள் மற்றும் அவற்றின் கூட்டமைப்பு மூலம் கிடைக்க வழிவகுத்தல்.

- “தொழில் மேம்பாட்டுக்கான சமுதாய பயிற்றுநர்” என்ற பெயரில் சமூக மூலதனத்தை உருவாக்கி அவர்கள் மூலம் புதிய தொழில்கள் தொடங்குவதற்கு தேவையான உதவிகளை வழங்கிடச் செய்தல்.
- தொழில் முனைவோரின் திறமைகளை வளர்த்தல்.

தமிழகத்தில் திருப்போரூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றும் உளுந்துார்பேட்டை (விழுப்புரம் மாவட்டம்) ஆகிய இரண்டு ஒன்றியங்களில் ரூ.10.18 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 3,096 குறுந்தொழில்கள் துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்சி பெற்ற தொழில் மேம்பாட்டு சமுதாய வள பயிற்றுநர்கள், கிராமப்புறங்களில் இலாபமும், வேலை வாய்ப்பும் ஈட்டித்தரக் கூடிய, சேவை, உற்பத்தி மற்றும் வணிகம் ஆகிய துறைகளில் தொழில் வாய்ப்புகளை கண்டறிய உதவுவார்கள். சுய உதவிக் குழு உறுப்பினர்களால், தேர்வு செய்யப்பட்ட தொழிலில் அவர்களுக்கு உள்ள ஆர்வம் மற்றும் அடிப்படை அறிவை வைத்து அவர்களுக்குத் தேவையான வணிகத் திட்டத்தை சமுதாய வள பயிற்றுநர் (தொழில் மேம்பாடு) தயாரித்து வழங்குவார். இத்தகைய தொழில் முனைவோர்களுக்குத் தேவையான வழிகாட்டுதலையும் ஆதரவையும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் வழங்கும்.

தொழில் திட்டம் ஒப்புதல் ஆன பிறகு அத்தொழில் துவங்குவதற்குத் தேவையான நிதியை, சமுதாய முதலீட்டு நிதி அல்லது சமுதாய தொழில் நிதி மூலமும் மற்றும் வங்கியுடன்

இணைக்கப்பட்ட நிதித் திட்டங்கள் மூலமும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

### 7.7.9. சந்தைப்படுத்துதலுக்கு ஆதரவு

#### அ. கண்காட்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை கண்காட்சிகள் மற்றும் வணிக வளாகங்கள் மூலம் சந்தைப்படுத்திட தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது. இக்கண்காட்சிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களுக்கு கூடுதல் விற்பனை வாய்ப்புகளையும் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கைவினைப் பொருட்கள், செயற்கை அணிகலன்கள், சணல் பொருட்கள், தோல் பொருட்கள், சிறுதானியங்கள் போன்ற மகளிர் சுய உதவிக் குழு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், பொருட்களை விளம்பரப்படுத்திடவும் ஒவ்வொரு ஆண்டும் **'மகளிர் மேளா'** என்ற பெயரில் பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி பண்டிகை காலங்களில் மாநில அளவிலான மூன்று கண்காட்சிகளை நடத்துகின்றது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும், மொத்த கொள்முதல், தரம் மற்றும் விலை நிர்ணயம் ஆகியவற்றின் திறனை வளர்ப்பதற்கும், இக்கண்காட்சிகள் உதவுகின்றன. 2018–19ம் ஆண்டில் கோடைக் கொண்டாட்டம், கிறிஸ்துமஸ், புதுவருடம், பொங்கல் விற்பனை கண்காட்சிகள் நடத்தப்பட்டு இதில் 365 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று ரூ.114.27 இலட்சம் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்து பயனடைந்தனர்.

சாராஸ் (Sale of Articles of Rural Artisans Society) என்பது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்ற ஊரக கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தேசிய அளவிலான கண்காட்சி ஆகும். இக்கண்காட்சியில் நாடு முழுவதிலிருந்தும் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த கைவினைஞர்கள் உற்பத்தி செய்த சிறந்த கைவினைப் பொருட்கள் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்படுகிறது. 2018–19ம் ஆண்டில் 12 மாநிலங்களில் நடைபெற்ற சாராஸ் கண்காட்சிகளில் தமிழ் நாட்டைச் சார்ந்த 659 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு ரூ.153.81 இலட்சத்திற்கு பொருட்கள் விற்பனை செய்து பயன் அடைந்துள்ளனர்.

**இயற்கை வேளாண் பொருட்கள் விற்பனை கண்காட்சி:**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இயற்கை விவசாயம் செய்யும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் விளை பொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக இயற்கை வேளாண் பொருட்களின் விற்பனை கண்காட்சிகள் நடத்தப்படுகிறது. இதனால் இயற்கை விவசாயம் செய்யும் குழு உறுப்பினர்களுக்கு இக்கண்காட்சி பயன் உள்ளதாக அமைகிறது. 2018–19 ஆம் ஆண்டில், 10 விற்பனை கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் ரூ.40 லட்சம் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்து மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பயன் அடைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து 2019–20 ஆம் ஆண்டும் 10 இயற்கை வேளாண் பொருட்கள் விற்பனை கண்காட்சிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## ஆ. மாநில / மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம்

தேசிய, மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் அளவில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு, மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் **1975** ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்திடவும், மாவட்ட அளவில் உள்ள விற்பனை வளாகங்கள் மற்றும் விற்பனை அங்காடிகளை மேலாண்மை செய்தும் வருகின்றன. மாவட்ட அளவில் உள்ள வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் அனைத்தும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## இ. கல்லூரிச் சந்தைகள்

மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை இளைஞர்களிடையே பிரபலப்படுத்துவதற்கு கல்லூரிச்சந்தைகள் மிக முக்கியமான சந்தை வாய்ப்புகளில் ஒன்றாக உள்ளன. இச்சந்தைகள் சுய உதவிக் குழுக்களுக்கு நல்ல வருவாய் ஈட்டித் தருவதோடு மட்டுமின்றி சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தற்போதைய சந்தை நிலவரங்களை அறிந்து கொள்வதற்கும் உற்பத்திப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கும் வாய்ப்பாக உள்ளன.

**2018–19** ஆம் ஆண்டில் **36** கல்லூரிச் சந்தைகள் மூலம் **1,191** மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்குகொண்டு ரூ.**1.01** கோடி

மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்து பயன் அடைந்துள்ளனர்.

**ஈ. மதி அங்காடி (Mathi KIOSK)**

மதி அங்காடிகள் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட தனிப்பட்ட சிறப்பு ஏற்பாடாகும். நகர்ப்புற பகுதிகள், குறிப்பாக சுற்றுலா தலங்கள், பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும் இதர மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் 137 மதி அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளது. இதில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களான மூலிகைப் பொருட்கள், அலங்கார சணல் பொருட்கள், கைவினைப் பொருட்கள், சிறுதானியங்கள், செயற்கை நகைகள், கைவினை பொம்மைகள் போன்ற பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டும் விற்பனை செய்யப்பட்டும் வருகிறது. **2018–19**ம் ஆண்டில் மட்டும் மதி அங்காடிகள் மூலம் ரூ.**233.16** இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**மதி அங்காடிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்**

அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மதி அங்காடிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் மூலமாக அனைத்து மாவட்ட மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை தரமானதாகவும், ஒரே விலையிலும் அனைத்து பகுதிகளிலும் அங்காடிகள் மூலம் விற்பனை செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. மதி அங்காடிக்குத் தேவையான விற்பனை பொருட்களை விநியோகம் செய்வதற்காக பொருட்களை உற்பத்தி செய்யக் கூடிய மகளிர் சுய உதவிக் குழு

உற்பத்தியாளர்களை கண்டறிந்து, மதி அங்காடிக்குத் தேவையான பொருட்களை மாநில மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் மூலமாக வாங்கி வழங்க தகவல் தொழில் நுட்ப உதவியுடன் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அங்காடிகளுக்கு தேவையான பொருட்கள் கேட்பு விபரம், விற்பனை விபரம் மற்றும் இருப்பு விவரங்களை கண்காணிப்பு செய்வதற்காக தனியாக ஒரு இணைய வலைதளம் உருவாக்கி செயல்படுத்தப்பட உள்ளது.

2019–20ம் ஆண்டு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அனைத்தையும் கண்டறிந்து பட்டியலிடவும், மதி அங்காடிகளை ஒருங்கிணைத்து அதன் மூலம் நன்றாகவும், தரமானதாகவும் அதிக அளவில் விற்பனையாகக் கூடியதும், ஆகிய பொருட்களை மாநில மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் மூலம் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மதி அங்காடிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் ரூ.5.00 கோடி மதிப்பிலான பொருட்களை விற்பதற்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**உ. சானிடரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பு**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள சானிடரி நாப்கின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 54 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இக்கூட்டமைப்பு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால் செயல்படுத்தப்படும் மாதவிடாய் சுகாதாரத் திட்டத்திற்கு தேவைப்படும் பெல்ட் வகை சானிடரி

நாப்கின்களை உரிய நேரத்திலும், தரமானதாகவும் தயாரித்து மாவட்ட சுகாதார மையங்களுக்கு விற்பனை செய்யும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அரசாணை எண்.458 நாள்.08.12.2017ன் படி ஒரு வருடத்திற்கு 36 இலட்சம் பெல்ட் வகை சானிடரி நாப்கின் பாக்கெட்டுகளை விநியோகம் செய்வதற்கான ஆணை பெறப்பட்டு மகளிர் குழுக்கள் மூலம் நாப்கின்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

2018–19 ஆம் ஆண்டில் 40 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் 32 மாவட்ட சுகாதார மையங்களுக்கு 16 இலட்சம் நாப்கின் பாக்கெட்டுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**ஊ. பொருட்கள் உற்பத்தி செய்யும் சுய உதவிக் குழு உற்பத்தியாளர்களை கண்டறிதல்**

அனைத்து மாவட்டத்திலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் குழு உறுப்பினர்களில் உற்பத்தி மற்றும் விற்பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை கண்டறிந்து அவ்விவரங்களை அனைவருக்கும் பொதுவான தகவல் தரவுதளத்தில் (Centralised Database) தொகுப்பதன் மூலம் மாநிலத்தில் எந்தெந்த பகுதிகளில் எந்தெந்த மாதிரியான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளவும், அத்தகைய பொருட்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், கூடுதல் சந்தை வாய்ப்புகளை உருவாக்கி அவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைய நடவடிக்கை மேற்கொள்ளவும் இயலும். முதற்கட்டமாக 2019–20ம் ஆண்டு 3,000 மகளிர் சுய உதவிக் குழு

உற்பத்தியாளர்களை கண்டறிந்து அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை இ–மதி இணையதளத்தில் (e-MaThi Portal) இணைக்கப்படவுள்ளது.

இத்தகைய முயற்சி, உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கேற்ற பேக்கிங் வசதிகள் செய்திடவும், பொருள் சார்ந்த விளம்பர கையேடுகள் தயாரித்திடவும், கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளான உணவுக்கான தரச்சான்று பெறுதல் (FSSAI), பொருட்கள் உற்பத்தி, விற்பனை செய்வோருக்கான சரக்கு மற்றும் சேவை வரி பெறுதல் (GST), தொழில்முனைவோருக்கான சான்று பெறுதல் (Udhyog Aadhar) போன்றவற்றில் உதவிகள் தேவைப்படுவோருக்கு பெற்றுத் தரவும் உபயோகமாக இருக்கும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் **2019–20** ஆம் ஆண்டில் உற்பத்தியில் ஈடுப்பட்டிருக்கும் சுய உதவிக் குழு உறுப்பினர்களில் குறைந்தபட்சம் **2,000** சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மேற்குறிப்பட்ட பதிவுகள் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**எ. பேக்கிங் வசதிகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் தயாரிப்பு பொருட்களை நல்ல முறையில் பேக்கிங் செய்தால் கூடுதல் வாடிக்கையாளர்களை கவர்ந்திடவும், பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி விற்பனையை அதிகரித்திடவும், தொடர் சந்தை வாய்ப்பு உருவாக்கிடவும் இயலும்.

**2019–20** ஆம் ஆண்டு சென்னையில் செயல்படும் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேக்கிங் நிறுவனத்தின்

உதவியுடன் 1,000 சுய உதவிக் குழுக்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய பேக்கிங் வசதிகள் மற்றும் லேபிளினை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஏ.வணிக முத்திரை**

சந்தைப்படுத்துதலில் வணிக முத்திரை முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் வணிக முத்திரையுடன் ஒரு பொருள் விற்பனை செய்வதன் மூலம் உற்பத்தியாளர் மற்றும் உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கு தனியே பெயர், அடையாளம் மற்றும் முத்திரை கிடைப்பதன் மூலம் எல்லோராலும் எளிதில் அறிந்து கொள்ள ஏதுவாகிறது. மேலும் நிலைத்த சந்தை வாய்ப்பு ஏற்படவும், பொருட்கள் மீது வாடிக்கையாளர்கள் நம்பிக்கையை ஏற்படுத்தி விற்பனை செய்திடவும் பயன் உள்ளதாக அமைகிறது. எனினும் பெரும்பான்மையாக மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் உற்பத்தி பொருட்களுக்கு வணிக முத்திரையும், உரிய பேக்கிங் முறைமையும் இல்லாமல் உள்ளது.

எனவே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக ‘மதி’ என்ற பெயரில் மாநில அளவில் வணிகமுத்திரை வடிவமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் மாவட்ட அளவிலும் தனித்தனியே அந்தந்த மாவட்டத்திற்கென தனி வணிகமுத்திரைகளும் பெறப்பட்டு வருகிறது.

தர அடிப்படையிலும், விற்பனை அடிப்படையிலும், மேலும் உற்பத்தி முறைமைகளை நிலைத்த முறையில் கடைப்பிடிக்கும் அடிப்படையிலும் மாநில மற்றும் மாவட்ட அளவிலான வணிக

முத்திரை பெற தகுதி பெற்றவை என சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு தேர்வு செய்யப்படும் பொருட்கள் வகைப்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் விற்பனை செய்யவும் திட்டமிப்பட்டுள்ளது.

## 7.8. ஒருங்கிணைப்பு (CONVERGENCE)

### அ. சமூக உள்ளாக்கம்

நலிவுற்றோர் குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள், மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்கள், நிலமற்றோர், இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் ஆதிப்பழங்குடியினர், மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள தொலை தூர மற்றும் தனித்த கிராமப் பகுதிகளில் வாழும் நலிவுற்றோர் குடும்பங்களை மக்கள் நிலை ஆய்வின் மூலம் அடையாளம் கண்டு சமூக உள்ளாக்கத்தின் கீழ் கொண்டுவர சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட குடும்பங்களில், கடத்தலிலிருந்து மீட்கப்பட்ட மகளிர், சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபட்டுள்ள மகளிர், திருநங்கைகள், எய்ட்ஸ் / எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், தீராத நோயால் பாதிக்கப்பட்டோர் போன்றோர்களுக்கு முன்னுரிமை அளித்து சமூக உள்ளாக்கத்தின் கீழ் பயன்பெறும் விதமாக சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**2018–2019** வரை சமூக ஒருங்கிணைப்பின் கீழ் **882** மாற்றுத் திறனாளிக் குழுக்கள், **44** முதியோர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் **192** பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில் **(2019–2020)** இப்பிரிவில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

**ஆ. சமூக உள்ளாக்கத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரை மேம்படுத்துதல்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சமூக உள்ளாக்க உத்தியின் வாயிலாக மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களை மேம்படுத்த, **2019–20**ம் நிதி ஆண்டில் **3,391** கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய **110** ஊராட்சி ஒன்றியங்களில் (இரண்டாம் கட்ட மாவட்டங்கள்) ரூ.**3.34** கோடி நிதி ஒதுக்கீட்டில் இச்செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதன் ஒரு பகுதியாக சமூக மாற்றுத்திறனாளி ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களின் தேவையினை அறிந்து அவர்களது நலனைப் பாதுகாக்கும் திறன்பெற்ற நிறுவனமாக மாவட்ட கற்றல் மையம் செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளை கண்டறிதல், அவர்களுக்கான உரிமைகளை பெற்றுத் தருதல், தேவையின் அடிப்படையில் புனர்வாழ்வினை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

**இ. சமூகம் சார்ந்த மனநலத் திட்டம்**

தனிமனித முன்னேற்றம் மற்றும் பிற வளர்ச்சிக்கு குறிப்பாக பெண்களுக்கு மனநலமும் நல்வாழ்வும் அவசியம் எனும் அடிப்படையிலான இத்திட்டம் மிகவும் இன்றியமையாததாகும். இதை ஆதாரமாகக் கொண்டு சமூகம் சார்ந்த மன நல திட்டம் என்பதினை அறிமுக திட்டமாக

**2019–20**ம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள ஊராட்சிகளில் மனநல ஆலோசகர்களை நியமித்து பிற துறைகளான நல்வாழ்வுத்துறை, தேசிய நல்வாழ்வு இயக்கம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற சார்பு நிறுவனங்களின் உதவியோடு குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் மனநலமும் நல்வாழ்வும் பற்றி விளக்கிக் கூறுவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டமானது தமிழகத்தில் **2019–20**ம் நிதியாண்டில் தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டத்தின் **20** ஒன்றியங்களிலுள்ள **729** கிராம ஊராட்சிகளில் ஸ்கார்ப் (Schizophrenia Research Foundation – SCARF) என்ற ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கு **7.20** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியின் மூலம் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

- **729** ஆலோசகர்கள் மற்றும் **385** வட்டார இயக்க மேலாளர்களுக்கு மனநலமும் நல்வாழ்வும் பற்றி மூன்று நாட்கள் பயிற்சி வழங்குதல்.
- கிராம ஊராட்சிகளில் உள்ள சமுதாய வள பயிற்றுநர்களை பயிற்சிக்கு பின்னர் மன நல ஆலோசகர்களாக நியமித்தல்.
- மனநலம் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிவதற்கான முகாம் நடத்துதல்.
- மனநல ஆலோசகர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல்.
- கிராம ஊராட்சியில் உள்ள சமுதாயம் சார்ந்த நிறுவனங்களான கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சுய

உதவிக் குழுக்கள், மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு போன்றவைகளுக்கு மனநலமும் நல்வாழ்வும் பற்றி விளக்குதல்.

**தொடர் செயல்பாடுகள்**

மேற்கண்ட செயல்பாடுகள் நடைமுறைபடுத்தப்பட்ட பிறகு, அதன் தொடர்ச்சியாக பயிற்சி பெற்ற சமுதாய வளபயிற்றுநர்களைக் கொண்டு திட்ட பயன்பாடுகளை உறுதி செய்ய கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1. குடும்ப ஆலோசனை
2. பாதிப்பிற்குள்ளானவர்கள் தங்களை தாங்களே நிர்வகித்துக் கொள்ள உதவி செய்தல்.
3. மருத்துவ நடவடிக்கையை தொடர்தல்
4. சமூகம் சார்ந்த ஆதரவினை உறுதி செய்தல்.
5. வாழ்வாதாரம்/தொழில் சார்ந்த பயிற்சிகள் வழங்குதல்.
6. கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சுய உதவிக் குழு கூட்டமைப்பு, மற்றும் சுய உதவிக் குழு கூட்டங்களில் மன நலம் பற்றிய நேர்மறையான கருத்துக்களை கூட்டப் பொருளாக வைத்து விவாதித்தல்.
7. குறைந்த அளவு மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது மனநலம் பாதிப்பிலிருந்து மீண்டவர்களை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் (MGNREGS) இணைத்தல்.
8. மனநலம் பாதிப்புக்கு உள்ளானவர்கள் தங்களுக்குள்ள பிரச்சனைகளை உடனடியாக தெரிவிப்பதற்கும் அதனடிப்படையில் அவர்களை சம்பந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்வதற்கும் சமூகம் சார்ந்த நிறுவனங்கள் செயல்படுதல்.

## ஈ. உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம், தன்சுத்தம் மற்றும் சுகாதாரம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் திட்டத்தில் உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம், தன்சுத்தம் மற்றும் சுகாதாரம் சம்பந்தமான செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அதில் உள்ள பிரச்சனைகளையும் அதற்கான தீர்வுகளையும் பற்றி தெரிந்துகொள்வதற்கு இத்திட்டம் வழிவகுக்கிறது. பெரும்பாலான நல்வாழ்வு மற்றும் அதனை சார்ந்த திட்டங்கள் சமூக மக்களின் மூலமாகவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், போஷன் அபியான் செயல்படும் முன்மாதிரியான 12 மாவட்டங்களில் நல்வாழ்வு துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் துறை, கல்வித் துறை மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகள் மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஊட்டச்சத்து பொருட்கள் தயாரிக்கும் மையம் தொடங்கப்பட்டு இரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது. அதன் மூலம் குழந்தைகளுக்கு ஏற்படும் வளர்ச்சியின்மை, உடல் மெலிவு மற்றும் உடல் எடைக் குறைவு போன்ற குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறப்பதை குறைக்க முடியும். மேலும் 12 ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள அனைத்து மகளிர் குழுக்களுக்கும் இதைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இத்திட்டம் தமிழகத்தில் 12 மாவட்டங்களில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களில், 450 ஊராட்சிகளில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

## 7.9. மேலாண்மை தகவல் அமைப்பு (MIS)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் விவரங்களை குறிப்பாக அவர்களின் பரிவர்த்தனை மற்றும் நிர்வாகம் தொடர்பானவைகளை கொண்டு மிகப்பெரிய அளவில் சமூக பொருளாதார தகவல்களை மேலாண்மை செய்கிறது. திட்டம் சார்ந்த செயல்பாடுகள், செயலாக்க யுக்திகள் மற்றும் துல்லியமான முடிவுகள் நிகழ் நேர மேலாண்மை தகவல் அமைப்பை சார்ந்து உள்ளது.

இ–மதியானது (eMathi) சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் நடைமுறை கணக்கியல் பரிவர்த்தனை மற்றும் நிர்வாகம் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான இணையதளமாகும். சமுதாயம் சார்ந்த அமைப்புகள் தங்களையும் திட்டத்தையும் நிர்வகிக்க மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடிவெடுப்பதற்கான ஆதரவு அமைப்பாக இது செயல்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இ–மதி இணையதளம் மற்றும் தகவல் தளம் **2018–19** ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சேமிப்பு, கடன், கடனை திரும்ப செலுத்துதல் மற்றும் கணக்கு புத்தகங்கள் பராமரிப்பு ஆகிய நடைமுறை விவரங்கள் சேகரிக்கப்பட்டு நிகழ்நேர தகவல்கள் (real time) வழங்கப்படுகின்றன.

துவக்கத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் முன்னோட்டமாக செயல்படுத்தப்பட்டு தற்போது

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டு இ–மதி இணையதளம் வாயிலாக சமுதாயம் சார்ந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இ–மதி மட்டுமின்றி **2018–19** ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகள்:

- tnatws.org – அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்திற்கான மேலாண்மை தகவல் அமைப்பு.
- eCRP.in – சமுதாய வள பயிற்றுநர்களுக்கான விவரங்கள் அடங்கிய இணையதளம்.
- சுகாதார நாப்கின் கூட்டமைப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான கைபேசி செயலி.
- இ–மதி செயலி – சமுதாய மின்வானொலி மற்றும் மின்வழி கற்றல் தளத்திற்கான கைபேசி செயலி.

## 7.10. தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம்

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணையாக ஏழைகளின் வாழ்வு மேம்படும் வகையில் தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தநிலையில் அத்திட்டமானது **2018** ஆம் ஆண்டுடன் முடிவுற்றது. அதனை தொடர்ந்து தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் நடப்பாண்டு **(2019–20)** முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான நிதியானது மத்திய மாநில அரசுகளால் **60:40** என்ற விகிதாசாரத்தில் பங்களிப்பு செய்யப்படுகிறது.

இத்திட்டமானது பகுதி/வட்டார கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மதிப்பு கூட்டு வளர்ச்சியினை ஊக்குவித்தல், பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாரா துறையில் தனி நபர் மற்றும் கூட்டுத் தொழில் செய்தல், ஊரக தொழில் நிறுவனங்களை வலுப்படுத்துதல், திறன் மேம்பாடு மற்றும் நிதிசார்பு சேவைகளை மேம்படுத்துதல் போன்ற உயர்மட்ட செயல்பாடுகளை உள்ளடக்கியதாகும். மேலும் பண்ணை சார்ந்த வாழ்வாதாரமானது உற்பத்திக் குழுக்கள் மற்றும் உற்பத்தி சார்ந்த நிறுவனங்களை வலுப்படுத்துதல், இயற்கை வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு தொகுப்பு கிராமங்களை உருவாக்குதல், மதிப்புக் கூட்டுதலுக்கான செயல்பாடுகள் முதலியவற்றை உள்ளடக்கியதாக அமையும்.

மாதிரி வட்டார/பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கும் நிதி உள்ளாக்க உத்திகள், காப்பீடு மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள், உற்பத்திக் குழுக்கள் மற்றும் நிறுவனங்கள், உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் நிறுவனங்களை நிறுவுதல் போன்றவற்றிக்கும் இடையே நெருங்கிய உறவினை ஏற்படுத்துதல் இத்திட்டத்தின் அடிப்படையாக அமைகிறது.

இத்திட்டமானது முன்னோட்டமாக, மாநிலத்தில் கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய **5** மாவட்டங்களில் தலா **4** வட்டாரங்கள் என மொத்தம் **20** வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. மேற்கண்ட வட்டாரங்கள் கீழ்க்கண்ட தகுதிகளின் அப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

i. இரண்டு வருடங்களுக்கும் மேலாக சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு செயல்பாட்டில் இருத்தல்.

ii. 50 சதவீதத்திற்கும் மேலான குழுக்கள் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பதோடு அக்கூட்டமைப்பின் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்கியிருத்தல்.

iii. பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத வாழ்வாதார நடவடிக்கைகள் செயல்பாட்டில் இருத்தல்.

iv. தேவையான அளவிற்கு பலதரப்பட்ட துறைகளில் சிறந்து விளங்கும் சமுதாய வளபயிற்றுநர்கள் தேவையான அளவில் ஈடுபட்டிருத்தல்.

இத்திட்டத்திற்கென மத்திய அரசின் பங்குத் தொகையாக (60%) ரூ.24.36 கோடியும், மாநில அரசின் பங்குத் தொகையான (40%) ரூ.16.24 கோடியும் ஆக மொத்தம் ரூ.40.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

### 7.11. தீன் தயாள் அந்தியோதய யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY – NULM)

### 7.11.1. நகர்ப்புற மகளிர் திட்டம் (மதி)

ஊரகப் பகுதிகளில் மகளிர் திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டதினைத் தொடர்ந்து, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நகர்ப்புற பகுதிகளுக்கும் 2001–ஆம் ஆண்டு முதல் நகர்ப்புற மகளிர் திட்டம் (Urban MaThi) விரிவுபடுத்தப்பட்டது. நகர்ப்புறப்பகுதிகளில் இதுவே மகளிர் சுய உதவிக்குழு இயக்கத்தின் தொடக்கமாகும்.

### 7.11.2. சுவர்ண ஜெயந்தி சகரி ரோஜ்கர் யோஜனா (SJSRY)

நகர்ப்புறங்களில் மகளிர் திட்டம் விரிவுபடுத்தப்படுவதற்கு முன்பு சுவர்ண ஜெயந்தி சகரி ரோஜ்கர் யோஜனா (பொன் விழா நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்) என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் குறிக்கோள், நகர்ப்புறங்களில் உள்ள வேலை வாய்ப்பற்றவர்களுக்கும், கல்வித் தகுதிக்குக் குறைவான வேலையிலுள்ளவர்களுக்கும், சிறு மற்றும் குறு நிறுவனங்களை ஏற்படுத்தி வேலை வாய்ப்பினை உருவாக்குவதும் மற்றும் ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பினை வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள நகர்ப்புற ஏழை மக்களுக்கு உருவாக்கித் தருவதுமாகும். மேலும் அருகருகே உள்ள குழு (Neighbourhood Group), அருகருகே உள்ள சங்கம் (Neighbourhood Committee) மற்றும் சமுதாய வளர்ச்சிச் சங்கம் (Community Develoment Society) ஆகியவற்றின் சுய வளர்ச்சியை மேம்படுத்துதல் இதன் நோக்கம் ஆகும். இப்பணிகள் யாவும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக **75:25** விகிதாச்சார அடிப்படையில் மத்திய மாநில நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது.

### 7.11.3 தீன் தயாள் அந்தியோதய யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NULM)

மத்திய அரசின் கீழ் உள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற திட்டங்களுக்கான அமைச்சகம், சுவர்ண ஜெயந்தி சகரி ரோஜ்கர் யோஜனா (SJSRY) திட்டத்தினை 2014-2015–ஆம் ஆண்டு முதல் **60:40** என்ற மத்திய, மாநில அரசுகளின் நிதி விகிதத்தில் தீன் தயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வதார இயக்கம் **(DAY – NULM)** என்ற புதிய திட்டமாக

மாற்றியமைத்தது. இத்திட்டத்தின் குறிக்கோள், நகர்ப்புற ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி அவர்களின் வறுமையையும், நலிவு நிலையையும் குறைத்து சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலைவாய்ப்புகளுக்கு வழி வகுத்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துவதும், நிலைத்த தன்மை அடையச்செய்வதும் ஆகும்.

மேலும் நகர்ப்புற உறைவிடமற்றோர்க்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய உறைவிடத்தை ஏற்படுத்தித்தருவது மற்றும் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு அவர்களின் வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பொருத்தமான இடம் ஒதுக்கீடு செய்தல், நிதி அமைப்புகள் மூலம் கடன் வசதி ஏற்படுத்துதல், சமூக பாதுகாப்பு அளித்தல் மற்றும் திறன் வளர்ப்பு மூலம் வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உதவுதல் போன்றவற்றை இந்த இயக்கம் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

**இத்திட்டத்தின் கூறுகள்**

1. சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு(SM&ID)
2. சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP)
3. வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வு (EST&P)
4. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CB&T)
5. நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு வாழ்வாதாரம் (SUSV)
6. நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் (SUH)
7. புதுமை மற்றும் சிறப்புத் திட்டங்கள் (I&SP)

### 7.11.4. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM)

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வதார இயக்கம் 2014 முதல் 2016 வரை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டது. முதற்கட்டமாக மாவட்ட தலைநகரங்கள் மற்றும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்கள் உட்பட 40 நகரங்களைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தப்பட்டது.

அரசு ஆணை எண்: 62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (M.A.2) நாள் 04.03.2016–ன் படி நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் கீழ் இயங்கி வந்த மேற்படி திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும்படி உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட அரசு ஆணையின் படி நான்கு முக்கிய கூறுகளான, சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID), திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CB&T), வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வு (EST&P), சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP), ஆகியன 2016–2017–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் அரசு ஆணை எண்:114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (M.A.2) நாள் 27.10.2017–ன் படி புதுமை மற்றும் சிறப்புத்திட்டங்கள் (I&SP) எனும் கூறும் மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள இரண்டு கூறுகளான நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு வாழ்வாதாரம் (SUSV), நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் (SUH) ஆகியன நகராட்சி நிர்வாக ஆணையரகத்தாலேயே தொடர்ந்து நகர்ப்புற உள்ளாட்களின்

மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இதன் தொடர்பாக உள்ள வியாபார குழுக்கள் உருவாக்குதல், அதனைக் கண்காணித்தல் உட்பட்ட வழக்கமான நடைமுறைகள் மற்றும் தெருவோர வியாபார திட்டங்களைத் தயாரித்தல் ஆகியன நகர்ப்புற உள்ளாட்சிகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிடும் திறன் மேம்பாட்டு பயிற்சியளித்தல், நிதி ஆதாரங்களுக்கு வழி காட்டும் வகையில் வங்கி சேவையைப் பெற உதவுதல், பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல் ஆகியவை தொடர்ந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

### 7.11.5. சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)

#### அ. சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் நகர்ப்புற ஏழைகள் மற்றும் நலிவுற்றோரை சுய உதவிக்குழுக்களாக அமைத்து ஒட்டுமொத்த சமுதாயத்தினை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. பொதுவாக ஏழை மற்றும் நலிவுற்ற குடும்பங்களில் உள்ள மகளிரைக் கண்டறிந்து அவர்களில் **10** முதல் **20** வரை உள்ள மகளிரை உறுப்பினர்களாக்கி சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் குறிப்பாக தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள், சிறுபான்மையினர், மகளிரைத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைப்பெண்கள், இடம் மாறிவந்த தொழிலாளர்கள், மிகவும் நலிவுற்றோர், தெருவோர வியாபாரிகள், குப்பை சேகரிப்பவர்கள், வீட்டுவேலை செய்பவர்கள், பிச்சை எடுப்பவர்கள் மற்றும் கட்டிட

தொழிலாளர்கள் ஆகியோரின் நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது. சுய உதவிக் குழுக்கள் மாற்ற இயலாத ஐந்து குறிக்கோள்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. அவைகளாவன (அ) முறையான கூட்டங்கள் (ஆ) முறையான சேமிப்பு (இ) முறையான உள்கடன் (ஈ) முறையான கடன் திருப்பம் மற்றும் (உ) நாளது தேதிவரை கணக்குகளை பதிவேடுகளில் பதிவு செய்தல்.

**2016–17** முதல் **2018–19** வரை **31,688** சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு ரூ.**31.69** கோடி நிதியுதவி குழு அமைப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. **2019–20 –** ஆம் நிதி ஆண்டிற்கு சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID) திட்டத்தின் கீழ் **10,000** சுய உதவிக்குழுக்கள் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### ஆ. சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்குதல்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, பயிற்சி வழங்கப்பட்டு, **3** மாதங்கள் முடிந்த பின்பு தரமதிப்பீட்டின் அடிப்படையில் அவைகளுக்கு ஆதார நிதி வழங்கப்படுகிறது. இந்நிதியினைக் கொண்டு அவர்களின் சேமிப்பை பெருக்கி அக்குழு உறுப்பினர்கள் முறையான உள்கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்படுகிறது.

**2016–17** முதல் **2018–19** வரை **24,965** குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ.**24.96** கோடி வழங்கப்பட்டுள்ளது. **2019–20–** ஆம் ஆண்டில் **10,000** சுய உதவிக்குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு ரூ.**10,000** வீதம் மொத்தம் ரூ.**10** கோடி ஆதார நிதி வழங்கப்படும்.

**இ. பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல்**

பகுதி அளவிலான கூட்டமைப்பு குறைந்த பட்சம் **10** சுய உதவிக் குழுக்களை சேர்த்து குடிசை பகுதி / வார்டு அளவில் ஏற்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு பகுதி அளவிலான கூட்டமைப்பும் அ) முறையான வட்டி விகிதத்தில் உடனடியாக கடன் பெற வழிவகை செய்தல், ஆ) சுய உதவிக்குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளை கண்காணித்தல், இ) திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் ஈ) தூய்மை இந்தியா இயக்கத்தில் பங்கேற்றல் ஆகியவற்றில் சுய உதவிக் குழுக்களுக்கு வழிகாட்டியாய் உள்ளது.

**2016–17** முதல் **2018–19** வரை **613** பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. **2019–20** ஆம் ஆண்டில் **510** பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஈ. பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதி வழங்குதல்**

**6** மாதங்கள் சிறப்பாக செயல்பட்ட, பதிவு பெற்ற வெற்றிகரமாக தரமதிப்பீடு செய்யப்பட்ட அனைத்து பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் ஆதார நிதி வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிதியானது தேவையின் அடிப்படையில் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குக் கடனாக வழங்கப்படும்.

**2016–17** முதல் **2018–19** வரை **344** பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.**1.72** கோடி நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. **2019–20** – ஆம் ஆண்டிற்கு **510** பகுதி

அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ. **50,000** வீதம் மொத்தம் ரூ.**2.55** கோடி ஆதார நிதி வழங்கப்படும்.

**உ. நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல்**

பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மேலும் மேம்படுத்தப்பட்டு நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகிறது. இக்கூட்டமைப்புகள் நகரம் மற்றும் மாநகரப் பகுதிகளில் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் உதவியாகவும் அவைகளின் மிக முக்கியமான தேவைகளை நிறைவேற்றவும் துணைபுரிகின்றன.

**2016–17** முதல் **2018–19** வரை **40** நகர அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. **2019–20** ஆம் ஆண்டிற்கு **20** நகர அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஊ. நகர்ப்புற வாழ்வாதார மையங்கள்**

நகர்ப்புற வாழ்வாதார மையங்களின் நோக்கமானது ஒரு நகர்ப்புற ஏழைக்கு அவருடைய பணியினை சந்தைப் படுத்துவதற்கும், தேவையான தகவல்கள் மற்றும் பயன்களைப் பெறுவதற்கும் அடித்தளமாக இருப்பதாகும். நகர்ப்புற வாழ்வாதார மையம் அனைத்து நகரவாசிகளுக்கும் அவர்களின் தேவைப்பணிகள் நிறைவு பெறவும் நகர்ப்புற ஏழைகளுக்கு தங்களின் சேவைகளை அதிகப்படுத்திக் கொள்ளவும், அவர்களின் உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்து மேம்பாடு அடையவும் ஓரிட வணிக மையமாக (One Stop Shop) அமைகிறது.

நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் வேலை வாய்ப்பு மற்றும் திறன் வளர்ப்பு வாய்ப்புகள் குறித்து உரிய தகவல்கள் தேடுபவர்களுக்கு உதவும் ஆதார மையங்களாகவும் உருவாக்கப்படும்.

2016–17 முதல் 2018–19 வரை 12 நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் உருவாக்கப்பட்டு ரூ.1.20 கோடி நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. 2019–20 – ஆம் ஆண்டிற்கு 10 முன்மாதிரி நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் உட்பட 90 நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**எ. சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு பயிற்சி அளித்தல்**

சமூக அணித்திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID) திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்கள் அதன் கூட்டமைப்புகள் மற்றும் துணைக் குழுக்கள் உட்பட அனைத்திற்கும் வங்கி தொடர்பு, புத்தக பராமரிப்பு மற்றும் கணக்குகள், நுண் திட்டமிடல், நுண் நிதி முதலீட்டு முறை குறித்த பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

இப்பகுதியின் கீழ் உள்ள விவரங்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| அ) | சுய உதவிக் குழு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் பயிற்சி | 3 கையேடுகள் | 6 நாட்கள் |
| ஆ) | சுய உதவிக் குழு உறுப்பினர் பயிற்சி | 4 கையேடுகள் | 4 நாட்கள் |
| இ) | பகுதி அளவிலான கூட்டமைப்புகள் / நகர அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஆளுமை பயிற்சி | – | 3 நாட்கள் |

| | | | |
|---|---|---|---|
| ஈ) | பகுதி அளவிலான கூட்டமைப்புகள் / நகர அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிதி மேலாண்மை பயிற்சி | – | **3** நாட்கள் |
| உ) | பகுதி அளவிலான கூட்டமைப்புகள் / நகர அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாக குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி | – | **2** நாட்கள் |

**ஏ. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இரு வார விழா (Pakhwada)**

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இரு வார விழா (Pakhwada) கடந்த பிப்ரவரி **2019**ல், முதல் இரு வாரத்தில் நடத்தப்பட்டது. அதில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- பல்வேறு அரசு நலத்திட்டங்களில் பயன்பெறாமல் விடுபட்ட மற்றும் தகுதி வாய்ந்த சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களை கணக்கெடுப்பின் மூலம் கண்டறிந்து அவர்களை அரசுத் திட்டங்களின் பயன்பாட்டு வலையின் கீழ்க்கொண்டுவர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த சுய உதவிக் குழுக்களின் ஊர்வலங்கள் நடத்துதல்.
- துப்புரவு பணியாளர்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்க விரைவு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

- விரைவு நடவடிக்கையின் மூலம் நகர்ப்புற தெருவோரவியாபாரிகளை கண்டறிந்து அவர்களுக்கு உரிய அடையாள அட்டை வழங்குதல்.
- மாவட்ட அளவில் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்துதல், மாவட்ட மற்றும் மாநில அளவில் தெருவோர உணவுத் திருவிழாக்கள் நடத்துதல் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கான கண்காட்சி மாநில மற்றும் மாவட்ட அளவில் நடத்துதல்.

### 1. நகர்ப்புற பங்களிப்பாளர்களின் மன்றம் (Urban Stakeholders Forum)

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நகர்ப்புற பங்களிப்பாளர்களின் மன்றம் என்பது ஒரு தளமாக உள்ளது. இது நகர்ப்புற உள்ளாட்சி அளவில் சுய உதவிக் குழுக்கள் / பகுதி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்கள் பல்வேறு நிர்வாகம் மற்றும் பொதுவான பிரச்சனைகளை அவ்வப்போது எதிரொலிப்பதற்கும் அதற்கான தீர்வுகளைப் பெறவும் வழிவகை செய்கிறது. இம்மன்றம் நகர்ப்புற உள்ளாட்சி அளவில் ஒரு நகர்ப்புற ஏழையின் குரலாக ஒலிக்கின்றது. இது தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணைப்பு தளமாக இருப்பதுடன் அடித்தள சமுதாய அமைப்புகளை உருவாக்கவும் மற்றும் நகர்ப்புற ஏழை மக்களும் நிர்வாகத்தின் செயல்பாடுகளில் பங்கேற்பதற்கும் உரிய வழிவகைகளை செய்கிறது. நகர்ப்புற பங்களிப்பாளர்கள் மன்றத்தின் செயல்பாட்டினை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்தில் கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்ற ஆலோசனை வழங்கப்படுகிறது.

- நகர்ப்புற பங்களிப்பாளர்கள் மன்றம், நகர அளவில் பல்வேறு துறை சார்ந்த பங்களிப்பாளர்களுடன் உருவாக்கப்பட வேண்டும்.
- நகர்ப்புற பங்களிப்பாளர்கள் மன்றம் தொடர்பான கூட்டம் வருடத்திற்கு இரண்டு முறை கூட்டப்பட வேண்டும்.
- சமுதாய நலன் பெரிதும் பாதிக்கப்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் தளமாக இது செயல்பட வேண்டும்.
- பெரிய அளவிலான நகரங்களில் கூடுதல் கூட்டங்களை மண்டலம்/வட்டம்/வார்டு அளவில் கூட்டுவதற்கும் முக்கிய பிரச்சனைகள் குறித்து விவாதிப்பதற்கும் நகர்ப்புற பங்களிப்பாளர்கள் மன்றத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- நகர்ப்புற பங்களிப்பாளர்கள் மன்றத்தின் கூட்டத்தில் நகர அளவிலான கூட்டமைப்புகள் / பகுதி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள் தாங்கள் வெற்றியடைந்த நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

## 2. வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வு திட்டம் (EST&P)

இத்திட்டம் நகர்ப்புற ஏழைகளின் சுய வேலை வாய்ப்புத்திறன் மற்றும் ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பு ஆகியவைகளை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வளர்ச்சி மற்றும் திறமைகளை வளர்க்கிறது. நகர்ப்புற ஏழைகள் மிகவும் இடர்பாடான சூழ்நிலைகளில் பணியாற்றுவதைத் தவிர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு வேலை வாய்ப்புடன் கூடிய திறன்

வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வு வழங்கப்படுகிறது. **2018–19** ஆம் ஆண்டு முதல், இரண்டு பெரிய மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவை அ) திறன் பிரிவு குழுவின் (Sector Skill Council) சான்றிதழ் பெற்ற தேசிய தொழிற்திறன் தகுதி அமைப்பின் (NSQF) பாடப்பிரிவுகளே அங்கீகரிக்கப்படும். ஆ) திறன் வளர்ப்பு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் நிர்ணயிக்கப்பட்ட பொதுவான கட்டண விகிதங்கள் பின்பற்றப்படும். வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டத்தில் மகளிர் பயனீட்டாளர்கள் **30**%ற்குக் குறையாமல் இருக்க வேண்டும். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மாநகர / நகர ஏழை மக்கள் தொகைக்கு ஏற்ப பயன்பெறுகின்றனர். இத்திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு **3**% சிறப்பு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சிறுபான்மை சமூக மக்களுக்கும் **15**% ஒதுக்கப்படுகிறது. இது தவிர நலிவுற்ற பிரிவைச் சார்ந்த பிச்சைக்காரர்கள், குப்பை சேகரிப்பவர்கள், கட்டிட தொழிலாளர்கள், ஆதரவற்றவர்கள் உள்ளிட்டோருக்கும் திறன் மேம்பாட்டில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**2016–17** முதல் **2017–18** வரை பல்வேறு பிரிவுகளின் கீழ் **22,083** இளைஞர்கள் ரூ.**33.12** கோடி நிதி உதவியுடன் திறன் வளர்ப்பு பயிற்சி முடித்துள்ளார்கள். **2018–19** ஆம் ஆண்டிற்கு **12,000** நபர்கள் பயிற்சிபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் **2019–20** ஆம் ஆண்டில் மேலும் **9,000** நகர்ப்புற ஏழை இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.11.6. சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP)

இத்திட்டமானது நகர்ப்புற தனிநபர் ஏழை மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு, அவரவர் திறன் வளர்ப்புப் பயிற்சி, உள்ளூர் நிலைமைக்கு ஏற்றார்போல் சுயவேலை வாய்ப்பு மற்றும் சிறு தொழில் தொடங்குவதற்கு நிதி உதவி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தங்கள் தகுதிக்குக் குறைவான வேலையிலுள்ளோர் மற்றும் வேலைவாய்ப்பில்லாதோர், அவரவர் உள்ளூர்த் தேவைக்கேற்ப உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் தொடர்பான சிறு நிறுவனங்கள் தொடங்க இத்திட்டமானது ஊக்கமளிக்கிறது.

### அ. தனி நபர் சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP - I)

ஒரு நகர்ப்புற ஏழை, தனது சுயவேலைவாய்ப்பிற்காக தனியாக ஒரு நுண் நிறுவனத்தை நிறுவுவதற்கு எந்த ஒரு வங்கியிலும் வட்டி மானியத்துடன் வங்கிக்கடன் பெறுவதற்கு இத்திட்டம் வழிவகை செய்கிறது.

**2016–17** முதல் **2018–19** வரை வங்கிக்கடன் மூலமாக இதுவரை ரூ.**225.50** கோடி நிதி உதவியின் கீழ் **25,790** தனி நபர் சுய வேலைவாய்ப்பு பயனீட்டாளர்கள் பயன் அடைந்துள்ளார்கள். **2019–20**–ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் **10,020** சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடன் உதவியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஆ. குழு சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP - G)

ஒரு சுய உதவிக் குழு அல்லது அதன் சில உறுப்பினர்கள் இணைந்தோ அல்லது நகர்ப்புற ஏழைகள் குழுவாகவோ சுய வேலை வாய்ப்பிற்கான சிறு தொழில் துவங்குவதற்கு எந்த ஒரு

வங்கியிலிருந்தும் வட்டி மானியத்துடன், வங்கிக்கடன் பெறுவதற்கு இத்திட்டம் வழிவகை செய்கிறது.

**2016–17** முதல் **2018–19** வரை வங்கிக்கடன் மூலமாக இதுவரை ரூ.**408.71** கோடி நிதி உதவியின் கீழ் **15,333** குழுக்கள் பயன் அடைந்துள்ளார்கள். **2019–20–**ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் **6,000** குழுக்கள் பயன்பெற திட்டமிடப்பட்டுள்ளது.

**இ. சுய வேலை வாய்ப்புத் திட்டம் (வங்கி இணைப்பு) (SEP - BL)**

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் சுவர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அனைத்து சுய உதவிக் குழுக்களும் எந்த ஒரு வங்கியுடனும் தொடர்பு கொண்டு, இந்திய ரிசர்வ் வங்கி வகுத்த வழி முறைகளின் படி, வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் பெற வழி வகை உள்ளது.

**2016–17** முதல் **2018–19** வரை வங்கிக்கடன் மூலமாக இதுவரை ரூ.**559.50** கோடி நிதி உதவியின் கீழ் **26,358** சுய உதவிக் குழுக்கள் பயன் அடைந்துள்ளார்கள். **2019–20** ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் **10,000** சுய உதவிக் குழுக்கள் பயன்பெற திட்டமிடப்பட்டுள்ளது.

**ஈ. சுய வேலை வாய்ப்பு பயனீட்டாளர்களுக்கு வட்டி மானியம்**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியத்துடன், வங்கிக்கடன் அளிக்க வழி வகை செய்கிறது. நகர்ப்புற ஏழை மக்களின் சுய உதவிக் குழுக்கள் பெறும் கடன் மீது வட்டி மானியம் என்பது, ஒரு வங்கியின் நடைமுறையில் உள்ள வட்டி விகிதம் மற்றும் வருடத்திற்கு 7% வட்டி பிடித்தம் செய்வதற்கும் உள்ள

வித்தியாசம் ஆகும். சுய உதவிக் குழுக்கள் பெறும் வங்கிக்கடனில் மேற்படி வித்தியாச தொகை பயனீட்டாளர்களுக்கு மாத அடிப்படையில் திருப்பி வழங்கப்படும். மேலும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, அவர்கள் உரிய காலத்தில் தங்களது கடன் தொகையினை திருப்பி செலுத்தும் பட்சத்தில், கூடுதலாக 3% வட்டி மானியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. வட்டி மானியம் வழங்குவது என்பது பெறப்பட்ட வங்கி கடன் தொகையினை உரிய காலத்தில் திருப்பி செலுத்துவதற்கும் (வங்கியின் திருப்பி செலுத்தும் அட்டவணைப்படி) வங்கிகள் மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் இருந்து உரிய தகுதிச் சான்றிதழ் பெறுவதற்கும் உட்பட்டதாகும்.

### தேவைக்கேற்ற கடன் மற்றும் வட்டி மானியம் பெறுவதற்கான வலைதளம் (PAiSA Portal)

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகம் தனி நபர் சுய வேலை வாய்ப்புத் திட்ட வங்கிக்கடன் (SEP-I), குழு சுய வேலை வாய்ப்புத் திட்ட வங்கிக்கடன் (SEP-G), வங்கி தொடர்பு சுய வேலை வாய்ப்புத் திட்ட வங்கிக்கடன் (வங்கி தொடர்பு) (SEP-BL) ஆகிய திட்டங்களின் கீழ் தகுதி வாய்ந்த பயனீட்டாளர்கள் வட்டி மானியம் பெறுவதை எளிமைப் படுத்துவதற்காக அலகாபாத் வங்கியை செயல்பாட்டு முகமையாக நியமித்துள்ளது. ‘‘பைசா வலைதளம்’’ என்பது அலகாபாத் வங்கியால் உருவாக்கப்பட்டு வங்கி மையத் தீர்வுத் தளங்கள் (Core Banking Solutions) மூலமாக கடன் மற்றும் திருப்பி செலுத்தும் விவரங்களை வங்கிகள் பதிவேற்றம் செய்யும் வசதி இதில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பயனீட்டாளர்களின் வட்டி மானியம் கணக்கிடப்பட்டு, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு

மற்றும் மாநில இயக்க மேலாண்மை அலகால் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டபின் வட்டி மானியத் தொகை பயனீட்டாளர்களின் வங்கிக்கடன் கணக்கிற்கு மின்னணு முறை வழியாக விடுவிக்கப்படுகிறது.

**2016–17** முதல் **2018–19** வரை ரூ.**3.01** கோடி வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதில் தனி நபர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் (SEP-I) பங்கு ரூ.**0.90** கோடி, குழு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் (SEP-G) பங்கு ரூ.**0.99** கோடி மற்றும் வங்கி தொடர்பு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் (SEP-BL) பங்கு ரூ.**1.21** கோடி ஆகும்.

### 7.11.7. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CB & T)

இத்திட்டமானது மேலாண்மை நிர்வாகத்தில் உயர்ரக தொழில்நுட்ப உதவியைப் பயன்படுத்தி நகர்ப்புற வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் நகர்ப்புறத்தில் வறுமை ஒழிப்பை செயல்படுத்துதல் ஆகியவற்றை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

- மாநில இயக்க மேலாண்மை அலகு (SMMU), மாநில மேலாண்மை இயக்குநரின் தலைமையின் கீழ் **6** தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடன் செயல்படுகிறது.
- ஒவ்வொரு மாவட்ட அலகும் மாவட்ட இயக்க மேலாண்மை அலகாக திட்ட இயக்குநரின் தலைமையின் கீழ் உதவி திட்ட அலுவலர் மற்றும் சமுதாய அமைப்பாளர்கள் உதவியுடன் செயல்படுகிறது.

- மாநில இயக்க மேலாண்மை அலகின் கீழ் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள், மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் உள்ள உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் சமுதாய அமைப்பாளர்கள் ஆகியோருக்கு அடிப்படை தொழில்நுட்ப பயிற்சியானது தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்றுனரைக் கொண்டு மாநில மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுகிறது.

**2016–17** முதல் **2018–19** வரை திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியின் கீழ் (CB&T) இதுவரை ரூ.**47.36** கோடி செலவிடப்பட்டுள்ளது. **2019–20**–ம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.**28.50** கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.11.8. நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரத் திட்டம் (SUSV)

இத்திட்டத்தின் குறிக்கோளானது, நகர்ப்புறத்தில் தெருவோர வியாபாரிகளின் திறன் மேம்பாடு, சிறு, குறு நிறுவனங்கள் தொடங்க உதவுதல், கடனுதவி பெறக்கூடிய வியாபாரத் திட்டத்திற்கு உதவுதல் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், நலிவுற்ற பிரிவு வியாபாரிகளான மகளிர், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் சிறுபான்மை வியாபாரிகளைச் சென்றடைவதை உறுதிசெய்தல் ஆகியனவாகும். தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சமூக பொருளாதார கணக்கெடுப்பின் அடிப்படையில் தெருவோர வியாபாரிகளைக் கண்டறிந்து, அவர்களைப் பதிவு செய்து, அவர்களுக்கு அடையாள அட்டையும்

வழங்கப்படுகிறது. ஒவ்வொரு நகரத்திலும் தெருவோர வியாபாரிகளின் தகவல்களைத் திரட்டி ஒருங்கிணைத்து பராமரிக்கப்படுகிறது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், நகர்ப்புறங்களில் வியாபாரம் செய்யும் இடங்களை திட்டமிட்டு, அதற்கான இட வசதிகளையும் செய்து தருகிறது.

இத்திட்டத்தின் கீழ், தெருவோர வியாபாரிகளை கணக்கெடுக்கும் பணி முடிக்கப்பட்டு மாநிலம் முழுவதும் இதுவரை **1,21,098** தெருவோர வியாபாரிகள் கண்டறியப்பட்டுள்ளார்கள். அரசு ஆணை எண்: **83** நாள் **14.07.2014**–ன் படி மாநில திட்ட அனுமதி குழு (PSC) திட்டங்களை ஒப்புதல் அளிக்க அமைக்கப்பட்டது. அரசு ஆணை எண்: **159** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **02.11.2015**–ல் வெளியிடப்பட்ட அரசு ஆணையின்படி ‘‘தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் திட்டங்கள் மற்றும் விதிகள் **2015**’’ தமிழ்நாடு மாநில அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் ஆங்காங்கே பரவிக்கிடக்கும் தெருவோர வியாபாரிகளை ஒருங்கிணைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளில் **482** நகர வியாபார குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை **50** நகரங்களில் **166** வியாபார மண்டலங்கள் கண்டறியப்பட்டு, அதன்படி **50** விரிவான செயல் திட்டங்களும் (Detailed Implementation Project) தயாரிக்கப்பட்டுள்ளன.

**2019–20**–ம் ஆண்டில் தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உள்ள பல்வேறு உட்கூறுகளின் கீழ் **15,000** தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் கடனுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.11.9. நகர்ப்புற வீடற்றோருக்கான திட்டம் (SUH)

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளானது நகர்ப்புறங்களில் வசிக்கும் வீடற்றோருக்கு உறைவிடம் மற்றும் அது தொடர்பான முக்கிய மற்றும் தேவையான சேவைகள் வழங்குதல் ஆகும். உறைவிடமானது நிரந்தரமாகவும், அனைத்து காலநிலைகளுக்கும் ஏற்றதாகவும், 24*7 பாதுகாப்பினை உள்ளடக்கியதாகவும் அமைக்கப்படுகிறது. ஒரு இலட்சம் மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சிக்கும் ஒரு நிரந்தர சமுதாய உறைவிடம், குறைந்த பட்சம் 100 நபர்களை உள்ளடக்கியதாக ஏற்படுத்தப்படுகிறது.

உள்ளூர் பகுதியில் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஒவ்வொரு உறைவிடமும் 50 முதல் 100 நபர்களுக்கு உறைவிடமாக செயல்படுகிறது. 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பத்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை உள்ள மாநகரங்களுக்கும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் செயல்படும் அனைத்து நகரங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு உறைவிடமும் தனிநபர் பயன்படுத்தும் குறைந்தபட்ச அளவு 50 சதுர அடி அல்லது 5 சதுர மீட்டர் கொண்டதாக கட்டப்படுகிறது.

நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிட (SUH) திட்டத்தின் கீழ் இது வரை 242 உறைவிட அலகுகள் (153 வழக்கமான உறைவிடங்கள் மற்றும் 89 சிறப்பு உறைவிடங்கள், இதில் மனநிலை பாதிக்கப்பட்டோருக்கும், மன நோயாளிகளுக்கும் மற்றும் திருநங்கையர்களுக்கும் உள்ளடக்கியதாகும்) 5 திட்ட அனுமதிக் குழு கூட்டங்கள் மூலம் அனுமதிக்கப்பட்டது. இதன் மதிப்பீட்டு தொகை ரூ.101.33 கோடியாகும். இதில் 149 உறைவிடங்கள் முடிக்கப்பட்டு அதில் 12,073 பயனாளிகள்

குடியேற்றப்பட்டுள்ளார்கள். மீதமுள்ள பணிகள் பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகிறது. **2019–20**–ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் **155** உறைவிடங்களுக்கு நிதி ஆதாரம் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**7.11.10. நகர்ப்புற பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களைக் கணக்கெடுத்தல்**

சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் வழிகாட்டுதல் படி **2004**–ம் ஆண்டு அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் கணக்கெடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் (JnNURM) மற்றும் நகர்ப்புற மனிதவளம் மற்றும் மதிப்பீடு குறித்த புள்ளி விவரம் (USHA) ஆகிய திட்டங்களின் கீழ் **2011**–ம் ஆண்டு **50,000** மற்றும் அதற்கும் மேலுள்ள மக்கள் தொகை கொண்ட குறிப்பாக **96** நகரங்களில் உள்ள குடிசை பகுதிகளில் மட்டும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. மேலும் **2015**–ம் ஆண்டில் நகர்ப்புற மனித வளம் மற்றும் மதிப்பீடு குறித்த புள்ளி விவரம் (USHA) திட்டத்தின் கீழ் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மேற்கண்ட முறையினைப் பின்பற்றி ஏற்கனவே கணக்கெடுத்த **96** நகரங்களையும் சேர்த்து மீதமுள்ள அனைத்து நகரங்களிலும், நகரம் முழுமைக்கும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் அனைத்துக் கணக்கெடுப்பின் தகவல்களும், நகர்ப்புற மனிதவள மதிப்பீடு குறித்த புள்ளி விவரமும் **2015** ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், நகர்ப்புற பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களைக்குறித்த

தகவல்களை நகராட்சி நிர்வாகம், சென்னை மாநகராட்சி, மற்றும் அனைத்து பேரூராட்சிகளிலிருந்தும் பெற்று நகர்ப்புறம் மற்றும் ஊரக பகுதிகளின் விபரங்களை ஒருங்கிணைத்து அதனை இ–மதி இணையதளத்தில் பதிவேற்றிப் பராமரிக்கும் பணியினைச் செய்து வருகிறது.

## 7.12. விருதுகள்

சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தவும் அதன் முக்கிய திட்டப் பங்காளர்களை ஊக்குவிக்கும் வகையிலும் பல விருதுகள் வழங்கப்படுகின்றன.

### அ) சிறந்த சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருதுகள்

சுய உதவிக் குழுக்களுக்கிடையே சிறந்த நிர்வாகம் மற்றும் சமூக விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த விருதுகள் சிறப்பாக செயல்படுபவர்களை பெருமைப்படுத்துவதுடன், மற்றவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு வழங்கப்படுகின்றன. மாநில அளவில் சிறப்பாக செயல்படும் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சுய உதவிக் குழுக்களுக்கும், மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் 3 சுய உதவிக் குழுக்களுக்கும், வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கும் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

**அட்டவணை 7.9**

**விருதுகள் மற்றும் பரிசுகளின் விபரம்**

| வ. எண். | விருதுகளின் பெயர் | பரிசுகள் விபரம் |
|---|---|---|
| **1.** | **சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கான விருது** | |
| அ | மாநிலஅளவில் சிறப்பாக செயல்படும் 10 சுய உதவிக் குழுக்கள் | தலா ரூ. 1 இலட்சம் வீதம் |
| ஆ | மாவட்டஅளவில் சிறப்பாக செயல்படும் 3 சுய உதவிக் குழுக்கள் | தலா ரூ. 25,000 வீதம் |
| இ | வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் 1 சுய உதவிக் குழு | சான்றிதழ் |
| **2.** | **சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருது** | |
| அ | மாநில அளவில் சிறப்பாக செயல்படும் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | தலா ரூ. 3 இலட்சம் வீதம் |
| ஆ | மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு | ரூ. 1 இலட்சம் |

## ஆ) வங்கிகளுக்கான விருதுகள்

சுய உதவிக் குழு இயக்கத்திற்கு முழு ஆதரவு நல்கி அவைகளின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் வங்கிகளின் சேவையினைப் பாராட்டி கௌரவிக்க கீழ்க்கண்ட விருதுகள் வழங்கப்படுகின்றன.

**அட்டவணை 7.10**

**வங்கிகளுக்கான விருதுகள் மற்றும் பரிசுகளின் விபரம்**

| வ. எண் | விருதுகளின் பெயர் | பரிசு விபரம் |
|---|---|---|
| அ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட வங்கிக்கான விருது | முதல் மூன்று வங்கிகளுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ் |

| வ. எண் | விருதுகளின் பெயர் | பரிசு விபரம் |
|---|---|---|
| ஆ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கான / பெண்களுக்கான தனி வங்கிக்கிளை விருது | முதல் பரிசு –ரூ.1 இலட்சம்<br>இரண்டாவது பரிசு– ரூ.75,000/– |
| இ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட பிற வங்கிக் கிளைகளுக்கான விருது | முதல் பரிசு – ரூ.1 இலட்சம்<br>இரண்டாவது பரிசு– ரூ.75,000/–<br>மூன்றாம் பரிசு – ரூ.50,000/– |
| ஈ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக்கான விருது | கேடயம் மற்றும் சான்றிதழ் |
| உ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக் கிளைக்கான விருது | முதல் பரிசு ரூ.15,000/–<br>இரண்டாவது பரிசு– ரூ.10,000/–<br>மூன்றாவது பரிசு– ரூ.5,000/– |

## 7.13. தமிழ்நாடு மாநிலஅரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (டி.என்.வி.ஆர்.சி.)

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) **2001–**ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் **1975–**ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள டி.என்.வி.ஆர்.சியின் முக்கிய நோக்கங்களாவன: (அ) திட்டப் பணியாளர்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் மாநில / மாவட்ட / வட்டார அளவிலான முதன்மைப் பயிற்றுநர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்குதல், (ஆ) திட்டத்திற்கான பயிற்சி உபகரணங்கள் / கையேடுகள், விளக்க அட்டைகள் மற்றும் பயிற்சி சார்ந்த பிற புத்தகங்கள் உருவாக்குதல், (இ) பல்வேறு சமூக, பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கான தொழில்

நுட்ப சேவைகளை வழங்குதல், (ஈ) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கிராமப்புறங்களில் வறுமை ஒழிப்பு எனும் பெரும்பணியில் செயல்படுத்திய பல்வேறு உத்திகள், முன் முயற்சிகள், பெற்ற படிப்பினைகள் மற்றும் திட்டத்தின் விளைவுகள் ஆகியவற்றைத் தொகுத்து ஒரு அறிவுசார் களஞ்சியமாக விளங்குதல், (உ) அரசு சாரா அமைப்புகளுடன் வளர்ச்சி தொடர்பான நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல்.

**2017–2018** ஆம் ஆண்டில் தேசிய சுகாதார நிறுவனத்துடன் (NHM) இணைந்து மேற்கொள்ளப்பட்ட தொற்றா நோய் (NCD) கண்டறிதல் மற்றும் தொடர் கண்காணிப்புத் திட்டம் **2018–2019–**ஆம் ஆண்டு பிற பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. தேசிய சுகாதார நிறுவனம் (NHM) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் (TNCDW) புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொண்டு மக்கள் தொகை அடிப்படையிலான தொற்றா நோய்கள் (NCD) கண்டறியும் திட்டத்தினை சேவைக் கட்டண அடிப்படையில் டி.என்.வி.ஆர்.சிக்கு வழங்கி சமுதாய வளப்பயிற்றுநர்கள் (சுகாதாரம்) மூலம் (CP-Health) செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் கிருஷ்ணகிரி, பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் முதற்கட்டமாக கடந்த **2017–**ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் **433** சமுதாய வளப்பயிற்றுநர்களைக் (சுகாதாரம்) கொண்டு, டி.என்.வி.ஆர்.சி மூலம் ரூ.**1.61** கோடி செலவில் செயல்படுத்தபட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக **2018–**ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் கரூர், இராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் கோயம்புத்தூர், திருநெல்வேலி மாநகராட்சிகளில் **593** சமுதாய வளப்பயிற்றுநர்களைக் (சுகாதாரம்) கொண்டு ரூ. **2.21** கோடி

செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **2019**ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ரூ. **3.82** கோடி செலவில் தொற்றா நோய் (NCD) குறித்த இத்திட்டம் மேலும் **41** வட்டாரங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு, **25** மாவட்டங்களை உள்ளடக்கி **913** சமுதாய வளப்பயிற்றுநர்களைக் (சுகாதாரம்) கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் இப்பணிக்கான 5% சேவை கட்டணமாக இதுவரை ரூ.**19.12** இலட்சம் ஈட்டி உள்ளது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மூலம் உருவாக்கிய சமூக மூலதனம் என்னும் பெரும் சக்தியின் விளைவும் மற்றும் சமுதாய வளப்பயிற்றுநர்களை இந்நிறுவனம் தொடர்ந்து வலுப்படுத்தி வந்ததுமே தொற்றாநோய்த் திட்டத்தை திறம்பட நிறைவேற்றி வருவதற்கு முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன.

**2018–2019–**ஆம் ஆண்டில் டி.என்.வி.ஆர்.சி.யின் மற்றொரு முன்முயற்சியாக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் / தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் பயன்களை கூவம், அடையாறு நதிக்கரையோரத்திலும், சென்னை நகர்ப்புறத்தின் சாலையோரங்களிலும் ஏற்கனவே வசித்து வெளியேற்றப்பட்டு, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தின் நாவலூர், பெரும்பாக்கம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தின் கூடப்பாக்கம் பகுதிகளில் மறுகுடியமர்த்தப்பட்ட மக்களுக்கு சென்றடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சிறப்பு ஒருங்கிணைப்பு திட்டத்தின் நோக்கமானது, அவர்கள் இயல்பு நிலையினை அடைந்திடவும், மறுகுடியமர்த்தப்பட்டதன் மூலம் ஏற்பட்ட

சிரமங்களிலிருந்து மீளும் திறனைப்பெற்றிடவும் இக்குடியிருப்புவாசிகளை தயார்படுத்துவதாகும்.

சமுதாய வளப் பயிற்றுநர்களைக் கொண்டு இரண்டு சுற்றுகளில் தகவல் தொடர்பு செயல்பாடுகள், வீடுகள் கணக்கெடுப்பு, சுய உதவிக் குழு அடிப்படை புள்ளி விபரங்கள் கணக்கெடுப்பு, சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல், நலிவுநிலைக் குறைப்பு சங்கம் உருவாக்குதல், வட்டார அளவிலான கூட்டமைப்பு உருவாக்குதல், மறுகுடியமர்த்தப்பட்ட குடியிருப்பு அளவிலான கூட்டமைப்பு உருவாக்குதல், வாழ்வாதார மேம்பாடு, திறன் பயிற்சி திட்டங்கள், நலிவுற்றோருக்கான (மாற்றுத்திறனாளிகள், முதியோர், பாதிப்பிற்குள்ளான மகளிர், பழங்குடியினர், திருநங்கையர் உள்ளிட்டோர்) சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துதல் போன்றவை தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தின் மிக முக்கிய பணிகளாகும்.

நாவலூர், பெரும்பாக்கம் மற்றும் கூடப்பாக்கம் ஆகிய மறுகுடியமர்வு பகுதிகளில் மேற்கண்ட செயல்பாடுகளுக்காக ரூ.**52.31** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் பிற மாவட்டங்களில் செயல்படும் மக்கள் கற்றல் மையங்களைச் சேர்ந்த **46** சமுதாய வளப் பயிற்றுநர்களைக் கொண்டு கல்வி, தகவல் தொடர்பு செயல்பாடுகள் மேற்கொள்ளுதல், அடிப்படை புள்ளிவிபரக் கணக்கெடுத்தல், சுய உதவிக் குழுக்கள் அமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல், இலவச மருத்துவ முகாம்கள் நடத்துதல், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு பெற்றுத் தருதல், உள்ளூர் சமூக வளப் பயிற்றுனர்களை

உருவாக்குதல் போன்ற செயல்பாடுகளுக்காக இதுவரை ரூ.13.63 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் – தேசிய வள மையம்**

டி.என்.வி.ஆர்.சியினை தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் கடந்த 2018–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2–ம் நாள் தேசிய வள மையமாக (NRO) அங்கீகரித்தது. இதன் மூலம் பிற மாநிலங்களுக்கு வறுமை ஒழிக்கும் யுக்தியினை கற்றுக் கொடுத்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் போன்ற செயல்பாடுகளில் வழிகாட்டும் நிலைக்கு உயர்த்தப்பட்ட வெகு சில நிறுவனங்களில் ஒன்றாக டி.என்.வி.ஆர்.சி திகழ்கின்றது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக டி.என்.வி.ஆர்.சி மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கான செயல்பாடுகள், முதியோர் பாதுகாப்பு, பண்ணை மற்றும் பண்ணை சாரா வாழ்வாதாரம், நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் மக்கள் கற்றல் மையம் (மகமை) போன்ற உயர்நிலைக் கூட்டமைப்புகளின், ஒத்த தொழில் கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் போன்ற பணிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கி வருகின்றது.

நிறுவனங்களை வலுப்படுத்துதல், திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் உயர்நிலை கூட்டமைப்புகளை வலுப்படுத்தும் தொழில் நுட்ப உதவியினை வழங்குவதற்காக 2018–2019 ஆம் ஆண்டு பீகார் மற்றும் மேற்கு வங்காள மாநில ஊரக வாழ்வாதார இயக்கங்களுடன் டி.என்.வி.ஆர்.சி – தேசிய வள மையம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. 2019 முதல், மேலும் ஒருவருடத்திற்கு இவ்விரண்டு மாநிலங்களிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மக்கள் கற்றல் மையத்தினை (மகமை) மாநில அளவில் மேலும் சிறப்பாக செயல்படுத்திடும் பணி இம்மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மக்கள் கற்றல் மையமானது (மகமை) சுய உதவிக் குழு இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியாகவும், தமிழகத்தின் தனித்துவமாகவும் திகழ்கிறது. தற்போது 26 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மகமைகளில் 2019–2020ஆம் ஆண்டில் முதற்கட்டமாக திருவண்ணாமலை, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள 5 மகமைகளை சுயசார்புடைய, நிலைத்த, நீடித்த நிறுவனங்களாக மாற்ற டி.என்.வி.ஆர்.சி வழிகாட்டும்.

## 7.14. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ்

முற்றம் சங்கம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975–ன் 27வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் கீழ் முற்றம் மாத இதழ் வெளியிடப்படுகிறது. முற்றம் மாத இதழானது "தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, இந்திய அரசால் பதிவு பெற்ற இதழாக (Registered News Paper of India) மாதந்தோறும் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது.

முதலில் முற்றம் மாத இதழ் 10,000 பிரதிகளுடன் வெளியிடப்பட்டது. பெண்களுக்கான பயனுள்ள செய்திகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விபரங்களைத் தெரிவிக்கும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனமாக முற்றம் இதழ் செயல்பட்டு வருகிறது.

முற்றம் இதழை சிறப்பாகவும், நவீன முறையிலும் அச்சிடும் பொருட்டு, 2002ஆம் ஆண்டு

கணினிமயமாக்கப்பட்டது. இதன் காரணமாக முற்றம் இதழின் சந்தாதாரர்கள் எண்ணிக்கை அதிகரித்ததுடன், அதிகமான மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் இவ்விதழ் சென்றடைந்துள்ளது. தற்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ், தமிழகம் முழுவதும் சந்தா செலுத்திய **62,000** மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அனுப்பப்பட்டு, அதன் மூலம் **15** இலட்சம் உறுப்பினர்களைச் சென்றடைகிறது.

**முற்றம் இதழின் உள்ளடக்கம்**

முற்றம் மாத இதழ், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தொடர்பான பல்வேறு செய்திகளை வெளியிட்டு வருகிறது. மகளிர் முன்னேற்றம் குறித்த செயல்பாடுகள் மற்றும் மகளிருக்கான அனைத்து திட்டங்கள் தொடர்பான விபரங்களை சேகரித்து, அதை அனைத்துத் தரப்பினருக்கும் தொடர்ச்சியாக சென்றடையும் விதமாக "தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் இதழில்'' வெளியிடச் செய்வதே இதன் முக்கிய குறிக்கோள் ஆகும்.

முற்றம் மாத இதழில், மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் போன்ற திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்கள் அறிந்து கொள்ள கீழ்க்கண்ட தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

- மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள்
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்றவற்றின் சாதனைகள்

- மகளிர் முன்னேற்றத்திற்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கான உரிமைகள், பெண் கல்வி, பெண்கள் பாதுகாப்பு சட்டங்கள், வறுமை ஒழிப்பு செயல்பாடுகள், சேமிப்பின் முக்கியத்துவம், பெண் தொழில் முனைவோர் முன்னேற்ற செயல்பாடுகள், கூட்டுத் தொழில் நடவடிக்கைகள், உடல் நலம் குறித்த விழிப்புணர்வு மற்றும் மாற்றுத்திறனாளிகளின் செயல்பாடுகள்.
- ஊரக வளர்ச்சி & ஊராட்சித் துறை மற்றும் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (IFAD-PTSLP) ஆகியவற்றின் பல்வேறு திட்டங்கள் குறித்த செய்திகள் போன்றவை முற்றம் இதழில் வெளியிடப்படுகின்றன.

## 7.15. உழைக்கும் மகளிருக்கான அம்மா இருசக்கர வாகனத் திட்டம்

இத்திட்டம் மாநில அரசின் நிதியில் 2017–18 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் ஒரு சிறப்புத் திட்டமாகும். உழைக்கும் மகளிரின் அன்றாட செயல்பாட்டை எளிதாக்கும் நோக்கத்துடன் அவர்கள் தங்களின் தொழிலை மேற்கொள்வதற்கும், பணியிடங்கள், வங்கிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளில் பணிகளை மேற்கொள்வதற்கும் எளிதில் சென்று வர ஏதுவாக இரு சக்கர வாகனங்களை மானியத்துடன் வாங்குவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மகளிரால் எளிதில் பயன்படுத்தும் வகையில் இவ்வாகனங்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தின்படி கியர் இல்லாத அல்லது ஆட்டோ கியர் உடைய இரு சக்கர வாகனங்கள் மட்டுமே

இத்திட்டத்தின் மூலம் வாங்க முடியும். மாற்றுத்திறனாளிகளின் உபயோகத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்ட வாகனங்கள் வாங்குவதற்காக கூடுதலாக 25 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தின் கீழ் தகுதி பெறும் பயனாளிகள்:**

தன்னுடைய ஊதியமே குடும்பத்தின் பிரதான வருமானம் என்ற நிலையில் வாழ்வாதார செயல்பாட்டிற்காக / ஊதிய வேலை வாய்ப்புக்காக தனியாகவோ அல்லது கூட்டாகவோ தொலை தூரத்திற்குச் சென்று பணிபுரியும் பெண்களே திட்டத்தின் முக்கியப் பயனாளிகள் ஆவர். மேலும், கீழ்க்காணும் பிரிவுகளைச் சார்ந்தவர்களும் தகுதியுடையவராவர்.

1. அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புச் சாரா பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பெண் தொழிலாளர்கள்.
2. கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் மகளிர்.
3. சுய தொழில் மற்றும் சிறு தொழில் செய்யும் பெண்கள்.
4. அரசாங்க நிதி உதவி பெறும் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசு திட்டங்கள்/சமூகம் சார்ந்த நிறுவனங்கள் – ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், மாவட்ட மக்கள் கற்றல் மையம் (மகமை) – ஆகியவற்றில் பணிபுரியும் மகளிர், தொகுப்பூதியம் தினக்கூலி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் பெறும் மகளிர்.
5. வங்கி தொடர்பாளர்கள் / வங்கி வழி நடத்துநர்கள் மற்றும் சுகாதார (ASHA) பணியாளர்கள்.

இத்திட்டத்திற்காக 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டுகளில் தலா ரூ.252.50 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் கியர் இல்லாத / ஆட்டோ கியரில் இயங்கும் வசதியுடன் கூடிய 125 cc–க்கு மிகாமல் தரமான புதிய இருசக்கர வாகனம் வாங்கிக் கொள்ள அதிகபட்ச மானியமாக, வாகன விலையில் 50 சதவீதமோ அல்லது ரூ.25,000/– இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு மேற்கண்ட மானியத் தொகைக்கு கூடுதலாக ரூ.6,250 சேர்த்து மொத்தம் ரூ.31,250 மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டம் 24.2.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. நாளது வரை 1,12,972 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். அதற்காக ரூ.256.59 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 7.16. மக்கள் கற்றல் மையம் (மகமை)

மக்கள் கற்றல் மையம் என்பது மக்களே முன்னின்று தேவையின் அடிப்படையில் திட்டங்களை வழிநடத்தும் முறையில் திறன் மேம்பாட்டு பயிற்சியின் மூலம் திறன் வளர்ப்பு, ஏழைகளின் வாழ்வாதார வளர்ச்சி, வறுமைக் குறைப்பு மற்றும் வளமான சமுதாயத்தை உருவாக்குதல் என்ற உயரிய நோக்கங்களை செயல்படுத்த முந்தைய புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட உயர் நிலை / இரண்டாம் நிலை கூட்டமைப்பாகும். மகமையின் தனிப்பட்ட சிறப்பு என்பது அதன் விரைவான செயல்பாடுகளும் நீடித்த நிலைத்த தன்மைக்கான ஆற்றல்மிகு கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதும் ஆகும்.

தனித்துவ அமைப்பான மகமை முதற்கட்டமாக 15 மாவட்டங்களில் துவங்கப்பட்டு சங்கங்கள் பதிவுச்சட்டப்படி

பதிவு செய்யப்பட்டு, பின்பு 2012ல் இவை மறு சீரமைப்பு செய்யப்பட்டன. 2014–2015 ஆம் ஆண்டில் இக்கூட்டமைப்பு இரண்டாம் கட்டமாக மேலும் 10 மாட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு தற்போது 25 மாவட்டங்களில் மகமை கூட்டமைப்பு செயல்பட்டு வருகின்றது. மகமையின் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்டங்களிலுள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் வளர்ச்சியை அவ்வப்போது கண்காணித்து வருகின்றனர்.

மகமையில் கீழ்க்கண்ட நான்கு துணைஅமைப்புகள் உள்ளன

1. நிறுவனங்களை வலுப்படுத்துதல் அலகு
2. சேமிப்பு மற்றும் கடன் அலகு
3. சமுதாய வளப்பயிற்றுநர்கள் சேவை அலகு
4. வாழ்வாதார அலகு

### 7.16.1. மகமையின் செயல்பாடுகள்

- களப்பகுதி, வட்டாரம், மாவட்டம் ஆகிய மூன்றடுக்குகளிலும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடத்துதல்.
- மகமையின் நான்கு அலகுகளின் பணிகளை ஆய்வு செய்தல்.
- காலாண்டு, அரையாண்டு மற்றும் ஆண்டு செயல் திட்டங்களைத் தயாரித்தல்
- சிறப்புக் கூட்டங்களை தேவையின் அடிப்படையில் நடத்துதல்
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் உள் மற்றும் வெளித் தணிக்கைகளை நடத்துதல்

- வெளித்தணிக்கை அறிக்கை மீதான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை செயல்படுத்துதல்
- செயற்குழு கூட்டத்திற்கு 100 சதவீத வருகைப்பதிவை உறுதிசெய்தல்.
- மாவட்ட அளவில் பிறதுறைகள் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்.
- ஒவ்வொரு வருடமும் வெளித் தணிக்கைக்குப்பின் மகமையின் பதிவினைப் புதுப்பித்தல்.
- உரிய நேரத்தில் உறுப்பினர் கட்டணம், சந்தா, பங்குத் தொகை வசூலித்தல்.
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு மகமையிலுள்ள 8,000 சமுதாய வளப்பயிற்றுநர்கள் மூலம் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை சேவைக் கட்டண அடிப்படையில் வழங்குதல், தகவல், கல்வி, தொடர்பு/விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அடிப்படை தகவல்கள் சேகரித்தல், நலத்திட்டங்களுக்கான பயனாளிகளைக் கண்டறிதல், வேலைவாய்ப்பு முகாம்கள், மருத்துவ முகாம்கள் போன்றவற்றை நடத்துவதற்கு உதவிபுரிதல் போன்ற சேவைகளை வழங்குதல்.
- பிற துறைகளின் தேவைக்கேற்ப, ஒருங்கிணைப்பின் மூலம் அவர்களது திட்டப் பணிகளில் பங்கேற்றல்.
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் நிறுவனங்களை கட்டமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல், தரம் பிரித்தல், பயிற்சிகள் வழங்குதல், சமூக தணிக்கை செய்தல், மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் இதர சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு பயிற்சி

தொழில்நுட்ப வழிகாட்டுதல், பிரச்சனையை தீர்த்தல், பதிவேடுகள் வழங்குதல், வங்கிக்கடன் இணைப்பை ஏற்படுத்துதல், வாழ்வாதார மேம்பாடு மற்றும் சுய உதவிக் குழுக்களின் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல் போன்ற பணிகளில் மகமை தனது சேவையினை வழங்குகின்றது.

### 7.16.2. மகமை மூலம் வழங்கப்பட்ட சேவைகளின் சில அம்சங்கள்

சமுதாய வளப்பயிற்றுநர்கள் (சுகாதாரம்) மூலம் தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தியது, எச்.ஐ.வி / எய்ட்ஸ் குறித்த சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடைய விழிப்புணர்வு ஏற்படுத்தியது, சென்னை இரயில்வே துறையில் சுகாதார வளாக பராமரிப்பு பணியினை ஏலம் எடுத்து சேவை வழங்கியது, புதுச்சேரி மற்றும் மேற்கு வங்க மாநில ஊரக வாழ்வாதார இயக்கங்களுக்கு தங்கள் சமுதாய வளப்பயிற்றுநர்கள் மூலம் திறன் வளர்ப்பு & நிறுவனங்களை அமைத்தல் போன்றன மகமை வழங்கியுள்ள சில சேவைகள் ஆகும்.

சமுதாய வளப் பயிற்றுநர்களைத் தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் மகமையால் தர மதிப்பீடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் பிற மாநிலங்களின் ஊரக வாழ்வாதார இயக்க குழுவினர் தமிழ்நாட்டில் களப்பயணம் மேற்கொள்ளும் போது அதை ஒருங்கிணைக்கும் பணியையும் சேவை கட்டண அடிப்படையில் மகமை மேற்கொண்டுள்ளது.

தங்களின் பல்வேறு சேவைகளின் வாயிலாக மாவட்ட அளவிலான மகமைகள் மார்ச் 2019 வரை 4.74 கோடி ரூபாய் சேவைக் கட்டணமாக பெற்றுள்ளன.

## 7.17. சமுதாய வளப் பயிற்றுநர்களைத் தரம் உயர்த்தும் திட்டம் (Community Cadre Graduation Program)

மகளிர் திட்டம், புது வாழ்வுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகிய திட்டங்களில் பல ஆண்டுகளாக முறையாக உருவாக்கப்பட்ட சமுதாய வளப் பயிற்றுநர்களின் பரவல், பல் திறன் மற்றும் செயல்பாடு ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள சுய உதவிக்குழு இயக்கத்தின் தனித்துவம் மிக்க வலிமைகளில் ஒன்றாகும். இச்சமுதாய வளப் பயிற்றுநர்கள் துவக்கத்தில் மகளிர் திட்டத்தில் உள்ள சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த இதர அமைப்புகளுக்கு பயிற்சி தரும் முதன்மைப் பயிற்றுநர்களாக செயல்பட்டு வந்தனர். அதன் பின்னர் புது வாழ்வு திட்டத்தின் கீழ் இப்பயிற்றுநர்கள் மக்கள் நிலை ஆய்வு, சமூக அணித்திரட்டல், வாழ்வாதாரம், திறன் மற்றும் பணியமர்வு, பாலின சமத்துவம், பொது சுகாதாரம், தூய்மைப்பணி, மாற்றுத்திறனாளிகள் நலம், மலைவாழ் மக்கள் நலம் உள்ளிட்ட பல்வேறு கருப்பொருட்களில் பயிற்சி பெற்று திட்ட செயலாக்கத்தின் முக்கிய ஆதாரமாக விளங்கினர்.

இவர்களின் பணித்திறன், விருப்பங்கள் மற்றும் பயிற்சியின் தேவைகள் ஆகியவற்றை வகைப்படுத்தி சமுதாய வளப் பயிற்றுநர்களை தரம் உயர்த்தும் திட்டம் உருவாக்கப்பட்டது. தேவை மற்றும் சேவைக் கட்டணம் அடிப்படையில் பல்வேறு கருப்பொருட்களில் பயிற்சினை/சேவைகளை வழங்க உயர்நிலை சமுதாய வளப் பயிற்றுநர்களை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இவ்வல்லுநர்களை

- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம், கிராமிய தொழில் முனைவோர் திட்டம், தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா போன்ற தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பல்வேறு திட்டங்களிலும்,
- மாவட்ட, வட்டார மற்றும் கிராம அளவில் அரசின் பிற துறைகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்களிலும், தனியார் துறைகளிலும்
- ஒப்பந்த அடிப்படையில் பிற மாநிலங்களிலும் பயன்படுத்தலாம்.

முதற்கட்டமாக இச்சமுதாய வளப் பயிற்றுநர்களுடைய அடிப்படை விபரங்கள், பெற்ற பயிற்சிகள், துறை சார்ந்த திறமை, முன் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் கண்டறியப்பட்டு தொகுக்கப்படுகிறார்கள் (Mapping). இவ்வாறு தொகுக்கப்பட்ட வளப் பயிற்றுநர்கள் அவர்களின் திறமைக்கு ஏற்ப தேர்வு வைக்கப்பட்டு தரம் பிரிக்கப்படுகிறார்கள். தற்போது கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளபடி சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள், சமுதாய மாற்றுத் திறனாளிகள் வழி நடத்துனர்கள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், கணக்கு புத்தக பராமரிப்பாளர்கள், மலைவாழ் மக்கள் வழிநடத்துனர்கள் உள்ளிட்ட பல்வேறு திறன் கொண்ட **56,937** வல்லுநர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

# அட்டவணை 7.11

| வ. எண் | மாவட்டம் | BK (VPRC) | BK (PLF) | CST | CDF | CP | CRP | BC | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 84 | 134 | 293 | 84 | 110 | 285 | 28 | 1018 |
| 2 | கோயம்புத்தூர் | 255 | 181 | 182 | 255 | 238 | 12 | 0 | 1123 |
| 3 | கடலூர் | 666 | 0 | 873 | 666 | 317 | 421 | 0 | 2943 |
| 4 | தருமபுரி | 271 | 271 | 701 | 244 | 484 | 29 | 0 | 2000 |
| 5 | திண்டுக்கல் | 311 | 305 | 436 | 303 | 582 | 0 | 0 | 1937 |
| 6 | ஈரோடு | 229 | 225 | 562 | 0 | 0 | 156 | 9 | 1181 |
| 7 | காஞ்சிபுரம் | 633 | 0 | 1083 | 613 | 476 | 764 | 0 | 3569 |
| 8 | கன்னியா–குமரி | 68 | 29 | 270 | 37 | 23 | 58 | 12 | 497 |
| 9 | கரூர் | 157 | 98 | 186 | 130 | 252 | 10 | 9 | 842 |
| 10 | கிருஷ்ணகிரி | 346 | 155 | 573 | 333 | 356 | 40 | 4 | 1807 |
| 11 | மதுரை | 85 | 420 | 420 | 120 | 228 | 18 | 12 | 1303 |
| 12 | நாகப்பட்டினம் | 405 | 0 | 385 | 385 | 138 | 197 | 13 | 1523 |
| 13 | நாமக்கல் | 316 | 189 | 560 | 172 | 146 | 172 | 12 | 1567 |
| 14 | நீலகிரி | 80 | 35 | 143 | 35 | 0 | 0 | 5 | 298 |
| 15 | பெரம்பலூர் | 123 | 101 | 224 | 103 | 206 | 20 | 6 | 783 |
| 16 | புதுக்கோட்டை | 253 | 229 | 357 | 162 | 60 | 134 | 24 | 1219 |
| 17 | ராமநாதபுரம் | 134 | 174 | 216 | 88 | 33 | 27 | 6 | 678 |
| 18 | சேலம் | 445 | 385 | 695 | 369 | 354 | 140 | 12 | 2400 |
| 19 | சிவகங்கை | 678 | 160 | 858 | 728 | 788 | 374 | 8 | 3594 |
| 20 | தஞ்சாவூர் | 615 | 615 | 567 | 202 | 0 | 569 | 0 | 2568 |
| 21 | தேனி | 53 | 6 | 181 | 72 | 106 | 20 | 1 | 439 |
| 22 | திருநெல்வேலி | 413 | 413 | 327 | 413 | 244 | 239 | 9 | 2058 |
| 23 | திருவள்ளூர் | 1026 | 369 | 512 | 0 | 126 | 0 | 12 | 2045 |
| 24 | திருவண்ணா மலை | 1358 | 631 | 483 | 348 | 286 | 54 | 56 | 3216 |
| 25 | திருவாரூர் | 424 | 377 | 424 | 424 | 117 | 424 | 9 | 2199 |
| 26 | தூத்துக்குடி | 362 | 414 | 557 | 200 | 350 | 80 | 12 | 1975 |
| 27 | திருப்பூர் | 262 | 262 | 345 | 210 | 135 | 66 | 4 | 1284 |
| 28 | திருச்சி | 404 | 404 | 689 | 270 | 0 | 404 | 5 | 2176 |
| 29 | வேலூர் | 713 | 726 | 1190 | 735 | 113 | 527 | 10 | 4014 |
| 30 | விழுப்புரம் | 1108 | 0 | 1375 | 237 | 319 | 101 3 | 10 | 4062 |
| 31 | விருதுநகர் | 450 | 141 | 538 | 165 | 330 | 13 | 0 | 1637 |
| மொத்தம் | | **12643** | **7315** | **15912** | **8019** | **6807** | **5981** | **260** | **56937** |

இரண்டாவது கட்டமாக இவர்களின் சேவைகளுக்கான வழங்கல் மற்றும் தேவை இணைப்பினை உறுதி செய்வதற்காகவும் பயிற்சி தருவதன் மூலமாக அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கவும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஒரு வலைதளத்தை (eCRP.in) உருவாக்கியுள்ளது. இது சமுதாய வளப் பயிற்றுநர்களின் விபரப் பதிவேடாக செயல்படும். இந்த வலைதளம் மாநிலமெங்கும் தேவைப்படும் திறன்களை எளிதில் கண்டறிவதற்கும், பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளுக்கு இச்சமுதாய வளப்பயிற்றுநர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், பயிற்றுநர்கள் தங்கள் சேவைக் கட்டணங்கள்/ ஊக்கத் தொகையினை உடனடியாக பெறுவதற்கும் வழிவகுக்கிறது.

## 7.18. இணையவழிக் கற்றல் மற்றும் சமுதாய வானொலி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வட்டாரங்களிலும் கிராமங்களிலும் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாடு, திறன் வளர்ப்பு போன்ற அடிப்படைப் பயிற்சிகளை வழக்கமான முறையில், நேரடியாக வழங்க ஆண்டுதோறும் சுமார் 60 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. இருப்பினும் இப்பயிற்சி முறை ஒருமித்த தரமான பயிற்சியினையோ அல்லது சிறந்த கற்றல் விளைவுகளையோ முழுமையாக ஏற்படுத்தவில்லை. மேலும் இப்பயிற்சி முறை தனி நபரின் நேர விருப்பத்திற்கு ஏற்ப கற்றுக்கொள்ளவதற்கும் தடையாக இருக்கிறது.

எனவே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய கைபேசி செயலி அடிப்படையிலான

மின்கற்றல் தளம் (e-Learning platform) ஒன்று உருவாக்கப்பட்டு, தற்போது சுய உதவிக் குழு உறுப்பினர்கள் நேரடியாக தங்களுடைய கைபேசி மூலம் அதைக்காணவும், கற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இணைய வழி தொழில் நுட்பத்தை வளர்க்கும் முதற்கட்டமாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஏற்கனவே **20,000** அம்மா கைபேசிகளை (ஸ்மார்ட்போன்கள்) சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு வழங்கியுள்ளது. இக்கைபேசிகளை அவர்கள் குழுக்களின் ஆளுமை மற்றும் கணக்குகள் ஆகியவற்றை இ–மதி வலைதளம் மூலம் மேற்பார்வையிட பயன்படுத்தி வருகின்றனர். தற்போதைய இணைய வழி கற்றலுக்கும் இக்கைபேசிகள் பயன்படுகின்றன.

துவக்கத்தில் இந்த இணையவழி கற்றல் தளம், நன்கு தயார் செய்யப்பட்ட பல கருப்பொருட்களுடன் ஏற்கனவே இருக்கும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு துணையாக செயல்படும். ஆனால் பிறகு இதுவே எதிர்காலத்தில் மின் சான்றிதழ் திட்டத்துடன் இணைக்கப்படும் போது முக்கியமான பயிற்சி வழிமுறையாக மாறி அதிக நேரத்தையும், நிதியையும் சேமிக்கும் தளமாக விளங்கும். இணையவழிக் கற்றல் பாடங்கள் சுய உதவிக் குழுக்களின் ஆளுமை, நிதி உள்ளாக்கம், வாழ்வாதாரம், தூய்மை இந்தியா இயக்கம், ஊராட்சி அமைப்புகள் – சமுதாயம் சார்ந்த அமைப்புகள் கூட்டாண்மை, ஊட்டச்சத்து இயக்கம் போன்ற தலைப்புகளில் முதலில் உருவாக்கப்படும். இணையவழிக் கற்றலுக்கான இப்பாடங்களுடன் சுய உதவிக் குழு மகளிரின் முழுமையான வளர்ச்சியினை இலக்காக கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட செய்திகளுடன் கைபேசி செயலியில் ஒரு சமுதாய வானொலியும் செயல்படும்.

**06.03.2019** அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சமுதாய வானொலி (Community Digital Radio) மற்றும் இணையவழிக் கற்றல் பாடங்கள் (e-Learning modules) தொடர்பான கைபேசி செயலி துவக்கி வைக்கப்பட்டது.

## 7.19. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு ஒரு முறை சிறப்பு நிதி உதவி வழங்குதல்

தமிழ்நாட்டில் கஜா புயலின் பாதிப்பினாலும் பருவ மழை பொய்த்ததன் காரணமாக ஏற்பட்ட வறட்சியினாலும் ஏழைகள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருப்பதால் ஏழைக் குடும்பங்களுக்கு ஒரு முறை சிறப்பு நிதி உதவியாக **2,000** ரூபாய் வழங்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **11.02.2019** அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் விதி எண்.**110**ன் கீழ் அறிவிப்பினை வெளியிட்டார். விவசாய தொழிலாளர் குடும்பங்கள், நகர்ப்புற ஏழைகள், பட்டாசு தொழில், மீன் பிடித்தல், விசைத்தறி, கைத்தறி, கட்டுமானம், சலவைத்தொழில், மரம் ஏறுதல், உப்பளத் தொழில், தோல் பொருட்கள், மண்பாண்டங்கள், கைவினைஞர்கள் முதலான பல்வேறுத் தொழில்களில் ஈடுபட்டு இருக்கும் தொழிலாளர் குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர்.

## 7.20. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் 35 ஆம் ஆண்டு கொண்டாட்டங்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது **1983**ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் **9**ம் நாள் அன்று நிறுவப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள பெண்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி **2018**ம் ஆண்டுடன் **35** ஆண்டுகள் முடிவடைந்ததை

நினைவுப்படுத்தும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மறைமலை நகரில் அமைந்துள்ள மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் “வாழ்வை மேம்படுத்துவோம்” என்ற தலைப்பில் **2018**ஆம் ஆண்டு டிசம்பர் **6** மற்றும் **7** ஆகிய தேதிகளில் இரண்டு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் இந்நிறுவனம் மற்றும் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியில் கடந்த கால செயல்பாடுகள், தற்போதைய நிலை மற்றும் வருங்காலத்திற்கான இலக்கு நிர்ணயித்தல் போன்றவற்றில் தற்சோதனை பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வானது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்ககம், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், சுனாமிக்கு பிந்தய வாழ்வாதாரத் திட்டம் மற்றும் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் முதலியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த இரண்டு நாள் நிகழ்வில் **300**க்கும் மேற்பட்ட சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் பெண் பிரதிநிதிகள், பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், தொழில் நிறுவன பிரதிநிதிகள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் மகளிர் மேம்பாட்டு நிறுவன அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இக்கருத்தரங்கில் முழுமையான நிதி உள்ளாக்கம், சமூக உள்ளாக்கம், வாழ்வாதாரம், கிராமிய தொழில்கள், திறந்த வெளியில் மலம் கழிக்காமை, ஊட்டச்சத்து பற்றிய விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வேலை உருவாக்கம் முதலிய தலைப்புகளில் சிறந்த பேச்சாளர்களை கொண்ட குழுவாக அமைக்கப்பட்டு விரிவான முறையில் விவாதம் நடைபெற்றது. இத்தலைப்புகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளை

அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்டது. மேற்கண்ட இரண்டு நாள் நிகழ்வில் தொண்டு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், அரசுத் துறைகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த **46** பேச்சாளர்கள் கலந்துக்கொண்டு மேற்குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ் கருத்துக்களை வழங்கியும் பார்வையாளர்களோடு கலந்துரையாடியும் சிறப்பித்தனர். இந்நிகழ்வில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூத்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் சேவையை பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின் போது தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்திற்காக ‘SURGE’ என்ற மாதாந்திர செய்திமடல் வெளியிடப்பட்டது.

# 8. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

## 8. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

### 8.1 முன்னுரை

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டமானது (TNRTP) உலக வங்கியின் நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டமாகும். இத்திட்டம் வறுமை ஒழிப்பு எனும் செயல்பாட்டையும் தாண்டி தொழில் மேம்பாடு, நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் ஊரக சமுதாயத்தில் வளம் மற்றும் நிலைத்த உயர்வினை உருவாக்கி பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு புதுவாழ்வுத்திட்டம் (TNPVP), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) மற்றும் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (NRLP) ஆகிய திட்டங்களின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட பல்வேறு முதலீடுகள் மற்றும் சமுதாய அமைப்புகளின் மூலதனங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்பட்ட புதுவாழ்வு திட்டத்தின் வெற்றியை ஆதாரமாகக் கொண்டு துவங்கப்பட்ட திட்டமாகும். தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம் **(2005–2017)** தமிழ்நாட்டில் **26** மாவட்டங்களிலுள்ள **120** பின் தங்கிய வட்டாரங்களில், **4174** கிராம ஊராட்சிகளில் ரூ.**1871.85** கோடியில் **9.8** லட்சம் கிராமப்புற இலக்கு மக்கள் குடும்பங்கள் பயன் பெறுவதற்காக சமுதாய மேம்பாட்டு அணுகுமுறை மூலம் கிராமப்புறங்களில் வறுமை ஒழிப்பு மற்றும் ஆற்றலளிப்பு ஆகிய நோக்கங்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்ட திட்டமாகும்.

**8.2 தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் நோக்கங்கள்**

தமிழ்நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் ஊரகத்தொழில் முனைவுகளை உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

**8.3 திட்ட செயலாக்கம்**

இத்திட்டமானது **26** மாவட்டங்களில் **120** வட்டராங்களில் **3994** ஊராட்சிகளில் இரண்டு கட்டங்களாக **6** வருடங்களில் செயல்படுத்தப்படும்.

**8.4 நிதிப் பங்கீடு**

இத்திட்டத்திற்கான மதிப்பீடு நிதி ரூ.**918.20** கோடி ஆகும். இத்திட்ட நிதியானது உலக வங்கிக்கும் தமிழக அரசிற்கும் இடையே **70:30** என்ற நிதி விகிதத்தில் அமைந்துள்ளது. இதில் உலக வங்கிக் கடனுதவி ரூ.642.74 கோடி மற்றும் தமிழக அரசின் பங்களிப்பு ரூ. 275.46 கோடி ஆகும்.

**8.5 திட்டப்பயனாளிகள்**

முந்தைய திட்டங்களால் உருவாக்கப்பட்ட சொத்துக்கள், வளங்கள் மற்றும் திறன்களை கொண்ட சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குடும்பங்களே இத்திட்டத்தின் முதன்மை இலக்கு ஆவர். இத்திட்டத்தில் பெண்கள், ஆதிதிராவிடர்,

பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் உள்ள வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா துறைகளை சேர்ந்த உற்பத்தியாளர்கள் இணைந்த குழு, கூட்டமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர்கள் ஆகியோர் பயனாளிகள் ஆவர்.

இத்திட்டத்தின் மூலம் **4,11,620** நேரடிப் பயனாளிகள் பயன் பெறுவர். இவர்களில் **3,25,000** பயனாளிகள் மூலம் தொழில் குழுக்கள், உற்பத்தியாளர்கள் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு அமைக்கப்படும். இத்திட்டத்தின் வாயிலாக **6,620** தனிநபர் தொழில் முனைவோர்கள் மற்றும் திறன் பயிற்சிகள் வாயிலாக **80,000** பயனாளிகள் **(40,000** பயனாளிகளுக்கு ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள அரசின் முக்கிய தொழில் திறன் பயிற்சி திட்டங்கள் ஒருங்கிணைப்பின் மூலமும் **40,000** பயனாளிகளுக்கு சமுதாய திறன் பயிற்சி/பண்ணைப் பள்ளிகள் மூலமும்) பயன்பெறுவர்.

| வரிசை எண் | செயல்பாடுகள் | விவரம் | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1. | குழு தொழில் நிறுவனங்கள் | **6000** உற்பத்தியாளர்குழுக்கள் (குழு ஒன்றிற்கு 50 நபர்கள்) | 3,00,000 |
| | | 1000 தொழில்குழுக்கள் (குழு ஒன்றிற்கு 25 நபர்கள்) | 25,000 |
| | | | **3,25,000** |
| 2. | தனிநபர் தொழில் நிறுவனங்கள் | நுண் தொழில் | 6,000 |
| | | குறு தொழில் | 500 |
| | | சிறு தொழில் | 120 |
| | | | **6,620** |

| | | | |
|---|---|---|---|
| 3. | திறன்பயிற்சி | ஒருங்கிணைப்பின் மூலமாக திறன் பயிற்சி | 40,000 |
| | | திட்ட பயிற்சிப் பள்ளிகள் மூலமாக | 40,000 |
| | | | **80,000** |
| **மொத்தம்** | | | **4,11,620** |

## 8.6 திட்டக் கூறுகள்

இத்திட்டம் நான்கு கூறுகளை உள்ளடக்கியது

1. ஊரகத் தொழில் முனைவுக்கு (Rural Enterprise) ஏற்ற சூழல் மேம்பாடு
2. தொழில்முனைவுக்கான திட்ட நிதி வழங்கல்
3. திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புகள்
4. திட்ட மேலாண்மை

### 8.6.1. ஊரகத் தொழில் முனைவுக்கு ஏற்ற சூழல் மேம்பாடு

இத்திட்டக்கூறின் முக்கிய நோக்கம் கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற சூழல்களை உருவாக்குதல் ஆகும். மாவட்டத்தில் பல்வேறு தொழில் வாய்ப்பிற்கான, தொழில் வகைகளுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளுதல், மக்கள் பங்கேற்புடன் லாபம் தரத்தக்க சாத்திய கூறுகள் உள்ள ஊரக தொழில்களை கண்டறிதல் (குழு மற்றும் தனிநபர்), ஏற்கனவே உள்ள ஊரக தொழில்களை வலுப்படுத்துதல், சந்தை வாய்ப்புகள் மற்றும் மதிப்பு தொடர் வாய்ப்புகளை கண்டறிதல், தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை சேவைகளை வழங்குதல் மற்றும் தொழில்களின் நிலைத்த தன்மையை உருவாக்குவதற்காக சிறந்த வழிமுறைகளை தெரிவித்தல் ஆகியவற்றை இக்கூறு கொண்டுள்ளது.

இத்திட்டக்கூறின் கீழ் மகளிரால் நடத்தப்படும் நிறுவனங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற பசுமை சார்ந்த நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

### 8.6.2 தொழில்முனைவுக்கான திட்ட நிதி வழங்கல்

இக்கூறின் கீழ் கிராமப்புறங்களில் உருவாக்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில்களுக்கு தேவையான நிதியினை பெற்றுத்தர இணை மானிய நிதி திட்டத்தின் (Matching Grant Program) மூலமும் பிற நிதி நிறுவனங்களின் நிதி சேவை மூலமும் வழிவகை செய்யப்படும்.

#### 8.6.2.1 இணை மானிய நிதி திட்டம்

இக்கூறின் நோக்கம் புதிய தொழில்கள் மற்றும் குழு தொழில்களுக்காக, நிதி நிறுவனங்களில் தேவைக்கேற்ப நிதி பெறுவதில் உள்ள இடைவெளியை போக்கி போதிய நிதி பெற வழிவகை செய்வதாகும்.

இணை மானிய திட்டத்தின் முக்கிய நோக்கம் முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள், மகளிரால் நடத்தப்படும் தொழில்கள், தொழில் குழுக்கள், உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், மாற்றுத் திறனாளிகளால் மேற்கொள்ளப்படும் தொழில்கள் மற்றும் நிதி பெறுவதில் இடர்பாடுள்ள தொழில்களுக்கு நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவது ஆகும்.

இணை மானிய நிதி திட்டமானது, கடன் பெற்றவர்கள் கடன் தொகையை முறையாக திருப்பிச் செலுத்துவதை ஊக்கப்படுத்திடவும், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தொழில்களுக்கான கடன் தொகையினை துரிதமாக வழங்குவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதாகும். இணை மானிய நிதி திட்டத்தில் , தொழில்களுக்கு கடன் வழங்கும் வங்கிக்கு (Participating Financial Insitution) கடன் தொகையில்

**30%** நிதி திட்டத்தின் மூலம் விடுவிக்கப்பட்டு வங்கி இருப்பில் வைக்கப்படும். கடன் பெற்ற நபர் மற்றும் குழுக்கள் முறையாக **70%** கடனை திருப்பிச் செலுத்திய பின்பு மீதமுள்ள **30%** திட்ட நிதியினை வங்கிக் கடனுக்கு ஈடாக செலுத்தி எஞ்சிய கடன் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு பெற முடியும்.

### 8.6.2.2 புதுமைகளை உருவாக்குதல்

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் உள்ள சவால்களை எதிர் கொள்வதற்காக தொழில் நுட்பம், புதுமை மற்றும் பங்கேற்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி பெரும் மாற்றத்தை தரத்தக்க சிந்தனைகளை வடிவமைத்து, மேம்படுத்தி நிறைவேற்றும் முயற்சிகளுக்கு இக்கூறு உதவி செய்யும். இக்கூறு கீழ்க்கண்ட இரண்டு செயல்பாடுகளைக் கொண்டுள்ளது.

#### (i) தமிழ்நாடு ஊரகப் புத்தாக்க சந்தை

தமிழ்நாட்டில் ஊரகப் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் மிக்க கருப்பொருட்கள் தொடர்பான புதுமைகளைக் கண்டறியவும், காட்சிப்படுத்தவும், பிரபலப்படுத்தவும் இச்சந்தை ஒரு தளமாக அமையும்.

#### (ii) முன்னோடி திட்டங்கள்

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான கற்றல்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் அனுபவங்களின் வழிகாட்டுதலோடு இத்திட்டத்தில் பரிட்சார்த்த ரீதியாக மூன்று முன்னோடித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். அவை,

(அ) கைவினைஞர்களை ஊக்குவிப்பதற்காக உற்பத்தி தொழில்கள்

(ஆ) பாரம்பரிய உணவு துறையினை ஊக்குவிப்பதற்காக வேளாண் உணவு மையம்

(இ) மாதவிடாய் தூய்மைக் குறித்து பெண்களின் விழிப்புணர்வு ஏற்படுத்த மக்கும் தன்மையுடைய சானிட்டரி நாப்கின்கள் உற்பத்திக்கான பசுமை தொழில்கள்

**8.6.3 திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புகள்**

இக்கூறின் நோக்கமானது,

அ) நிலையான ஊதிய மற்றும் சுய வேலை வாய்ப்பினை உருவாக்குதல்,

ஆ) உயர் மதிப்புடைய வேளாண் மற்றும் அதை சார்ந்த நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய திறன்களை மேம்படுத்துதல் மற்றும்

இ) சந்தைக்கு ஏற்ப திறன்கள் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு ஆகியவற்றின் மூலமாக தொழில் முனைவோரை உருவாக்குதல் ஆகும்.

இத்துணைக் கூறின் மூலம் 80,000 இளைஞர்களுக்கு தொழிற்திறன் மேம்பாட்டிற்கான பயிற்சியினை (ஏற்கனவே அரசால் செயல்பட்டுவரும் முதன்மையான தொழிற்பயிற்சி திட்டங்கள் மூலம் 40,000 இளைஞர்கள் மற்றும் சமூக பயிற்சி பள்ளிகள் மூலம் 40,000 இளைஞர்கள்) வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இச்செயல்பாட்டில் மொத்தப் பயனாளிகளில் 40% பெண்களாக இருக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கூறு, பயிற்சிக்கான இலக்கு இளைஞர்களை கண்டறிதல், சேர்த்தல் உள்ளிட்ட பயிற்சிக்கு முந்தைய மற்றும் பிந்தைய சேவைகளை உள்ளடக்கியதாகும்.

### 8.6.4 திட்ட மேலாண்மை

இக்கூறின் நோக்கமானது இந்தத் திட்டத்திற்கு தேவையான சேவைகளை வழங்குதல், மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறையை மேம்படுத்துதல், விரைவாக நிறைவேற்றும் செயல்முறையினை உருவாக்குதல், நிதி மேலாண்மை, மனிதவள ஆதாரங்களை வழங்குதல், திட்ட நிர்வாகம், சமூக–சுற்றுசூழல்–பழங்குடியினரின் சமூகப் பாதுகாப்பு மற்றும் தகவல் தொடப்பு தொழில் நுட்பத்தை ஏற்படுத்தி சிறப்பான முறையில் திட்டத்தை செயல்படுத்துதல் ஆகும்.

## 8.7 நிறுவன அமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஊரக புத்தாக்க சங்கம், திட்ட மேலாண்மை மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கிறது. இச்சங்கம், தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975 ன் கீழ் 07.07.2017 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மாநில திட்ட செயலாக்க அலகிற்கு வழிகாட்டவும், கொள்கை முடிவெடுக்கவும் மற்றும் ஒத்துழைப்பு நல்கவும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கச் சங்கத்தின் பொதுக்குழு மற்றும் செயற்குழு முக்கிய அமைப்புகளாக திகழும்.

### 8.7.1 மாநில திட்ட செயலாக்க அலகு

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தை செயல்படுத்தும் நேரடியான பொறுப்பு மாநில திட்ட செயலாக்க அலகினுடையதாகும். இம்மாநில திட்ட செயலாக்க அலகின் தலைமைச் செயல் அலுவலராக இந்திய ஆட்சிப் பணியாளர்

ஒருவர் நியமிக்கப்பட்டு, மாநில குழுவின் துணையுடன் திட்ட செயல்பாடுகளை செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல் பணி மேற்கொள்ளப்படுகிறது.

### 8.7.2 மாவட்ட திட்ட செயலாக்க அலகு

இத்திட்டம் 24 மாவட்ட திட்ட செயலாக்க அலகுகளைக் கொண்டு (தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள் முறையே மதுரை, திருச்சி மாவட்டங்களுடன் இணைந்து செயலாற்றும்) மாவட்ட செயல் அலுவலர் தலைமையில் திட்ட செயல்முறை மற்றும் நடைமுறைப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும். மாவட்ட செயல் அலுவலருக்கு திட்ட செயலாக்கத்தில் உறுதுணையாக நான்கு செயல் அலுவலர்கள் இருப்பர்.

### 8.7.3 வட்டார அலகு

இந்த செயலாக்க அலகானது 26 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் வட்டார அணித் தலைவர் தலைமையில் ஏற்படுத்தப்படும். திட்ட செயல்பாட்டில் வட்டார அணித்தலைவருக்கு உறுதுணையாக மூன்று திட்ட செயலர்களும் இருப்பர்.

### 8.8 2019–20 ஆம் ஆண்டுக்கு வரவு செலவு திட்ட மதிப்பீடு

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 2019-20 ஆம் நிதி ஆண்டில் ரூ. 172 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 9. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

## 9. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

கடந்த **2004**–ஆம் ஆண்டு சுனாமியால் ஏற்பட்ட பேரழிவிற்குப்பின், நிவாரணம் மற்றும் மறு வாழ்வுப் பணிகள் உடனடியாக தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீண்டகாலத் தீர்வாக, மாற்று மற்றும் நிலைத்த வாழ்வாதாரங்கள் ஏற்படுத்தித் தர முடிவு செய்யப்பட்டது. இதற்காக, பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயலாக்கம் பெற்றது. இத்திட்டத்தின் மூலம், பாதிக்கப்பட்ட கடலோரச் சமுதாய மக்களின் இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்ய பன்முக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சமுதாயம் சார்ந்த நிறுவனங்களான கூட்டு வள மையங்கள் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மாவட்ட அளவிலான மீனவ கூட்டமைப்புகள் வலுப்படுத்தப் படுகின்றன. சமுதாய மக்களின் திறனை வளர்ப்பதும் மற்றும் அவர்களின் திறனை மேம்படுத்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது ஆகும்.

சுயவேலைவாய்ப்பு, பேரிடர் மேலாண்மை ஆகியவற்றில் சமுதாய மக்களின் திறனை மேம்படுத்துதல் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நிலைத்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதில் இத்திட்டம் பெரும் பங்காற்றுகிறது.

### 1. குறிக்கோள் :-

- தற்சார்புடைய கடலோர சமுதாயத்தை கட்டமைத்து அவர்களின் வாழ்வாதாரத்தை நிலைத்த தன்மையுடையதாக்குதல்.

## 2. நோக்கம் :-

- சமுதாய மக்கள் மற்றும் பிற பொருத்தமான நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நுண் தொழில்கள் மற்றும் வள மேலாண்மை அமைப்புகளை நிர்வகிக்க, ஏதுவான நிறுவனங்களை ஏற்படுத்தல்.

## 3. திட்டம் – ஒரு பார்வை :–

| | | பகுதி – 1 | பகுதி – 2 |
|---|---|---|---|
| திட்ட காலம் | : | 11 ஆண்டுகள் (2008 – 2019) | 4 ஆண்டுகள் (2016 – 2020) |
| திட்ட மதிப்பீடு | | ரூ.283.69 கோடி | ரூ.279.49 கோடி |
| செயல்படும் மாவட்டங்கள் | : | திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர்,நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி | தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி |
| திட்டப்பகுதி | | 24 ஊராட்சி ஒன்றியங்கள் (109 ஊராட்சிகள்) | 36 ஊராட்சி ஒன்றியங்கள் (129 ஊராட்சிகள்) |
| பயனடைவோர் | | 1.55 இலட்சம் குடும்பங்கள் சார்ந்த சுமார் 6 இலட்சம் பேர் | 1.20 இலட்சம் குடும்பங்கள் சார்ந்த சுமார் 6.12 இலட்சம் பேர் |

## 4. திட்டப் பயனாளிகள் :–

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கீழ்க்கண்ட கடலோரப் பகுதியில் வசிக்கும் மக்கள், அதாவது :–

- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்
- வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்

- சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துவோர்
- பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம் :– சங்கு, சிப்பி சேகரிப்போர்)
- சிறு மற்றும் குறு விவசாயிகள்
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள்

**5. உத்தி :**

வாழ்வாதார மேம்பாட்டுக்கான உத்தி கீழ்க்கண்ட நான்கு உந்து தளங்களைக் கொண்டது.

1) சமுதாய நிறுவனங்களை கட்டியெழுப்பி, அவற்றை ஆதரித்தல்
2) நுண் நிதி மற்றும் இதர நிதிச் சேவைகள் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்தல்
3) இலக்கு குடும்பங்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்தல்
4) நிலைத்த, பெரிய அளவிலான நிறுவனங்களை வளர்த்தெடுத்தல் மற்றும் தொலைதூர சந்தைகளை அணுகுதல், சமுதாய அளவிலான திட்டமிடல், வள மேலாண்மை, பாதுகாப்பான கல்வி மற்றும் விழிப்புணர்வு, சமுதாய கட்டமைப்புகளை மேம்படுத்த வழிவகுத்தல் மற்றும் பேரழிவுகளின் தாக்கத்தைக் குறைத்தல் ஆகியவை ஆகும்.

இத்திட்டம் பெண்களை முக்கிய இலக்காக கொண்டு, தற்போதைய மீன் சார்ந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், புது வாழ்வாதாரத் திட்டங்கள் குறிப்பாக கால்நடை வளர்ப்பு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் உதவுகிறது. பெரும்பான்மையான சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்கள் பெண்கள் ஆவர். அவர்கள் திட்டத்தின் உதவியுடன் குறுந்தொழில் அதிபர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

**6. திட்ட செயல்பாடு :-**


திட்ட செயல்பாடுகளை மேற்பார்வையிட மூன்று குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. மாநில அளவில், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை கூடுதல் தலைமை செயலாளர் அவர்கள் தலைமையில், இத்திட்ட கூடுதல் தலைமை செயலாளர் / திட்ட இயக்குநர் ஆகியோரை உறுப்பினர் / செயலராகக் கொண்ட திட்ட வழிகாட்டுக் குழு.
2. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான திட்ட செயல்பாடு ஆலோசனைக் குழு.
3. கிராம அளவில், ஊராட்சித் துறை நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் மரபு சார்ந்த இதர நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கிராம கூட்டு வள ஆலோசனைக் குழு.

## திட்ட வழிகாட்டுக் குழு:

| | |
|---|---|
| **தலைவர்** | அரசு கூடுதல் தலைமை செயலாளர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |
| **உறுப்பினர் செயலர்** | கூடுதல் தலைமை செயலாளர் / திட்ட இயக்குநர்<br>சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |
| **உறுப்பினர்கள் :** | |
| அரசு முதன்மை செயலாளர், நிதித் துறை | |
| முதன்மை செயலாளர் / ஆணையர், வருவாய் நிர்வாகம் | |
| இயக்குநர், மீன்வளத் துறை | |
| இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை | |
| திட்ட இயக்குநர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் | |
| மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | |
| மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம் | |

## மாவட்ட செயலாக்க அலகு – பகுதி –2



**7. திட்டக் கூறுகள் :–**

இத்திட்டத்தின் மூன்று உட்கூறுகளின் கீழ் பல திட்டச் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

1) கடலோர வள ஆதார மேலாண்மை

2) தொழில் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல்

3) திட்ட மேலாண்மை போன்றவைகள் ஆகும்.

**9.1 திட்டக் கூறு – 1 : கடலோர வள ஆதார மேலாண்மை :**

**1. சமுதாய ஆதரவு :**

அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் துணையுடன் திட்டப்பகுதிகளில் 64 கூட்டு வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு கூட்டு வள மையம் தோராயமாக 1 முதல் 8 கடலோர ஊராட்சிகளைக் கொண்டது. இத்திட்டச் செயல்பாட்டிற்கு அடித்தளத்தில் கூட்டு வள மையங்கள் துணையாக உள்ளன. ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும், ஒரு குழு ஒருங்கிணைப்பாளர் (Cluster Coordinator), ஒரு திட்ட செயலாக்குநர் (Cluster Facilitator), ஒரு வியாபார ஊக்குநர் (Business Promoter) மற்றும் ஒரு கூடுதல் வியாபார ஊக்குநர் (Addtiional Business Promoter) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். சமுதாயம் சார்ந்த நிறுவனங்களான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மீனவர்களின் மாவட்ட அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு சமுதாயம் வலுப்படுத்தப்படுகின்றது. 119 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் 2 மீனவர்களின் கூட்டமைப்புகளுக்கு அலுவலகக் கட்டிடங்கள் ரூ.1004.00 இலட்சம் மதிப்பில் கட்டித் தரப்பட்டுள்ளன.

2019 – 20 ஆம் ஆண்டில் 2 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கட்டிடங்கள் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன.

**2. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல் :**

திட்டப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதலே இதன் நோக்கமாகும். திட்டமிடல், சொத்துக்களை ஏற்படுத்த அவற்றுக்கு பங்களித்தல், அமைத்தல், பராமரித்தல் ஆகியவற்றில் முழுச் சமுதாய ஈடுபாடு இதன் தனித்துவமான அம்சமாகும். வள ஆதார வரைபட முறை மூலம், சமுதாய மக்களின் கட்டமைப்பு தேவைகள், நுண்திட்டங்கள் மூலம் முன்னுரிமைப்படுத்தப் படுகின்றன. வாழ்வாதாரம் தொடர்பான கட்டமைப்புகளான 97 மீன் வலை பின்னும் தளங்கள், 64 மீன் உலர் கலங்கள், 7 குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் மற்றும் 633 இதர பணிகளான இணைப்பு சாலைகள், தெரு விளக்குகள் மற்றும் குழாய்கள் நீட்டிப்பு போன்ற 801 பணிகள் ரூ.3869.00 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுப்புற சூழல் தொடர்பான பிரச்சினைகள், பாலின வேறுபாடு மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை தீர்வு செய்யும் நோக்கில் நுண்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

2019 – 20 ஆம் ஆண்டில், 72 மீன் வலை பின்னும் கூடங்கள், 18 மீன் உலர் தளங்கள் மற்றும் 8 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் போன்றவை ரூ.1050.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன

**3. மீன் வள மேலாண்மை**

மீன்பிடி நடவடிக்கைகளில் இயந்திரமயமாக்கல் மற்றும் மீன் இனப்பெருக்கப் பகுதிகளில் உள்ள தொந்தரவுகள்

காரணமாக மீன் வளம் குறைந்து வருவது அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சனைகள் சில. குறைந்து வரும் மீன் வள ஆதாரங்களை அதிகரிக்க, 12 திட்ட மாவட்டங்களில் கடலுக்கடியில் செயற்கை பவளப் பாறைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய கடல்சார் மீன் வள ஆராய்ச்சி நிலையத்தின் (CMFRI) உதவியுடன் ரூ.308.00 இலட்சம் செலவில் 18 செயற்கை பவளப் பாறைகள் 12 மாவட்டங்களில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இவற்றின் விளைவாக மீனவர்களுக்கு பல வகையான மீன்கள் அதிக எண்ணிக்கையில் கிடைப்பதனால், செயற்கை பவளப் பாறைகளின் தாக்கம் மிகவும் சாதகமாக உள்ளது. நண்டு கொழுப்பேற்றுதல், கடற்பாசி உற்பத்தி மற்றும் சேகரித்தல் போன்ற பிற செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அறிவியல் கண்ணோட்டத்துடன் கூடிய நிலைத்த மீன் வள ஆதார மேலாண்மை குறித்த விழிப்புணர்வு அனைத்து கடலோர ஊராட்சிகளிலும் மீன் வளத்துறையின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2019 – 20 ஆம் ஆண்டில், 48 செயற்கை பவளப்பாறைகள் தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ரூ.1900 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ளன.

## 9.2 திட்டக் கூறு – 2 : தொழில் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல்

### 1. சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவி

திட்டப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்கள் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு, அவற்றின் செயல்பாட்டுத் தரம் அறியப்படுகின்றது. மேம்படுத்தப்பட்ட சுய உதவிக் குழுக்களைக் கொண்டு குடியிருப்பு அளவிலான கூட்டமைப்புகள் மற்றும்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலைத்த தன்மையை உறுதி செய்யும் வகையில், அவை பல்வேறு வங்கிகளின் வியாபார மேம்பாட்டு முகவர்களாக உயர்நிலைப்படுத்தப்பட்டுள்ளன. சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்களை கண்காணித்து கடன் திரும்பச் செலுத்த உதவும் பணிக்கு கடன் தொகையில் 2 சதவீதம் கமிஷன் பெற்று வருகின்றனர். **2018–19** ஆம் ஆண்டில், **1707** சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.**6361.00** இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**2019 – 20** ஆம் ஆண்டில், **2000** சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.**6000** இலட்சம் கடனுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் திறமைகளை வங்கியாளர்கள் நேரடியாக அறிந்து கொள்வதால், உரிய நேரத்தில் குழுக்களுக்கு கடன் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது, நமது திட்டத்தில் நிதி பங்குதாரர்களாக கீழ்க்கண்ட வங்கிகள் உள்ளன

1. நாபின்ஸ்
2. தமிழ்நாடு கிராம வங்கி (இந்தியன் வங்கியின் ஆதரவுடன் செயல்படும் மண்டல ஊரக வங்கி)
3. இந்தியன் வங்கி
4. ஐசிஐசிஐ வங்கி (இரண்டு மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்கி வருகின்றன).

   பகுதி – **1** : ஏற்கனவே செயல்பட்டு வரும் ஆறு மாவட்டங்களில் உள்ள **109** ஊராட்சி அளவிலான

கூட்டமைப்புகளில் 107 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வியாபார மேம்பாட்டு முகவர்களாக செயல்பட்டு, இதுவரை, ரூ.134.26 இலட்சம் கமிஷன் ஈட்டியுள்ளனர்.

பகுதி – 2 : கூடுதல் மாவட்டங்களில் 127 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில், 111 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் இந்தியன் வங்கியின் வியாபார மேம்பாட்டு முகவர்களாக செயல்பட்டு, இதுவரை ரூ.29.99 இலட்சம் ஈட்டியுள்ளனர்.

## 2. இடர் மேலாண்மை மற்றும் காப்பீடு:

துயர் குறைப்பு நிதியினை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பராமரிக்கின்றன. இயற்கை பேரழிவால் பாதிக்கப்படும் ஏழை மக்களுக்கு துயர் குறைப்பு நிதியிலிருந்து குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகின்றது. இந்நிதிக்கு 4/5 பங்கு திட்டப் பங்களிப்பாகவும், 1/5 பங்கு பயனாளிகளின் பங்களிப்பாகவும் உள்ளது. தனிநபர் கடனாக ரூ.1000/– முதல் 7500/– வரையும், மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.10,000/– வரையும் வழங்கப்படுகிறது.

**அட்டவணை 9.1**

**துயர் குறைப்பு நிதியின் பயன்பாட்டு விவரம்**

| வருடம் | பயன் பெற்றோரின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2010 – 11 | 1875 | 62.86 |
| 2011 – 12 | 1667 | 68.46 |
| 2012 – 13 | 3391 | 151.48 |
| 2013 – 14 | 3870 | 205.92 |
| 2014 – 15 | 6582 | 324.28 |
| 2015 – 16 | 6731 | 343.51 |

| வருடம் | பயன் பெற்றோரின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2016 – 17 | 4376 | 276.58 |
| 2017 – 18 | 3437 | 219.93 |
| 2018 – 19 | 2940 | 205.15 |
| 2019 – 20 | 310 | 22.29 |
| **மொத்தம்** | **35179** | **1880.46** |

சுய உதவிக் குழுக்கள், கூட்டுப் பொறுப்பு குழுக்கள் மற்றும் மீன் விற்பனை சங்க உறுப்பினர்கள் ஆகியோருக்கு உயிர், தனிநபர் விபத்து, கால்நடை மற்றும் சொத்துக்கள் ஆகிய காப்பீடு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு வழங்கும் பொருட்டு சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் தொடங்கப்பட்டுள்ளது.

**சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம்**

கடற்கரையை இறங்கு தளமாகக் கொண்ட தோணி, வள்ளம், சிறு படகுகள் மற்றும் வெளி பொருத்து இயந்திரத்துடன் கூடிய (அ) அல்லாத கட்டுமரம், இழை வலுவூட்டும் நெகிழி படகுகள் போன்றவைகளை பயன்படுத்தும் சிறு / குறு மீனவர்களுக்கு பொதுவாக, பாதுகாப்பு மற்றும் தொலைதொடர்பு உபகரண வசதிகள் கிடையாது.

இயற்கைப் பேரழிவுகள் மற்றும் தனி விபத்துக்களால், சிறு / குறு படகுகளின் சேதம் (ம) இழப்பு, உபகரணங்கள் மற்றும் மீன்பிடித் துணைக் கருவிகளுக்கு ஏற்படும் சேதம் ஆகியவை மீன்பிடி தொழிலில் உள்ள முக்கிய இடர்பாடுகள் ஆகும்.

காப்பீட்டு நிறுவனங்கள், சிறு / குறு மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீட்டினை மீன்பிடி கப்பல்களுக்கான காப்பீட்டுடன் ஒப்பிட்டு ஆண்டு பிரீமியமாக 4 சதவீத தொகையை நிர்ணயித்துள்ளனர். இந்த அதிகப்படியான பிரீமியத் தொகையை செலுத்தி காப்பீடு செய்ய ஏழை மீனவர்களால் இயலாது. இதனை கருத்தில் கொண்டு, சமுதாயம் சார்ந்த நிறுவனமாக சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் உருவாக்கப்பட்டு, சிறு/குறு அளவிலான மீனவர்கள் எளிதில் அணுகி குறைந்த செலவில் பயன்பெறும் வகையில் சிறு/குறு மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு செயலாக்கத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் மாவட்ட அளவிலான மீன் விற்பனை சங்கங்களின் சம்மேளனங்கள் உறுப்பினராக உள்ளனர். இந்த மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு திட்டத்தை செயல்படுத்திட, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் நிறுவனம், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் ஆகியோருடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

**இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- பேரழிவுகளால் ஏற்படும் இழப்புகளுக்கு யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனமும் தனிவிபத்துகளுக்கு சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கமும் இழப்பீடு வழங்கும்.

- 1 சதவீத பிரீமிய தொகை மட்டுமே பெறப்படுகின்றது,
- அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள் இழப்பீடு தொகை வழங்கப்படுகின்றது.

**அட்டவணை 9.2**

**வருடாந்திட வாரியாக சிறு/குறு மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீட்டில் இணைந்துள்ள விவரங்கள்**

| வ.எண் | வருடம் | மீன் பிடி உடைமைக் காப்பீடு மேற்கொள்ளப்பட்டது |
|---|---|---|
| 1 | 2017 – 18 | 5914 |
| 2 | 2018 – 19 | 7538 |
| 3 | 2019 – 20 | 2383 |
| மொத்தம் | | **15835** |

இதுவரை 11 நபர்களுக்கு தனி நபர் விபத்துக்களுக்கான இழப்பீடு தொகை ரூ.3.88 இலட்சம் சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கஜா புயலில் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 189 நபர்களுக்கு ரூ.27.59 இலட்சம் இழப்பீடு தொகை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### 3. நுண் தொழில் மேம்பாடு மற்றும் புதிய உத்திகளுக்கான நிதி

திட்டப் பகுதிகளில் சமையலறைக் கழிவுகளிலிருந்து சமையல் எரிவாயு உற்பத்தி செய்யும் கலன்கள் புதுமையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அப்பகுதிகளில்

உள்ள கழிவுகள் திறம்பட உபயோகப்படுத்தப்படுவதால், சுற்றுப்புற சுகாதாரம் பாதுகாக்கப்படுவதோடு எரிவாயு உற்பத்திக்கும் வழிவகுக்கின்றது.

**2018–19** ஆம் ஆண்டில் ரூ.**40.47** இலட்சம் செலவில் **226** சமையலறைக் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

- **ஒரு கலனின் மதிப்பீடு தொகை ... ரூ.23,400/–**
  - திட்ட மானியம் ... ரூ.12,500/–
  - பயனாளி பங்களிப்பு ... ரூ. 8000/–
  - கடன் தொகை ... ரூ .2900/–

  மொத்தம் ... ரூ. 23,400/–

**2019–20** ஆம் ஆண்டில் ரூ.**32.00** இலட்சம் மதிப்பீட்டில் **132** சமையலறைக் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் கலன்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன.

**4. சுய உதவிக் குழுக்களுக்கான ஆதரவு**

சுய உதவிக் குழுக்கள் தரமதிப்பீடு செய்யப்பட்டு, வலுவற்ற சுய உதவிக் குழுக்கள் கண்டறியப்பட்டு, அவற்றிற்கு திறன் வளர் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அவற்றின் நிர்வாகிகளுக்கு சிறப்பு பயிற்சிகள் நடத்தப்படுகிறது. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பட்டறிவு பயணம் அழைத்து செல்லப்படுகின்றனர். இந்நடவடிக்கை களுடன், கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகள் போன்ற அறிவு சார் புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் அன்றாட கணக்குகளை மேலாண்மை செய்ய டேலி மென்பொருள் வடிவமைக்கப்பட்டு

நிறுவப்பட்டுள்ளது. அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலும் புத்தக பராமரிப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு குழுக்கடன் தவிர வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகளுக்கான கடன் வழங்கப்படுகிறது.

**5. மீன் விற்பனை சங்கங்கள்**

தென்னிந்திய மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்பின் (SIFFS) உதவியுடன் 116 மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கந்து வட்டிக்காரர்கள் மற்றும் வியாபாரிகளின் கடன் தொல்லையிலிருந்து மீன் விற்பனை சங்க உறுப்பினர்களை மீட்பதற்கும், மீனவர்களின் வறுமையை ஒழிக்கவும், மீன் விற்பனை சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு மீனவருக்கும் தலா ரூ.15,000/– முதல் ரூ.70,000/– வரை கடன் மீட்பு நிதி வழங்கப்படுகின்றது. அனைத்து மீன் விற்பனை சங்கங்களுக்கும் தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. திருவள்ளூர் (ம) நாகப்பட்டினம் மாவட்டங்களில் மாவட்ட அளவிலான கூட்டமைப்புகளும், விழுப்புரம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களை ஒருங்கிணைத்து விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மண்டல அளவிலான கூட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளன. படகு பழுது பார்த்தலை எளிதாக்கிட வெளி பொருத்து மோட்டார் என்ஜின் பழுது நீக்கும் நிலையங்கள் மூன்றும், மூன்று படகு கட்டும் தளங்களும் ரூ.105 இலட்சம் மதிப்பீட்டில் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும், மீன்களை சுகாதார முறையில் கையாளுவதற்காக நான்கு மீன் ஏலக் கூடங்கள் மற்றும் நான்கு மீன் கொள்முதல் நிலையங்கள் ரூ.282 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப் பட்டுள்ளன. மேலும், 68 மீன் விற்பனை

சங்க அலுவலகக் கட்டிடங்கள் ரூ. **362** இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது தவிர, மீனவ மகளிருக்கு வலை பின்னுதல், மகளிர் மீன் வியாபாரிகளுக்கு கூட்டுப் பொறுப்புக் குழு உருவாக்குதல் ஆகிய வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீன் விற்பனை செய்யும் மகளிரை இணைத்து **1667** கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, **8137** உறுப்பினர்களை கந்துவட்டிகாரர்களின் கடன் நெருக்கடியில் இருந்து மீட்க ரூ.**1029.00** இலட்சம் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், **2019 – 20** ஆம் ஆண்டில், **27** மீன் விற்பனை சங்கக் கட்டிடங்கள் மற்றும் **2** மாவட்ட அளவிலான மீனவர் சங்கக் கூட்டமைப்புக் கட்டிடங்கள் ரூ.**353** இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன.

**6. வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி :**

தற்போதுள்ள வாழ்வாதாரத்தை மேலும் நிலைப்படுத்த விருப்பமுள்ள மகளிருக்கும் மாற்று வாழ்வாதாரம் ஏற்படுத்துவதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப் படுகின்றது. இந்நோக்கத்தை எய்திட வாழ்வாதாரத் திறன் அளித்தல் மிகவும் முக்கியமானது ஆகும். இத்திட்டத்தின் மூலமாக தேவைக்கேற்ப **17,092** மகளிருக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்காக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ளுதல், விற்பனை மேம்பாடு மற்றும் பொருள் மதிப்பு கூட்டுதல் ஆகியவற்றை இப்பயிற்சிகள் மகளிருக்கு கற்றுக் கொடுத்துள்ளன. **2018–19**–ல் **1908** மக்களுக்கு சுகாதாரமான முறையில் மீன் உருவாக்குதல்,

முயல் வளர்ப்பு பனை ஒலை பொருட்கள் தயாரித்தல், தையல், ஸ்கிரின் பிரிண்டிங் மற்றும் பல்வேறு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

**2019 – 20**ஆம் ஆண்டில், சுமார் **3100** மகளிருக்கு ரூ.**223** இலட்சம் மதிப்பீட்டில் கோழி வளர்ப்பு, கடல் சிப்பியிலான கைவினைப் பொருட்கள் தயாரித்தல், பனை ஓலை பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றிற்கான பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

## 7. நுண் தொழில் மேம்பாடு (Micro Enteprise) :

நுண் தொழில் மேம்பாட்டில் அனுபவம் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களுடன் திட்ட மேலாண்மை அலகு உடன்பாடு ஏற்படுத்தி, பால் விற்பனை, மாம்பழம் சாகுபடி போன்ற உட்பிரிவுத் தொழில்கள், தொழில் தொகுப்புகளாக மேம்படுத்தப்படுகின்றன. மேலும், கோழி வளர்ப்பு, காய்கறி, காளாண் வளர்ப்பு, கருவாடு உற்பத்தி, கயிறு தயாரித்தல், மலர்த் தோட்டம், பொம்மை செய்தல், முந்திரி பருப்பு பதனிடுதல், அழகுக் கலை நிலையம், புடவை வண்ணம் தீட்டுதல் மற்றும் இதர தொழில்கள் ஊக்குவிக்க திறன் பயிற்சியுடன் கடன் உதவி வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2018 – 19** வரை, ரூ.**7576.00** இலட்சம் செலவில், **3477** கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு பல்வேறு நுண்தொழில்கள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2019 – 20 ஆம் ஆண்டில், புதிதாக 2000 கூட்டுப் பொறுப்புக் குழுக்களை உருவாக்கி, ரூ.5000 இலட்சம் வாழ்வாதாரக் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**8. வாழ்க்கை கல்வி பயிற்சி**

திட்டப் பகுதிகளில் உள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு ஒரு மாதம் முதல் ஒரு வருடம் வரை பல பிரிவுகளில் வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சி 5216 இளைஞர்களுக்கு ரூ.473.11 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

**9.3 சிறப்பு முயற்சிகள்**

திட்டப் பகுதிக்கு பொருத்தமான பண்ணை சார்ந்த திட்ட உதவிகள், தகுந்த வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு வழங்கப்படுகின்றன. அனுபவமுள்ள தொண்டு நிறுவனங்கள் மூலம் பயனாளிகளின் தேவையை கருத்தில் கொண்டு இவை ஒருங்கிணைக்கப்படுகின்றன.

பண்ணை சார்ந்த தொழில்களின் அம்சங்கள்:

- குழு உருவாக்கம் மற்றும் அவற்றின் பயிற்சி, நகர்வு மற்றும் நடவடிக்கைகள்
- தொழில் நுட்ப உதவி வழங்குதல்
- தற்போதுள்ள அரசு திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்
- வங்கி இணைப்பு மூலம் கடன் உதவி வழங்குதல்
- சந்தைப்படுத்த உதவி புரிதல்
- உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்தை உறுதிப்படுத்துதல்
- திட்ட நடவடிக்கைகளில் நிலைத்த தன்மைக்கு வகை செய்தல்

## பகுதி – 1 : மாவட்டங்களிலுள்ள திட்டங்கள்:

## 1. நாகப்பட்டினம் மாவட்டத்தில் மா திட்டத்தை மேம்படுத்துதல்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடலோர பகுதியிலுள்ள **12** ஊராட்சிகளிலிருந்து **2850** விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் மா / காய்கறி / மூலிகைச் செடி சாகுபடி போன்ற பண்ணை சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ **190** துவக்க நிலை உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவைகள் திருமறைக்காடு விவசாயிகள் கூட்டமைப்பாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் சாகுபடி மற்றும் குழு நடவடிக்கைகள் தவிர கொள்முதல் மையங்கள் மற்றும் விற்பனை மையத்திற்காக சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு விற்பனை மூலம் நல்ல வருமானம் பெறுவதற்கு இம்மையங்கள் உதவுகின்றன. தொண்டு நிறுவனமான கோவனன்ட் மேம்பாட்டு மையத்தின் மூலம் **2018 – 19** ஆம் ஆண்டில், ரூ.**12.11** இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### மா திட்டத்தை மேம்படுத்துதல்:

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மா செயற்திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டபோது, மாக்கூழ் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை நிறுவ திருமறைக்காடு கடலோர விவசாயிகள் கூட்டமைப்பு, நாகை ஆர்கானிக் விவசாயிகள் தயாரிப்பாளர்கள் நிறுவனம் (NOFPCL) என்ற பெயரில் தயாரிப்பாளர்கள் நிறுவனமாக மேம்படுத்தி அதன் மூலம் மாக்கூழ் உற்பத்தி நிறுவனத்தை செயல்படுத்த முன்மொழிந்தது.

அதனடிப்படையில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.1044.14 இலட்சம் (திட்டப் பங்கீடு – ரூ.866.74 இலட்சம் மற்றும் பயனாளிகள் பங்கீடு – ரூ.177.40 இலட்சம்) மதிப்பீட்டில் மாக்கூழ் தயாரிக்கும் நிறுவனம் நிறுவப்பட்டு, மாக்கூழ் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

மா விவசாயிகளின் உற்பத்தியின் மதிப்பை அதிகரிக்கச் செய்வதற்கும், அதிக விலையை பெற வாய்ப்பளிப்பதற்கும் மாக்கூழ் உற்பத்தி நிறுவனம் உதவுகிறது. இதன் மூலம் மா விவசாயிகள் நீண்டகாலத்திற்கு ஒரு நிலைத்த வாழ்வாதாரத்தினை பெற்றிடும் வகையில் அமைந்துள்ளது.

## 2. கை கொடுக்கும் கை (Hand in Hand) நிறுவனத்தின் உதவியுடன் கடலூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியை மேம்படுத்துதல்:

கடலூர் மாவட்டத்தில் 9 கடலோர கிராமங்களில் வசிக்கும் 400 மகளிரைக் கொண்ட தொகுப்பின் கீழ் பால் உற்பத்தியாளர் கூட்டு பொறுப்புக் குழுக்களுக்கு தமிழ்நாடு கிராம வங்கி மூலம் கடன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைத்து உறுப்பினர்கள் உள்ளடக்கிய பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு இதன் மூலம் பால் விற்பனை மற்றும் தீவனம் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாட்டுத் தீவனம் மற்றும் கறவை மாடுகள் வாங்குவதற்காக கூட்டமைப்பிற்கு சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கை கொடுக்கும் கை **(Hand in Hand)** நிறுவனத்தின் உதவியுடன் ரூ.12.62 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டது.

**பகுதி – 2 மாவட்டங்களிலுள்ள திட்டங்கள்:**

**1. இராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் மற்றும் திணை போன்ற சிறு தானியங்களின் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல்**

இராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதிகளில் உள்ள நெல் மற்றும் சிறு தானியங்களை பயிரிடும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், நெல் மற்றும் சிறு தானியங்களின் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் மூலம் இத்திட்டம் கடலோரப் பகுதிகளிலுள்ள 12 ஊராட்சிகளை உள்ளடக்கிய 1000 விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், உற்பத்தியாளர் நிறுவனமாக ஒருங்கிணைத்து விவசாயத்தில் நிலைத்த தன்மையை அடைவதற்கு கோவனன்ட் மேம்பாட்டு மையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2018 – 19 ஆம் ஆண்டில், ரூ.54.04 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது.

2019– 20 ஆம் ஆண்டில், மேலும் 500 விவசாயிகளை இத்திட்டத்தில் இணைத்து செயல்படுத்துவதற்கு ரூ.49.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. இராமநாதபுரம் மாவட்டத்தில் மல்லிகை சாகுபடி மற்றும் மலர் விற்பனை செய்தல்:**

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 கடலோரப் ஊராட்சிகளிலுள்ள மல்லிகை சாகுபடி செய்யும் 400 விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. சாகுபடி திறன் மற்றும் விற்பனை குறித்த அம்சங்கள் நிறைந்த மல்லிகை அடுக்கு நாற்றங்காலை அதிகரிப்பது, தாய் தாவர சாகுபடி மற்றும் மல்லிகை சாகுபடியை அதிகரித்து மல்லிகை பூ மற்றும் பதியன்கள் விற்பனை மூலம்

நல்ல இலாபம் பெற வழிவகை செய்வது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். தொண்டு நிறுவனமான சிவகங்கை பல்நோக்கு சமூக சேவை சங்கத்தின் மூலம் செயல்முறை ஆதரவு வழங்கி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2018 – 19 ஆம் ஆண்டில், ரூ.18.97 இலட்சம் ஒதுக்கீட்டு செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது.

2019–20 ஆம் ஆண்டில், கூடுதலாக 100 பயனாளிகள் இணைக்கப்பட்டு ரூ.12.00 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

**3. ஆடு வளர்ப்புத் திட்டம்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆடு வளர்ப்பு வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு ஆடு வளர்ப்பில் குறைந்த பட்ச இறப்பு விகிதம், மேம்பட்ட ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் மூலம் எளிய முறையிலான தொழில் நுட்பங்கள் உதவியுடன் பெண்கள், ஆடு வளர்ப்பதற்கு வழிவகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 14 கடலோர ஊராட்சிகளிலிருந்து சுமார் 500 மகளிர் பயன்பெறும் வகையில் 42 சமூக கால்நடை தொண்டர்கள் மேற்கண்ட நோக்கங்கள் நிறைவேற்ற உதவுவதற்காக பணி புரிகின்றனர். 2018 – 19 ஆம் ஆண்டில், இத்திட்டம் நிலையான விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் நடவடிக்கை (SEVA) தொண்டு நிறுவனத்தின் மூலம் ரூ.17.34 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2019 – 20 ஆம் ஆண்டில், கூடுதலாக 1000 மகளிர் பயன்பெறும் வகையில், ரூ.12.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தஞ்சாவூர், திருவாரூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும், ஆடு வளர்ப்பு பணி

மேற்கொள்வதற்கு **2000** மகளிர் பயன்பெறும் வகையில், ரூ.**60.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. திருநெல்வேலி மாவட்டத்தில் முருங்கை சாகுபடி மற்றும் சந்தைப்படுத்துதல்:**

முருங்கை சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டுதலுக்காக திருநெல்வேலி மாவட்டத்தில் **11** கடலோர ஊராட்சிகளில் முருங்கை சாகுபடி, முருங்கக்கீரை மற்றும் ஏற்றுமதி செய்வதற்காக முருங்கை எண்ணெய் உற்பத்தி (ஆரம்ப கட்டமாக) போன்றவற்றில் ஈடுபடுத்த **800** மகளிரை தேர்வு செய்து முருங்கை சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டுதலுக்காக வழிவகை செய்யப்படுகிறது. இத்திட்டம் ஸ்டெல்லா மேரிஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெவலப்மெண்ட் ஸ்டடிஸ் (SMIDS) தொண்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்திட, **2018 – 19** ஆம் ஆண்டில், ரூ.**19.63** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் **2019–20** ஆம் ஆண்டிற்கு விரிவுபடுத்தப் பட்டு, ரூ.**38.59** இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக **200** மகளிரை இணைத்து செயல்படுத்தப்பட உள்ளது.

அனைத்து பண்ணை சார்ந்த திட்டங்களும் வங்கிக் மூலம் கடன் உதவி செய்ய திட்டமிடப்பட்டு குழு ஒருங்கிணைப்புடன் செயல்படுவதற்கு முறையான பயிற்சி மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்படுகிறது.

**5. பனை மரம் ஏறும் கருவி அறிமுகப்படுத்துதல்:**

- பெண்களுக்கான பனை ஏறும் பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு
- விபத்துக்களை தவிர்ப்பதற்காக பனை மரம் ஏறும் கருவி சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- 25 பெண்களுக்கு பனை மரம் ஏறுவதற்கான பயிற்சி வழங்கப்பட்டு, பயனாளிகளுக்கு மரம் ஏறும் கருவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**6. தொகுப்பு நடவடிக்கைகள் உருவாக்குதல்:**

கூட்டுப் பொறுப்பு குழுக்கள் வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் அவற்றை மேலும் வலுவடையச் செய்யவும், அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கவும் ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும் ஒன்று அல்லது இரண்டு தொழில் தொகுப்புகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரே தொழில் செய்யக்கூடிய பல கூட்டுப் பொறுப்பு குழுக்களை கூட்டு வள மையத்தின் மூலம் தங்களுக்கு தேவையான இடுபொருளிலிருந்து சந்தைப்படுத்துதல் வரை கிடைக்கும் வள ஆதாரங்களின் அடிப்படையில் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் இதன் முக்கிய அம்சமாகும்.

இதை முன்னிறுத்தி, பின்வரும் வழிகளில் செயல்படுவது கூட்டு வள மைய தொழில் தொகுப்புகளின் நோக்கமாகும்

1. கூட்டு வள மையத்தில் செயல்படும் கூட்டுப் பொறுப்பு குழுக்களின் தொழில்களை பற்றி அறிந்து கொள்ளுதல்
2. கூட்டுப் பொறுப்பு குழுக்களின் வலிமையை ஆய்ந்து அதனுடைய செயல்பாட்டைக் கண்டறிதல்
3. கூட்டுப் பொறுப்பு குழுக்களின் செயல்பாட்டில் இருக்கும் குறைபாடுகளை கண்டறிந்து அதனை நீக்கி வலுவடைய செய்தல்
4. கூட்டுப் பொறுப்பு குழுக்களை முன்னேறுவதற்கான அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைப்பதன் மூலம் பெற வழி வகுத்தல்

**9.4 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு :**

திட்ட செயல்பாடுகளை உன்னிப்பாக கண்காணிக்கும் வகையில் எளிய வகையிலான டேலி மென்பொருள் (Tally Software) அனைத்து நிலைகளிலும் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இணையதளம் வாயிலாக திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றது. மாதாந்திர ஆய்வுக் கூட்டம் மூலம் மாவட்டம் மற்றும் கள அளவில் அனைத்து செயல்பாடுகளின் இலக்கு மற்றும் தொடர் நடவடிக்கைகளின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் ஆண்டு திட்ட பலன் (outcome) குறித்து மூன்றாம் தரப்பினர் மூலம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. திட்ட செயல்பாடுகளை கண்காணிப்பதற்கு மாநில அளவில் திட்ட வழிகாட்டு குழுவும், நாடு அளவில் முத்தரப்பு நிதி செலவு குறித்த ஆய்வுக் கூட்டமும் நடத்தப்படுகின்றன.

**9.5 தாக்கம்**

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் கடலோர சமுதாய வாழ்வாதாரத்தின் மீது மிகப்பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இலக்கு குடும்பங்களின் வருமான வரம்பு கணிசமாக உயர்ந்துள்ளது. மக்களின் விழிப்புணர்வு நிலை புதிய உச்சத்தை எட்டியுள்ளது. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் ஆய்வுக் குழுவினர் இத்திட்ட செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளது என சான்றளித்துள்ளனர்.

திட்ட செயலாக்கத்தில் அனைத்து நிலைகளிலும் சமுதாயப் பங்களிப்பை நிலை நிறுத்தியது இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். சமுதாயம் சார்ந்த அமைப்பான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலைத்த

தன்மை உறுதிபடுத்தப்பட்டுள்ளது. ஏழை மற்றும் மிகவும் ஏழை மக்கள் நிதி சேவைகளை இலகுவாகப் பெறும் நிலைக்கு ஏற்றம் பெற்றுள்ளனர். வெற்றிகரமான மாற்று சுய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீனவர்கள் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டதால், அவர்களுடைய உற்பத்திக்கு உகந்த விலை உறுதி செய்யப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட மீன்பிடி நடைமுறைகளை தொடர்தல், ஏழை மற்றும் மிகவும் ஏழை மக்களின் வாழ்வாதாரத் திட்டங்களில் நிதி நிறுவனங்களில் ஆர்வமின்மை போன்றவை இத்திட்டம் சந்திக்கும் சில சவால்களாகும்.

**9.6 திட்ட நிதி ஒதுக்கீடு:**

**நிறுவன வாரியாக:**

| வ. எண். | நிறுவனம் | தொகை (ரூ.கோடியில்) | |
|---|---|---|---|
| | | பகுதி - I | பகுதி - II |
| 1 | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியம் | 132.32 | 142.15 |
| 2 | தமிழக அரசு | 12.00 | 16.08 |
| 3 | வங்கி மற்றும் நுண்கடன் நிறுவனங்கள் | 100.61 | 94.32 |
| 4 | பயனாளிகளின் பங்களிப்பு | 38.76 | 26.94 |
| **மொத்த தொகை** | | **283.69** | **279.49** |

## 9.7 மொத்த செலவினப் பட்டியல்
## அ. ஏற்கனவே செயல்படுத்தப்படும் மாவட்டங்கள் :

**(ரூபாய் இலட்சத்தில்)**

| திட்டக் கூறு எண் | திட்டக் கூறு | திட்ட மதிப்பீடு தொகை | திட்ட இடைநிலை அறிக்கை | 2007 முதல் 2019 வரை | | 2019–20 (01.04.19 முதல் 15.06.2019 வரை) | | 15.06.2019 வரை உள்ள மொத்த செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2019 வரையயான நிதி விடுவிப்பு | 31.03.2019 வரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் | வருடாந்திர பணித் திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு | மேற்கொள்ளப்பட்ட செலவினம் | |
| I. | கடலோர வள ஆதார மேலாண்மை | 3851 | 5632 | 6342.48 | 6154.78 | **76.00** | 25.63 | 6180.41 |
| II. | ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள | 983 | 1398 | 1616.41 | 1527.10 | **0.00** | 0.00 | 1527.10 |
| III. | வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி | 6631 | 9399 | 7257.08 | 6476.51 | **261.82** | 89.33 | 6565.81 |
| IV. | சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | 180 | 242 | 235.80 | 235.51 | **0.00** | 0.00 | 235.51 |
| V. | திட்ட மேலாண்மை | 1592 | 2256 | 3793.61 | 4058.20 | 186.00 | 59.75 | 4117.94 |
| **மொத்தம்** | | **13237** | **18927** | **19245.38** | **18452.10** | **523.82** | **174.71** | **18626.77** |

## ஆ. விரிவுப்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்கள்:

### 1. திட்டக் கூறு வாரியாக

(ரூபாய் இலட்சத்தில்)

| திட்டகூறு எண் | திட்டக் கூறு | திட்ட மதிப்பீடு தொகை | 2017 முதல் 2019 வரை | | 2019–20 (01.04.2019 – 15.06.2019) | | 15.06.2019 வரை மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | நிதி விடுவிப்பு | 31.03.2019 வரை மேற்கொள்ளப் பட்ட செலவினம் | வருடாந்திர பணித் திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு | மேற்கொள் ளப்பட்ட செலவினம் | |
| I. | கடலோர வள ஆதார மேலாண்மை | 6104.46 | 3665.77 | 2170.81 | 4250.24 | 187.97 | 2358.78 |
| II. | தொழில் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு–களை உருவாக்கு–தல் | 7455.15 | 3948.93 | 1550.39 | 2797.28 | 131.23 | 1681.62 |
| V. | திட்ட மேலாண்மை | 2262.90 | 790.07 | 914.82 | 1226.44 | 130.97 | 1045.78 |
| மொத்தம் | | 15822.51 | 8404.77 | 4636.02 | 8273.96 | 450.17 | 5086.18 |

### 2. பிரிவு வாரியாக:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எ ண். | வகை | திட்ட மதிப்பீ டு தொகை | 2017–19 | | 2019–20 (01.04.2019 – 15.06.2019) | | 15.06.2019 வரை மேற்கொள்ளப் பட்ட மொத்த செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | நிதி விடுவி ப்பு | 31.03.2019 வரை மேற்கொள் ளப் பட்ட செலவினம் | வருடாந் திர பணி திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு | மேற்கொ ள்ள ப்பட்ட செலவின ம் | |
| I. | பணிகள் | 4421.09 | 3040.90 | 961.09 | 1652.69 | 132.59 | 1093.68 |
| II. | மானியம் | 3592.00 | 2790.05 | 1245.37 | 3377.00 | 54.55 | 1299.92 |
| III. | உபகரணங் கள் மற்றும் பொருட்கள் | 312.02 | 174.57 | 238.64 | 102.24 | 0.00 | 238.64 |
| IV. | ஆலோசனை கட்டணம் | 2024.70 | 841.75 | 523.29 | 1303.04 | 94.30 | 617.59 |
| V. | சரக்கு, சேவை மற்றும் உள்ளீடு | 3656.07 | 794.94 | 909.95 | 891.23 | 60.08 | 970.03 |
| VI. | சம்பளம் மற்றும் படிகள் | 1816.63 | 762.56 | 757.68 | 947.76 | 108.65 | 866.32 |
| மொத்தம் | | 15822.51 | 8404.77 | 4636.02 | 8273.96 | 450.17 | 5086.18 |

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் கடலோரப் பகுதிகளில் உள்ள பாதிக்கப்படக்கூடிய தன்மையைக் கருத்தில் கொண்டு, எதிர்த்தெறிதல் மற்றும் தகவமைப்புடன் கூடிய சுய அமைப்புக்களை இணைத்தல் வழியே தற்சார்புடன் கூடிய சுய உதவிக் குழுக்கள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், மீன் விற்பனை சங்கங்கள் மற்றும் இதர மக்கள் அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. வாழ்வாதார நடவடிக்கைகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அல்லது அவற்றுக்கு புறம்பே ஏற்படுத்தப்படுகின்றன. கடலோரப் பகுதிகளின் யதார்த்த நிலை மற்றும் வெற்றிக்கு உகந்த பார்வையுடன் இப்பகுதி சமூக, சுற்றுச்சூழல் அமைப்புகளின் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தில் ஒரு பெரும் வளர்ச்சியை சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஏற்படுத்தியுள்ளது மற்றும் சமுதாய மக்களின் வருமானத்தை பெருக்கும் பொருட்டு, வலை பின்னும் தளம், மீன் ஏலக் கூடம், மீன் கொள்முதல் நிலையம் போன்ற கட்டமைப்புகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. திட்டப் பகுதிகளிலுள்ள குடும்பங்களின் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. மக்களின் விழிப்புணர்வு ஒரு புதிய அளவுகோலை எட்டியுள்ளது. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் ஆய்வுக் குழுவினர், இத்திட்டம் திருப்திகரமாகச் செயல்படுவதாகவும், ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் சிறப்பாகச் செயல்படும் திட்டங்களில் இது முதன்மையானத் திட்டமாக இருப்பதாகவும் பாராட்டியுள்ளனர்.

# 10. வரவு செலவுத் திட்டம்

## 10. வரவு செலவுத் திட்டம் 2019–20

**2019–20** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.18273.959 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக ரூ.16,478.130 கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ.1,795.479 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் அரசு ஊழியர்களுக்கான கடன் தொகைக்காக ரூ.**0.350** கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 11. முடிவுரை

## 11. முடிவுரை

ஊரக பகுதிகளில் வசிக்கும் மக்கள், நகர்புர பகுதிகளுக்கு இணையான வசதிகளை பெற ஏதுவாக, ஊரக பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகளை சிறப்பாக செயல்படுத்திட ஏதுவாக மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு போதுமான அதிகாரங்களும் மற்றும் பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. ஊரக பகுதிகளில் குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், ஊரகச் சாலைகள் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கிடவும் மற்றும் அதனை சிறப்பான முறையில் பராமரித்திடவும் தேவையான நிதியினை மத்திய மற்றும் மாநில நிதி குழு மான்யங்கள் மூலம் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஊரக பகுதிகளில் உள்ள வீடற்ற மக்களின் குடியிருப்புத் தேவைகளை பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) மற்றும் முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 25 வருடங்களுக்கு முன் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட பழுதடைந்த ஏழை மக்களின் வீடுகளை பழுது நீக்கம் செய்வதற்கான வீடுகள் பழுது நீக்கம் திட்டம் ஒரு சிறப்பான முயற்சியாகும். இதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு கன மழை, புயல் மற்றும் இதர இயற்கை இடர்பாடுகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் செயல்பாடுகள், அன்மை காலங்களில் ஊரக மக்களுக்கான

வேலை வாய்ப்பினை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் ஊரக மக்கள் வேலை தேடி நகரங்களை நோக்கி செல்வது தடுக்கப்படுகிறது. மேலும் இத்திட்டம், இயற்கை வள மேம்பாட்டு பணிகளான மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் மீள்நிரப்பும் பணிகளை புதிய உத்வேகத்துடன் செயல்படுத்தப்பட்டு வருவதன் மூலம் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பிரதம மந்திரி கிராம சாலை திட்டம், தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் ஊரகச் சாலைகள் கணிசமான அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. இத்துறையினால் விரிவான சாலைகள் பராமரிப்பு கொள்கை உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுவதன் மூலம் ஊரகச் சாலைகள் தொடர்ந்து பராமரிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டு வருகிறது.

சமூக, பொருளாதாரம் மற்றும் சுகாதாரக் குறியீடுகள் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் இந்த அரசு, சுகாதாரத்திற்கு தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்துக்கொள்ள மனமாற்றமே முக்கியம் என்பதால் கழிப்பறை பயன்பாடு, பாதுகாப்பான சுகாதார பழக்கவழக்கங்கள் மற்றும் தன் சுத்தம் பற்றிய தொடர் விழிப்புணர்வுகள் ஏற்படுத்த, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், பள்ளிக் கல்வி மற்றும் சமூகநலம் ஆகிய துறைகளின் களப்பணியாளர்கள் தீவிரமாக ஈடுப்படுத்தப்பட்டுள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக, திறன் மேம்பாட்டு பயிற்சிகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. "முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்" என்ற ஒட்டு மொத்த வளர்ச்சி அடைந்திட, இந்த

அனைத்து முயற்சிகளும் இலக்காக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

தமிழ்நாடு புது வாழ்வுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஊரக ஏழைகளுக்கும் ஊரக மகளிருக்கும் எண்ணற்ற வாய்ப்புகளை வழங்கியுள்ளது. இதைப்போலவே, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார திட்டமானது நகர்ப்புறப் பகுதிகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்த வழிவகை செய்கிறது. ஆற்றல் மேம்பாடு, திறன் வளர்ப்பு மற்றும் நிதியுதவி ஆகியவற்றின் மூலம் பெண்களை சுய சார்பு உள்ளவர்களாக ஆக்குதலே அரசின் நோக்கமாகும். இனி வரும் ஆண்டுகளில் நிலைத்த நீடித்த ஊரக தொழில்களையும் ஊரக வேலைவாய்ப்பினையும் உருவாக்கி மேம்படுத்தும் நோக்கமே ஊரக வளர்ச்சியின் முதன்மைச் செயல்பாடாக இருக்கும். தமிழ்நாட்டில் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அனைவரும் காணும் வண்ணம் பெரும் முன்னேற்றங்களை ஏற்படுத்தும் அரசின் முயற்சியில் மகளிர் சுய உதவிக்குழுக்களை அதிக அளவில் ஈடுபடுத்தி அரசு அவர்களை வழிநடத்தும்.

தமிழகத்தை நாட்டிலேயே மிகச்சிறந்த மாநிலமாக உருவாக்கிட, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு முன்னோடி திட்டங்களை இந்த அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் தொடர்ந்து செயல்படுத்தும்.

**எஸ்.பி.வேலுமணி,**
**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்**
**சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்**



**முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு**



பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் பழுது நீக்கம்  செய்தல்



புதிய அங்கன்வாடி கட்டடம்




**தார்ச் சாலை அமைத்தல்**



புதிய பாலம் அமைத்தல்









மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயல்பாடுகள்









மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயல்பாடுகள்




புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம்







முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்



அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சி கூடம்



நீலகிரி மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள தேயிலை ஒத்த தொழிற் குழுக்களுக்கு வாகனங்கள், இடுபொருள் சேமிப்பு மற்றும் பசுந்தேயிலை கொள்முதல் மையங்கள் அமைத்திட கடனுதவி வழங்கப்பட்டது



**இ–மதி செயலி வாயிலாக சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான**
**அம்மா சமுதாய வானொலி துவங்கப்பட்டது**




நீலகிரி மாவட்டத்தில் 18.05.2018 அன்று நடைபெற்ற
அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா




**சேலத்தில் 25.02.2019 அன்று நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாபெரும் கடனுதவி வழங்கும் விழா**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கஜா புயல் நிவாராண நிதி வழங்கப்பட்டது




**கோயம்புத்தூர் மாவட்டத்தில் 03.02.2019 அன்று நடைபெற்ற சுய தொழில் முனைவோருக்கான விழிப்புணர்வு மற்றும் வங்கிக் கடன் வழங்கும் விழா**



மாநில அளவிலான மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்கள் விற்பனை கண்காட்சியில்
திருநங்கைகளுக்கான சிறப்பு விற்பனை கடை




**பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டம்,**
**கும்மிடிப்பூண்டி வட்டாரம், மதார்பாக்கம் கிராமத்தில்**
**செம்மை நெல் சாகுபடி நடவு பற்றிய பயிற்சி மகளிர் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது**



ஹாலோ பிளாக் தயாரிப்பு அலகு, கடலூர் மாவட்டம்



**பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய**
**சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட செயல்பாடுகள்**